

என் இனிய பொன் நிலாவே!
அருணா நந்தினி

# என் இனிய பொன் நிலாவே!

## 1

அந்தச் சின்ன தெருவிற்குள் சற்றும் பொருந்தாமல் பெரிய கார் ஒன்று வந்து நின்றதும்... அக்கம் பக்கத்து வீட்டிலிருந்து தலைகள் கொக்குகளாய் நீண்டு எட்டிப் பார்த்தன...

வந்திருப்பது யாராக இருக்கும்... என்றைக்கும் இல்லாத அதிசயமாய்... அபூர்வமாய் இப்படிக் காரில் வந்திருக்கிறார்களே... உறவா... இல்லை... நட்பா... இதுநாள் வரை உறவு என்று யாரும் எட்டிப் பார்த்ததில்லையே... இப்போது மட்டும் வந்து விடுவார்களா... யாரோ தெரிந்தவர்களாக இருக்கும்...

அதுவும் வியப்புதான்... எட்டிப் பார்த்தவர்களின் கண்களில் ஆர்வம் இருந்தது.

கார் டிரைவர் வெள்ளை சீருடையில் இருந்தான். இறங்கி வந்து பின் கதவைத் திறக்க... கம்பீரத் தோற்றத்துடன் பெரியவர் ஒருவர் இறங்கினார்.

நிதானித்து... அந்த ஓட்டை வீட்டைக் கண்களால் அளந்தவர்... டிரைவரிடம் ஏதோ சொல்லிவிட்டு வீட்டை நோக்கி நடந்தார்.

டிரைவர் காரிலிருந்து ஒரு பழக் கூடையை எடுத்துக் கொண்டு அவரைத் தொடர்ந்தான். எப்படி இருந்த வீடு... இப்போது பாழடைந்து போய் கிடக்கின்றதே... இந்த வீட்டிற்கு எத்தனை தடவை வந்திருக்கிறோம்... மாப்பிள்ளை என்ற உரிமையுடன்...

அப்போதெல்லாம் வீடு 'ஜேஜே' என்று இருக்கும். எப்போதும் கொண்டாட்டமும்... சந்தோஷமும்தான்... அந்தக் கலகலப்பு இப்போது காணாமல் போய்... ஏதோ சூன்ய வெட்ட வெளி போல அமைதியாய்... 'பூத்' பங்களா மாதிரி அந்தகாரமாய் இருக்கிறதே... பெருமூச்சு விட்டார் அந்தப் பெரியவர். எத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டன... இந்த வீட்டில் கால்வைத்து... கடைசியாய் வந்தது எப்போது.. ஆங்... இரட்டைக் குழந்தைகளுக்கு பெயர் சூட்டு விழாவின்போது... அப்புறம் இந்த உறவு அறுந்தே போய் விட்டது...

எல்லாம் இந்த வீட்டின் மருமகளாய் வந்த மகராசியின் குணத்தினால்...

இன்று... அவளே அழைத்திருக்கிறாள்... பார்க்க வேண்டும் என்று... எல்லாம் காலத்தின் விளையாட்டு தான்... உள்ளுக்குள் சிரித்துக் கொண்டார் அவர்.

வீட்டிற்குள் நுழைந்தவர் கண்களால் சுற்றிப் பார்த்தார். வீடு எந்த விதத்திலும் மாறவில்லை... ஆனால்



முந்தையப் பொலிவுதான் இல்லை... சுவற்றில் வர்ணம் குலைந்து... பாழடைந்து போயிருந்தது... தரையில் ஆங்காங்கே குண்டும்... குழிகளுமாய்... பல் இல்லாத வாய்ப்போல இளித்துக் கொண்டிருந்தன.

பணம்... பணம் என்று அடித்துக் கொண்டாளே... அதெல்லாம் என்னவாயிற்று...

அவருக்கு அது புரியாத புதிர்தான்.

மாமனார் ஆசையாய் வாங்கி வைத்த தேக்குமரச் சாமான்கள் எதுவும் இல்லை... பிளாஸ்டிக் சேர் இரண்டு மட்டும் தான் கண்ணில் பட்டன. சுவற்றோரம் ஒரு ஸ்டீல் பீரோ... டீபாய் மீது வைக்கப்பட்டிருந்த சின்னத் தொலைக் காட்சிப் பெட்டி. மூலையில் பழைய மோடா... இவைதான் இப்போதைய ஆஸ்தி போலும். மனம் வலித்தது அவருக்கு...

எப்படி இருந்த குடும்பம்... இந்த நிலைக்கு இறங்கி விட்டதே... சிங்கம் போல வளைய வந்த மாமாவின் குடும்பத்திற்கு இப்படியொரு அவல நிலையா.. வத்சலா மட்டும் உயிருடன் இருந்திருந்தால்... வேதனையில் துடித்துப் போயிருப்பாள்... பாவம்...

ஒரு காலத்தில் மாப்பிள்ளை என்ற மதிப்புடன் சீராடிய வீடு...

இப்பவும் காதில் ஒலிக்கிறதே...

'வாங்க மாப்பிள்ளை... என்ன... பஸ் பிரயாணம் சுகமாய் இருந்ததா... பஸ் நேரத்தோடு வந்துடுச்சு போல... அடியே... மாப்பிள்ளை வந்திருக்கிறார்... பார்' என்று மாமனாரின் கணீர் குரலும்...

'வாங்க மாப்பிள்ளை... சுகமா... கைகால் கழுவிக் கொண்டு வாங்க... சூடா டிபன் இருக்கு... சாப்பிடு

வீங்களாம்' என்று சேலைத் தலைப்பை இழுத்துப் போர்த்துக் கொண்டு மரியாதைக் காட்டிப் பேசும் மாமியாரின் தழைத்த குரலும் எங்கிருந்தோ ஒலிப்பதுபோல பிரமை...

அவர்களுடன் அந்த வரவேற்பும் போயே போய் விட்டது. பெருமூச்சு விட்டார் அவர்.

அது இருக்கட்டும்...

இந்த வீட்டில் ஒருவரும் கண்ணில் படவில்லையே...

யாரும் இல்லையா என்ன... நாகு நோயாளியாயிற்றே... அவள் வீட்டில்தானே இருக்கணும்...

யோசிக்கும்போதே பின் கட்டிலிருந்து... சுமார் இருபத்தியாறு வயதில்... ஒருத்தி தண்ணீர் குடத்துடன் வந்தாள். யார் இந்தப் பெண்... நாகுவின் மகளா... இருக்காதே. அவளுக்கு இருபத்தி இரண்டோ... இல்லை மூன்றோதான் இருக்கும்... இவளுக்கு இன்னும் கூட இருக்கும்போலத் தெரிகிறது... குழப்பத்துடன் அவளைப் பார்த்தார் பெரியவர்.

அவளும் இவரைப் பார்த்துவிட்டு நின்றாள்.

''யார் நீங்க...'' என்று கேட்டாள்.

''அம்மாடி... நீ நாகுவிற்கு என்ன ஆகணும்...'' பதிலுக்கு பெரியவரும் வினவினார்.

''நாகுவா... ஓ... அத்தையை சொல்றீங்களா... நான் அவங்களோட மருமகள். நீங்க யார்... அதைச் சொல்லுங்க முதல்ல...'' என்றாள் கொஞ்சம் எரிச்சலுடன்.

''நான் உங்களுக்கு மாமா ஆக வேண்டும்... உங்க அத்தை வத்சலாவைத் தெரியுமா... அவங்களோட புருஷன் நான். உன் அத்தை என்னை வரச் சொன்னாள்.



ஏதோ அவசரமாய் பார்க்கணும் என்று கடிதம் எழுதி இருந்தாள். அதான் வந்தேன். சரிம்மா... உங்க அத்தை எங்கே... காணோம்..'' என்று கேட்டார் அவர்.

''இப்படி வாங்க... காட்டறேன்'' என்று அழைத்துச் சென்றவள்... ரேழியை ஒட்டியிருந்த சின்ன அறைக்குள் அழைத்துச் சென்றாள்.

இங்கேயா... அடக் கடவுளே... காற்றோட்டமில்லாத காராகிரகமாயிற்றே இது... வேண்டாத தட்டு முட்டு சாமான்களை இங்கே தான் போட்டு வைப்பது வழக்கம். இப்போது... இது நாகுவின் இடம்... ஒருவேளை அவளும் வேண்டாத பொருளாகி விட்டாளா என்ன... அய்யோ.. பாவமே... முடிசூடா ராணியாய் ஆட்டம் போட்டவளின் கதி இப்படியாகி விட்டதே. அவர் மனம் இரங்கியது.

அவள் ஆடிய ஆட்டத்திற்கு இந்த தண்டனையோ என்று கூடத் தோன்றியது.

ம்ம்... இட்டார்க்கு இட்ட பலன்!

அறைக்குள் சென்றவருக்கு வயிற்றைப் புரட்டுவது போல வந்தது... ஏதோ சொல்ல முடியாத நெடி... மூக்கை துளைத்துச் சென்றது.

நீண்ட நாளாய் படுக்கையில் விழுந்து கிடக்கும் நோயாளியிடமிருந்து வீசுமே... ஒருவித நாற்றம் அது தானோ என்னவோ...

உடம்பைத் துடைத்து விட்டு எத்தனை நாளானதோ இல்லை... நோயாளியின் உடல்நிலை அத்தகையதோ தெரியவில்லை...

கயிற்றுக் கட்டிலில் கிழிந்த நாராய் துவண்டுக் கிடந்தவளைப் பார்த்ததும் அவருக்கு படு அதிர்ச்சி!

நாகுவா இவள்... அவரால் நம்பவும் முடியவில்லை. உடம்பெல்லாம் ஒடுங்கி... தோல் வற்றிப்போய்... கண்கள் பஞ்சடைந்து... சருமம் காய்ந்து... உதடுகள் உலர்ந்துப்போய்... முடியெல்லாம் பஞ்சாய் நரைத்து... தெய்வமே... நோய் இந்த அளவுக்கு மாற்றி விடுமா என்ன...

கடிவாளம் மாட்டாத குதிரையாய் திரிந்தவளுக்கு இந்த கதியா...

எண்ணெய் தேய்த்துக் குளித்ததால் வந்த மினுமினுப்புடன் முகத்தில் பெருமையும்... கண்களில் கர்வமும் தெரிய வளைய வந்த நாகுவின் தோற்றத்தை நினைவுக்குக் கொண்டு வரப் பார்த்தார்.

"அத்தை... அத்தை... உங்களைப் பார்க்க யாரோ வந்திருக்கிறார்கள். பாருங்கள்..." உலுக்காத குறையாய் அழைத்தாள் மருமகள்.

"யாரோ இல்லேம்மா... மாமா... ராமலிங்க மாமான்னு சொல்லும்மா" என்றார் பெரியவர்.

அதற்குள் கண் விழித்து பார்த்தாள் நாகு.

உயிரிழந்த கண்களில் திடீர் ஒளி தெரிந்தது. உதட்டில் ஒரு பலவீன புன்னகையுடன் "வந்து விட்டீர்களா அண்ணா" என்றாள்... முணுமுணுப்பாய் ஒலித்தது அவளது குரல்.

அவள் அருகே இருந்த ஸ்டூலில் அமர்ந்தார் ராமலிங்கம். திரும்பி டிரைவரைப் பார்க்க... அவன் கொண்டு வந்த பழக்கூடையை ஒரு ஓரமாய் வைத்துவிட்டு நகர்ந்தான்.

"நீங்க வரமாட்டீங்களோன்னு நினைச்சேன் அண்ணா... நான் உங்களுக்கு செஞ்சதை மனசில் வச்சக்காம



வந்தீர்கள்... எப்படி உங்களுக்கு நன்றி சொல்வேன் அண்ணா... உங்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று துடியாத் துடித்தேன். நான் செஞ்ச பாவத்திற்கு மன்னிப்பு கிடையாதுதான்..." நைந்த குரலில் அவள் சொல்கையில் தொண்டை அடைத்தது... கண்களில் கண்ணீர் பெருகியது.

"என்னம்மா இது... உன்னை மன்னிச்சதால்தானே நான் இங்கே வந்திருக்கிறேன். 'ரொம்ப நாள் வாழ மாட்டேன்... உங்களிடம் மனம் விட்டுப் பேசணும்... வரமுடியுமா என்று கடிதம் எழுதியிருந்தாயே...' அதான் பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன். என் வத்சலாவோட உறவாச்சே... விட முடியுமா... சொல்லு." இதமாய் சொன்னார் ராமலிங்கம்.

"உங்க நல்ல மனசு... உறவை நினைக்கிறது... நான்... அப்படி நினைக்கவில்லையே... தாய் - மகள் உறவையே வெட்டிப் போட்டேனே. நான் செய்த பாவத்திற்கு சரியான கூலியை கடவுள் கொடுத்து விட்டார் அண்ணா... என் பிள்ளை... பொண்டாட்டி பேச்சைக் கேட்டு ஆடி... என்னைக் கிள்ளுக்கீரையாய் ஒதுக்கி வச்சபோதுதான் நான் முழிச்சேன். என் மகளை அவன் சுமையா நினைக்கிறான்... உன் புருஷன் என்ன வச்சட்டு போயிருக்கிறான்... உன் பொண்ணு கல்யாணத்தை நடத்தறதுக்கு... பொண்ணைப் பெத்தால் மட்டும் போதுமா... பணத்தைச் சேர்த்து வைக்க வேண்டாம்... இளிச்ச வாயன் இருக்கிறான். பார்த்துப்பான் என்கிற திமிர்... அதான்... குடிச்ச குடிச்ச பரம்பரை சொத்தை அழிச்சட்டான்... எனக்கும் பிள்ளைகள் இருக்காங்க... அவர்களைப் பார்க்க வேண்டாமா... இதோ பாரும்மா... என்னால் எதுவும் பண்ண முடியாது... உன்

புருஷன் மாதிரி என் குடும்பத்தை நடுத் தெருவில் விட முடியாது... என் தங்கையை கடைசி வரைக்கும் என்னுடன் வைத்துக் கொள்ளத்தான் முடியும்... ஆனால் கல்யாணம் என்பதெல்லாம் நடக்காத காரியம் என்று சொல்கிறான்.'' சொல்லும்போதே அவனுக்கு இரைத்தது... கண்களில் நீர் வழிந்தது.

அடக் கடவுளே... சரித்திரம் திரும்புகிறது என்பது இதுதானோ... இந்த வார்த்தைகளில் பாதி இவளும் மைத்துனனும் பேசியது ஆயிற்றே... என்ன... மாமனாரின் பணத்தை வாரிக் கொடுத்தாற்போல பேசினாள் நாகு... ஆனால் பணம் இல்லை என்று தேளாய் கொட்டுகிறான் பிள்ளை... அவ்வளவுதான்.

வார்த்தைகள் திருகு பாணமாய் திரும்பி வரும்போது தான் வலிக்கிறது.

ஆனால் அதை இப்போது குத்திக் காட்டுவதும் தப்பு... செத்த பாம்பை அடிப்பது போலத்தான்.

ராமலிங்கம் ஆறுதலாய் சொன்னார்.

''நாகலஷ்மி... ரொம்பவும் பேசாதேம்மா... எனக்கு உன் நிலை புரிகிறது. நீயே பாரமாயிட்டப்புறம் உன் பொண்ணும் சுமையாத்தான் தெரிவா... சரிம்மா... இப்போ.. நான் என்ன செய்யணும்... சொல்லு... செய்யறேன்... உன் பொண்ணுக்கு கல்யாணம் செய்து வைக்கணும்... அவ்வளவுதானே...''

''இல்லேண்ணா... என் பொண்ணை இங்கிருந்து அழைத்துப் போயிடுங்க. எங்கேயாவது அனாதை ஆசிர மத்தில் சேர்த்து விடுங்க... அது போதும். வைஜயந்தியை அனாதையாய் விட்டுட்டுப் போனால் இந்த கட்டை வேகாதுண்ணா. பெத்தவங்க செய்த பாவம் பிள்ளைங்க



மேல்னு சொல்லுவாங்க. அது சத்தியமான வாக்குதான்னு இப்போ தெரியுது. நான் செய்த பாவத்திற்கு தண் டனையை என் பெண் அனுபவிக்கிறாண்ணா. என் பிள்ளை அவளை நல்லா பார்த்துப்பான்ங்கற நம்பிக் கையும் போயிடுச்சு... அவனையும் குத்தம் சொல்ல மாட்டேன் அண்ணா... என் புருஷன் என்ன பணம் காசா வச்சுட்டு போயிருக்கிறார்... அவனுக்கு வாச்சவளையும் குறை சொல்ல எனக்கு வாயில்லை... நான் அன்னிக்கு ஆங்காரமாய் ஆடினது மாதிரி... இப்போ இவ ஆடறா... அண்ணா... உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்... உங்களுக்கு நான் செஞ்சதை மனசில் வச்சுக்காம என் பொண்ணுக்கு ஏதாவது வழி செய்யுங்க... பார்த்தீங்களா. யாரை உதாசீனம் பண்ணினேனோ... அவங்ககிட்டேயே இப்படி கை ஏந்தி நிப்பேன்னு அப்போ தெரியல்லே... எல்லாம்... காலத்தின் கோலம்...'' விம்மினாள் நாகலஷ்மி.

அவளைப் பார்க்கும்போது அய்யோ பாவம் என்று இருந்தது.

இளமைத் திமிரில் ஏதேதோ பேசிவிட்டு... இப்போது பச்சாதாபப் படுகிறாள். இந்த நிலையில் அவளைக் குறை சொல்வதும் நியாயமில்லை தான்.

''என்னண்ணா யோசிக்கிறீங்க... இவளுக்குப் போய் உதவுவதான்னா... உங்களை விட்டால் எனக்கு நாதி யில்லைண்ணா... மறுத்துடாதீங்க... என்னால் எழுந்து உங்க கால்ல விழ முடியல்லே... இல்லாட்டி உங்க கால்ல விழுந்து கெஞ்சியிருப்பேன்...'' வரண்ட குரல் கரகரக்க அவள் பேசினாள்.

''நான்தான் சொல்லிட்டேனே... நாகு... இனிமே வைஜயந்தியைப் பத்திய கவலை உனக்கு வேண்டாம்னு

அவளை இங்கிருந்து அழைத்துப் போய் விடுகிறேன்... சரிதானே... ஆமாம்... எங்கே... உன் பொண்ணு... கண்ணில் படவில்லையே..." என்று விசாரித்தார் ராமலிங்கம்.

"ஏதோ சாமான் வாங்க கடைக்குப் போயிருக்கிறாளோ என்னவோ... இல்லை... பேரனை ஸ்கூலில் இருந்து அழைத்து வரப் போயிருப்பா... எல்லா வேலையும் அவள் தலை மேல்தான்... அவனுக்கு எந்தவித சகமும் இல்லைண்ணா..."

அந்த நேரத்தில் மருமகள் சரோஜா காபியுடன் வந்தாள்.

காபி... இல்லை... காபி தண்ணீரை பாதி குடித்து வைத்து விட்டார் ராமலிங்கம்... அந்த காபி தொண்டையில் இறங்க மறுத்தது.

"சரோஜா... இவங்க என் நாத்தனார் புருஷன்... வீடு தேடி வந்திருக்கிறார். வாய்க்கு ருசியா சமைச்சுப் போடும்மா..." என்று நாகு சொல்ல... தலையசைத்து விட்டுச் சென்றாள் மருமகள்.

"உன் பிள்ளை எப்போ வருவான் நாகு... சின்னக் குழந்தையாய் இருக்கிறப்போ அவனைப் பார்த்தது" என்று ராமலிங்கம் கேட்டதும்...

"சாயந்திரம் வருவான்... ஏதோ துணிக்கடையில் வேலை செய்கிறான். அவனுக்குப் படிப்பு சரியா வரவில்லை... ஏதோ படிச்ச படிப்புக்கு இந்த சின்ன வேலை தான் அவனுக்கு அமைஞ்சது" என்றாள் நாகு.

"சரிம்மா... பேசியது போதும்... கொஞ்சம் ஓய்வெடுத்துக்கோ... ரொம்பப் பேசினா களைப்பாகி விடும்..."

"ஊகூம்... நாள் கணக்கோ... மணிக்கணக்கோ... எப்போது போகும் இந்த உசிருன்னு தெரியல்லேண்ணா.



அதற்குள் பேசிடணும்னு தோணுது... உங்களுக்கு எத்தனை பசங்க அண்ணா. இப்படி உங்களிடம் விசாரித்து தெரிந்து கொள்ள வேண்டியிருக்கேன்னு வெட்கமா இருக்கண்ணா..."

"எனக்கிருப்பது ஒரே பிள்ளைம்மா... அவனுக்கப்புறம் பிறந்த இரட்டைப் பிள்ளைகள் இறந்து போயிடுச்சு... என் பிள்ளை வினோத் இப்போ அமெரிக்காவில் இருக்கான்..."

"அவனுக்கு கல்யாணம் ஆயிடுச்சாண்ணா..."

"இல்லேம்மா.. பண்ணனும்.. அவன்தான் வேணாம்னு தள்ளிப் போட்டுக் கொண்டிருக்கிறான்."

"அவன் படிச்ச படிப்புக்கு பெரிய சீமான் வீட்டு பொண்ணாத்தான் பார்க்கணும்... இல்லையாண்ணா... அண்ணி, இருந்து அதைப் பார்க்க கொடுத்து வைக்கவில்லை..." என்றவள் பழைய நினைப்பில் ஆழ்ந்தாள். காலம் என்பது சக்கரம் மாதிரி... சுழன்று வரும்போது மேல் இருப்பது கீழாய்... கீழ் இருப்பது மேலாய் மாறி வரும்...

ஒரு காலத்தில் ஏளனமாய் பேசியது என்ன...

"என் பொண்ணுக்கு பணக்கார வீட்டு மாப்பிள்ளையாத்தான் பார்ப்பேன்... இந்த மாதிரி பரதேசிக் குடும்பத்தில் அவள் வாழ்க்கைப்பட மாட்டாள்..." பணத்திமிர் பேசிய பேச்சு... அகங்காரப் பேச்சு. இப்போது பரதேசியாய் இருப்பது நானும் என் பொண்ணும் தான்... நல்ல சுமுகமான உறவாக இருந்திருந்தால்... இவருடைய பிள்ளைக்கு வைஜயந்தியை கட்டிக் கொடுத்திருக்கலாம் தான்...

சே... அன்றைக்கு என் தலைக்குள் சைத்தானும் நாக்கில் சனியும் இருந்து ஆட்டி வைத்ததோ என்னவோ.. நாவால் சுழற்றி அடித்தேன்... வார்த்தையம்புகளால்

கொத்திப் பிடுங்கினேன்... உறவுகளை ஓட ஓட விரட்டினேன்... அதையெல்லாம் மறந்து விட்டு ஓடி வந்திருக்கிறார்.. எத்தனை பெரிய மனசு இவருக்கு.

உள்ளத்தின் வேதனை கண்களில் கண்ணீராய் வழிந்தது.

''அம்மா...'' என்ற குரல் கேட்டுத் திரும்பினார் ராமலிங்கம்.

அவரது கண்களில் வியப்பு... இவள்தான் வைஜயந்தியா... அப்படியே அத்தையின் வார்ப்பாய் இருக்கிறாளே... இப்படித்தான்... பெண் பார்க்க வந்தபோது வத்சலாவும் ஒடிசலாய்... பூங்கொடி மாதிரி வந்து நின்றாள்.

யாரோ ஒரு புதிய மனிதர் அங்கிருப்பதைப் பார்த்ததும் கண்கள் மருட்சி தெரிய நின்றிருந்தவளை வாத்ஸல்யத்துடன் பார்த்தார்... அவரையும் அறியாது அந்த பேதைப் பெண் மீது பாசம் வந்தது...

கண் விழித்துப் பார்த்த நாகலக்ஷ்மியின் முகம் மகளைப் பார்த்ததும் மலர்ந்தது.

''வைஜயந்தி... இங்கே வாம்மா... இது யார்னு தெரியுதா... உங்க மாமா... உங்க அத்தையோட புருஷன்...'' என்றவள்... அவளது கையைப் பிடித்து ராமலிங்கத்தின் கையில் ஒப்படைத்தாள்.

''இவளை உங்களிடம் ஒப்படைத்து விட்டேண்ணா... இனி கவலைப்படாமல் போய் சேருவேன்...'' என்று கண்களைத் துடைத்துக் கொண்டாள் நாகு.

''கவலையேப் படாதேம்மா... அவளைக் கண்ணும் கருத்துமாய் பார்த்துக்கறது என் பொறுப்பு... ஒரு அவசர வேலையை விட்டு வந்திருக்கிறேன்... அதனால



நாளைக்கே கிளம்பியாக வேண்டும் நாகு... அவசரம்னா ரங்களை விட்டு எனக்கு போன் பண்ணச் சொல்லு. என்ன... அம்மாடி... வைஜயந்தி... உன் துணி மணிகளை எடுத்து வைத்துக் கொள்ளம்மா. காலையில் சீக்கிரமா கிளம்பணும்...'' என்றார் ராமலிங்கம்.

தாயை கவலையுடன் பார்த்தாள் மகள்.

அவளது தயக்கத்தைப் புரிந்து கொண்ட பெற்றவள் மகளின் கையை வருடியவாறு சொன்னாள்.

''என்னைப் பத்தி கவலைப்படாதே கண்ணம்மா... அம்மா உனக்கு நல்லதுதான் செய்யறேன்னு நினைச்சுக்கோ... இங்கே இருந்து கஷ்டப்பட்றதை விட... மாமாவோட போறதுதான் உனக்கு நல்லதும்மா...''

''பயப்படாதேம்மா... நான் இருக்கேன். தைரியமா வா'' என்று ஆறுதலாய் பேசினார் ராமலிங்கம். ஆனால்... அவர்களது பயணத்துக்கு முன்பே... நாகலக்ஷ்மியின் உயிர் பயணித்து விட்டது... மேலுலகத்தை நோக்கி... மகளுக்கு ஒரு வழி செய்து விட்ட நிம்மதியுடன்...

## 2

**வா**ழ்க்கையே ஒரு மர்மம்...

யாருக்கு... எப்போது... என்ன நடக்கும் என்று தெரியாத போதும்... வாழ்க்கையில் தான் எத்தனை போராட்டங்கள்... வெறியாட்டங்கள்... ஆர்ப்பாட்டங்கள்... ஆடும் வரை ஆட்டம்... ஆயிரத்தில் நாட்டம்... அது மரணம் எப்போது வரும் என்று தெரியாத வரையில் தான்.

ஆடவிட்டு வேடிக்கைப் பார்க்கும் இறைவன்... அதனால் தானோ என்னவோ மரண முடிச்சை மனிதனின் அறியாமையில் வைத்திருக்கிறார் போலும்.

இரத்தம் சூடாய் ஓடும் வரை ஆட்டி வைக்கும் திமிரும் கர்வமும்... இரத்தம் சுண்டிப் போனதும் காணாமல் போய் விடுகிறது.

நாகலஷ்மிக்கும் அப்படித்தான். படுக்கையில் கிடக்கும் போதுதான்... தான் செய்த தப்புகளை தூசி தட்டி பார்க்கத் தோன்றியிருக்கிறது.

அது மட்டுமல்ல... மகள் மீது இருக்கும் பாசமும் அவளைத் தவிக்கச் செய்திருக்கிறது. வைஜயந்தியை ஒரு நல்ல இடத்தில் சேர்த்துவிட்ட நிம்மதியுடன் போய் சேர்ந்து விட்டாள்.

பாவம்... வைஜயந்தி... தாயின் சிறகு நிழலில் சுகம் கண்டவள்... இப்போது... தாயை இழந்து சிறகொடிந்த பறவையாய் ஒடுங்கிக் கிடக்கிறாள்.

காரின் முன் சீட்டில் அமர்ந்திருந்தவர் திரும்பிப் பார்த்தார். அழுது அழுது இமைகள் சுரந்திருந்தன...

தாய்ப் பசுவை இழந்து தவிக்கும் கன்றின் நிலை...

உலகில் எதை இழந்தாலும் ஈடுகட்டிவிட முடியும்... ஆனால் பத்து மாசம் சுமந்து பெற்றெடுத்து... சீராட்டி... பாலூட்டி வளர்த்த தாயின் இழப்பை மட்டும் ஈடு செய்யவே முடியாது.

அப்படித்தானே வினோத்தும் தாயின் பிரிவில் மனம் உடைந்து போனான். அவனைத் தேற்றுவது உன்பாடு என்பாடு என ஆனதே...

இப்பவும் அதேதான்... வைஜயந்தியைத் தேற்ற இய லாமல் விழித்தார்... பாவம்... திக்குத் தெரியாத காட்டில்



தொலைந்து போன குழந்தையைப் போல் அரண்டு போயிருக்கும் அவளைப் பரிதாபமாய் பார்த்தார்.

ஒரே நாளில் வாழ்க்கையைப் புரட்டிப் போட்டது போல நடந்திருக்கும் சம்பவங்களை அவளால் எப்படித் தாங்க முடியும். அதுதான் நிலை குலைந்து போயிருக்கிறாள். இந்தக் குழந்தைக்குத்தான் எத்தனை சோதனைகள். தொடர்ந்து வரும் வேதனைகள்... வாழ்க்கையில் எந்தவித சுகமும் பார்க்கவில்லை.

குடித்துச் செத்துவிட்ட தந்தை... நோயாளித் தாய்.

கையாலாகாத ஏழை அண்ணன்... சுயநல அண்ணி.

இவர்களிடையே அவள் எந்த சந்தோஷத்தையும் காணவில்லை...

இப்போது எல்லா உறவுகளையும் தொலைத்து விட்டுப் பரிதவிக்கிறாள்... பாவம்...

இல்லை... இல்லை... இவளுக்கென்று இனி நான் இருக்கிறேன்... என் வத்சலாவின் மறுஉருவமாய் இருக்கும் இந்தப் பெண்ணிற்கு இனி நான்தான் எல்லாமே... இந்த சின்ன வத்சலா இனிமேல் என் வீட்டின் சீமந்தபுத்திரி... செல்ல மகள்... இவள்பட்ட கஷ்டமெல்லாம் போதும்... இவள் வாழ்வில் ஒளி ஏற்றி வைப்பது இனி என் பொறுப்பு...

அப்போதுதான் நாகுவின் ஆத்மா சாந்தியடையும். பாவம்... நாகு... கடைசி காலத்தில் அவளுக்கும் சுகம் இல்லைதான்.

பிள்ளையிடமும் மருமகளிடமும் ஏச்சும் பேச்சும் வாங்கி அவஸ்தைப்படுவதைவிட... அவள் போய் சேர்ந்தது நல்லதுதான்...

அவர்களுக்கு இந்த மட்டும் சுமை குறைந்ததே என்று இருக்கும்...

என்ன... வைஜயந்திக்குத்தான் பேரிழப்பு...

பெண் குழந்தைகளுக்கு இருக்கும் பாசமும் அன்பும் ஆண் பிள்ளைகளுக்கு இல்லை தான்... வினோத் என்னைப்பற்றி நினைக்கவும் இல்லையே... வயதான அப்பா என்று ஒருத்தர் ஊரில் தனிமையில் வாடுகிறார் என்று என்றைக்காவது நினைத்தானா?

என்னதான் சொன்னாலும் பெண் குழந்தைகளுக்கு வாத்சல்யம் அதிகம்தான்...

வைஜயந்தியின் வேதனையைப் பார்த்துவிட்டு அவர் மனம் அப்படித்தான் நினைத்தது.

ரங்கன் இரண்டு சொட்டு கண்ணீர் விட்டதுடன் பெற்ற கடனைத் தீர்த்துக் கொண்டான்.

அவனுக்கு வரும் சம்பளத்தில் நோயாளித் தாயை கவனிப்பது பிரம்ம பிரயத்தனமாய் தெரிந்திருக்கும். அதுதான்... தாயின் இறப்பு விடுதலை உணர்வைத் தந்திருக்கும்...

பெரியவரின் மனதில் நடந்த நிகழ்ச்சிகள் மறுபடியும் அரங்கேறியது.

நாகு இறந்ததும் அவளது காரியங்கள் தடங்கல் இன்றி நடக்க வேண்டும் என்பதற்காக... ரங்கனிடம் கற்றையாய் பணத்தை எடுத்துக் கொடுத்தார்.

காரியம் முடிந்ததும்... வைஜயந்தியை அழைத்துச் செல்லும் உத்தேசத்தை எடுத்துரைத்ததும்... ரங்கன் கூச்சல் போட்டான்.

"அதெப்படி... நீங்க இவளை அழைச்சிட்டுப் போயிட்டா... என்னைக் கையாலாகாதவன்னு ஊர்ல பேசமாட்டாங்



களா... அம்மா போனதும் தங்கையைத் தூத்தியனுப்பி விட்டான்னு அவதூறு எனக்கு வரணும்... அப்படித்தானே மாமா."

"இதோ பாரு ரங்கா... உனக்கு வர்ற சம்பளத்தில் நீ உன் குடும்பத்தைப் பார்ப்பாயா... இவளைக் கரையேத்து வாயா... சொல்லுப்பா... உன்னால் முடியும்னு சொல்லு... இங்கே விட்டு விட்டு போகிறேன்... இப்போதைய நிலையில் உன் தங்கை கூட உனக்கு பாரம்தான் ரங்கா... புரிஞ்சுக்கோ... உன் அம்மாவும் என்னைக் கேட்டுக் கொண்டதால்தான் வைஜயந்தியை அழைத்துச் செல்கிறேன். அவளுக்கு ஒரு நல்ல வேலை வாங்கித் தருகிறேன்... இந்தக் குக்கிராமத்தில் எவன் வேலை தருவான்... சொல்லுப்பா..." நிதானமாய் எடுத்துச் சொன்னார் ராமலிங்கம்.

"என் தங்கை இன்னொருத்தர் வீட்டில் இருப்பது எனக்குத் தான் அவமானம் மாமா..."

"சரி... வேண்டாம்... அவளை ஒரு நல்ல மகளிர் விடுதியில் தங்க வைக்கிறேன். இல்லை... நல்ல ஆசிரமத்தில் சேர்த்து விடுகிறேன். போதுமா... உன்னால் அவளுக்கு ஒரு நல்ல வாழ்வை அமைத்துத் தர முடியாது என்பதால்தானே இப்படி செய்கிறேன்... அதைப் புரிஞ்சுக்கோப்பா..."

அத்தனையையும் கேட்டுக் கொண்டிருந்த சரோஜா கணவனின் அருகே வந்து சன்ன குரலில் சொன்னாள்... ராமலிங்கம் காதுபடவே...

"ஏங்க... நீங்க ஏன் இழுத்துப் போட்டுக்கிறீங்க அவர்தான் சொல்கிறாரே... உனக்கு பாரம்... அழைத்துப் போகிறேன்னு... கொஞ்சம் வாயை மூடிக் கொண்டு சும்மா இருக்கக் கூடாதா... இதோ பாருங்க... நமக்கும் பசங்க

இருக்காங்க... அதை மனசில் வச்சுக்குங்க... ஆமாம்..." ராமலிங்கம் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டார்.

மாமியார் போல மருமகள்தான்...

அப்புறம் ரங்கன் ஏன் வாயைத் திறக்கிறான்.

கப்சிப் என்றிருந்தான்... அவன் தந்தை செய்தது போலவே...

அப்போது ராமலிங்கம் வசதியில்லாதவர்தான். அவரது பண்பையும் நேர்மையும் பார்த்துதான் மாப்பிள்ளையாக தேர்ந்தெடுத்தார்கள் வத்சலாவின் பெற்றோர்கள்... அவரைப் பார்த்ததுமே. தன் மகளை கடைசி வரைக்கும் கண் கலங்காமல் வைத்திருப்பான் என்ற நம்பிக்கை வந்ததால்... தன் மகளைக் கொடுக்க முன் வந்தார்கள். அது மட்டுமல்லாமல்... நிச்சயம் உழைப்பால் முன்னுக்கு வருவான் என்ற நம்பிக்கையும் தான்...

பணக்கார வீட்டில் மாப்பிள்ளையானாலும்... ராம லிங்கம் தன் சுய கௌரவத்தை விட்டுக் கொடுக்க வில்லை...

செல்வந்தர் வீட்டு மாப்பிள்ளை என்ற ஜம்பமும் வரவில்லை... அதனாலே அவருக்கு மதிப்பு கூடியது. எப் போதும் மாமியார் வீட்டில் அவருக்கு ராஜமரியாதை தான்.

தன் மனைவிக்கு அவர் போட்ட கட்டளைகள்... தாய் வீட்டிற்கு அடிக்கடி போய் சீராடுதல் கூடாது. சீர்... செனத்தி... என்று எதையும் வாங்கி வரக் கூடாது... தன் மரியாதைக்கு எந்தவித பங்கமும் வராதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

வத்சலாவும் கணவனுக்கு அடங்கிய மனைவியாய்... அவரது மனமறிந்து நடந்து கொண்டாள். குடும்பத்தில்



முதல் பேரன் பிறந்திருப்பதை அமர்க்களமாய் கொண்டாட ஆசைப்பட்ட மாமனாரிடம் நாசூக்காய் அதை மறுத்து விட்டு... தன் சக்திக்கு ஏற்றவாறு நடத்தினார்.

அதற்காக கொஞ்சம் மனவருத்தம் இருந்தாலும்... மருமகனின் பண்பை சிலாக்கித்தார் மாமனார்.

"என் மாப்பிள்ளை தங்கம்டீ... நம் வீட்டு வைரத்தை நாம் தங்கத்தில் தான் பதித்திருக்கிறோம்... அது எப் போதும் மினுக்கும்... பாரேன்" என்று அவர் பெருமிதமாய் சொல்வதும் உண்டு.

அக்காவிற்கு பிள்ளை பிறந்ததும்... அதை தலைமேல் வைத்துக் கொண்டாடினான் செல்வம்...

"தாய்மாமன்... எனக்குத்தான் முதல் உரிமையாக்கும்..." என்று குழந்தையைத் தூக்கி வைத்துக் கொஞ்சி குலவு வான்... மாமனின் தோளிலும் மார்பிலுமாய் வளர்ந்தவன் வினோத்...

முதுகில் உப்பு மூட்டை விளையாடி... தோளில் சவாரி செய்து... நெஞ்சில் துயில் கொள்வான் பிள்ளை...

எல்லாமே அவனுக்கு கல்யாணம் ஆகும் வரை தான்.. அவனுக்கு தூரத்து சொந்தத்தில் பெண் பார்த்து முடித் தார்கள்.

தங்கமான மாப்பிள்ளையை தேர்ந்தெடுத்து... தலை நிமிர்ந்தவர்கள்... தகரம் என்று தெரியாமல்... நாகலஷ் மியை மருமகளாக்கி... தலை குனிவு அடைந்தார்கள்.

நல்ல வசதியான இடத்திலிருந்து வந்த நாகு இயல் பாகவே அகங்காரி... தான் என்று அகம் பிடித்தவள்... தனக்கு வாய்த்த இடமும் செல்வச் செழிப்பாய் அமைந்து விட கர்வம் தலைக்கேறியது.

பெயருக்கேற்ப... விஷமாய் கக்கினாள்... பாம்பாய் சீறினாள்... அவளது ஆட்டத்துக்கெல்லாம் தாளம் போட்டான் செல்வம்... புது மோகத்தில் 'ஆட்ரா ராமா' என்று ஆடினான்...

மொத்தத்தில் அவனது நிலை 'பூம்பூம்' மாட்டின் கதையானது.

அங்கே மாமியார் மாமனாருக்கே கடுகளவு மரியாதை இல்லாதபோது மற்றவர்களைப் பற்றி கேட்க வேண்டுமா...

அதிலும்... பணம் இல்லாத ஏழை மாப்பிள்ளையை கிள்ளுக்கீரையாய் பார்த்தாள்... வக்கற்றவராயிற்றே...

"அட! என்னத்துக்கு இப்படி விழுந்து உபசரிக்கிறீங்க... என்ன... மைசூர் மகாராஜாவாக்கும். இப்படி ராஜமரியாதை பண்ண... பணக்கார மாப்பிள்ளையானாலும் சொல்லலாம்... பரதேசி மாப்பிள்ளைக்கா இந்தக் கூத்து... சரியாப் போச்சு. இப்படி வாரி வழிச்சுப் போட்டா... குடும்பம் உருப்பட்ட மாதிரிதான்" என்று நாத்தனாரின் காதுபட பேசுவாள்.

அமிலத் துளிகளாய் வரும் சொற்களில் உள்ளம் வெந்து... உடல் குன்றிப் போவாள் வத்சலா.

"அம்மா... எனக்கு இங்கே வரவும் பிடிக்கவில்லை... என் புருஷனுக்கு இங்கே கிஞ்சித்தும் மரியாதை இல்லாதபோது எதுக்கும்மா நாங்க வரணும். நீயும் அப்பாவும் வேணும்னா அங்கு வந்து எங்களைப் பாருங்க... போதும்" என்று தாயிடம் முறையிடுவாள்.

"கண்ணு... அவ குணம் தான் தெரியுமே... எங்களுக்காக பொறுத்துக்கோம்மா... நாங்க அவளையும்... அவள் பேச்சையும் சட்டை பண்ணுவதில்லை... ஏதோ சொந்த



மாச்சே என்று பண்ணிக் கொண்டோம். இப்படி கொள்ளி வாய் பிசாசாய் இருப்பாள்னு யாருக்குத் தெரியும்... எல்லாம் நம்ம தலையெழுத்தும்மா. கூட்டை கல்லெறிந்து கலைச்ச மாதிரி... சந்தோஷமா இருந்த குடும்பத்தை இவ வந்து கலைச்சுட்டாளேன்னு தான் வருத்தம். எப்படியோ அவ போகட்டும் விடும்மா... வத்சலா.. இது உன் வீடு... நீயும் மாப்பிள்ளையும் எப்போது வேண்டுமானாலும் வரலாம். போகலாம்... உனக்கும் இங்கே உரிமை இருக்கும்மா."

தாயின் வார்த்தைக்கு மதிப்பு கொடுத்து அவர்கள் வந்தார்கள்.

தலைப் பிரசவத்திற்காக நாகலஷ்மி பிறந்த வீடு சென்ற போதுதான் வீட்டில் பழைய அமைதியும் சந்தோஷமும் வந்தது... செல்வத்திடம் வந்த மாற்றம் தவிர...

அவன் அவ்வப்போது மாமியார் வீட்டிற்குச் சென்று வந்ததால் வீட்டின் நிம்மதிக்கு பங்கம் வரவில்லை. எல்லாம் நாகு வரும் வரைதான்... கைக் குழந்தையுடன் அவள் வந்த பின்பு அவளது அட்டகாசம் இன்னும் அதிகமானது.

அந்த வீட்டிற்கு ஒரு ஆண் வாரிசைப் பெற்றுக் கொடுத்து விட்ட மமதை... அத்தனை செல்வத்திற்கும் அதிபதியாய் குழந்தை வந்து விட்ட அகந்தை... இனி எல்லாமே என் பிள்ளைக்குத்தான் என்று தைரியம்... ஆக... அவளது ஆட்சி கொடிக்கட்டி பறந்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

அதை நேராகவும் மறைமுகமாகவும் குத்திக்காட்டி வத்சலாவின் இதயத்தை நார் நாராய் கிழித்தாள். கணவனின் நெஞ்சில் முகம் புதைத்து அழுவாள் அவள்.

அவளது முதுகை தட்டிக் கொடுத்து ஆறுதலாய் சொல்வார் ராமலிங்கம்.

"பொறுமையா இரும்மா.. அவள் என்ன வேண்டுமானாலும் பேசட்டும். நீ வாய் பேசாமல் இருந்து விடு... திரும்ப நீ வாய் கொடுத்தால் அவள் சாமியாட்டம் போட்டு அசிங்கப்படுத்தி விடுவாள்.

அத்தை.. மாமாவிற்கு அவமானம் வர நாம் காரணமாய் இருக்கக்கூடாதும்மா. காலம் இப்படியே இருந்து விடாது. வத்சலா... நாமும் உயர்ந்த நிலைக்கு வரத்தான் போகிறோம்... என்னை நம்பும்மா."

ஆனால் அவரது பொறுமைக்கும் ஒரு முற்றுப்புள்ளி விழுந்தது.

செல்வத்திற்கு இரண்டாவதாய் மகள் பிறந்ததும் குழந்தையைப் பார்க்க வெள்ளிக் கொலுசும்... தங்கக் காப்பும் வாங்கிக் கொண்டு ஆசையாய் சென்றாள் வத்சலா.

அழகு பொம்மையாய் படுத்திருந்த மருமகளை வாரி எடுத்துக் கொஞ்சியவள் சும்மா இருந்திருக்கலாம் தான்...

நாகுவின் துஷ்ட குணத்தை மறந்தவளாய்... "செல்வம்... உன் மனைவி... என் பிள்ளைக்கு ஒரு அழகான பொண்ணைப் பெத்துக் கொடுத்துட்டாடா... வினோத்... உன் பொண்டாட்டியை பார்த்துக்கோ..." என்று வேடிக்கையாய் பேச... அவ்வளவுதான்... புற்றிலிருந்து வெளி வந்த நாகம் போல் சீறினாள் நாகு...

"இதென்ன பேச்சு... எங்க அந்தஸ்து என்ன? உங்க அந்தஸ்து என்ன.. அதை மனசில் வச்சுகிட்டு பேசுங்க..." என்றாள் 'சுருக்' என்று.



பேயறைப்பட்டவளைப்போல விக்கித்துப் போனாள் வத்சலா.

"இல்லை... நாகு... நான் வேடிக்கைக்கு அப்படிச் சொன்னேன்..." என்றாள் தடுமாற்றத்துடன்.

"ஆமாம்... இப்போ வேடிக்கைம்பீங்க... அப்புறம் அதுவே வினையாயிடும்... எதுக்கு இந்த வம்பு... என் பொண்ணு அதிர்ஷ்டக்காரி... அவள் வாழ்க்கைப் படப் போவது பெரிய சீமான் வீட்டில்தான்... பரதேசி குடும்பத்தில் இல்லை..." ஏகத்தாளமாய் வந்தன வார்த்தைகள்.

வத்சலாவின் நிலை பரிதாபமானது... மூச்சு முட்டியது போலத் துடித்துப் போனாள்.

அய்யோ... நாக்கால் சவுக்கடி தரும் இவளிடம் ஏன் அப்படிப் பேசினேன்... இப்படி வாங்கிக் கட்டிக் கொள்ளும்படி ஆனதே... தென் மேலோ கல் எறிந்தது போலல்லவா ஆகிவிட்டது.

அதைவிட... இத்தனையும் கேட்டுக் கொண்டு உம்மண்ணா மூஞ்சியாய் இருந்தானே தம்பி என்பது தான் நெஞ்சை சுட்டது.

இனி பிறந்த வீட்டில் கால் வைக்கவே கூடாது என்று வைராக்கியத்துடன் நினைத்தும் விதி விட்டால் தானே...

மறுபடியும் தாய்மை அடைந்த வத்சலாவின் உடல் நலம் பலவீனம் கண்டது. வயிற்றில் இரட்டைக் குழந்தைகள் என்று தெரிந்ததும்... மாமனாரின் வற்புறுத்தலில் ராமலிங்கத்தின் பிடிவாதம் தளர்ந்தது. பிரசவம் தாய் வீட்டில் தான் நடந்தது.

"வீம்பு வேண்டாம் மாப்பிள்ளை... நமக்கு இப்போ வத்சலாவும் குழந்தைகளும்தான் முக்கியம்... எந்த

கழுதை என்ன சொன்னால் நமக்கென்ன... நம்ம பொண்ணு பொழைச்சு வரணும்...'' என்று மாமனாரின் வார்த்தைகள் அவரை மறுப்பு கூற முடியாமல் செய்து விட்டன.

ஆனால் பெயர் சூட்டும் விழாதான் உச்சக் கட்டமாய் ஆனது.

பிறந்த இரட்டைப் பிள்ளைகளுக்கு பெயர் வைக்கும் வைபவத்தை விமரிசையாகக் கொண்டாட விரும்பினார் வத்சலாவின் தந்தை.

முதல் பிள்ளைக்குத்தான் செய்ய விடவில்லை... இந்த தடவையாவது எங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுங்க மாப்பிள்ளை என்று அவர் கெஞ்சியதாலும் வத்சலாவும் அதை விரும்பியதாலும்... வேறு வழியின்றி அவர் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று...

அதுதான் வினையாகிப் போனது.

ஏற்கனவே குதிக்கும் குரங்கு... அதற்கு தேள் கொட்டி னாற் போல ஆனது நாகுவின் நிலை.

உலைக்களமாய் கொதித்துக் கொண்டிருந்தவள்... இப்போது சொல்லவா வேண்டும்.

''இன்னும் எத்தனை நாள் இப்படி எங்க பணத்தை பிடுங்குவீர்கள்... இங்கே என்ன பணம் கொட்டிக் கிடக் கிறதாக்கும். இப்படியே.. உங்க பிள்ளைகளுக்கு கல் யாணம் வரை பிடுங்கிடுங்க... சே... மனுஷங்களுக்கு சூடு... சொரணை வேண்டாம். இப்படியா மரத்தோலுடன் இருப்பது'' - நாவால் சுட்டாள் அவள்.

அன்றுதான் கடைசி.. அதற்குப் பின் அவர்கள் காலடி வைக்கவில்லை...

வேதனையில் பெரியவர்கள் ஒருவர் பின் ஒருவராய் போய் சேர்ந்தார்கள்... பிறந்த இரட்டைக் குழந்தைகளும் ஏதோ காய்ச்சல் வந்து இறந்து போனது இன்னும் சோகம்...



ஒரு வெறியுடன்... இருக்கும் நகைகளை விற்று விட்டு... இன்னும் கொஞ்சம் கடன் வாங்கி வியா பாரத்தைத் தொடங்கினார் ராமலிங்கம். நல்ல நேரமும் கூடி வந்ததால் வியாபாரம் செழித்து... வளர்ந்து... கப்பும் கிளையுமாய் பரந்து விரிந்தது.

அவரது நிலை உயர்ந்து கொண்டே வந்தது.

அங்கே... மாமனார் வீட்டில் தலை கீழ்...

அனைத்து சொந்தங்களையும் இழந்த பின்புதான் செல்வம் விழித்துக் கொண்டது.

நாகுவின் இம்சையும்... சிடுசிடுப்பையும் எத்தனை நாள் சகிக்க முடியும்.

எதற்கெடுத்தாலும் குற்றம் கண்டு கத்தும் அவளது சுபாவத்தை மாற்ற முயன்று அது முடியாமல் போனது... காலம் கடந்த முயற்சி... அதுவும் வீண் முயற்சி... வேத னையை மறக்கக் குடிக்க ஆரம்பித்த செல்வம்... அதிலேயே மூழ்கிப் போனான்... சேர்த்து வைத்த செல்வம் நீர் பட்ட உப்பாய் கரைந்துப் போக... ஏழ்மையில் குடும்பம் தத் தளிக்க ஆரம்பித்தது.

தம்பி குடித்து... குடித்து... குடல் வெந்து செத்ததை கேள்விப்பட்டு துடித்து கண்ணீர் விட்டாள் வத்சலா. ஏற்கனவே பெற்றவர்களை இழந்த துயரம்... பெற்று எடுத்த இரு குழந்தைகளை பறி கொடுத்த சோகம்... இப்போது உடன் பிறந்தவனின் மறைவு... எல்லாமாய் சேர்ந்து வத்சலாவை ஒடுங்கச் செய்தன... கடைசியில்...

'கிறீச்...' வண்டி பிரேக் போட்டு 'திடுக்'கென்று நின்ற தும்... பழைய நினைவுகளிலிருந்து விழித்தார் ராம லிங்கம்.

"என்ன ஆச்சு ரவி" என்று டிரைவரைக் கேட்டார்.

"ஒண்ணுமில்லை அய்யா. கன்றுக்குட்டி ஒன்று குறுக்கே ஓடிச்சு... அதான்.." என்றான் டிரைவர். பின்னால் திரும்பிப் பார்த்தார்.

வைஜயந்தி பின் சீட்டில் சரிந்து படுத்திருந்தாள்.

அவள் கண்களில் ஈரம்... இன்னும் காயவில்லை. ஒருவிதத்தில் இவளும் கன்றுக் குட்டிதான்.

தாயைப் பிரிந்து தவிக்கும் இளங்கன்று...

இவளது வேதனையைத் தீர்ப்பது எப்படி... பெருமூச்சு விட்டார் பெரியவர்.

## 3

அரண்மனை மாதிரி பெரிய வீட்டைப் பார்த்துவிட்டு மிரண்டாள் வைஜயந்தி...

ஏற்கனவே பயந்த சுபாவம்... புது இடம்... புது வாழ்வு அவளை மிரள வைத்தது... மருட்சியுடன் சுற்றிப் பார்த்தாள். அவள் பார்த்து வளர்ந்ததெல்லாம் வறுமையும்... ஏழ்மையும் தான்... அதனால் இந்தப் பணமும்... பகட்டும் கண்டு பிரமித்தாள்...

"என்னம்மா... இந்த வீடு உனக்குப் பிடித்திருக்கிறதுதானே. இனி இது உன் வீடு மாதிரிம்மா... ஆமாம். இங்கே தான் இருக்கப்போறே..."

மாமாவின் வார்த்தைகள் அவளை மலைக்க வைத்தது. இங்கேயா... நானா... ஏதோ மகளிர் விடுதி என்றாரே.. இத்தனைப் பெரிய வீட்டில் இனிவாசமா...



அவளது மலைப்பைப் பார்த்துவிட்டுச் சிரித்தார் மாமா...

"என்னம்மா அப்படிப் பார்க்கிறே... என்னடா... உன் அண்ணனிடம் சொன்ன மாதிரி ஆசிரமத்தில் சேர்க்காமல் வீட்டில் இருக்கச் சொல்றாரே என்றா... சொந்தம் என்று நான் இருக்கும்போது... உன்னை ஆசிரமத்திலோ... மகளிர் விடுதியிலோ சேர்த்தால் அது மனுஷத்தன்மையே இல்லைம்மா... உன் அண்ணனை சமாதானப்படுத்தத் தான் நான் அப்படிச் சொன்னது. உன்னைப் பார்த்ததும்... இனி என்னுடன் தான் நீ இருக்கணும்னு முடிவு பண்ணிட்டேன்ம்மா... இதை உன் வீடு என்று நினைச்சு சகஜமா இருக்கலாம்மா..." என்றார் பரிவுடன்...

அவரை நன்றியுடன் பார்த்தாள் வைஜயந்தி. இறுகச் சீவி பின்னலிட்ட கூந்தல்... துன்பத்தையும் வறுமையையும் கண்ட ஒடிசலான தேகம்... கண்களில் கலக்கம்... சிரிப்பை மறந்து விட்ட முகம்... புடவையைக் கூட ஏனோ தானோ என்று கட்டியிருந்தாள்.

அவளைச் சரியாக படிக்க வைக்காமல்... வேலைக்காரி மாதிரி வைத்திருந்த ரங்கனின் மீது சினம் வந்தது... பாவம்... உலக ஞானமே வராதபடி செய்து விட்டார்களே... கிணற்றுத் தவளை... கடலைப் பார்த்து மிரளுவதைப் போல அல்லவா பயப்படுகிறாள். பட்டிக்காடு மாதிரி மலங்க மலங்க விழித்துக் கொண்டு வாய் விட்டுப் பேசவும் பயந்து நிற்கும் அவளைப் பார்த்து இரக்கப்பட்டார்.

நத்தையாய் சுருங்கிக் கொள்ளும் இவளது சுபாவத்தை முதலில் மாற்ற வேண்டும்... மனசுக்குள் தீர்மானம் வந்தது...

அந்தப் பெரிய வீட்டில் ஒண்டியாய் தவித்துக் கொண்டிருந்தவருக்கு வைஜயந்தி வந்தது தெம்பாய் இருந்தது...

தனக்கு என்று யாரும் இல்லை என்ற ஏக்கம் அவருக்கு நிறையவே இருந்தது.

தன் ஒரே மகன்... அருமந்த புத்திரன் எப்போதும் அயல் நாட்டில் வாசம்...

தனிமை என்னை வாட்டுகிறதுடா... வந்துச் சேருடா என்று கெஞ்சியும் அதட்டியும் பார்த்தும் அவன் வருவதாய் இல்லை... இதோ... அதோ என்று போக்குக் காட்டிக் கொண்டிருக்கிறான். ஒருவேளை அவனுக்கு இந்தியா வர பிடிக்கவில்லையோ என்னவோ... அமெரிக்கா வாசம் அவனை இழுத்து வைத்துக் கட்டிப் போட்டிருக்கிறது போலும்.

அவர் ஏக்கத்துடன் நினைத்துக் கொள்வார். இதற்குத் தான் நிறைய பிள்ளைகளைப் பெற வேண்டும் என்றார்களோ... ஒரு பிள்ளை இல்லாவிட்டாலும்... இன்னொருத்தன் உடன் இருந்து பார்த்துக் கொள்வான் என்றுதானோ... ப்ச்சு... அந்தக் கொடுப்பினை தான் இல்லாமல் போனதே...

இரட்டைப் பிள்ளைகளும் நோய் வந்து இறந்ததும்... வத்சலா உடம்பாலும் உள்ளத்தாலும் தொய்ந்துப் போனாள்... வாழ்க்கையில் பிடிப்பும் குறைந்து போனது. இருக்கும் ஒரு பிள்ளையாவது ஆயுசுடன் இருந்தால் போதும் என்று எண்ணி அவனைப் பொத்திப் பொத்தி வளர்த்தாள் வத்சலா.

அவன் பொறியியல் படிப்பு படித்துக் கொண்டிருக்கும் போதுதான் வத்சலாவின் தேக நலம் சீர் கெட்டது.

மகனுக்கு அது தெரிந்தால் படிப்பில் இருக்கும் கவனம் சிதைந்து விடுமே என்று அதை மறைத்து விட்டாள். வியாபார மும்முரத்தில் இருந்த ராமலிங்கமும் அதை கவனிக்கவில்லை...



அடிக்கடி காய்ச்சல்... திடீர் என்று கைகால் வீக்கம்... என்று அவள் அவதிப்படுவதைக் கண்டு... மனைவியை டாக்டரிடம் அழைத்துச் சென்றபோது நோய் முற்றிப் போயிருந்தது... இரண்டு சிறுநீரகங்களும் பழுதாகி விட்டதை டாக்டர் கூறியதும் ராமலிங்கம் அதிர்ச்சி அடைந்தார்...

அறுவை சிகிச்சைக்குத் தாங்காத அளவில் உடம்பு பலவீனமாகி விட்டிருந்தது...

வியாபாரம்... வியாபாரம் என்று அதிலேயே மூழ்கிப் போய்... மனைவியைக் கவனிக்காமல் போனோமே என்று தன்னையே நொந்து கொண்டார் ராமலிங்கம்...

மனைவியைக் காப்பாற்ற முடியாதா என்று துடித்தார். டயாலிஸிஸ் செய்தும்... அதை ஏற்காமல் முரண்டுப் பிடித்தது உடம்பு... இரண்டு வருடங்கள் வரைத் தாக்குப் பிடித்து விட்டு உயிர் விட்டாள் வத்சலா... தாயின் இழப்பில் துவண்டுப் போனான் மகன். புது சூழ்நிலையை விரும்பி... மேற்படிப்பு என்று அமெரிக்கா போனவன் தான்... அங்கேயே ஒரு வேலையைத் தேடிக் கொண்டு இருந்து விட்டான் பிள்ளை...

இங்கே.. தொழிலை தன்னந்தனியாய் சமாளிக்க முடியாமல்... மகன் வருவான்... தொழிலைக் கவனிப்பான் என்று ஆவலுடன் அவனுக்காகக் காத்திருந்தார் பெரியவர்.

அவன் வரவில்லை... இந்த நிலையில் தன் மருமகள் வந்தது ஆறுதலாய் இருந்தது. ஆனந்தத்தை தந்தது.

அடடா... வத்சலா மட்டும் இப்போது உயிருடன் இருந்திருந்தால்... வைஜயந்தியை இரு கரம் நீட்டி வரவேற்று... அன்புடன் அரவணைத்து... உச்சி முகர்ந்திருப்பாள்... மகிழ்ச்சியில் தத்தளித்திருப்பாள்.

பட்டுப்போன உறவு... தாய் வீட்டு சொந்தம்... வைஜயந்தியின் மூலம் மீண்டும் துளிர்த்ததை நினைத்து உள்ளம் பூரித்திருப்பாள்...

அதுவும்... தன் சாயலில் இருக்கும் மருமகளைப் பார்த்து தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடியிருப்பாள்... அவள் இல்லாமல் போனாளே...

வைஜயந்தியை பூஜை அறைக்கு அழைத்துச் சென்று காட்டினார் பெரியவர்.

"வைஜயந்தி... இவதான் உன் அத்தை... வத்சலா... வாம்மா... முதல்ல இந்த வீட்டின் தெய்வத்தை கும்பிடும்மா..." என்றார் மருமகளிடம்.

சுவரில் மாட்டியிருந்த போட்டோவை வியப்புடன் பார்த்தாள் அவள்.

'இவர் என் அத்தையா... பார்க்க என்னை மாதிரிதான் இருக்கிறார். நான் அவரைத் தான் கொண்டிருக்கிறேன்... நம் வீட்டில் அத்தை போட்டோ இருந்தாலும்... யாரும் அதை சொல்லவில்லையே... நானும் அவற்றை சரியாக பார்க்கவில்லை. இங்கே பெரிய அளவில் போட்டோ இருப்பதால் தெரிய வந்தது போல...'

'அத்தையைப் பார்த்தால் சாந்தமானவர் போலத் தெரிகிறதே... இவர்மேல் அம்மாவிற்கு என்ன கோபம்... எதற்காக இவர்கள் வராமல் இருந்தார்கள்...' பதில் தெரியாத கேள்விகள் குடைந்தன.

மாமாவின் வார்த்தைக்குப் பணிந்து அத்தையின் படத்தின் முன் விழுந்து வணங்கினாள்.

மறுநாள் ராமலிங்கம் வைஜயந்தியை அழைத்துக் கொண்டுப் பெரியதொரு ஜவுளிக் கடைக்குச் சென்றார்.



புடவை மேல் புடவைகளாக எடுத்து வைக்க... அவளுக்கு சங்கோஜமாக இருந்தது.

அத்தனையும் விலை உயர்ந்த புடவைகள்... காட்டன்... சில்க் காட்டன்... ஷிபான்... சின்தெடிக்... என்று பல ரகங்களில்...

"மாமா... எதற்கு இத்தனை... எனக்கு இரண்டு போதுமே..." என்றாள் தயக்கமாகவே...

"சும்மா இரும்மா... இப்போ நீ என் வீட்டுப் பெண்... என் மருமகள் எல்லார் கண்ணுக்கும் லட்சணமாத் தெரிய வேண்டாமா... பழைய துணிகளையெல்லாம் தூக்கி எறிந்து விட்டு... இனிமே இதைக் கட்டிக்கம்மா. அப்புறம்... உன் கையில் பணம் தருகிறேன்... உனக்கு என்ன தேவையோ அதையெல்லாம் வாங்கிக்கோம்மா அதான்... நகச்சாயம்... பவுடர்.. ஸ்நோன்னு ஏதேதோ இருக்கே... அது பத்தியெல்லாம் இந்தக் கிழவனுக்கு எதுவும் தெரியாது இல்லே... அதனால் தான் சொல்கிறேன்" என்றார் உரிமையுடன்.

"எனக்கு அதெல்லாம் பழக்கமில்லை மாமா... எதுக்கு வீண் செலவு... வேண்டாம்" தாழ்வு மனப்பான்மையுடன் சொன்னாள் வைஜயந்தி.

அதைப் புரிந்து கொண்டார் ராமலிங்கம்... அவளது கேசத்தை வாஞ்சையுடன் வருடியவாறு சொன்னார்.

"அம்மாடி இத்தனை நாளாய் இந்த வீட்டில் ஒரு பெண் குழந்தை இல்லையே என்ற ஏக்கம் உன்னால் தீர்ந்தது என்று நினைச்சு சந்தோஷப்படுகிறேன்ம்மா... உன் அத்தை இருந்தால் என்ன செய்வாளோ அதைத்தான் நானும் செய்கிறேன்... என் மருமகள் அழகா... அம்சமா இருக்காள் என்று எல்லோரும் சொன்னால் அது எனக்குப் பெருமை இல்லையா... அதான்... இப்படி ஆசையா

வாங்கித் தருகிறேன்... மறுக்காதேம்மா...'' அந்த பாச வார்த்தைகளில் நெகிழ்ந்துப் போனாள் வைஜயந்தி. அப்புறம் மறுப்பு ஏதும் சொல்லவில்லை.

அவனை அழைத்து வந்ததுடன் கடமை முடிந்து விடாது. அவளுக்கு ஒரு நல்ல எதிர்காலத்தை அமைத்துத் தர வேண்டிய கடமை தனக்கு இருக்கிறது என்பதை உணர்ந்தார் ராமலிங்கம்.

தரகரிடம் சொல்லி வைக்க வேண்டும். பையன்கள் ஜாதகங்கள் இருந்தால் கொண்டு வரச் சொல்ல வேண்டும். வைஜயந்திக்கு மட்டுமல்ல... வினோத்திற்கும் தான்... தரகரிடம் அவனுக்கும் ஏற்ற... பொருந்திய வரன்கள் இருந்தால் எடுத்து வரச் சொல்லணும்... அவனுக்கும் வயது ஏறிக் கொண்டு போகிறது. இந்த வருஷத்திலேயே இந்த இரண்டு கல்யாணத்தையும் முடித்து விட வேண்டியதுதான்.

அந்த நினைப்பிலேயே தூங்கினாரோ என்னவோ... கனவில் அதேதான்...

அருமை மனைவி வந்து ''சீக்கிரமாய் வினோத்திற்கு திருமணம் முடியுங்களேன்'' என்கிறாள்.

''நானும் அதைத்தான் முடிவெடுத்திருக்கிறேன் வத்சலா... நல்ல பொண்ணா பார்த்து முடிச்சிட்டேன். பாரேன்'' என்கிறார் ராமலிங்கம்.

''ஏங்க... மகாலஷ்மி மாதிரி நம்ம வைஜயந்தி இருக்கறப்போ வெளியில் ஏன் தேட்றீங்க... அவளை மறந்து விட்டுப் பேசுகிறீர்களே... சொந்தம் விட்டுப் போகாமல் அவளையே நம்ம பிள்ளைக்கு கட்டி வச்சிடுங்க... வைஜயந்திதான் இந்த வீட்டுக்கு ஏத்த மருமகள்... மறந்திடாதீங்க...''



சட்டென்று விழிப்பு வர... எழுந்து அமர்ந்தார் அவர்... இது கனவா... நிஜம் போல தெரிந்ததே... உண்மையில் வத்சலா வந்து விட்டுப் போனாளோ... மனசு படபடவென்று அடித்துக் கொண்டது.

ஒருவேளை... வத்சலாவின் ஆன்மாதான் கனவில் வந்து தனது விருப்பத்தை தெரிவித்ததோ.. ஆமாம்... அவள் உயிருடன் இருந்திருந்தால் இதைத்தான் ஆசைப்பட்டிருப்பாள்.

அடடா... இது என் புத்திக்கு உறைக்காமல் போச்சே... வைஜயந்தி அடக்கமான பொண்ணு... கஷ்டத்தில் வளர்ந்ததால்... அமைதியா... பதவிசா நடந்துப்பா... தன் தாயைப் போல அகமோ.. ஆர்ப்பாட்டமோ இல்லை... இதிலும் அத்தை மாதிரிதான் போலும்... வத்சலா சொல்வது போல இந்த வீட்டிற்கு தகுந்த மருமகள் அவள்தான்...

உடனே வினோத்தை வரச் சொல்லி... இந்த திருமணத்தை நடத்திவிட வேண்டும்... சுப காரியத்தை தள்ளிப் போடவும் கூடாது.

என்ன... வினோத் மேல்நாட்டுக்குப் போய் வந்திருப்பவனாயிற்றே... மனைவி கொஞ்ச நாகரீகமா இருக்கணும்னு எதிர்பார்ப்பான்... வைஜயந்தி கட்டுப்பெட்டியா வளர்ந்தவள் ஆச்சே... அவளைக் கொஞ்சம் சிங்காரிச்சுக்கச் சொன்னா அழகாத் தெரிவாள்...

அவளுக்குத்தான் என்ன குறைச்சல்... அவள் அத்தை மாதிரி லட்சணமா இருக்கா... நகை நட்டு எல்லாம் போட்டுக் கொண்டால்... ரம்பை மாதிரி தெரிவாள்... அப்புறம் என்ன... வினோத் மயங்கிட மாட்டானா.

உற்சாகமாய் மனம் ஏதேதோ நினைத்தது... எதையோ கற்பனை பண்ணி மகிழ்ந்தது.

ஆனால்... வினோத்தின் மனம் வேறு ஒருத்தியிடம் சிக்கிக் கொண்டிருக்கிறது என்ற விஷயம் அவருக்குத் தெரிந்திருந்தால்...

மறுநாள்... வைஜயந்தியிடம்... கனவைப் பற்றி சொல்லி விட்டு உரக்கச் சிரித்தார் ராமலிங்கம்.

"பார்த்தாயாம்மா... உன் அத்தை வந்து சொல்லி என் மரமண்டைக்குப் புரிந்தது... உன் அத்தை கில்லாடி... இத்தனை நாள் வருவேனா என்று இருந்தவள்... நீ வந்ததும்... வந்து உத்தரவுப் போடுகிறாள்... பாரேன்...!"

அதைக்கேட்ட வைஜயந்தியின் கன்னங்கள் சிவப்பை பூசிக் கொண்டன. வயசுப் பெண்ணுக்குரிய கல்யாண ஏக்கமும் அவளுக்கும் இருக்கத்தான் செய்தது... ஆனால் என்ன செய்ய... அண்ணியின் உதாசீனம்... அண்ணனின் விட்டேற்றித் தனம்... அம்மாவின் இயலாமை... வீட்டின் சூழ்நிலை இவற்றையெல்லாம் பார்த்துவிட்டு தன் கல்யாணக் கனவுகளை கலைத்து விட்டாள்... இந்த ஜென்மத்தில் தனக்கு கல்யாணம் என்பது இல்லவே இல்லை என்ற முடிவுக்கு வந்து விட்டாள்.

தன் வயசொத்த பெண்கள் ஒவ்வொருவராய் திருமணம் செய்து கொண்டு... கணவன்... குழந்தை என்று சந்தோஷமாய் இருப்பதைக் காணும்போது ஏக்கம் வரத்தான் செய்யும்... அந்த நரகத்தில் இருந்து விடுதலைக் கிடைக்காதா... அண்ணியின் ஏச்சுப் பேச்சிலிருந்து தப்பிக்க வழி ஏதும் வராதா என்று எத்தனையோ நாட்கள் மனசுக்குள் குமைந்திருக்கிறாள்.

அவளுக்காக எந்த ராஜகுமாரனும் குதிரை மேல் வரப் போவதில்லை... அந்த மாதிரியான கனவும் அவளுக்கு இல்லை.



ஏழைக்குத் தகுந்த எள்ளுருண்டை என... யாரோ ஒரு சாமானியன் மணக்க முன் வந்தால் அதுவே பரம சந்தோஷம்... அவனுடன் குடிசையில் வாழ்ந்தாலும் அது சொர்க்கம் தான்... கூழ் குடித்தாலும் அது அமிர்தம்தான்... அந்த அளவு கொடுப்பினை இருந்தால் போதும் என்று ஏங்கினாள்.

ஆனால்... ஒரே நாளில்... தன் வாழ்க்கைத் தலை கீழாய் மாறும் என்று சத்தியமாய் நினைக்கவில்லை...

யாரோ மந்திரக் கோலை அசைத்து மாயா ஜாலம் செய்தது போலல்லவா இருக்கிறது...

குச்சு வீட்டில் இருந்து வாடியவளுக்கு திடீர் என்று மாளிகை வாசம்! அதிசய மாற்றம்! அவளால் இன்னமும் நம்ப முடியவில்லை.

சின்ன வயதில் படித்த சின்ட்ரெல்லா கதை மாதிரியல்லவா இருக்கிறது...

அங்கே ஒரு தேவதை... இங்கே மாமா வடிவத்தில் தெய்வம்... சித்தியின் கொடுமைகள் இல்லாவிட்டாலும்... பட்ட கஷ்டங்களுக்கு அளவில்லை தான்.

தனக்கு ஒரு பணக்கார மாமா இருக்கிறார் என்ற விஷயமே சமீபத்தில் தான் தெரிய வந்தது...

"உன் மாமா வந்ததும் அவருடன் உன்னை அனுப்பி வைக்கிறேன் வைஜயந்தி... நீ புறப்படத் தயாராக இருக்கணும்மா..." என்று அம்மா சொன்னபோது கூட... அவர் எப்படிப்பட்டவரோ... நல்லவரா... கெட்டவரா... ஒரு வேளை முசுடாய் இருந்துவிட்டால்... அய்யோ... மனம் பதைத்தது.

ஏசினாலும்... பேசினாலும்... இது என் பிறந்த வீடு... பழகிய சூழல்... அங்கே எப்படியோ... புது இடம்...

அறிமுகம் இல்லாத முகங்கள்... பரிச்சயம் இல்லாத சூழல்... தெய்வமே... என்ன செய்வேன்... கண்களைக் கட்டி விட்ட மாதிரி திணறி விடுவேனே...

கலங்கிப் போனவளாய் தாயிடம் கெஞ்சினாள்.

"இங்கேயே இருந்து விடுகிறேனே... உங்களையெல்லாம் விட்டுப் போக மனசில்லேம்மா... உன்னுடன் இருக்கிறேனே..."

"அப்புறம்... உன் கதி என்னம்மா.. எத்தனை நாள் நான் உனக்குத் துணையாய் இருப்பேன்... யோசிச்சுப் பார்... இங்கிருந்தால் வாழ்க்கை முழுக்க சம்பளமில்லாத வேலைக்காரியாகத்தான் நீ இருக்கணும். அவர்களுடைய குழந்தைகளுக்கு ஆயாவா இருந்து பார்த்துக்கணும்... இதுதான் உன் தலையெழுத்துன்னு ஆகிவிடும்... அப்படி நடக்க நான் விடமாட்டேன் கண்ணு... என்னால் உனக்கு ஒரு கல்யாணம் பண்ணி வைக்கத்தான் முடியல்லே... ஆனால் ஒரு நல்ல வழி பண்ணி விட்டுப் போக முடியும்மா... உன் மாமா ரொம்ப நல்லவர் வைஜயந்தி. உன் அத்தையும் தான்... பாவி நான்... அகங்காரத்தில் அவர்களை விரட்டியடித்து விட்டேன். இப்போ... அவரிடமே உன்னை ஒப்படைத்து விட்டுப் போறேன். இதுதான் விதி என்கிறது... நிச்சயம் மாமா வருவார்... பாரேன்..." என்றாளே அம்மா...

அம்மா சொன்ன மாதிரியே மாமா ரொம்பவும் நல்லவர் தான்.. என் மீது எத்தனை பாசம்... என் மீது அன்பைப் பொழிகிறாரே... இந்த அன்பிற்காகத்தானே ஏங்கினது உள்ளம்.

எப்பவும் வசவும்... கடுஞ் சொற்களையும் கேட்டுக் கேட்டு காய்த்துப்போன மனசிற்கு... மாமாவின் அன்பு வார்த்தைகள் மயிலிறகால் வருடினதுபோல இதமாக இருந்தது.



இப்படி பரிவைக் காட்டி... பாசத்தைப் பொழியும் மனிதருக்கு எப்படி நன்றி சொல்வேன்... என்ன கைமாறு செய்யப் போகிறேன். உணர்ச்சி மிகுதியில் அவள் தத்தளித்தாள்.

திடீர் என்று அவர் தன் கனவில் அத்தை வந்ததாகவும்... வைஜயந்தி தான் மருமகள் என்றதாகக் கூறியதும்... அவளுக்கு வெட்கம் வந்தது.

தனக்கு திருமண பாக்கியமே இல்லை என்று நினைத்ததற்கு மாறாய்... இந்தத் திடீர் திருமணப் பேச்சில் கிளுகிளுப்படைந்து.. அந்த நாணத்தில் தலை குனிந்தாள்.

அத்துடன் நிற்கவில்லை பெரியவர்.

பீரோவில் இருந்த ஆல்பங்களை எடுத்து வந்து அவள் முன் வைத்து "அம்மாடி... இந்த ஆல்பத்தை பாரேன்... எல்லாம் வினோத்தின் போட்டோக்கள்... என் பிள்ளை எப்படி இருக்கிறான் என்று நீ பார்க்க வேண்டாமா... இதோ... இவன்தான் என் மகன்... ஊகூம்... உன் வருங்கால புருஷன்... அட... புருஷன்னதும் வெட்கத்தைப் பார்... எப்படி இருக்கிறான் என் பிள்ளை... ராஜா மாதிரி 'ஜம்'மென்று இல்லை... உயரத்தில் என்னை மாதிரி... என்னை விட நெடுநெடுன்னு உயரம்... தேக்கு மரம் மாதிரி. நிறத்தில் உன் அத்தை மாதிரிம்மா... செவ செவன்னு இருப்பான்... தன் அழகுப் பிள்ளையைப் பெருமையா பார்ப்பா உன் அத்தை... எங்கே கண் பட்டு விடுமோன்னு அடிக்கடி திருஷ்டி சுத்திப் போடுவா... அந்த அழகனைத் தான் நீ கட்டிக்கப் போறே..." அவரது வார்த்தைகளால் புளகாங்கிதமடைந்த வைஜயந்தி குனிந்து ஆல்பத்தை புரட்டினாள்.

வினோத் கல்லூரி மாணவனாய்... தோழர்களுடன் சுற்றுலாப் பயணியாய்... வீட்டில் நடந்த விழாவில்...

அவனது பிறந்த நாள் வைபவத்தில் நாயகனாய்... அமெரிக்காவிலிருந்து ஒரு தடவை வந்தபோது என்று பல போட்டோக்கள்...

உண்மைதான்.. பார்க்க கம்பீரமாய் இருந்தான்... பல ஆண்கள் நின்றிருந்தாலும் 'பளிச்'சென்று தெரியும் உருவம்... ஆண் அழகன்தான்... மாமா பாசத்தினால் மிகைப்படுத்தி பேசவில்லை என்று தெரிந்து கொண்டாள்.

அந்த கண்களில் ஏதோ ஒரு கவர்ச்சி... எத்தனை பெண் மனங்களை சுழற்றிப் போட்டதோ... ஒன்று மட்டும் நிச்சயமாய்ச் சொல்லலாம்... அவனை மணக்கப் போகும் பெண் மிகவும் அதிர்ஷ்டசாலிதான்.

அது நான்தான் என்கிறாரே மாமா.. அந்த அதிர்ஷ்டம் எனக்கிருக்கிறதா... தெரியவில்லையே...

இந்த நேரத்தில் அண்ணி இங்கு இருந்திருந்தால் சொல்லியிருப்பாள்... தேவைதான்.. விளக்கமாற்று கட்டைக்கு பட்டுக் குஞ்சலமாக்கும் என்று ஏளனமாய்...

சொன்னாலும் தப்பில்லையே... அவர் எங்கே.. நான் எங்கே... அவருக்கு நான் பொருத்தமானவள் இல்லையே...

அத்தை கனவில் வந்து சொன்னதும் ஆகிவிடுமா... அவரது மனசில் இடம் பிடிக்க வேண்டாமா...

ஆனால் மாமா சொன்னதும் சம்மதிக்கலாம் இல்லையா... உள்ளம் கன்றுக் குட்டியாய் துள்ளினாலும்...

அறிவு இடித்துக் கூறியது... அமெரிக்காவில் படித்து.. அங்கே வாழ்ந்தவர்... இந்த பட்டிக் காட்டை விரும்புவதா... இது ஓவராய் தெரியவில்லை... கனாகாணாதே மனமே... கொஞ்சம் அடக்கி வாசி... அறையில் இருந்த பெரிய கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டாள் வைஜயந்தி.



கூந்தல் கருகருவென்று அடர்த்தியாய் இருந்தது... கண்கள் பெரிதாய்... அங்கும் இங்கும் அலையோடும் கருவண்டுகளைப் போல இருந்தன... நீண்ட அழகான நாசி தான்... கன்னக் கதுப்புகளும்... உதடுகளும் குறை சொல்ல முடியாதுதான்... நீண்ட கழுத்தும்... பூங்கொடி போன்ற மேனியும் வசீகரமாகவே தெரிந்தன. எதிலும் குறையில்லை... ஆனால் ஏதோ சரியில்லையே... அது என்னவாக இருக்கும்...

இந்தக் காலத்து பெண்களைப் போல என்னை அழகுப் படுத்திக் கொள்ளாமல் வெகு எளிமையாய் இருப்பதா... இருக்கலாம்... கண்களில் மையில்லை... முகத்தில் ஒப்பனை எதுவும் இல்லை... உதடுகளில் சாயமில்லை. எந்தவித ஆபரணங்களும் இல்லை... கழுத்தில் சின்னத் தோடு மட்டுமே... கழுத்தில் பாசி மாலையும்... கைகளில் கண்ணாடி வளையல்களும்தான்...

என்ன செய்வது... இப்படியே வளர்ந்தாகி விட்டது... தலைக்கு தினமும் எண்ணெய் வைத்து சீவி... இறுகப் பின்னலிட்டால்தான் அம்மாவுக்கு பிடிக்கும்... முகத்திற்கு கொஞ்சம் பவுடர் கிடைத்தால் அதுவே அதிகம்... அலங்காரம் என்பது அண்ணிக்குப் பிடிக்காது.

இப்போதாவது மாறலாம்தான்... ஆனால் தயக்கமாக இருக்கிறது... அல்பனுக்கு பவிசு வந்த கதையாய் யாரும் நினைத்துவிடக் கூடாதே... தவிர மாமாவிற்கும் அலங் காரம் எல்லாம் பிடிக்குமோ பிடிக்காதோ.. அவர் முகம் சுணங்கி விடக்கூடாது. அதைவிட இப்படியே இருந்து விடுவது மேல் அல்லவா...

இந்த அளவு மாமா ஏற்றுக் கொண்டதற்கு நன்றியாய் என்ன செய்யலாம்... யோசித்தாள். என்னால் பதிலுக்கு

அன்பைக் காட்ட முடியும். அவருக்கு பணிவிடை செய்து என் நன்றிக் கடனைத் தீர்க்க முடியும்... அவர் என்மீது காட்டும் பாசத்தை இரட்டிப்பாக்கி திருப்பிக் கொடுக்க முடியும்...

அந்த முடிவில்... அவரது தேவைகளைப் பார்த்து... பார்த்துச் செய்தாள். அவருக்கு வேளா வேளைக்கு மருந்து... நேரத்துக்கு உணவு... காலையில் அவர் எழுந்திருக்கும் போதே அவருக்கு தேவையானதை தயாராய் வைப்பது... அத்தனையும் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டாள்.

சமையல்காரருக்கு 'மெனு' சொல்வதும் அவள்தான். அதுவும் மாமாவுக்கு வேண்டியதாய் இருக்கும்.

"இன்றைக்கு புதினா சட்னியும்... சீரக ரசமும் வைத்து விடுங்கள் ராமு மாமா... நேற்று ராத்திரி மாமா... வயிறு கல்லாட்டம் இருக்கும்மா என்றார்" என்பாள்.

இல்லை... "மாமாவிற்கு நெஞ்சில் சளி பிடிச்சிருக்கு. சுக்கு கஷாயம் போட்டு கொடுத்து விடுங்கள்... அப்படியே சாப்பாட்டிற்கு கொள்ளு துவையல் பண்ணிடுங்க..." என்பாள்.

தன் மருமகள் தன்னைக் கண்ணும் கருத்துமாய் கவனித்துக் கொள்வதைப் பார்த்து... உருகிப் போனார் பெரியவர்...

தன்னை கவனித்துக் கொள்ள நாதியில்லையே என்ற அவரது ஏக்கம் மறைந்தே போனது. வைஜயந்தியின் அன்பும் அக்கறையும் நெகிழ வைத்தது.

தெய்வமே தன் நிலைக் கண்டு வைஜயந்தியை இங்கு அனுப்பி வைத்திருக்க வேண்டும் என்றுகூடத் தோன்றியது.

பெண் வாசமே இல்லாதிருந்த அந்த வீட்டில்... இப்போது வளையல் ஓசையும் கொலுசு சத்தமும் கேட்ட



போது... இனிமையாக இருந்தது. கூடவே மெட்டி ஒலியும் சேர்ந்து விட்டால்... ஆகா... நினைக்கவே சந்தோஷமாய் இருந்தது.

வினோத் வந்ததும் கல்யாண ஏற்பாட்டை நடத்திட வேண்டியது தான்...

மனசுக்குள் தீர்மானித்துக் கொண்டார் ராமலிங்கம்.

## 4

நாட்கள் விரைந்தோடின...

வைஜயந்தி அந்த வீட்டிற்கு வந்து மூன்று மாதங்கள் ஆகியிருக்கும்.

காலத்திற்கு தான் எத்தனை வேகம்... ஒலிம்பிக் ஓட்டம்தான்...

வைஜயந்தி அந்த வீட்டில் நன்றாக பொருந்தி விட்டாள்...

புது இடம் என்பது மாறிப்போய்... ஏதோ பல வருடங்கள் இருந்து பழகிய இடம் போல உணர ஆரம்பித்தாள்...

அதை தன் வீடாக பாவித்து வேலைகளைச் செய்தாள்.

ராமலிங்கம் கண் விழிக்கும்போதே சுப்ரபாதம் ஒலிக்கும்... வாசலில் கோலம் போடப்பட்டிருக்கும். அவர் பல் துலக்கி விட்டு வரும் வேளையில் சுடச் சுட காபியும்... காலை செய்தித்தாளும் தயாராய் காத்திருக்கும்.

அதை முடித்துவிட்டு எழும்போது... குளிக்கத் தயாராக சோப்பு... துண்டு அங்கிருக்கும் அதற்குள் பூஜை அறையில் விளக்கேற்றி... கற்பூரம் காட்டி... குளியலை முடித்து விட்டு வரும் அவருக்கு நீட்டுவாள்.

அடுத்து... அவருக்கு சிற்றுண்டி... மேஜை மீது காத்திருக்கும்... அவர் அதை உண்ணும் நேரத்தில்... கட்டி வைத்த பூச்சரத்தை அத்தையின் படத்திற்கு மாலையாய் போட்டு விட்டு... மாமா உண்டதும் கைக்கழுவ நீரும் துவாலையும் தருவாள்...

மாமா வேலை விஷயமாய் புறப்படுமுன் மறக்காமல் மூட்டு வலிக்கும்... இரத்த அழுத்தத்திற்கும் மாத்திரையைக் கொடுப்பாள்.

அப்புறம் வேலைக்காரிக்கு துணிகளையும்... படுக்கை விரிப்பு... தலையணை உறை என்று பார்த்து போட்டு விட்டு... வீட்டை ஒழுங்கு படுத்துவது வழக்கம். பின்பு தோட்ட வேலை என்று பொழுது இறக்கைக் கட்டிக் கொள்ளும். மாமாவின் அறிவுரையின் பேரில்... அவர் ஆசையாய் சேர்த்து வைத்திருந்த புத்தகங்களில் இருந்து எதையாவது எடுத்துப் படிப்பாள். எல்லாமே தரமான... அருமையான புத்தகங்கள். அந்தக் கால தேவன்... கல்கி... ஜெயகாந்தன்... அகிலன் போன்றவர்களின் படைப்பில் இருந்து இப்போதைய எழுத்தாளர் வரை... கணக்கில்லாத புத்தகங்கள் அலமாரியில் இருந்தன.

பிறந்த வீட்டில் இந்த மாதிரி புத்தகங்களைப் படிக்க நேரமும் இல்லை... நூலகத்திலிருந்து வாங்கிப் படிக்க வசதியும் இல்லை.

ஆர்வத்துடன் அவைகளைப் படிக்க ஆரம்பித்தாள். படிக்கப் படிக்க ஆர்வம் ஏறியது... அறிவும் விரிந்தது. எப்போது இரண்டு மணியாகும்... சாப்பிட்டு விட்டு புத்தகத்தை எடுப்போம் என்ற தவிப்பும் வரும். இரண்டிலிருந்து நான்கு மணி வரைப் படிக்க என்று நேரத்தை ஒதுக்கியிருந்ததால்... மற்ற வேலைகள் தடைப்படவில்லை.



ஐந்து மணிக்கெல்லாம் மாமா வந்து விடுவார். அவருக்கு சூடாய் ஏதாவது பலகாரம் பண்ணச் சொல்லி விட்டு... உலர்ந்த துணிகளை எடுத்து வந்து மடித்து விட்டு... விளக்கேற்றுவாள். மாமா டி.வி.யில் செய்தி... உரையாடல்... நேர்காணல் என்று எதையாவது பார்க்கும் நேரத்தில் மறுபடியும் புத்தகம் கையில் ஏறும். விட்ட இடத்திலிருந்து ரசித்துப் படிப்பாள்.

'டாண்' என்று எட்டு மணி அடிக்கும்போது எழுந்து வந்து... வழக்கமாய் சமையல்காரர் செய்து வைக்கும் சப்பாத்தியையும் பருப்பையும் மாமாவிற்குப் பரிமாறுவாள்.

அப்புறம் சூடாய் ஹார்லிக்ஸ் ஒரு டம்ளர்... கூடவே.. இரண்டு 'கேலக்ஸ்' மாத்திரைகள் அவர் தூங்கு முன்..

ஒன்பதரைக்கெல்லாம் மாமா படுத்து விடுவது வழக்கம்.

அவள் சாப்பிட்டு விட்டு... பதினொரு மணி வரை படிப்பாள்...

இவைகள் தான் அவளது தினசரி வேலைகள். இம்மியும் பிசகாமல் கண்ணும் கருத்துமாய் அவள் செய்வதைக் காண ராமலிங்கத்திற்குப் பெருமிதமாய் இருக்கும்.

வத்சலாவின் ரத்தமாயிற்றே.. அவளை மாதிரியே செய்கிறாள்.

மாமனாரையே இப்படி அக்கறையாய் கவனிப்பவள்... புருஷனை இன்னும் எத்தனை கரிசனத்துடன் பார்த்துக் கொள்வாள்... என் பிள்ளை கொடுத்து வைத்தவன்தான்.

இந்த மடையன் சீக்கிரம் வரக்கூடாதா... இப்படி நாட்களைத் தள்ளிப் போடுகிறானே... முட்டாள்... அவனுக்கும் வயசு ஏறிக் கொண்டே போகிறது. இந்தப் பிறந்த நாளுக்கு முப்பத்தியொன்று ஆகிறது. அவன் அம்மா இருந்திருந்தால்

இப்படி விட்டிருப்பாளா... அவனது காதைத் திருகி கேட்டிருப்பாள்... திருமணம் செய்து கொள்ளப் போகி றாயா... இல்லையா என்று...

அந்தச் சலுகை எனக்கேது... என்ன தான் இருந்தாலும் தந்தை தாயாக முடியாதுதான்... வருத்தத்துடன் நினைத் தார் அவர்.

அன்றைக்கு அதிசயமாய் வினோத்திடமிருந்து போன் வந்தது.

"எப்படா இங்கே வருகிறே... எனக்கும் வயசாகிக் கொண்டு இருக்கப்பா... பிஸினஸை உன்கிட்டே ஒப் படைச்சிட்டு அக்கடான்னு இருந்துடலாம்னு பார்க்கிறேன்... சீக்கிரம் புறப்பட்டு வாப்பா... அப்படியே உனக்கு திருமணத்தை நடத்திடலாம்னு நினைக்கிறேன்... என்ன சொல்றே வினோத்?" என்று பிள்ளையிடம் சொன்னார் பெரியவர்.

மறுமுனையில் சின்னத் தயக்கம் தெரிந்தது.

"அது விஷயமாத்தான்ப்பா நானும் உங்களிடம் பேச வேண்டும் என்றிருந்தேன். நானும் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்து விட்டேன்."

அதைக் கேட்டதும் குளிர்ந்து போனார் தந்தை.

"வெரிகுட் ராஜா... இப்பத்தான் எனக்கு சந்தோஷமா இருக்கு... பொண்ணு பத்தி கவலைப்படாதே.. நல்ல அழகானப் பொண்ணாப் பார்த்து வச்சிருக்கேன்... பேரு..." என்றவரை இடைமறித்தான் மகன்.

"இருங்கப்பா... அவசரப்படாதீங்க... நான் சொல்வதை முதலில் கேளுங்கள்... நான் ஒரு பெண்ணை விரும்பு கிறேன்... அவளைச் சந்தித்தது இங்கே தான். பார்த்ததும் பிடித்துப் போய் விட்டது...



மகனின் வார்த்தைகளைக் கேட்டு அதிர்ந்து போனார் ராமலிங்கம்...

குளிர்ந்த உள்ளம் கொதித்தது...

"என்ன... என்ன சொல்றே வினோத்... யார் அவ... வெள்ளைக்காரியா..." ஆத்திரத்துடன் வினவினார்.

"இல்லேப்பா... இந்தியப் பெண்தான்."

"குலம்... கோத்திரம் என்ன... நம்ம கலாச்சாரத்துக்கு ஏத்தவளா... நம் குடும்பத்துக்கு பொருந்துவாளா... இதையெல்லாம் பார்க்காமல் என்னடா இந்த கண்றாவி... இதோ பார் வினோத் நான் பார்த்து வச்சிருக்கும் பெண் நம் வீட்டுக்கு ஏத்த மருமகள்டா... அவளை நீ கல்யாணம் செய்து கொண்டால்..."

"நிறுத்துங்கப்பா... பட்டிக்காட்டுத்தனமா பேசாதீங்க... 'அரேன்ஜ்டு மேரேஜ்' விஷயமெல்லாம் உங்க காலத் தோடு போயாச்சு... இப்போ... மனசுக்குப் பிடிச்சவளைத் திருமணம் செய்து கொள்வதுதான் வழக்கமாகி விட்டது. என் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் உரிமை எனக்கு மட்டும் தான். அதில்... பெற்றவர்களேயானாலும் சரி... மூக்கை நுழைப்பது அநாகரீகம். அதை தெரிந்து கொள்ளுங்கள் முதலில்... ஏதோ பெற்றவர் ஆயிற்றே... விஷயத்தைச் சொல்வோம் என்றால்... சே... அது என் தப்பு தான்..." என்று பட்டென்று தொடர்பு துண்டிக்கப்பட்டது.

ராமலிங்கத்திற்கு கோபம் உச்சிக் கேறியது. இரத்தம் சூடானது...

'பெற்றவர்கள் தலையிடக் கூடாதாமே... இவன் என்ன வானத்திலிருந்து குதித்தானா... படிப்பு பண்பைக் கூட கெடுத்து விடுமா என்ன...

பெரிய மேதாவி... இவன் சொன்னதும் நான் தலையாட்டி விட வேண்டும். தேவைதான்...

அதிகம் படித்து, இருந்த புத்தியும் போய் விட்டது போல... ஏன்.. கல்யாண விஷயத்தை என்கிட்டே சொல்லணும். அதையும் செய்து கொண்டு... நிதானமாய் கூறியிருக்கலாமே...

அதிகம் செல்லம் கொடுத்து வளர்த்ததில் திமிர்தான் ஏறியிருக்கிறது. என்ன பேச்சு பேசி விட்டான்... படவா ராஸ்கல்...' நெஞ்சு குமுறியது... ஏதேதோ அரற்றியது...

அது போகட்டும்... ஏதேதோ சொல்லி இந்தப் பெண்ணின் மனசையும் அல்லவா கெடுத்து விட்டேன்... அவளுக்கும் வினோத் மேல் பிரியம் வந்து விட்டது என்று தோன்றுகிறது... பெரிசாய்... என் மருமகள் நீ... வினோத் உன் புருஷன்னு சொல்லி... ஆசை காட்டிவிட்டு... இப்போது வினோத் உனக்கில்லை என்றால்... பாவம்... தாங்குவாளா இந்தப் பேதைப் பெண்.

சே... என் புத்தியை சொல்லணும். முதலில் பிள்ளையைப் பத்தி தெரிந்து கொண்டல்லவா அவளிடம் பேசியிருக்கணும்... என் பிள்ளை... நான் கிழித்த கோட்டைத் தாண்டமாட்டான்னு பெருமையா ஏதேதோ பேசிவிட்டு... இப்போ எந்த முகத்துடன் அந்தப் பெண்ணிடம் சொல்வது... 'அம்மா... வினோத் வேறு ஒருத்தியை விரும்புகிறானாம்... அவனை மறந்துவிடு...' என்று... பூப்போன்ற பெண் மனசு வாடிவிடாதா... இப்போதான் உரிமையாய்... மலர்ந்த முகத்துடன்... பட்டாம் பூச்சி மாதிரி வளைய வருகிறாள்... இது தெரிந்தால்... மறுபடியும் மரவட்டையாய் சுருண்டு கொள்வாளே...

அவசரப்பட்டு தப்பு செய்து விட்டேனே...



நெஞ்சில் படபடப்பு... இரத்த நாளங்களில் கொதிப்பு வந்தாற்போல பரபரப்பு... பி.பி. மாத்திரையை எடுத்து போட்டுக் கொண்டார்.

நிதானமாய் யோசித்தார்.

வேண்டாம்... இப்போதைக்கு வைஜயந்திக்கு எதுவும் தெரிய வேண்டாம். முதலில் இதமாய் பேசி வினோத்தை இங்கு வரவழைக்கலாம்... அப்புறம் மெல்ல... நிதானமாய் எடுத்துச் சொல்லி அவனது மனசை மாத்தினால் போச்சு... மேல் நாட்டில் இருக்கும் வரை கிறுக்கு புத்திதான் வரும்... இங்கே வந்துட்டால் எல்லாம் சரியாகி... புத்தி தெளிஞ்சிடும்... என்று சமாதானம் செய்து கொண்டார்.

எப்படியாவது இந்த கல்யாணத்தை நடத்தியே ஆக வேண்டும் என்ற வீம்பும் அவருக்கு வந்தது.

வினோத் போன் செய்த இரண்டு நாட்களுக்குப் பின்...

ஞாயிற்றுக்கிழமை என்பதால் வீட்டில் ஓய்வாக அமர்ந்திருந்தார் ராமலிங்கம்.

வாசலில் கார் வந்து நின்றது...

எட்டிப் பார்த்தார்...

காரிலிருந்து ஒரு தம்பதியினர் இறங்கினார்கள்...

யார் இவர்கள்... இதற்கு முன் இவர்களை பார்த்ததாய் நினைவில்லையே... யோசனையுடன் பார்த்தார்...

வந்தவர்கள் கொஞ்சம் தயங்கியே நுழைந்தார்கள். பின்னால் வந்த டிரைவர் பழத்தட்டை சுமந்து வருவதைப் பார்த்து இன்னும் குழம்பினார் ராமலிங்கம்.

இவர்கள் யார்... எதற்காக பூவும் பழங்களையும் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஏதாவது விசேஷத்திற்கு அழைக்க வந்திருக்கிறார்களா என்ன...

உள்ளே வந்த மனிதர் வாய் திறந்தார்.

"இங்கே... ராமலிங்கம்னு..."

"நான் தான்.. உட்காருங்க... நீங்க யார்னு தெரியலையே..."

"உங்க பையன் வினோத் போன் பண்ணியிருக்கணுமே. என் பொண்ணு ரூபாவும் உங்க மகனும் அமெரிக்காவில் சந்திச்சு பேசியிருக்காங்க... அப்போதே அவர்களுக்குள் காதல் வந்துவிட்டது. ரூபாவோட படிப்பு முடியணும்னு காத்திருந்தாங்களாம். அவ படிப்பும் முடிஞ்சாச்சு... அங்கேயிருந்து போனில் பேசினாள்... அதான் கல்யாணம் பத்தி பேசலாம்னு வந்திருக்கோம்... நாங்களும் லவ் மேரேஜ்தான்... நான் தமிழ்... என் மனைவி மராட்டி... அதனால் தான் என் பெண்ணோட காதலுக்கு பச்சைக் கொடி காட்டிவிட்டோம்..." என்றார் வந்தவர்...

வாய் பேசினாலும்... கண்கள் அந்த வீட்டை அளவெடுத்துக் கொண்டிருந்தன. அந்த வீட்டின் மதிப்பை எடை போடுகிறார் போலும்...

அதை ராமலிங்கம் கவனிக்கத்தான் செய்தார்... கோபத்தில் பற்களை நறநறவென்று கடித்தார்.

பணக்கார இடம் என்றதும் பச்சைக்கொடிக் காட்டிவிட்டார். இதுவே ஏழையாக இருந்தால்... சம்மதித்திருப்பாரா இந்த மனிதர்.

பையன் சம்மதித்து விட்டான் சரி... பெற்றவரின் சம்மதம் வேண்டாமா..

அதைப்பற்றி கவலை இல்லாதவர் மாதிரியல்லவா பேசுகிறார்...

பொங்கி எழுந்த ஆத்திரத்தை கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டார் அவர்... இப்போது எதையாவது பேசி



காரியத்தைக் கெடுத்து விடக்கூடாது. முதலில் பிள்ளையின் மனதை மாற்ற வேண்டும். அப்புறம்தான் மற்றது எல்லாம்...

இவர்களிடம் ஆத்திரத்தைக் காட்டிப் பயனில்லை. இந்த விஷயம் வினோத் காதுக்கு போனால்... அது விபரீதமாகி... சுவரில் அடித்தப் பந்தாய் என் மீது திரும்பும்.

அது மட்டுமா... உன் சங்காத்தமே வேண்டாம் என்று அங்கேயே கல்யாணம் என்று விரைத்து விட்டால்... மானமே போச்சு...

முள்ளில் விழுந்த துணி மாதிரி... இந்த விஷயத்தை நாசூக்காய் கையாளணும்.

முகத்தைச் சாந்தமாக்கிக் கொண்டு பேசினார் அவர்.

"அப்படியா... ரொம்ப சந்தோஷம்... ஒண்ணு பண்ணலாம்... என் பிள்ளை இங்கு வரட்டும்... அப்புறம் இது பத்தி பேசி முடிவெடுக்கலாம்... அது வரைக்கும் காத்திருப்போமே.. என்ன சொல்றீங்க..."

வந்தவர்களின் முகம் மலர்ந்து போனது.

"அப்படியே செய்வோம்... அதில் எங்களுக்கும் சந்தோஷம் தான்..." மகிழ்ச்சியுடன் தலையாட்டிவிட்டு சென்றனர் இருவரும்.

தொலைக்காட்சியில் கண்கள் பதிந்திருந்தாலும் மனம் அதில் லயிக்கவில்லை அவருக்கு.

நெஞ்சில் வேதனை அரித்தது... பிள்ளை இப்படி செய்துவிட்டானே... வைஜயந்தியின் கதி என்ன... இதை எப்படி தாங்கிக் கொள்ளப் போகிறாள்... உள்ளுக்குள் பொருமினார்.

"மாமா..." வைஜயந்தியின் குரல் அவரை தட்டி எழுப்பியது.

"நீங்க மனசைப் போட்டுக் குழப்பிக்காதீங்க மாமா... அவருக்கு எது விருப்பமோ அப்படியே செய்யுங்க."

"என்னம்மா பேசறே... நீ..."

"எனக்குத் தெரியும் மாமா... இன்னிக்கு வந்தவங்க யாரு... எதுக்கு வந்திருக்காங்க என்பதை நானும் புரிந்து கொண்டேன்... உங்க மகன் விரும்பற பொண்ணைக் கட்டி வையுங்க மாமா. இதில் எனக்கு எந்தவித வருத்தமும் இல்லை..."

அவளைக் கூர்ந்து நோக்கினார் ராமலிங்கம்.

உண்மையைத்தான் சொல்கிறாளா... இல்லை தன் உணர்வுகளை மறைக்கப் பார்க்கிறாளா...

"என்ன மாமா... அப்படி பார்க்கிறீர்கள்... நான் உண்மையைத்தான் சொல்கிறேன்... அவருக்கு நான் படிப்பிலோ... அந்தஸ்திலோ... நாகரீகத்திலோ சரியானவள் இல்லை... தனக்கு ஏற்ற பெண்ணைத்தான் அவர் 'செலக்ட்' பண்ணியிருக்கிறார். அதில் எந்தத் தப்பும் இல்லையே. இந்த விஷயத்தில் நீங்களும் அவருக்காக விட்டுக் கொடுத்தா நல்லதுன்னு நினைக்கிறேன் மாமா... நான் பேசறது தப்புன்னு பட்டால் என்னை மன்னித்து விடுங்கள்..." என்றாள் அமைதியான குரலில்.

'கிட்டாதாயின் வெட்டென மற' என்பது போலல்லவா பேசுகிறாள்... வாழ்க்கையில் மிகவும் அடிப்பட்டதால் வந்த பக்குவமா இது... என்ன பெருந்தன்மை...

'டேய்.. வினோத்... உனக்கு கண்ணாடிக் கல்லுக்கும் வைரத்திற்கும் வித்தியாசம் தெரியாமல் போனதே... வைஜயந்தி பட்டைத் தீட்டிய வைரம்னு தெரியாமல்... கண்ணாடிக் கல்லுக்கு ஆசைப்படுகிறாயே. முட்டாள்...' மகனை மனசுக்குள்ளே கடிந்தார்.



"அம்மாடி... இங்கே வா" என்று வைஜயந்தியை அருகே அமர்த்திக் கொண்டார்.

அவளது கேசத்தை வருடியவாறு சொன்னார்.

"உன் நல்ல குணத்திற்கு நிச்சயம் நல்ல கணவன் கிடைப்பான்ம்மா... என் பிள்ளை என்ன... அவனை விட நல்ல மாப்பிள்ளையாப் பார்த்து உனக்கு கல்யாணம் பண்ணி வைக்கிறேன்... என்னை நம்பும்மா..."

தனது அறைக்குள் வந்தவள்... அப்படியே கட்டிலில் அமர்ந்தாள்... கண்களில் காவேரி வெள்ளமாய் கண்ணீர் பொங்கி வழிய... எதற்காக அழுகிறோம் என்று தெரியாமல் அழுதாள்... தன் துர் அதிர்ஷ்டம் இன்னும் தொடருகிறதே... என்றா... கல்யாணக் கனவுகள் கருகிப் போனதே என்றா...

இல்லை.. வினோத் எனக்கில்லை... அவன் யாருக்கோ சொந்தம் என்ற வேதனையாலா இருக்கும்... அவளையும் அறியாமல் இதயத்தில் குடிவந்து விட்ட வினோத்தை எப்படி மறக்க முடியும். இதயம் பிளந்தாற்போல விம்மல் வெடித்தது.

## 5

விநோத் வரப் போகிறான்!

அந்த செய்தி உற்சாகத்திற்கு பதில் வேதனையைத் தான் தந்தது வைஜயந்திக்கு.

அவன் இங்கு வரும்போது தான் இருக்கக் கூடாது என்று உள்ளம் துடித்தாலும்... எங்கே போக முடியும்...

தனக்கு போக்கிடம் ஏது... அதை மாமாவும் விரும்ப மாட்டாரே... எல்லாம் என் துர்பாக்கியம்...

எந்தவித சலனமும் இல்லாமல்... நிம்மதியாய் இருந்த மனதில்... மாமா ஆசை வித்துக்களை விதைக்காமல் இருந்திருக்கலாம்...

'வினோத் உன் புருஷன்' என்று சொல்லி... சொல்லி என்னைக் கனவு காண வைத்து விட்டாரே... பாவம்.. அவரையும் குற்றம் சொல்லக்கூடாது... சொந்தம் விட்டுப் போகக் கூடாது என்று நினைத்தார் அவ்வளவு தான்...

தப்பு என் மேல்... மாமா சொன்னதை வேதவாக்காக நினைத்துக் கொண்டு கற்பனையில் மூழ்கினேனே... வெளியுலகம் கண்டு பழகியிருந்தால் நல்லது கெட்டது எல்லாம் தெரியும்... நான் தான் கிணற்றுத் தவளையாய் இருந்து விட்டேனே... அதனால் தான் மாமா சொன்னதுமே புத்தி தடுமாறி விட்டேன் போல... பெண் புத்தி பின் புத்தி என்பது உண்மைதான். எதையும் யோசிக்காமல் கோட்டை கட்டி விடுகிறது. அதுவும் அஸ்திவாரம் இல்லாத ஆகாசக் கோட்டை! இனி பழைய வைஜயந்தியாக இருக்க முயல வேண்டும். எந்தவித கவலையும் இல்லாமல்... உண்டு... உறங்கி... நிச்சிந்தையாய் வளைய வந்த வைஜயந்தியாய்... முடியுமா... பெருமூச்சு விட்டாள்... மாமாவிற்காக முயற்சி செய்யத்தான் வேண்டும்.

பாவம்... மாமா... என் முகத்தைப் பார்க்கவும் தவிர்க்கிறார். குற்ற உணர்வு அவரைக் குடைகிறது போல.

நான் வாடி இருந்தால் அவருக்கு சங்கடத்தை தரும்... எனக்கு எந்தவித பாதிப்பும் இல்லை என்று அவர் முன் காட்டிக் கொண்டால் நல்லது...



அந்த முடிவில் அவள் பழையபடியே... உற்சாகத்துடன் இருப்பது போல முயன்றாள்.

மனதைக் கல்லாக்கிக் கொண்டு வினோத்தை எதிர் கொள்ளத் தயாரானாள்.

வினோத் வரும் நாளும் வந்தது.

மும்பையில் இறங்கி... அங்கே யாரோ ஒரு நண்பனை சந்தித்து விட்டு வருவதாய் அறிவித்திருந்தான்.

மும்பையிலிருந்து நண்பனின் காரில் வரப்போவதாய் அவன் சொல்லியிருந்ததால்... அவன் எப்போது... எந்த நேரத்தில் வருவான் என்று நிச்சயமாகத் தெரியாமல்... வாசலைப் பார்த்தவாறு காத்திருந்தார் தந்தை...

ஆனால் பழைய குதூகலம் இல்லை... நீண்ட நாட்களுக்குப் பிறகு பிள்ளை வருகிறானே என்ற பரபரப்பும் வரவில்லை...

தந்தை என்ற மதிப்புத் தராமல்... தானாகவே தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டானே என்ற மனக்கசப்பு தான் காரணம்.

ஆனால் அவன் வரவில்லை... போனில் செய்தி வந்தது... வரும் வழியில் கார் விபத்தாகி.. அவன் சீரியஸாக ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கும் செய்தி.

அலறி அடித்துக் கொண்டு புறப்பட்டார் ராமலிங்கம். இருப்பது ஒரே பிள்ளை... அவனுக்கு ஏதும் ஆகி விடக் கூடாதே என்ற பதைப்புடன் சென்றார்.

வைஜயந்திக்கு செய்தியைக் கேட்டதும் துக்கம் வந்தது மாமா... தனியாக இருந்தபோது கவலை ஏதும் இல்லாமல் இருந்தார்... இப்போது நான் வந்ததும்... என்னைப் பிடித்திருந்த துர் அதிர்ஷ்டம் அவரையும் பிடித்துக்

கொண்டு விட்டதோ... என்னவோ... என் ராசி அப்படி... எங்கு போனாலும் சுகம் இல்லை... நான் இருக்கும் இடத்தில் சந்தோஷம்... நிம்மதியெல்லாம் துடைத்துப் போயிடும்... என்னால் மற்றவர்களுக்கு கஷ்டம் என்று துயரமடைந்தாள்.

அத்தையின் படத்திற்கு முன் நின்று... கண் மூடி... மனம் உருகி வேண்டினாள்... "அத்தை நீங்க தெய்வமாய் இருந்து உங்க பிள்ளையைக் காப்பாத்த வேண்டும்... அவருக்கு எதுவும் ஆகக்கூடாது... அவர் பிழைத்தெழுந்து... பழையபடி கம்பீரமா நடமாட வேண்டும்... செய்வீர்களா அத்தை..."

தன் பிரார்த்தனை அத்தைக்கு கேட்டிருக்கும் என்ற நம்பிக்கை வந்தது.

மாமாவிடம் இருந்து பயமேதும் இல்லை என்று நல்ல செய்தியாக வரவேண்டும் உள்ளம் வேண்டியது.

மாமாவும் போன் செய்தார்.

"வினோத்தின் உயிருக்கு ஆபத்தில்லைம்மா... அவன் உயிர் பிழைத்து விட்டான்" எடுத்ததும் மாமா சொன்ன செய்தி நெஞ்சில் பாலை வார்த்தாற்போல் இருந்தது... கண்களில் நீர் கோர்த்தது... சந்தோஷ மிகுதியில்...

"ஆனால்... உடம்பில் பல இடங்களில் எலும்பு முறிந் திருக்கிறது இடுப்பிலும் நல்ல அடி.. அவன் பிழைத்தது அதிசயம் என்கிறார் டாக்டர்..."

"அய்யோ..." என்று அலறினாள் வைஜயந்தி...

"பயப்படாதேம்மா... எல்லாம் சரியாகி விடும் என் கிறார் டாக்டர்... டிரைவர் அந்த இடத்திலேயே இறந்து விட்டான்... உடன் இருந்த நண்பனுக்குக் கையில்



ஃபிராக்சர். ஊருக்கு அழைத்துப் போகலாமா டாக்டர் என்று கேட்டதற்கு... இரண்டு நாள் பொறுங்கள்... அதற்கு பிறகு அவரை அப்படியே அசையாதபடி அழைத்துப் போகலாம் என்று சொல்லியிருக்கிறார்... ஏதேதோ 'டெஸ்ட்' எல்லாம் எடுத்திருக்காங்க... கண்டிஷன் என்ன என்று தெரிந்துவிடும்... வருவதற்கு முன் உனக்கு போன் செய்கிறேன் என்ன... நீ பத்திரமாய் இரும்மா... புது ஆட்கள் யாரையும் உள்ளே விடாதே... வேலைக்காரர் களை எப்போதும் துணைக்கு வச்சுக்கோம்மா... நீ எங்கும் போக வேண்டாம்."

மாமாவின் கரிசனம் அவளை நெகிழ வைத்தது. அம்மாவுக்குப் பிறகு என்னை ஏன் என்று கேட்க நாதியில் லையே என்று தவித்தது நினைவுக்கு வந்தது...

இப்படி அன்பான ஒரு சொந்தம் தனக்குக் கிடைக்கும் என்று அவள் நினைத்தும் பார்க்கவில்லை... இந்த அன்பு தெய்வத்தை அனுப்பி வைத்த தெய்வத்திற்கு ஆயிரம் நன்றி சொன்னாள்.

மாமா... மகனுக்கு நேர்ந்ததைப் பார்த்து ஆடிப் போயிருப்பார்... இந்த மட்டும் உயிருக்கு ஆபத்தில்லை என்றாரே டாக்டர்... அது மாமாவின் புண்ணியம்தான்.

கடவுள் நல்லவர்களைக் கைவிட மாட்டார்... வினோத் எழுந்து நடப்பது நிச்சயம்...

பாவம்... மாமா... மொழி தெரியாத அந்த ஊரில்... தனியாய் எப்படிச் சமாளிக்கிறாரோ... இந்த நேரத்தில் அவருக்கு ஒத்தாசை பண்ண இயலாமல் போனதே... ஏதேதோ நினைத்து மனம் உளைந்தது.

இரண்டு நாட்கள் கழித்து மறுபடியும் மாமாவிடம் இருந்து தகவல்...

''அம்மாடி... வினோத்தை அழைத்துக் கொண்டு வருகிறேன்... அதைச் சொல்லத்தான் போன் செய்தேன்...''

''மாமா... அவருக்கு இப்போது பரவாயில்லையா... டாக்டர் என்ன சொன்னார்...'' ஆர்வத்துடன் விசாரித்தாள் வைஜயந்தி.

''காலில் பலமாய் அடிபட்டிருக்கிறதும்மா... இடுப்பு எலும்பிலும் நல்ல அடி.. எழுந்து நடப்பது கொஞ்சம் சிரமம்தான் என்கிறார்... சக்கர நாற்காலி தேவைப்படும் என்று சொன்னபோது... துடிச்சு போயிட்டேன்... ஒரே பையன்னு பொத்தி வளர்த்தோம்... அவனுக்கு இப்படி ஆச்சேன்னு சங்கடம்தான்... அவன் பட்ற வேதனையை என்னால் பார்க்க முடியல்லே... ப்ச்சு... பெத்தவங்க கண் முன்னால பிள்ளைகள் நல்லா இருக்கணும்மா... இப்படி... உடம்பு முழுக்க கட்டுப் போட்டு... அவன் அசைய முடியாமல் கிடக்கிறதைப் பார்க்கறப்போ இதைப் பார்க்கவா உயிரோட இருக்கோம்னு நெஞ்சு வலிக்கிறது... இதையெல்லாம் பார்த்து துடிக்கணும்னு என் தலையெழுத்து... அதை அனுபவிக்கத் தானே வேண்டும்... சரிம்மா... திரும்ப உனக்கு போன் பண்ணுகிறேன். என்ன...'' அவரது குரலில் தெரிந்த துக்கம்... வைஜயந்தியை துடிக்கச் செய்தது.

எதற்குமே கலங்காதவர்... இப்படி நொந்து... புலம்பும்படி செய்து விட்டதே விதி... கண் கலங்கினாள் அவள்.

திரும்ப அவர் போன் செய்து பேசினார்.

மும்பை டாக்டரின் ஆலோசனைப்படி... வினோத்தை நேரே மருத்துவமனையில் 'அட்மிட்' செய்ய வேண்டியிருப்பதால்... அதை முடித்துவிட்டு... வீட்டுக்கு வருவதாய் சொன்னார்.



மாமா வரும்போது இரவு மணி பதினொன்று... அசதியில் உடம்பு தொய்ந்து... நிற்கவும் சக்தி இல்லாமல்... துவண்டு போயிருப்பது தெரிந்தது. அவரைப் பார்க்க பரிதாபமாய் இருந்தது... இந்த வயதில்... இப்படி அலைச்சல் படும்படி வந்துவிட்டதே...''

''மாமா... அலுப்புத் தீர குளித்து விட்டு வாருங்கள்... வெந்நீர் இருக்கிறது... இந்த நேரத்தில் பச்சைத் தண்ணீர் குளியல் வேண்டாமே...'' என்று அக்கறையுடன் அவள் சொல்ல...

கண் கலங்கி விட்டார் மனிதர்...

''இதுநாள் வரையில்... யாராவது இப்படி அக்கறை காட்ட மாட்டார்களான்னு ஏங்கினேன். இப்போ... நீ கனிவா செய்யறே பார்... அதான் எனக்கு பரம சந்தோஷமா... மனசுக்கு நிறைவா இருக்கும்மா. மனுஷனுக்கு காசு பணம் முக்கியம் இல்லேடா... நாலு வார்த்தை அன்பா பேசி... அனுசரணையா இருக்க ஆள் இருந்துட்டா போதும்... இது என் அனுபவத்தில் கண்ட உண்மை... சரிம்மா... நான் போய் குளிச்சுட்டு வருகிறேன். வழியில் எதுவும் சாப்பிடவில்லை... சாப்பிடத் தோணவும் இல்லை... இரண்டு வாழைப்பழம் இருந்தாப் போதும்... காலி வயிற்றில் படுத்தாத் தூக்கம் வராது...'' என்று சொல்லி விட்டு குளிக்கச் சென்றார்.

அவர் வந்ததும் சுடச் சுட தோசையும் வெங்காய சட்னியும் பரிமாறினாள் வைஜயந்தி.

''எதுக்காகம்மா.. இந்த நேரத்தில் இதையெல்லாம் செய்யப் போனே. பழம்போதும் என்றேனே...'' என்று சொன்னாலும்... வயிற்றுப் பசியில் மூன்று தோசை தின்றார்.

"இங்கே இருக்கும் டாக்டர் என்ன சொன்னார் மாமா... நம்பிக்கையுடன் ஏதாவது சொன்னாரா'' வெந்நீரை ஆற்றியவாறு கேட்டாள் வைஜயந்தி.

"அதையேத்தான் இவரும் சொல்கிறார்... மறுபடியும் எக்ஸ்ரே... ஸ்கேன்னு எல்லாம் எடுக்கணுமாம். டிஸ்சார்ஜ் சம்மரியைப் படித்துவிட்டு... மும்பை டாக்டர் சொன்னதை உறுதிப் படுத்திப் பேசினார்... ப்ச்சு... சக்கர நாற்காலி... வாக்கர் என்று அவர் சொல்றப்போ சங்கடமா இருந்தது மா... ராஜா மாதிரி மிடுக்கா நடப்பானே... இப்படி அடித்துப்போட்டு... ஒடுக்கி உட்கார வைத்து விட்டதே அந்தப் பொல்லாத தெய்வம்... அவன் மனசளவில் ஒடிந்து போவானே...'' கலங்கிய கண்களைத் துண்டால் துடைத்துக் கொண்டார்.

வைஜயந்திக்கும் நெஞ்சை அடைத்தது.

"மாமா... அந்த தெய்வம் நிச்சயம் கைவிடாது... எனக்கு அந்த நம்பிக்கை இருக்கு... நீங்கள் இப்படிக் கண் கலங்கினால்... எனக்குச் சங்கடமாய் இருக்கு...'' குரல் தழுதழுக்க சொன்னாள்.

"ஏதோ... கொஞ்சம் நம்பிக்கை மிஞ்சி இருக்கிறது. அவன் நல்லபடியாய் ஆகணும்... எழுந்து நடக்கணும்... குலதெய்வத்தோட கோவில் பிரகாரத்தை பதினொரு சுத்து நடக்க வைக்கிறேன்னு வேண்டிக் கொண்டிருக்கிறேன்...'' பெருமூச்சு விட்டார் பெரியவர்.

"நீங்க படுத்துத் தூங்குங்க மாமா... பயண அலுப்பு இருக்கும்... நாளைக்கு ஆஸ்பத்திரிக்கு சீக்கிரம் புறப்படணும் இல்லையா... நானும் உங்களுடன் வரலாமா... மாமா...'' என்றாள் வைஜயந்தி.



"தாராளமாய் வாம்மா... நீயும் வந்தால் எனக்கு தெம்பா இருக்கும்... எனக்கு என்ன வருத்தம்னா... நீ முதன் முதலாய் பார்க்கிறப்போ இப்படியா ஆகணும் என்பதுதான்... சரிம்மா... நீயும் போய்த் தூங்கு... காலையில் பேசிக்கலாம்'' என்று அவர் தன் அறையை நோக்கிச் சென்றார். நடை தளர்ந்து அவர் செல்வதை வருத்தத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள் வைஜயந்தி.

மருத்துவமனையில் வினோத்தைப் பார்த்த வைஜயந்திக்கு உள்ளம் திடுக்கிட்டது. மூச்சு மட்டும் ஓடுவது தெரியாவிட்டால்... உயிரில்லாத கட்டை என்று தான் நினைக்கத் தோன்றும்.

அவன் நிலை கண்டு பதறியது நெஞ்சம்.

மாமா கலங்கிப் போனதில் ஆச்சர்யமே இல்லை...

வினோத்தின் நிலைமையைப் பார்க்கும்போது எனக்கே ஆடிப் போகிறது... மாமா என்னமாய் துடித்திருப்பார்... பெற்றவராச்சே...

வலது காலில் கட்டு... அது தாங்கியில் தொங்கிக் கொண்டு இருந்தது... தலையிலும்... மார்பிலும் கட்டுக்கள்... மொத்தத்தில் எகிப்து 'மம்மி' மாதிரி... உடம்பின் முக்கால் பாகம் கட்டுப் போட்டிருந்தது.

வினோத் உயிர் பிழைத்தது அதிசயம் என்றாரே... மாமா... அது உண்மைதான்...

பெற்றவர்கள் செய்த புண்ணியமோ... இல்லை... வினோத்தின் அதிர்ஷ்டமோ... அவனைக் காப்பாற்றி இருக்கிறது என்று சொல்ல வேண்டும்.

வலி தெரியாமல் இருக்க மயக்க மருந்தை 'டிரிப்ஸ்' மூலமாய் ஏற்றியிருந்ததால்... நினைவின்றி கிடந்தான் அவன்.

தனக்கு என்ன நேர்ந்தது என்று உணர முடியாமல் படுத்திருக்கும் அவனைப் பார்க்கும்போது அழுகை பீறிட்டது வைஜயந்திக்கு... வழிந்த கண்ணீரை யாரும் அறியாமல் துடைத்துக் கொண்டாள்.

யாரோ கதவைத் திறந்து உள்ளே வருவது கண்டு நிமிர்ந்தாள்.

ஏறக்குறைய அவளது வயதை ஒத்தவள்... நிமிர்ந்த நடையில் வந்தாள்...

யாரிவள்... என்று வைஜயந்தி யோசனையுடன் பார்த்தாள் அவளுக்குப் பின்னால் வந்தவரைப் பார்த்ததும் புரிந்து போனது...

இவள்... வினோத்தின் காதலி!

வியப்புடன் அவளை நோக்கினாள்... இவளா வினோத்தின் காதலி!

அதீத நாகரீகத் தோற்றம்... சினிமா நடிகைப் போல உடையும்... ஒப்பனையுமாய்... கூந்தல் 'பப்பர' என்று விரிந்திருக்க... 'கூலிங் கிளாஸ்' அணிந்து.. ஏதோ ஷூட்டிங் நடுவில் கிளம்பி வந்தவளைப் போல இருந்தாள்...

இடுப்பைக் காட்டும் ஜீன்ஸூம்... டைட் டீ ஷர்ட்டும் உடம்பை கவ்விப் பிடித்து... வளைவு நெளிவுகளை தெள்ளத் தெளிவாய் காட்டின...

வைஜயந்திக்கு கண்கள் கூசியது போல இருந்தது. இதெல்லாம் மாமாவிற்கு பிடிக்காதே... எப்படி சகித்துக் கொள்ளப் போகிறார்... தெரியவில்லையே... ஓரக் கண்ணால் மாமாவை கவனித்தாள்... நினைத்தது போலவே அவரது முகத்தில் கடுகடுப்பும்... கண்களில் எரிச்சலும் தெரிந்தன... வந்திருப்பது யார் என்று மாமாவுக்கும் புரிந்து விட்டது.



"என்ன ஆச்சு... என் வினோத்திற்கு... எனக்கு நேற்று தான் விஷயமே தெரிந்தது. வினோத்தின் நண்பர் எங்களுக்கு போன் செய்யாமல் இருந்திருந்தால் அதுவும் தெரிந்திருக்காது. நீங்களாவது எங்களுக்குச் சொல்லியிருக்கலாம் இல்லையா..." படபடவென்று பொரிந்தாள் வந்தவள்...

அவளுடைய பேச்சிற்கும்... வந்திருந்த கோலத்திற்கும் சற்றும் பொருந்தவில்லை... உண்மையான காதலி இப்படி நிதானமாய் சிங்காரித்துக் கொண்டு வந்திருப்பாளா... உதட்டுச் சாயத்தையும் மறக்கவில்லையே... ஏளனமாய்ப் பார்த்தார் ராமலிங்கம்.

"ரூபா... நீ கொஞ்சம் சும்மா இருக்கியா... சார்... அவளுக்கு 'ஷார்ட் டெம்ப்பர்' படபடவென்று பேசி விடுவாள்... தப்பா நினைக்க வேண்டாம்... வினோத்திற்கு சீரியஸா ஏதும் இல்லையே... டாக்டர் என்ன சொல்கிறார்" என்று விசாரித்தார் ரூபாவின் தந்தை.

'சுள்'ளென்று எழுந்த கோபத்தை கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு பேசினார் ராமலிங்கம்.

"இதோ பாருங்க... என் பிள்ளைக்கு விபத்து ஆனதிலிருந்து நான் நானாக இல்லை... எனக்கு இருந்த வேதனையில் எதுவும் ஞாபகத்திற்கு வரவில்லை. என் பிள்ளை பிழைத்து எழுந்தால் போதும் என்ற நினைப்பு மட்டும் தான் எனக்கு. டாக்டர் சொன்னது வேறு என் நெஞ்சில் அறைந்த மாதிரி இருக்கு. இடுப்பில் பலமாய் அடிபட்டு இருப்பதால்... எழுந்து நடப்பது கொஞ்சம் சிரமம் என்கிறார். இனி... வாழ்க்கை முழுவதும் சக்கர நாற்காலிதான் என்பது மாதிரி சொல்கிறார்... இந்த மட்டும் பிழைத்து வந்ததற்கு நான் சந்தோஷப்படணும் அவ்வளவு தான்" கனத்த குரலில் அவர் சொல்ல...

ரூபாவின் முகம் பேயறைக் கண்டது போல் கோணியது... அவளது தந்தைக்குப் படு அதிர்ச்சி.

காலம் முழுவதும் சக்கர நாற்காலியா... அய்யோ...

இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

''மை காட்! நாங்க சந்தோஷமா வாழ்க்கையைத் தொடங்கலாம் என்று நினைத்தது அந்தக் கடவுளுக்கே பொறுக்கவில்லையாப்பா... இப்படி ஆகி விட்டதே... இப்ப என்ன செய்வது... இந்தக் கல்யாணத்தை தள்ளிப் போட வேண்டும் போலிருக்கே...'' என்று புலம்ப...

''டோன்ட் டாக் ரப்பிஷ் ரூபா... இந்த நிலையில் எதுக்கு கல்யாணப் பேச்சு... கேட்க சகிக்கவில்லை... அதைப்பத்தி அப்புறம் நிதானமா யோசிப்போம்... சார்... உங்க பிள்ளையின் நிலைமையைப் பார்க்கும்போது எனக்கும் வருத்தமாய்தான் இருக்கு... நல்லவேளையாய் கல்யாணம் ஆகறதுக்கு முன்னால் இந்த விபத்து நடந் துச்சே... இல்லைன்னா... என் பொண்ணோட வாழ்வே நாசமாகியிருக்கும்... தயவு செய்து இப்படி பேசுகிறேன்னு தப்பா நினைக்காதீங்க... எதையும் நான் வெளிப்படையா பட்டுன்னு பேசிடுவேன்... ஒரு பொண்ணோட அப்பன் நிலையில் இருந்து பார்த்தா... நான் சொல்வது சரின்னு உங்களுக்குப் படும்... எனக்கு என் பெண்ணோட வாழ்வு தான் முக்கியம்... காலமெல்லாம் சக்கர நாற்காலியைத் தள்ளிக் கொண்டு அவள் இருக்க முடியாது... ஒரு நோயாளி புருஷனோட அவள் எப்படி சந்தோஷமா குடித்தனம் செய்ய முடியும்... சொல்லுங்க சார்... இந்த கல்யாணப் பேச்சை மறந்து விடுவது நல்லது... வாம்மா... போகலாம்'' என்று வெட்டொன்று துண்டு இரண்டு என்பது போலப் பேசினார் ரூபாவின் தந்தை.



''டாட்...'' குழப்பத்துடன் கூவினாள் ரூபா.

''உஷ்... எதுவும் பேசாதே ரூபா... நான் சொல்வது உன் நன்மைக்குத்தான்... இப்போ... புறப்படு...''

''அதில்லை... டாட்...''

''எல்லாம் வீட்டில் போய் பேசிக் கொள்ளலாம் என்கிறேன் இல்லையா... கிளம்புடா...'' கொஞ்சம் அதட்டலாகவே அவர் சொல்ல... மகளும் புறப்பட்டாள். இருவரும் செல்வதைப் பார்த்த ராமலிங்கம் ஒரு வரட்டுச் சிரிப்பை உதிர்த்தார்...

இவர்களெல்லாம் மனிதர்கள்!

நாகரீகம் என்பது வெறும் வெளித்தோற்றம் தான்... உள்ளுக்குள் மனுஷத்துவம் இல்லாத காட்டுமிராண் டிகள்... வனவிலங்குகள்!

அவைகூட பரவாயில்லை... தன் இனத்தில் ஒன்று அடிப்பட்டு கிடக்கும்போது சுற்றிலும் நின்று தவிக்கும்... அந்தத் தவிப்புக் கூட இவர்களுக்கு இல்லையே... சுயநலப் பிண்டங்களாக அல்லவா இருக்கிறார்கள்... ஆரோக்கியமும், வலிமையுடனும் வளைய வரும் வினோத் வேண்டு மாம்... ஊனம் என்று வந்ததும் வேண்டாம் என்று உதறிவிட்டுச் செல்கிறார்கள்...

பாவம்... என் பிள்ளை... இதையெல்லாம் உணராமல் கிடக்கிறான்... அதுவும் ஒருவிதத்தில் நல்லதுதான். ஏன்... இந்த விபத்தும் கூடத்தான்.

வண்டி விபத்தில் பிழைத்து வந்தது பெரிய விஷயம் இல்லை. உணர்ச்சியற்ற ஒரு ஜடத்தை மணக்க இருந் தானே அந்த விபத்திலிருந்து அவன் தப்பித்ததுதான் மகத்தான விஷயம்...

வினோத் அருகில் கூட செல்லவில்லை... எட்டியே நின்று பேசுகிறாளே... இது பெயர்தான் காதலாக்கும்... அடச்சே... ஏதோ நாடகக்காரி மாதிரி அரிதாரம் பூசிக் கொண்டிருக்கும் இவள் எனக்கு மருமகள்... அம்மாடி... பிழைத்தேன்...

அந்த நினைப்பே அவருக்கு நிம்மதியூட்டியது.

மட்டு மரியாதை தெரியாத அந்த டம்பக்காரி மருமகளாக வந்திருந்தால்... வீட்டின் கதியென்ன என்று எண்ணி நடுங்கினார்...

குத்து விளக்காய் சுடர் விட மாட்டாள்... வீட்டைக் கொள்ளி வைத்து எரித்து விடுவாள்... அப்படியாகாமல் கடவுள்தான் காப்பாற்றியது... ஊகூம்... வத்சலாதான் தெய்வமாக இருந்து காப்பாற்றியிருக்க வேண்டும்.

எது நடந்ததோ... அது நன்றாகவே நடந்தது என்று கீதாச்சாரம் சொல்வதுபோல...

எல்லாம் நன்மைக்குத்தான்... இவர்களின் உண்மை சொரூபம் வெளிப்படட்டும்... இந்த கல்யாணம் நின்று விடட்டும் என்றுதான் இந்த விபத்து நடந்திருக்கிறது... அப்படித்தான் எண்ணினார் பெரியவர். வைஜயந்திக்கும் படு அதிர்ச்சி.. இப்படியா... நிறம் மாறும் பச்சோந்தியாய் தடம் புரண்டு பேசுவார்கள்... காதல் இப்படி 'சட்'டென்று வெளுத்துப் போகுமா... என்ன... அந்த அளவு ரூபாவின் நேசம் பலவீனமானதா...

உண்மையான அன்பு உள்ளத்தை மட்டும் தானே நேசிக்கும்... வெளித்தோற்றத்தைப் பார்த்து வராதே... உடல் ஊனம் என்றவுடன் காதலும் ஊனமாகி விட்டால்... அந்த காதலுக்கு அர்த்தமேது... கண் விழித்ததும் அவர் ரூபா வந்தாளா என்று கேட்பாரே... நடந்ததைச்



சொன்னால்... எலும்புகள் முறிந்து கிடக்கும் அவருக்கு மனசும் முறிந்துப் போகும் தான்...

அதற்காகவாவது ரூபா மறுபடியும் வரவேண்டும்... மனம் மாறித் திரும்ப வந்து வினோத்தைப் பார்க்க வேண்டும் என்று விழைந்தது அந்தப் பேதை மனம்...

## 6

வினோத்தை வீட்டிற்கு அழைத்து வந்தாயிற்று. பொழுது இறக்கைக் கட்டிக் கொண்டு பறந்தது... அவனுக்கு பணிவிடைச் செய்யவே வைஜயந்திக்கு நேரம் சரியாக இருந்தது... அவளும் அதை மனம் உவந்து ஏற்றுக் கொண்டாள்... வினோத்தின் அருகில் இருந்து கவனித்துக் கொள்வதை பெரும் பாக்கியமாகவே நினைத்தாள் அவள்.

பெரியவரும் கூடச் சொல்லிப் பார்த்தார்... 'நோயாளியைப் பார்த்துக் கொள்வது கொஞ்சம் சிரமம்தான். உனக்கு எதுக்கும்மா கஷ்டம்... நர்ஸை ஏற்பாடு பண்ணி விடுகிறேனே' என்று... ஆனால் அதை மறுத்து விட்டாள் அவள்...

அதுவும் ஒரு விதத்தில் நல்லதுக்கே என்று தோன்றியது.

தன்னைக் கண்ணும் கருத்துமாய் கவனித்துக் கொள்ளும் வைஜயந்தியின் மீது அவனுக்குப் பிரியம் வர இதுவே ஒரு சந்தர்ப்பம்...

ரூபாவின் புறக்கணிப்பால் நொந்து கிடக்கும் அவனுக்கு இப்போது ஒரு பெண்ணின் அன்பும்... அவள் காட்டும் பரிவும் தேவை...

புண்பட்ட ரணத்திற்கு புனுகு பூசுவது போல...

வைஜயந்தியின் அக்கறையும்... அவளது சேவையும் அவனை மாற்றலாம் இல்லையா.. அதைப் பார்க்கலாம். வினோத்திற்கு காதலி வந்ததோ... எட்டிப் பார்த்து விட்டுச் சென்றதையோ அவர் சொல்லவில்லை. ஏற்கனவே உடலால் நொந்து போயிருப்பவனுக்கு எதுக்குச் சொல்லி சங்கடப்படுத்த வேண்டும் என்ற எண்ணம்தான்...

அது தெரியாமல்... ரூபாவைப் பார்க்க வேண்டும் என்று ஏங்கி... ஏன் இன்னும் பார்க்க வரவில்லை என்று குழம்பி... அவள் வருவாளா என்று எதிர்பார்ப்புடன் காத்திருந்தான்.

அவள் வரவே இல்லை... அவளிடமிருந்து எந்தத் தகவலும் இல்லை... உடல் வலியை விட... உள்ளத்தின் வலிதான் அதிகம்...

இந்த சமயத்தில் அவள் அருகில் இருந்து ஆறுதல் சொல்ல வேண்டும்... ஆனால் ஒரு போன் கூடச் செய்யாமல்...

ஒருவேளை... எனக்கு விபத்தில் அடிபட்ட விஷயம் இன்னும் அவளது செவிக்கு எட்டவில்லையோ... இருக்காதே... சஞ்சய் அவள் வீட்டுக்கு போன் பண்ணி விஷயத்தைத் தெரிவித்ததாய் சொன்னானே... தெரிந்தும் அவள் வரவில்லையா... அவனுக்கு வேதனை பிடுங்கித் தின்றது...

அவனது பரிதவிப்பைப் பார்த்தோ... இல்லை... இனி மேலும் உண்மையை மறைத்து வைக்கக் கூடாது என்றோ... தெரியாது... அவனுக்கு அதைத் தாங்கும் சக்தி வரட்டும் என்று நாட்களைக் கடத்தியது போதும் என்று நினைத்தவர். நடந்ததை அவனுக்குச் சொன்னார்...



அந்தச் செய்தி அவனுக்கு பேரிடியாய் விழுந்தது... இதயத்தை வாளால் பிளந்த மாதிரி வலித்தது.

அவனால் ரூபாவை மறக்க முடியவில்லை... அவள் தன்னை உதறி விட்டாள் என்பதை நம்பவும் மறுத்தான். ஒருவேளை... அவளைப் பிடிக்காமல் அப்பா கட்டுக் கதை சொல்கிறாரோ... அவள் மீது வெறுப்பு வர வேண்டும் என்று கருதி... இல்லாததையும் பொல்லாததையும் கூறினாரோ... அந்த சந்தேகமும் அவனுக்கு வந்தது... அதுவும் கொஞ்ச நேரம் தான்... அப்படி இருக்காது... அப்பா எதையும் நேராய் பேசுபவர்... அந்த அளவு கீழ் இறங்கவும் மாட்டார். அவ்வாறு இருந்திருந்தால்... ரூபாவே எனக்கு போன் செய்திருப்பாளே...

நேரில் வந்து பார்க்க முடியாவிட்டாலும் போனிலாவது ஆறுதலாய் பேசியிருக்கலாமே... அதுவும் இல்லையே... இதுவரைக்கும் வந்து பார்க்காதவள் இனியும் வந்து பார்ப்பாள் என்ற நம்பிக்கை இல்லை... அப்பா சொல்வது உண்மையாக இருக்கும்...

ஆரம்பத்தில் அதையே நினைத்து புழுங்கினான். உன்னால் எப்படி முடிந்தது ரூபா. வேர்விட்டு வளர்ந்த காதலை அத்தனை சீக்கிரம் வெட்டியெறிந்து விட்டாயே... இதுதான் உண்மை காதலா... உன்னால் முடிந்தது... என்னால் அது முடியவில்லையே என்று உள்ளுக்குள் புலம்பினான்.

வைஜயந்தி இரவும் பகலுமாய் தன்னை கவனித்துக் கொள்வதைக் கண்டு... அவனது இரும்பு உள்ளம் இளகிப் போனது உண்மை...

எங்கிருந்தோ வந்தவளுக்கு இருக்கும் பொறுப்பும்... கரிசனமும்... காதலியாக இருந்தவளுக்கு இல்லாமல் போனது கொடுமை...

திருமணம் ஆன பின்பு இந்த விபத்து நடந்திருந்தால்... அப்போதும் இதே மாதிரி விலகி ஓடி இருப்பாளா...

ஆக... மனுஷன் தெம்பாய் நடமாடிக் கொண்டிருக்கும் வரை தான் மதிப்பும்... மரியாதையும்...

பெருமூச்சு விட்டான் அவன்.

அதைக் கவனித்தவாறு அறைக்குள் வந்த வைஜயந்திக்கு அவனது நிலை பரிதாபத்தை ஊட்டியது.

ஆயிரம் கனவுகளுடன் இந்தியாவிற்கு வந்தவனை இப்படி பாழும் விதி அடித்துப் போட்டு விட்டது வேதனை தான்.

போகட்டும்... விதிதான் அப்படி... பழகிய காதலியுமா.. பாராமுகமாய் இருந்து வதைக்க வேண்டும்... உடல் காயத்தை விட உள்ளத்தில் பட்ட காயத்தின் வீரியம் அதிகம்... அதனால்தான் அவன் இன்னும் மனம் தேறாமல் இருக்கிறான்...

எங்கேயோ விட்டத்தை வெறித்துக் கொண்டிருந்தவனை இரக்கத்துடன் நோக்கினாள்...

தன் கையில் இருந்த பேசினை... கட்டிலின் அருகே இருக்கும் டீபாயின் மீது வைத்துவிட்டு... 'ஸ்பான்ஜை' பேசினில் இருந்த வெந்நீரில் நனைத்தாள்.

மெல்ல அவனைத் தாங்கி... உட்கார வைத்து... அவனது சட்டையை மெல்லக் கழட்டினாள். பஞ்சால் தோள்களை மெல்லத் துடைத்தாள். மென்மையாய்... ஒற்றுவது போல.. மார்பையும் முதுகையும் துடைத்து விட்டு... முகத்தையும் துடைத்து விட்டாள்...

ஆரம்பத்தில் அவளது ஸ்பரிசம் கண்டு சுணங்கியவன் தான்.



"எதுக்குப்பா அந்தப் பெண் செய்ய வேண்டும்... ஒரு நர்ஸை ஏற்பாடு செய்யக் கூடாதா..." என்று முகம் சுளித்து முறையிட்டான்.

"ஏம்ப்பா... நர்ஸும் பெண் தானே... அது பரவாயில்லையா..." என்றார் தந்தை.

"ஆண் நர்ஸ் இருக்கிறார்களே..." என்றான் அவன்...

"ஓ... இருக்கிறார்கள்தான்... ஆனால்... வைஜயந்தி மாதிரி நிதானமா மென்மையா... பொறுமையா பண்ணுவார்களா... சொல்லு... 'சடக்'கென்று உன்னை எழுப்பி உட்கார வைப்பாங்க... 'படக்'கென்று உன்னைத் திருப்பு வாங்க... அவங்கெல்லாம் மூணாம் மனுஷங்கப்பா... அவர்களது வேலையும்... கவனிப்பும் மிஷின் மாதிரி இருக்கும்... வைஜயந்தி அப்படியா... உன் மேல இருக்கும் அக்கறையால... உன்னைப் பூ மாதிரி பார்த்துப்பா... எதுவும் பேசாதே... ஆமாம்..." கண்டிப்புடன் அவர் சொல்லிவிட்டார்.

அதற்கு பின் அவன் வாய்விட்டுச் சொல்லாவிட்டாலும் மனசுக்குள் அரிப்பு...

இவளைத்தானே அப்பா தனக்காகப் பார்த்தது. வேண்டாம் என்று நிராகரித்தேனே... இப்போ... இவள் கையை எதிர்பார்க்க வேண்டி வந்ததே... தன் தலையெழுத்தை நொந்தான்.

கடவுளுக்கு பொழுதுபோக்கு இதுதானோ... மனிதன் நினைப்பதை நடக்க விடாமல் செய்து... தான் நினைத்ததை சாதித்து விடுகிறாரே... இதில் என்ன சந்தோஷமோ அவருக்கு... உள் வேதனையின் தகிப்பு பெருமூச்சாய் வெளிப்பட்டது...

"வலிக்கிறதா... சரி... கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள்... இதோ... முடிந்து விட்டது..." என்றவள்... துவாலையால் ஈரத்தைத் துடைத்து விட்டு... பேஸினை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள்.

அவனது உடல்நிலை சீக்கிரமே தேறி வந்தது... அது வைஜயந்தியின் அன்பான கவனிப்பால் தான் என்பதை அவனும் உணர்ந்தான். எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல்.. சேவை மனப்பான்மையுடன் செய்யும் இந்தப் பெண்ணுக்கு எப்படி நன்றி சொல்வது.. சொந்தம் என்பதால் மட்டும் அன்பும் அக்கறையும் வந்து விடாதுதான். இவளிடம் அதையும் மீறி உண்மையான பாசம் வெளிப்படுகிறதே...

இது... அப்பா அவளை அழைத்து வந்து அன்பு காட்டியதால் வந்ததா... இல்லை... உறவு என்ற முறையில் வந்த பரிவா... இருக்கலாம்... என்று நினைத்தானே தவிர...

அவள்... தன் உள்ளத்தில் சின்னக் கோவில் கட்டி அங்கு அவனைக் குடி வைத்து விட்டதை அவன் எப்படி அறிவான்.

மாங்காயை புகைப்போட்டு பழமாக்குவது போல... பெரியவர்... அவனைப் பற்றிப் பேசியே அவள் மனதை கனிய வைத்து விட்டார் என்பது அவனுக்குத் தெரியாதது...

அது தெரியாமலே இருக்கட்டும் என்பதுதான் வைஜயந்தியின் விருப்பமும்...

சீக்கிரமே கால் கட்டும் அவிழ்க்கப்பட்டது. ஆனால் அடியெடுத்து வைக்க முடியவில்லை...

டாக்டரின் அறிவுரைப்படி சக்கர நாற்காலியும் வீட்டுக்கு வந்து சேர்ந்தது.



அதைப் பார்த்ததும்... அவன் முகத்தில் தெரிந்த வேதனை... அதைக் கண்டு வைஜயந்தியின் நெஞ்சம் வலித்தது. கடவுளே... அந்த வேதனையை துடைத் தெறியும் சக்தியை எனக்குக் கொடுக்கக் கூடாதா... இதயம் துடித்தது... எங்கே தன் கலங்கிய கண்களை அவன் பார்த்து விடுவானோ என்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

அவள் கொண்டு வந்த உணவை அவன் தொடவில்லை...

"எனக்குப் பசியில்லை... வேண்டாம்..." என்றான் இறுகிப் போனவனாய்...

"காலி வயிற்றுடன் இருக்கக் கூடாது... மாத்திரை சாப்பிடணுமே... அதற்காகவாவது சாப்பிடத்தான் வேண்டும்..." என்று வற்புறுத்தினாள் வைஜயந்தி.

"ப்ச்சு... எனக்கு எதுவும் வேண்டாம்... ப்ளீஸ்... லீவ் மீ அலோன்" - கோபத்துடன் அவன் சொல்ல... அவள் விடவில்லை.

"நீங்க சாப்பிட்டால்தான்..." என்றவளை இடைமறித்து "அதான் சொல்கிறேன் இல்லையா... எனக்கு பசியில்லை என்று... கெட் லாஸ்ட்" என்று கத்தினான்.

அதைக் கேட்டுவிட்டு ஓடி வந்தார் ராமலிங்கம்.

"என்னம்மா வைஜயந்தி... ஏன் இவன் கத்தறான். என்னாச்சுப்பா... ஏம்மா... தட்டைக் கையில் வைத்துக் கொண்டு நிக்கறே... சாப்பாட்டை அவனுக்கு கொடேன்" என்றார் அவர்.

"அதைவிட கொஞ்சம் விஷத்தைக் கொடுத்து விடுங்கள். ஓரேடியாய் போய் தொலைகிறேன். இப்படி எதுக்கும் லாயக்கில்லாமல் பூமிக்கு பாரமாய் இருப்பதை விட... போய் விடுவது மேல்..."

சலிப்புடன் மகன் பேசுவது கேட்டு பெரியவரின் முகம் வாடியது.

"ஏண்டா இப்படிப் பேசறே... இந்த மட்டும் நீ உயிரோடு இருக்கியேன்னு நான் சந்தோஷப்படுகிறேன்."

"இப்படி நடைப்பிணமாய் நான் இருக்கிறது உங்களுக்கு சந்தோஷம் இல்லே... இதை விட விபத்தில் நான் செத்திருக்கலாம். சே... என் விரோதிக்குக் கூட இந்த நிலைமை வேண்டாம்!

"அப்படியெல்லாம் பேசாதே வினோத்... எது நடந்தாலும் அதை தைரியமாய் எதிர் கொள்ளணும்ப்பா. துன்பத்தைப் பார்த்து விரக்தியடையக் கூடாதுடா... எதுவும் காரண காரியம் இல்லாமல் நடக்காதும்பாங்க... இதுவும் அப்படித்தான்னு நினைச்சுக்கோப்பா..."

"பேசாதீங்கப்பா... உபதேசம் செய்வது எல்லோருக்கும் ஈஸி... ஆனால் அனுபவிப்பவர்களுக்குத்தான் தெரியும் கஷ்டம்... என் வேதனை எனக்குத்தான் தெரியும்..." கண்களை இறுக மூடிக் கொண்டான்.

மேலும் பேசி அவனது எரிச்சலையும் ஆத்திரத்தையும் கிளற வேண்டாம் என்று அங்கிருந்து நகர்ந்தார் ராமலிங்கம். வைஜயந்தி நகராமல் அங்கேயே இருந்தாள். அவன் கண்களைத் திறந்தான். அவனையேப் பார்த்தவாறு நின்றிருந்தவளைக் கண்டு புருவங்கள் மேலேறின.

"நீ போகவில்லையா..." எரிச்சலுடன் கேட்டான்.

"நீங்கள் சாப்பிடாமல் நான் எப்படி போக முடியும். என்னுடைய கடமைகளில் இதுவும் ஒன்று இல்லையா. அது முடியாமல் எப்படிப் போவேன்" என்றாள் அழுத்தமாக...

"மை காட்! ஏன் இப்படி என்னை 'டார்ச்சர்' செய்கிறாய்... யாருக்கு வேணும் இந்தச் சாப்பாடு... அப்படிச்



சாப்பிட்டுத்தான் உயிர் வாழணும் என்று இல்லை அதைவிட...."

"சாப்பிடாமல் உயிர் விடலாம் என்ற உத்வேகம்... அப்படித்தானே... இதோ பாருங்கள் வினோத்... இனி உயிர் வாழக்கூடாது என்று எல்லோருமே நினைத்து விட்டால்... உலகில் இத்தனை ஜனத்தொகை பெருகி இருக்காது... மனசு சரியில்லை என்பதற்காக உயிர் விட நினைப்பது கோழைத்தனம் என்றுதான் சொல்வேன். யாருக்குத்தான் இல்லை பிரச்சனையும் வேதனையும்... வாழ்க்கையில் போராடணும். எதிர் நீச்சல் போட்டு ஜெயித்துக் காட்டணும். அதில்தான் பெருமை... என்னால் முடியும் என்று செய்து காட்டணும் அதுதான் வீரம்... ஏதோ வாழ்க்கையே அஸ்தமித்து விட்டது போல புலம்புறது ஆண்மைக்கழகல்ல... நீங்க செத்துப் போயிருக்கணும் என்று விதி இருந்தால்... அது விபத்து நடந்த அன்றைக்கே நடந்திருக்கணும்... அந்த பயங்கர விபத்திலும் நீங்க உயிர் பிழைத்திருக்கிறீங்க... ஊகூம். கடவுள் உங்களை உயிருடன் விட்டு வைத்திருக்கிறார் என்றால்... அதுக்கு ஏதோ காரணம் இருக்க வேண்டும்... நீங்க எதையோ சாதிக்க என்று இருக்கலாம்..."

"இப்படி நொண்டியாக... இடுப்பு ஒடிந்து போய் ஊனமாக... சாதனை... ம்ம்... வெறுப்பு ஏற்றாதே ப்ளீஸ்..."

"ஏன்.. குறையோட இருக்கிறவங்க சாதிக்கிறதில்லையா... உங்க ஊனமானவங்க ஜெயித்துக் காட்டறதில்லையா... உங்களை மாதிரி விபத்தில் அடிபட்டவங்க தான்... சுதா சந்திரன்... காலை வெட்டி எடுத்துட்டாங்க. உடனே அங்கே சுருண்டு மூலையில் படுத்து விடவில்லை. நாட்டியம் இனி ஆட முடியாதேன்னு புரண்டு அழவில்லை.

வாழ்க்கையை ஒரு சவாலாக எத்துக்கிட்டு... செயற்கை காலை பொருத்திக் கொண்டு... நாட்டியத்தை விடாமல் செய்தார்... அதற்காக அவர் பட்ட வலியும் வேதனையும் எத்தனைத் தெரியுமா... அவரது நடனத்தைப் பார்க்கும் எவருக்கும்... அவரது ஒரு கால் செயற்கையானது என்றால் சத்தியமாய் யாரும் நம்ப மாட்டார்கள்... அத்தனை இயல்பாய் இருக்கும் அவரது நடனம்... இப்போது... வட இந்தியாவிலும், அவர் பிரபலமானவர். ஒரு பெண்ணிற்கு இருக்கும் தைரியமும்... தன் நம்பிக்கையும்... விடா முயற்சியும் உங்களுக்கு இல்லாமல் போனதே வினோத்."

வினோத் எதுவும் பேசாமல் அவளையேப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு மலைப்பு... ஊமைப் பெண் என்று நினைத்த வைஜயந்தியா இப்படி பேசுவது... அவளுக்கு இந்த மாதிரி பேசவும் வருமா என்ன...

"சமீபத்தில் செய்தித் தாளில் ஒரு 'ஆர்ட்டிக்கிளை' படித்தேன்... மின்சாரம் தாக்கி... ஒரு சிறுவனுக்கு கைகள் வெந்து போய்... அதை வெட்டியெடுத்து விட்டார்களாம்... அவன் தாய்... தன் பிள்ளைக்கு நேர்ந்ததைப் பார்த்துக் கதறி அழுதாளாம்... "எதுக்கும்மா அழறே... எனக்கு கைகள் இல்லைன்னா... கால்கள் இருக்கும்மா... சமாளிச்சுப்பே"ன்னு சொன்னானாம் அந்தப் பிள்ளை... அதைப் படித்ததும் எனக்கு சிலிர்த்து விட்டது... இது மாதிரி எத்தனைப் பேர்... பிறவியிலேயே கைகள் இல்லாமல்... கால்களால் படம் வரைந்து... கின்னஸில் இடம் பிடித்திருக்கிறார்கள் தெரியுமா வினோத்... வாழ நினைத்தால் எப்படியும் வாழலாம்... வழிகள் ஆயிரம் இருக்கிறது... அது உங்களாலும் முடியுமே... வினோத்... பலம் என்பது உடம்பில் இல்லை... மனசில் இருக்கிறது. அது இருந்து



விட்டால்... உலகில் எதையும் சாதிக்கலாம்... அந்த மனோ பலம் உங்களுக்குள் இருக்கிறதா என்று தேடிப் பாருங்கள் வினோத்... இருந்து விட்டால் போதும்... நிச்சயம் நீங்கள் எழுந்து நடப்பீர்கள்..." என்று சொல்லிவிட்டு அவள் செல்வதற்காகத் திரும்பினாள்.

"வைஜயந்தி..."

வியப்புடன் திரும்பினாள்... அவனா அவளை பெயர் சொல்லி அழைத்தது... மேனியில் சிலிர்ப்பு அலையாய் ஓடியது...

முதன் முதலாய் தனது பெயர் அவன் வாயிலிருந்து வந்ததை கற்கண்டின் தித்திப்பாய் உணர்ந்தாள்.

"எனக்குப் பசிக்கிறது... சாப்பாட்டுத் தட்டைத் தருகிறாயா..." என்று அவன் கேட்டதும் அவளது வியப்பு இரட்டிப்பானது...

தனது வார்த்தைகளை அவன் அசட்டை பண்ணவில்லை... நீயென்ன சொல்வது... நான் என்ன கேட்பது என்று அலட்சியம் காட்டாது... அதை மனப்பூர்வமாய் ஏற்றுக் கொண்டானே... அது போதும்.

"தாங்க்ஸ் வினோத்... நான் சொன்னதை மதித்து ஏத்துக் கொண்டதுக்கு... ஒரு நிமிஷம்... இதை சூடாக்கிக் கொண்டு வருகிறேன்... இருங்கள்" என்று ஓடாத குறையாய் விரைந்தாள்...

அவள் கொண்டு வந்ததை இருபது நிமிடங்களில் காலி செய்து விட்டு... கர்ச்சீப்பினால் வாயைத் துடைத்துக் கொண்டான்.

அதைக் கண்டு அவள் சிரித்தாள்.

"இத்தனை பசியை வைத்துக் கொண்டு... வயிற்றைக் காயப்போடப் பார்த்தீர்களாக்கும்... பாவம்... வயிறு... அதற்கு எதுக்கு தண்டனை... ம்ம்..." என்று கேலி செய்து விட்டு தட்டை எடுத்துக் கொண்டாள். அவனும் சிரித்து விட்டு "தாங்க்ஸ்" என்றான்.

"எதுக்கு எனக்கு தாங்க்ஸ்... இதை நான் சமைக்கவில்லையே... சமைத்து வைத்ததைக் கொண்டு வந்தேன்... அவ்வளவுதான் என் வேலை..."

"தாங்க்ஸ் அதுக்கில்லை... பொறுமையாய் காத்திருந்தாய் பார்... அதற்கு... அழகாய்... வாழ்க்கையோட நிதர்சனங்களை விளக்கினாய் பார்... அதற்கு... வாழ்க்கையில் என்னைவிட மோசமான நிலையில் இருந்தவர்கள் சமாளித்து... முன்னுக்கு வரவில்லையா என்று சுட்டிக் காட்டினாய் பார் அதற்காக..."

"அவ்வளவுதானா... இன்னும் இருக்கிறதா..." தலையை சாய்த்து அவள் கேட்டாள்.

"இன்னும் இருக்கிறது... அதையும் சொல்லி விடுகிறேன். ம்ம்... என்ன சொன்னே... ஆங்... என்னுள் இருக்கும் மனோபலத்தை தேடிப் பார்த்தால்... என்னாலும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை கொடுத்தாய் பார் அதுக்கும் சேர்த்துதான்... சாரி... வைஜயந்தி... உன்னிடம் கடுமையாகப் பேசி விட்டேன்... அப்பவும்... அதைப் பொறுத்துக் கொண்டு எனக்கு நிதானமாய்.. இதமாய்... மென்மையாய் எடுத்துச் சொன்னாயே... அதுக்கு கோடி நன்றி சொன்னாலும் போதாது..."

"என்னிடம் இருப்பது சின்ன பெட்டிதான் வினோத்" என்றாள் முகவாட்டத்துடன்.



"அய்யோ... உன்னைப் பாராட்டித்தானே பேசினேன். வைஜயந்தி... உன் ஏழ்மையைக் குத்திக் காட்டி பேசவில்லையே..." குழப்பத்துடன் கேட்டான் வினோத்...

"ஊகூம்... அதில்லை... உங்கள் கோடி கோடி நன்றிகளை வாங்கி பூட்டி வைக்க என்னிடம் பெரிதாய் சூட்கேஸ் ஏதுமில்லை என்று சொல்ல வந்தேன்..." என்று விளக்கினாள் அவள்... அதுவும் சிரிக்காமலேயே...

முதலில் விழித்தவன்... பிறகு அவள் சொன்னதில் இருந்த நகைச்சுவையை உணர்ந்ததும் வாய்விட்டுச் சிரித்தான்.

முதன் முதலில் அவன் சிரிப்பதைப் பார்க்கிறாள் அவள்... அது அவளுக்கு மலைப்பைத் தந்தது... தான் சொன்னதைக் கேட்டுச் சிரிக்கிறானே அவனுக்கு இப்படிச் சிரிக்கவும் வருமா என்ற மலைப்பு...

இப்படியே எப்போதும் சிரித்துக் கொண்டிருக்க மாட்டானா என்ற ஆசையும் வந்தது...

"அப்பா சொன்னாரே... வைஜயந்தி வாய் திறந்து பேசுவது அபூர்வம்... வாயில்லாப் பூச்சின்னு... அது உண்மைதானோ என்று நினைத்தேன்... அந்த வாயில்லா பூச்சி... இன்றைக்கு என்னமாய் பேசி விட்டாள்... அவளுக்கு இப்படியும் பேச வருமா என்றுதான் எனக்கு ஆச்சர்யம்... இனி அப்பா ஏதாவது உன்னைப் பற்றி பேசா மடந்தை... மௌன மங்கைன்னு சொல்லட்டும்... அப்போது பார்த்துக் கொள்கிறேன்..." என்று அவன் பரிகாசக் குரலில் சொல்லவும்...

அவள் முகம் சிவந்து... தலை குனிந்தாள்...

ஒருவேளை... வரம்புக்கு மீறி பேசி விட்டேனோ... அதைத்தான் குறிப்பாய் உணர்த்துகிறான் போலும்...

மனதில் படபடப்பு ஏற்பட்டது. ஏதோ ஒரு வேகத்தில் பேசி விட்டேனே... அது தப்போ என்றும் தோன்றியது.

அவனது வதனத்தில் பார்வையைப் பதித்திருந்தவளுக்கு அவனது தடுமாற்றம் புரிந்தது.

"என்ன வைஜயந்தி... ஏன் தயக்கம்..."

"நான் ஏதாவது "ஓவராய் பேசி விட்டேனோ என்று தோன்றுகிறது... என்னையும் அறியாமல் பேசி விட்டேன்... தப்பாக இருந்தால் மன்னித்து விடுங்கள் வினோத்..." என்றாள் தயங்கியவாறு...

"அசடு... அசடு... இத்தனை பேசும் உனக்கு பாராட்டுக்கும்... பழிப்புக்கும் வித்தியாசம் தெரியவில்லையே... நான் உன்னை மெச்சித்தான் பேசினேன்... நீ வருத்தப் படுவது வீண்... போதுமா... உன்னை மாதிரி ஒருத்தி அருகில் இருந்து விட்டால் போதும்... இந்த உலகத்தையே வென்று விடலாம்தான்... ஹலோ... இதுவும் பாராட்டுதான்ம்மா... தப்பா எடுத்துக்காதே..." அவனது கேலிக்குரலில் அவள் குளிர்ந்து போனாள். அவனது வார்த்தைகளைக் கேட்டு சிறகுகள் இல்லாமலே ஆகாசத்தில் சஞ்சரிக்கத் தொடங்கினாள் வைஜயந்தி.

## 7

காதலுக்குத்தான் எத்தனை சக்தி!

சூரியனையே பார்த்து நிற்கும் சூரிய காந்தியைப் போல மலர்ந்திருக்கும் முகத்தில்... சூரியனை மிஞ்சும் ஜொலிப்பு... கண்களில் மின்னலின் பிரதிபலிப்பு... கன்னங்களில் செந்தூர சிவப்பு... இதழ்களில் சதா தவழும்



புன்சிரிப்பு... நடையில் ஒரு மிதப்பு... இதுதான் காதலின் இலக்கணம் என்று யாராவது சொன்னால்... அது இப்போது... வைஜயந்திக்கு பொருந்தும்...

வேண்டாம் என்று அழுத்தமாய் மனப் பெட்டகத்தில் அடங்கிக் கிடந்த காதல் உணர்வு... இப்போது உடைப் பெடுத்தாற்போலப் பொங்கியது...

இருக்காதா... பின்னே... சிடுசிடு வார்த்தைகளும்... கடுவன் பூனை முகமுமாய் இருந்த வினோத்... இப்போதெல்லாம் அவளிடம் இனிக்க இனிக்கப் பேசுகிறானே... அவளை ஏறிட்டும் பாராமல் இருந்தவன்... இப்போது முகம் கொடுத்து பேசுகிறான் என்றால் அது சந்தோஷமான சமாச்சாரம் அல்லவா...

அவளைப் பார்த்ததும் அவனது முகம் மலர்கிறது என்றால் அது நல்ல மாற்றமாகவே அவளுக்கு பட்டது.

அது அவளுக்கு மட்டுமல்ல... ராமலிங்கத்திற்கும் வியப்பைத் தந்தது.

பிள்ளை மாறி விட்டானே... உர்ரான் கோட்டான் மாதிரி முகத்தை வைத்துக் கொண்டு 'குர்'ரென்று இருப்பவன்... இப்போது சிரிப்பது என்ன... கலகலப்பாய் பேசுவது என்ன...

அடடா... பார்க்கவே பேரானந்தமாய் இருக்கிறதே... இதைத்தானே நான் வேண்டியதும்... இதுக்குக் காரணம் நம்ம பொண்ணுதான்... அவளோட பொறுமையும் சகிப்புத் தன்மையும்தான்னு சொல்லணும்...

அது மட்டுமா... அவன் சோர்ந்திருக்க விடாமல்... நம்பிக்கையையும்... ஊக்கத்தையும் திணித்து... அவனை நிமிர்த்தி விட்டாளே... அதைச் சொல்லணும்... ஒரு பொண்ணு நினைச்சா எதையும் செய்ய முடியும் என்பதற்கு என் மருமகளே உதாரணம்.

எப்படி இருந்தவன்... இப்படி மாறிவிட்டான்! எடுத்தற்கெல்லாம் கத்தி ஆர்ப்பாட்டம் செய்தவன் அடங்கிட்டானே... அது மட்டுமில்லாம வைஜயந்தி சொல்வதற்கெல்லாம் 'ஆமாம்' போடுகிறான்.

எல்லாம் நான் எதிர்பார்த்த மாதிரியே நடக்கிறது... வைஜயந்தி அருகில் இருந்தால்... அவளது இனிய சுபாவமும்... நிதானமும் அவனை மாற்றி விடும் என்று நினைத்தது நிறைவேறி விட்டது.

இனி பயமில்லை... எந்த ரூபா... நயா பைசா வந்தாலும் அவனை அசைக்க முடியாது.

மருமகளே... நீ சமர்த்து... வென்று காட்டி விட்டாய். சபாஷ்ம்மா... மனசுக்குள் மெச்சிக் கொண்டார் பெரியவர்.

வைஜயந்தியின் வார்த்தைகள் உற்சாக 'டானிக்'காய் வேலை செய்து... வினோத்தை ஊக்குவித்தது. யானை பலம் தன்னுள் ஊடுருவியது போல உணர்ந்து மெல்ல எழுந்தவன். அவளைப் பார்த்து வெற்றிச் சிரிப்பு சிரித்தான்...

''என்னால் முடிகிறது'' என்பதுபோல... ஆனால் அடியெடுத்து வைத்தபோது தான் வலி பிராணன் போனது போல் இருந்தது....

அதைத் தாங்கும் சக்தி இல்லாமல் ''என்னால் முடியாது...'' என்று முனகினான்.

''இல்லை... உங்களால் முடியும் வினோத்... முயற்சி செய்யுங்கள்...'' என்று ஊக்குவித்தாள் வைஜயந்தி...

அதே சமயம் அவன் படும் வேதனையைப் பார்த்து இதயம் விண்டு போனது...

தெய்வமே... இவரை ஏன் சோதிக்கிறாய்... சீக்கிரம் குணப்படுத்த மாட்டாயா... இவருக்கு நடக்கும் சக்தியை தாமட்டாயா... உள்ளுக்குள் தவித்து வேண்டினாள்.



அந்த வேண்டுதலின் பலனோ என்னவோ... வேலைக்காரன் முத்து சொன்ன செய்தி தேவாமிர்தமாய் இருந்தது.

யாரோ ஒரு நாட்டு வைத்தியராம்... உடைந்த எலும்புகளைக் கூட சேர்த்து விடும் வித்தைக்காரராம்... அவரிடம் நம்ம அய்யாவைக் காட்டுங்கம்மா. சீக்கிரம் குணமாகி விடும்... என்றான் அந்த விசுவாசமிக்க வேலைக்காரன்.

அவளும் அவரைப் போய்ப் பார்த்தாள். பார்த்ததும் அவர் மீது நம்பிக்கை வந்து விட்டது. இவரால் முடியும் என்று உள்ளுணர்வு கூறியது.

அவரது பேச்சும் நம்பிக்கையூட்டுவது போல இருந்தது.

''நாங்க பரம்பரை வைத்தியர் அம்மணி... ஒரு காலத்தில் சமஸ்தான ராஜாக்களுக்கு வைத்தியம் பார்த்த பரம்பரைம்மா... எங்ககிட்ட இருப்பது தெய்வீக மூலிகை... சஞ்சீவினின்னு பேரு... சுக்கல் சுக்கலா உடைந்து போன எலும்புகளைக் கூட கெட்டியா சேர்த்து விடும்... என் மருந்தால அய்யா சீக்கிரம் எழுந்திருச்சு நடப்பாங்க... பாருங்க அம்மணி...'' என்று அவர் சொன்னது நெஞ்சுக்குள் பாலை வார்த்தது போல குளிர்ச்சியாக இருந்தது.

மாமாவிடம் முதலில் அனுமதி பெற்றுக் கொண்டு அவரை வீட்டுக்கு அழைத்து வந்தாள்.

நாட்டு வைத்தியரா... என்று முகத்தை சுளித்தான் வினோத்.

''ஆங்கில மருத்துவராலே முடியவில்லை... இவரால் என்ன செய்ய முடியும்...'' என்று அவன் முனகியதைக் கேட்டுவிட்டு சிரித்தார் வைத்தியர்.

''நம்ம வைத்தியத்தோட மகிமையைப் புரிஞ்சுக்காம பேசறீங்க தம்பி.. நீங்க மட்டுமில்லே... இந்தக் காலத்துப்

பசங்களோட மனோபாவம் அப்படி... எங்க வைத்தியத்தைப் பத்தி உங்களுக்கு எடுத்துச் சொன்னாதான் புரியும்... அது கதை மாதிரி தம்பி...'' என்று அவர் சொன்னதும்...

உதட்டை ஏளனமாய் சுளித்தான் வினோத்.. கதை வேறா... என்பதுபோல... அவன் முகத்தில் சலிப்பு தெரிந்தது. இதெல்லாம் தேவையா என்பதுபோல வைஜயந்தியை பார்த்தான்...

''ப்ளீஸ்... எனக்காக'' என்று கண்களால் கெஞ்சினாள் அவள். வைத்தியர் சுவாரஸ்யமாய் சொன்னார்.

''எங்க முத்தாத்தாவோட தாத்தா... நண்பர்களோட காட்டுக்கு மான் பிடிக்கிறதுக்கு போனாங்களாம். அப்போதெல்லாம் மானைக் கொன்னா ஜெயில் என்றெல்லாம் இல்லை... மானை வேட்டையாடி... அதைக் கொன்னு... அதன் கறியை மூன்று பேரும் பங்கு போட்டுக் கொண்டாங்க... எங்க பெரிய தாத்தா... தன் தலைப்பாகையை விரித்து.. அங்கிருந்த ஒரு மரத்தின் இலைகளை பறித்து அந்தத் தலைப்பாகையில் பரப்பி... அதன் மேல் கறித் துண்டுகளைப் போட்டு... மூட்டை மாதிரி கட்டி வீட்டுக்கு எடுத்து வந்தாராம்... வீட்டுக்கு வந்து அதைப் பிரித்துப் பார்த்தபோது... கறித்துண்டுகள் எல்லாம் கெட்டியாய் ஒட்டிக் கொண்டு உருண்டை மாதிரி ஆகியிருந்ததாம். தாத்தாவுக்கு திகைப்பு... ஏன்னு புரியாம முழிச்சார். அவருக்கு அதிசயமா இருந்தது. அன்னிக்கு ராத்திரி கனவில் மரம் வந்து ''நான் சஞ்சீவினி மரம்... என் இலைகளுக்கு தெய்வீக சக்தி இருக்கு. உன்னுடைய பூர்வ ஜென்ம புண்ணியத்தால அந்த ரகசியத்தை உனக்குக் காட்டியிருக்கேன். என் இலைகளை வைத்து மக்களோட



துன்பத்தைத் துடை. என் இலைகளுக்கு உடைந்த எலும்புகளை சேர்க்கும் சக்தி உண்டு. அது மட்டுமல்ல... வலு இழந்த எலும்பைக் கூட கெட்டிப்படுத்தும்... பணத்துக்கு அடிமையாகாமல்... மக்கள் சேவை... மகேசன் சேவைன்னு நினைத்து செய்'' என்றதாம்... அன்றிலிருந்து அந்த இலைகளை வைத்து வைத்தியத்தை ஆரம்பித்தார்... வழி வழியாய் அந்த சேவையை நாங்களும் செய்து வருகிறோம்.''

''அவர்தான் சொல்கிறாரே... வினோத்.. நம்பிக்கையோடு ஒத்துக் கொள்ளப்பா...'' என்றார் ராமலிங்கம்.

''அய்யா... எத்தனையோ முறை இங்கிலீஷ் வைத்தியரும் எங்ககிட்டே நோயாளிகளை அனுப்பி இருக்காங்க... தெரியுமா... அவங்களால கைவிட்ட நோயாளிங்க நேரே எங்ககிட்டதான் வருவாங்க... நாங்களும் சரி பண்ணிடுவோம்... அதைக் கேட்டு அவன் தயங்குவதைக் கண்டு வைஜயந்தி வற்புறுத்தும் குரலில் பேசினாள். ''முயன்று பார்ப்பதில் தப்பில்லையே... வினோத்... எனக்கென்னவோ உங்களுக்கு சரியாகி விடும் என்றுதான் படுகிறது... ப்ளீஸ்... ஒத்துக் கொள்ளுங்கள்...''

அவனும் அரை மனதுடன் தலையாட்டினான். அன்றைக்கே அவனுக்கு வைத்தியம் தொடங்கியது. முற்றிய தேங்காய்ப் பாலில் சஞ்சீவினி மருந்தை சேர்த்து அவனுக்கு தந்தார் மருத்துவர்...

விளக்கெண்ணெயைக் குடிப்பதுபோல முகம் வைத்துக் கொண்டு குடித்தான் வினோத்.

பின்பு... சஞ்சீவினி இலையை விழுதாய் அரைத்து... அதை ஒரு காகிதத்தில் வடை மாதிரி தட்டி... இடுப்பில்... எலும்பு பாதிக்கப்பட்டிருக்கும் இடம் பார்த்து வைத்து அழுத்தி... சுற்றி பாண்டேஜ் மாதிரி கட்டினார்.

"இந்த மாதிரி பத்து தடவை... ஒரு நாள் விட்டு ஒரு நாள் கட்டினால் போதும்... சரியாகி விடும்... அப்புறம் கொஞ்சம் பத்தியமா இருக்கணும்... வாயு பதார்த்தமோ.. குளிர்ச்சி பதார்த்தமோ எதையும் தொடக்கூடாது. இடுப்பு வலி சீக்கிரம் குறைந்து விடும்... நாளைக்கு என் ஆள் ஒருத்தனை அனுப்பி வைக்கிறேன். அவன் எண்ணெய் மசாஜ் செய்து விடுவான். ஒரு மாதத்தில் பாருங்க... தானே எழுந்து நடப்பார்'' என்று நம்பிக்கை தரும் விதமாய் பேசினார் வைத்தியர்.

அவர் சொன்னது போலவே பத்து நாட்களில் முதுகு வலி காணாமல் போனது...

ஏதோ தந்தை சொன்னதற்காகவும்... வைஜயந்தியின் வற்புறுத்தலுக்காகவும் ஒப்புக் கொண்ட வினோத்திற்கு ஆச்சர்யம்... நாட்டு வைத்தியத்திற்கு இத்தனை சக்தியா என்று அதிசயித்துப் போனான்.

இப்போது அவனால் எழுந்து அமர முடிந்தது. ஆனால் தொடர்ந்து நிற்க முடியவில்லை.

அதுவும் மசாஜ் சிகிச்சையில் சரியாகி விடும் என்று மருத்துவர் உத்திரவாதம் கொடுத்தார்.

மூலிகை எண்ணெய் மசாஜில் உடம்பு வலுப்பெற்றது உண்மைதான்.

எழுந்து நின்றதோடு மட்டுமில்லை... ஒவ்வொரு அடியாய் எடுத்து வைத்தான்...

அவன் அடியெடுத்து வைப்பதைப் பார்த்து விட்டு உணர்ச்சிப் பொங்க கண கலங்கினார் பெற்றவர். அவன் ஒரு வயதில் நடை பயில ஆரம்பிக்கும் போது கூட இத்தனை ஆனந்தப்பட்டிருக்க மாட்டார். அடிப்பட்ட



காலில் 'சுளீர்' என்று வலி வர நடை தடுமாறியது.. அருகில் இருந்த வைஜயந்தி அவனைத் தாங்கிப் பிடித்துக் கொண்டாள்.

அந்தக் காலுக்கும் வைத்தியர் சஞ்சீவினி மூலிகையை வைத்துக் கட்டினார்.

இரண்டு மாதங்களில் நிதானமாய் நடக்கும் சக்தி வந்தது... அருகில் இருக்கும் சுவற்றைப் பிடித்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தவன்... மெல்ல வாக்கருடன் நடக்க பழகி... நான்கு மாதத்துக்குள் யாருடைய உதவியும் இல்லாமல் நடந்தான்.

அதை விம்மும் நெஞ்சுடன்... பெருமிதத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள் வைஜயந்தி.

ஆறே மாதங்களில்... வினோத்... பழைய வினோத் தாக... எந்தவித சிரமமும் இல்லாமல்... கம்பீரமாய் வேக நடையாய் நடந்ததைப் பார்த்து ஆனந்தக் கண்ணீர் உதிர்த்தாள் அவள்.

மிடுக்காய் உடை உடுத்தி... ராஜநடை போட்டு அவன் காரில் ஏறிச் செல்வதைப் பார்த்து புளாங்கிதம் அடைந்த ராமலிங்கம்... இனி திருமணம் பற்றி யோசிக்க வேண்டியதுதான் என்று நினைத்தார்.

யோசிப்பதற்கு என்ன இருக்கு... வைஜயந்தியைப் பிடித்திருக்கிறது என்று தெரிகிறது... சீக்கிரமே திருமணத்தை முடித்துவிட வேண்டியதுதான்...

எதற்கும் அவனிடம் ஒரு வார்த்தைக் கேட்டு விடலாம்... இன்றைக்கு அவன் வந்ததும் அதை செய்ய வேண்டும்.. என்று முடிவெடுத்தார் பெரியவர்.

அதே போல... இரவு மகனிடம் பேச்சைத் தொடங்கினார் தந்தை.

"வினோத்... உன்கிட்டே கொஞ்சம் பேசணும்ப்பா..."

"என்ன விஷயம்... சொல்லுங்கப்பா..."

"உன் கல்யாண விஷயம் தான். உன் உடம்பு குணமான தும் உன் கல்யாணத்தை நடத்திடலாம்னு தோணிச்சு... எனக்கும் வயசாகிக்கிட்டே போகுது இல்லே..."

அவனது முகத்தில் தயக்கம் தெரிந்தது.

"அப்பா... இப்போதைக்கு அந்தப் பேச்சு வேண்டாமே. இப்பத்தான் ஒரு பெரிய கண்டத்திலிருந்து பிழைத்து வந்திருக்கிறேன்.. அதற்குள் கல்யாணமா என்று பயமா இருக்கிறது..." என்றான் அவன்.

அதைக் கேட்ட ராமலிங்கம் மகனை யோசனையுடன் பார்த்தார்.

இன்னும் காதலி நினைப்பில் இருக்கிறானா... அதற் காகத்தான் வேண்டாம் என்கிறானா...

அதைக் கேட்டே விட்டார்.

"ஏம்ப்பா... இன்னும் அந்த ரூபாவை நினைச்சுட்டு இருக்கியா... என்ன..."

"சேச்சே... அவளை எப்பவோ நினைப்பில் இருந்து வெளியே தள்ளி விட்டேன்... அவள் பெயரையும் நினைத்துப் பார்க்க எனக்கு பிடிக்கவில்லைப்பா... அதற்கு அருகதை இல்லாதவள்... விடுங்க..."

அதைக் கேட்டதும் அவர் மகிழ்ந்து போனார்.

"அப்படின்னா... உனக்கு வைஜயந்தியை மணந்து கொள்ள சம்மதம்தானே... ரொம்ப நல்ல பொண்ணுப்பா.. உங்கம்மா இருந்திருந்தா இதைத்தான் விரும்பியிருப்பா... உனக்கு அவளை விட ஒரு நல்ல மனைவி கிடைக்க மாட்டா... வினோத்... அவள் உனக்கு செய்ததை



அத்தனை சீக்கிரம் மறந்து விட முடியாது... அதனால் தான் சொல்றேன் வினோத்..."

"நீங்க சொல்வதும் சரிதான்... உங்க விருப்பம் போல... வைஜயந்தியை மணந்து கொள்ள எனக்கு சம்மதம்தான். ஆனால் கல்யாணம் இப்போ வேண்டாம்ப்பா... மூன்று மாதங்கள் கழியட்டும்."

"அப்படியேப்பா... இந்த மட்டும் கல்யாணத்துக்கு ஒப்புக் கொண்டதே சந்தோஷம் எனக்கு..." மனநிறை வுடன் சொன்னார் ராமலிங்கம். அவருக்கு சந்தோஷம் பிடிபடவில்லை...

வைஜயந்தியை பரிகசித்தார். "மருமகளே... எப்படியோ இரும்பா இருந்த என் பிள்ளையை வளைச்சுட்டே... பலேபலே... எனக்கு அப்பவே தெரியும்... என் மருமகள் கெட்டிக்காரின்னு... பாரேன்... விறைச்சுகிட்டு நின்ன வனை... வெண்ணெயா குழைய வச்சுட்டே... அம்மாடி... இந்த கிழவனுக்கு வேறே எதுவும் வேண்டாம்... என் மார்பில் உதைத்து விளையாட... ஒரு பேரப் பிள்ளையை சீக்கிரம் பெத்துக் கொடுத்துடு... போதும்..." என்று கேலி செய்ய... முகம் சிவந்து போய் "அய்யோ... மாமா..." என்று அங்கிருந்து ஓடினாள் வைஜயந்தி.

அவளது வெட்கத்தைப் பார்த்துவிட்டு கலகலவென்று சிரித்தார் மாமா...

நேரே மனைவியின் படம் நோக்கிச் சென்றவர் அதையே சில கணங்கள் உற்றுப் பார்த்தார்.

"என்னம்மா... உனக்கு இப்போ திருப்திதானே. சீக்கிரமே நம்ம பிள்ளைக்கும் வைஜயந்திக்கும் கல் யாணம். உனக்குப் பிறகு நம் குடும்பத்தோட மானத்தை யும், மரியாதையையும் கட்டிக் காக்கும் பொறுப்பை உன்

மருமகள் எத்துக்கப் போகிறாள். இருவரும் சந்தோஷமா சேர்ந்து வாழணும்னு குழந்தைகளுக்கு ஆசி கூறும்மா. நம்ம பிள்ளைகளுக்கு எப்போதும் துணையாக இருந்து அவர்களைக் காப்பாத்தும்மா. மானசீகமாய் மனைவியுடன் பேசினார்.

வைஜயந்தியின் நிலையோ சொல்லவே வேண்டாம். வினோத் திருமணத்திற்கு சம்மதித்து விட்டான் என்ற செய்தியே காதில் தேனாய்ப் பாய்ந்து... மனசுக்குள் கற்கண்டாய் இனித்து... நினைப்பில் தேவாமிர்தமாய் தித்தித்தது.

கண்களைத் திறந்து வைத்துக் கொண்டு கனவில் மூழ்கினாள்.

மனம் நிறைந்த மணாளனுடன் வாழப் போகும் வாழ்க்கையை எதிர்நோக்கி தவம் கிடந்தாள்.

பகலெல்லாம் கற்பனைகள்... இரவெல்லாம் இன்பக் கனவுகள்... வாழ்க்கை சொர்க்கமாகத் தெரிந்தது. இந்த சொர்க்க வாழ்க்கைக்காகத்தானோ... நான் பட்ட அத்தனை துன்பங்களும்...

அடடா... இப்போது மட்டும் அம்மா உயிருடன் இருந்தால்... எனக்கு கிடைத்திருக்கும் அதிர்ஷ்டத்தை எண்ணி மகிழ்ச்சியில் திளைத்திருப்பாளே...

அந்த சந்தோஷமான தருணத்தில் தாயின் நினைப்பு வந்து... துயரத்தை தந்தது... கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''வைஜயந்தி'' எதிர்பாராமல் அருகே வினோத்தின் குரல் ஒலிக்க... திகைப்புடன் திரும்பினாள் வைஜயந்தி.

''ஏன் அழுகிறாய்... இந்தத் திருமணத்தில் உனக்கு விருப்பம் இல்லையென்றால் தைரியமாகச் சொல்லி



விடு... இதில் எந்தவிதக் கட்டாயமும் இல்லை... அப்பாவோட விருப்பம் என்று நானும் மறுக்கவில்லை. உன் சம்மதம் கேட்காதது தப்புதான். ஒத்துக் கொள்கிறேன்... இப்போதும் காலம் கடந்து விடவில்லை. மனதில் இருப்பதை 'பளிச்'சென்று சொல்லிவிடு வைஜயந்தி... இதனால் யாருக்கும் எந்தவித சங்கடமும் இல்லை...''

வினோத்தின் வார்த்தைகள் அவளைத் துடிக்க வைத்தன...

என்ன பேச்சு இது... திருமணத்தில் எனக்கு விருப்பம் இல்லையா... தெய்வமே... இவர் இல்லாமல் இனி வாழவே முடியாது என்று நினைக்கும் என்னைப் பார்த்து இப்படிப் பேசுகிறாரே... இவரிடம் என் காதலைப் பற்றிச் சொன்னால்...''

''தெரியும்... உனக்குள்ளும் தயக்கம் இருக்கத்தான் செய்யும் என்று... என்னடா... ரூபாவைக் காதலித்தவன்... இப்போது சட்டென்று... மனதை மாற்றிக் கொண்டு இந்த திருமணத்திற்கு ஒத்துக் கொண்டு விட்டானே என்று நினைக்கத் தோன்றும் உறுதியாய் சொல்கிறேன் வைஜயந்தி... இப்போது எனக்கு ரூபாவின் மீது துளியும் பிரியம் இல்லை... அவள் சுயநலம் பிடித்தவள்... சந்தர்ப்பவாதி என்று தெரிந்த பிறகும் அவளை விரும்ப நான் ஒன்றும் முட்டாள் இல்லை. இதை நீ நிச்சயமாக நம்பலாம்... காதல் தான் திருமணத்திற்கு மிக முக்கியம் என்ற நினைப்பெல்லாம் கடந்த நிலையில் நான் இருக்கிறேன்... அதே மாதிரி உனக்கும் என் மீது காதல் வர சாத்தியமில்லை என்பதையும் அறிவேன்.. நீயும் நானும் அப்பாவோட ஆசை என்பதற்காக இதற்கு ஒப்புக் கொண்டிருக்கிறோம். சரிதானே... அதனால்... உனக்கு விருப்பமில்லை என்றாலும் பரவாயில்லை... 'கேன்சல்' செய்து விடலாம். இதில் எனக்கு எந்த வருத்தமும் இல்லை.''

அவன் சொல்ல... இதயத்தை இரும்புக் கரம் கொண்டு பிழிவதைப் போல வலித்தது.

இந்த ஒருதலைக் காதலை எண்ணியா உள்ளம் எம்பிக் குதித்தது.

நான் உன்னைக் காதலிக்கவில்லை... அப்பாவுக்காக இந்தக் கல்யாணம் என்கிறாரே... இவரிடம் எப்படி என் காதலைச் சொல்வது... அதைக் கேட்டு விட்டு சிரிக்க மாட்டாரா...

அவரே சொல்கிறாரே... எனக்கு காதல் மீதிருந்த நம்பிக்கையே போய் விட்டது என்று... என் காதலை எப்படி நம்புவார்...

முகம் மலர்ந்து போவதும்... இனிக்க இனிக்கப் பேசுவதும் காதலாகி விடாதுதான்.

நான்தான் பித்துக்குளி மாதிரி... காதல் என்று நம்பி ஏமாந்து விட்டேன்...

பிரசவமாகும் முன் வயிற்றுக்குள் செத்து விட்ட குழந்தையைப் போல ஆனது என் காதலும்... என்னுள்ளே செத்து விட்டது... நல்லவேளையாய் அதை வாய்விட்டுச் சொல்லவில்லை... சொல்லியிருந்தால்... அவர் கண்ணுக்கு கோமாளியாய் தெரிந்திருப்பேன்... இதயம் பெரிதாகி வெடித்து விடும்போல இருந்தது.

"உன் மௌனத்தை சம்மதம் என்று எடுத்துக் கொள்வதா வைஜயந்தி... அப்போ... அப்பாவிடம் சொல்லி விடட்டுமா..." மீண்டும் வினோத்தின் குரல் வினவியது.

"வேண்டாம் வினோத்... நான் கண்ணீர் விட்டதுக்குக் காரணம் அதல்ல... அம்மாவோட நினைப்பு வந்தது... அதான்..." என்றாள் சங்கடத்துடன்.



"ஓ... அதற்காகவா... அப்ப... இந்தத் திருமணத்தில் உனக்கு சம்மதம்... அப்படித்தானே... ஏற்கனவே ஒரு தடவை நான் காயப்பட்டு விட்டதால்... எதையும் நிச்சயப் படுத்திக் கொள்ள வேண்டும் என்று தோன்றுகிறது வைஜயந்தி. சரி... நான் சொல்ல வந்த விஷயத்தைச் சொல்லி விடுகிறேன்.. இன்னிக்கு போர்டு மீட்டிங் இருக்கிறது... இதை அப்பாவிடம் சொல்லிவிடு... ஓகே..."

அவள் தலையசைத்தாள்.

மதியம் சாப்பிடும்போது... ராமலிங்கம் நடக்கவிருக்கும் திருமணத்தைப் பற்றியே பேசினார்.

"என் நண்பரோட திருமண மண்டபம் பெரிசா இருக்கும்மா... அதையே பேசி முடிச்சிடலாம்னு இருக்கேன். நம் வீட்டில் நடக்கவிருக்கும் முதல் திருமணம்... தவிர ஒரே திருமணம்... எல்லோரையும் கண்டிப்பாய் அழைக்கணும்... இரண்டாயிரம் அழைப்பிதழ் அடிக்கணும்மா... நேரே ஊருக்கேப் போய் உன் அண்ணனையும் அண்ணியையும் அழைக்கணும்... அவன் தானே இப்போ எனக்கு சம்மந்தி முறை..." என்று கூறிவிட்டுச் சிரித்தார்.

அவர் முகத்தில் தெரிந்த குதூகலத்தையும்... பேச்சில் தெரிந்த உற்சாகத்தையும் பார்த்து விட்டு... இந்த அன்பு மனிதரின் சந்தோஷத்திற்காகவாவது இந்த திருமணம் நடக்க வேண்டும்... என்று நினைத்தாள் அவள்.

வினோத்தின் மனதில் ஊசி முனையளவில் கூட தனக்கு இடம் இல்லை என்பது உறுதியாக தெரிந்து விட்டது... என்னிடம் சிரித்துப் பேசினாலும்... சகஜமாய் பழகினாலும்... அவரது மனக்கதவு மூடியே இருக்கிறது. அது திறக்கும் என்பதும் சந்தேகமே...

ஒரு அர்த்தமில்லாத வாழ்க்கைக்கு அஸ்திவாரம் போடப் பார்க்கிறார் மாமா... திருமணம் வெறும் சடங்காய் இருக்கப் போகிறது என்று தெரியாமல் பாவம்... ஏதேதோ பேசுகிறார்... வினோத் என்னை மனைவியாக ஏற்காவிட்டால் என்ன...

மாமாவிற்கு அன்பு மருமகளாய் இருந்து விட்டால் போச்சு.

"என்னம்மா வைஜயந்தி... இப்பவே கனவு காண ஆரம்பிச்சுட்டியா... சரிதான்... கனவு மயக்கத்தில் சர்க்கரைக்கு பதிலா உப்பைக் கொட்டிடப் போறே... இந்த கிழவனுக்கு ஏற்கனவே இரத்த அழுத்தம் வேறு..." என்று கேலி செய்து சிரித்தார் பெரியவர். தன் மனகிலேசத்தை வெளியில் காட்டாமல் புன்னகைத்தாள் வைஜயந்தி.

"அப்புறம் சொல்ல மறந்து விட்டேனே... கல்யாணத்துக்கு முன்... நம்ம குல தெய்வத்தை வணங்கிட்டு வாறனும்மா... கல்யாண ஏற்பாடெல்லாம் அதுக்கப்புறம் தான்... அடுத்த வாரமே போயிட்டு வந்துடலாம் என்ன. அதை வினோத்கிட்டேயும் சொல்லி வைம்மா... அம்மன் அருளால... எந்தத் தடங்கலும் இல்லாமல் இந்தத் திருமணம் 'ஜாம் ஜாம்'னு நடக்கணும்..." என்று பெரியவர் நாள் குறித்தார்.

ஆனால்... விதியின் விளையாட்டு என்று ஒன்று இருக்கிறதே... அது தன் வேலையைத் தொடங்க நாள் குறித்தது...

## 8

காவிரி அன்னைக்கு கருணை அதிகம்தான். கண்களுக்கு எட்டும் தூரம் வரை எங்கும் பசுமை. காவிரித் தாயின் கைவண்ணமாய் தெரிந்தது...



பார்வைக்கு மிக ரம்மியமாய் இருந்தது.

வாழைத் தோப்புகளும்... மண்டிய நெற்பயிர்களும்... ஊடே ஓடிய சலசல ஓடையும்... வெறும் கான்கிரீட் கட்டடங்களைப் பார்த்து... பார்த்து சலித்துப் போயிருந்த கண்களுக்கு விருந்தாகவும்... இயந்திர வாழ்க்கையில் வரண்டு கிடந்த உள்ளத்திற்கு உற்சாக ஊற்றாகவும் இருந்தன.

'சோழநாடு சோறுடைத்து' என்ற புகழுரையைப் பொய்யுரையாக்க விரும்பாமல்... எத்திசை நோக்கினாலும் பசுமை புரட்சிதான்...

பச்சைப் பட்டாடை உடுத்தி... ராஜாங்கம் நடத்தும் இயற்கை அரசியின் அழகை ரசித்தவாறு பயணப்பட்டுக் கொண்டிருந்தனர் மூவரும்.

சமயபுரம் மாரியம்மன்தான் குலதெய்வம் என்பதால்... திருச்சியில் ராமலிங்கத்தின் ஒன்று விட்ட சகோதரி விமலா வீட்டில் தங்கியிருந்து... மறுநாள் வெள்ளிக் கிழமை குல தெய்வ வழிபாட்டை முடித்து விட்டு உடனே ஊர் கிளம்பும் உத்தேசம்.

கல்யாண நேரத்தில் வம்பெதற்கு என்று... டிரைவரை காரோட்ட ஏற்பாடு செய்திருந்தார் ராமலிங்கம். ஏற்கனவே அடிபட்ட உடம்பு வேறு. எதற்கு அலட்டிக் கொள்ள வேண்டும் என்று நினைத்தார் போலும்.

வைஜயந்திக்கு இது இரண்டாவது பயணம். முதல் பயணத்தில்... தாயின் நினைவில் சுருண்டு கிடந்ததால்... பயணத்தை அனுபவிக்கும் மனநிலையில் அப்போது இருக்கவில்லை...

ஆனால் இந்தப் பயணம் அப்படியில்லையே... வினோத்துடன்... சொகுசான காரில் செல்லும்... நீண்ட

பயணம்... ஒவ்வொரு வினாடியும் ஆனந்தம்தான்... சொல்லத் தெரியாத இன்ப உணர்வில் மூழ்கி... நெஞ்சம் புறாவாய் படபடக்க அவளருகே அமர்ந்திருந்தாள்.

ஊர் வந்ததும்... அவளுக்கு ஏக்கப் பெருமூச்சு வந்தது. இன்னும் இந்தப் பயணம் தொடராதா என்று தோன்றியது.

அவர்களது வரவை எதிர்பார்த்து நின்றிருந்த விமலா... ராமலிங்கத்தின் ஒன்று விட்ட சகோதரி... அவர்கள் வந்ததும் ஓடி வந்து வரவேற்றாள்.

நீண்ட நாட்களுக்குப் பின் வந்திருக்கிறார் அண்ணன்... அதுவும் குடும்பமாய்... குதூகலத்துடன் பேசினாள் தங்கை.

"இந்த சாக்கை வைத்தாவது இங்கே வந்தாயேண்ணா... அது போதும்... வினோத்தும் வந்திருப்பது அதிசயம் தான்... எப்படிப்பா இருக்கே வினோத்... இப்போ பரவா யில்லையா... உனக்கு அடிப்பட்ட விஷயம் கேட்டதும் சங்கடப்பட்டேன்ப்பா... ஆனால் என்னால் வர முடியாமல் போச்சு... நம்ப கௌரிக்கு பிரசவ நேரம்... விட்டுட்டு வர முடியவில்லை... அப்புறம் உன் கல்யாண விஷயம் தெரிஞ்சதும் ஒரே சந்தோஷம்..." விமலா அத்தையின் அந்தக் கலகலப்பான பேச்சும்... சிரித்த முகமும் வைஜயந் திக்கு பிடித்து விட்டது. வேற்றாள் போலத் தெரியவில்லை... நீண்ட நாள் பழகியது போல இருந்தது அவரது சுபாவம்... அத்தையின் பார்வை வைஜயந்தியின் மேல் விழுந்தது.

"இந்தக் குழந்தைதான் உன் மருமகளாண்ணா... அண்ணியோட தம்பிப் பொண்ணு இல்லே... அப்படியே தன் அத்தை மாதிரி இருக்கிறா இல்லையாண்ணா அடடா... இப்ப அண்ணி இருந்து இதைப் பார்த்திருக்கணும்... பூரிச்சுப் போயிருப்பா... அம்மாடி முதன் முதலா வீட்டுக்கு



வர்றே... இதுவும் உன் வீடு மாதிரிதான், வலது கால் எடுத்து வச்சு உள்ளே வாம்மா... உன் பெயர் வைஜயந்திதானே... நினைவிருக்கு எனக்கு..." என்ற விமலா... பணியாளை அழைத்து சாமான்களை எடுத்து வரச் சொன்னாள்.

சுடச்சுட காபி செய்து மூவருக்கும் கொடுத்து விட்டு... அவர்களிடம் பேச அமர்ந்தாள்.

வினோத்திற்கு நடந்த விபத்து... வைஜயந்தியின் தாயின் மறைவு... கல்யாண ஏற்பாடுகள்... என்று ஒவ்வொன்றாய் விசாரித்து அறிந்தாள்.

அதே போல தன் வீட்டு விஷயங்களையும் அண்ணனுக்கு சொன்னாள்.

அந்தப் பேச்சிலிருந்து வைஜயந்தி தெரிந்து கொண்டது இதுதான்...

விமலா அத்தைக்கு மூன்று குழந்தைகள்...

அதாவது இரண்டு பிள்ளைகள்... ஒரு பெண்... பெண் கௌரிதான் பெரியவள். திருமணமாகி... பூனாவில் குடித் தனம். கல்யாணம் ஆகி ஐந்து வருடங்கள் ஆகியும் குழந்தை இல்லை என்று ஏதேதோ வைத்தியங்கள் செய்து... இப்போது கருவுற்று அழகான பெண் குழந்தையைப் பெற்றெடுத்திருக்கிறாள்...

பெரிய பிள்ளை சுந்தர் அமெரிக்காவில் டாக்டர் அவனது மனைவியும் தான். அவர்களுக்கு ஒரே ஒரு ஆண் குழந்தை...

இரண்டாவது பிள்ளை அசோக்... எலக்ட்ரானிக் இன்ஜினியர்... சமீபத்தில் தான் திருமணமாகி இருக்கிறது. கூடிய சீக்கிரமே அமெரிக்கா செல்லும் வாய்ப்பும் வந்திருக்கிறதாம்... அவனது மாமனார் வீட்டில் ஏதோ விருந்து என்று சென்றிருக்கிறானாம்.

தன் பிள்ளைகளைப் பற்றி பெருமிதத்துடன் சொல்லியது மட்டுமல்லாமல்... அவர்களின் போட்டோ ஆல்பங்களையும் காட்டினாள்.

அதற்குள் சமையலும் தயாராகிவிட... அனைவரும் உண்டனர்.

''சரிம்மா... நீ போய்த் தூங்கு... நாளைக்கு சீக்கிரமே கோவிலுக்குக் கிளம்பணும்... உனக்கும் பிரயாண அலுப்பு இருக்கும்... வினோத்.. உனக்கு அசோக்கோட அறையைத் தயார் செய்து வைத்திருக்கிறேன்... உனக்கும் தூக்கம் வந்தா போய்த் தூங்கப்பா...'' என்று அத்தை சொன்னதும் இருவரும் எழுந்தனர்.

வைஜயந்தி தனக்கு என்று ஒதுக்கியிருந்த அறையை நோக்கிச் சென்றாள்.

கௌரியின் அறையென்று தெரிந்தது... கச்சிதமாய்... அழகாய் இருந்தது அந்த அறை... பெரிய கட்டில்... மேலே பூமெத்தை... அமர்ந்ததும் அமிழ்ந்து போகும் இதமான மென்மையுடன்...

இடது பக்கத்தில் ஒட்டியிருக்கும் குளியல்... டாய்லெட் அறை... எதிர்ப்புறம் பெரிய வார்ட்ரோப்... டிரஸ்ஸிங் டேபிள்...

சுவற்றின் வெளிர் ரோஜா நிற பெயிண்ட்டும்... அதற்கு பொருத்தமான திரைச்சீலைகளும் அறையின் வனப்பைக் கூட்டியது.

குளியல் அறைக்குள் சென்று முகம் கழுவிக் கொண்டாள்.

சுவற்றில் பளிங்குக் கற்கள் பளபளக்க... 'பளிச்'சென்று படு சுத்தமாய் இருந்தது.

மாமா வீட்டுக்கு வந்த பின்பு வைஜயந்திக்கு இந்த வசதிகள் எல்லாமே பழகி விட்டது. ஆரம்பத்தில் பெரிய



வீட்டையும்... வீட்டுக்குள் இருந்த விலையுயர்ந்த அலங்கார... ஆடம்பரப் பொருள்களையும்... கண்ணாடியாய் பளபளக்கும் தரையையும்... பெரிய சர விளக்கையும் பார்த்து 'ஆ'வென்று வாயைப் பிளந்தவள்... இப்போது அவற்றையெல்லாம் வெகு சாதாரணமாய் ஏற்றுக் கொள்ளப் பழகி விட்டாள்.

மாமாவின் வீட்டில் அவளுடைய அறை இன்னும் பெரிதுதான்... வசதியான பெரிய படுக்கையுடன்... சகல வசதிகளுடன் இருக்கும் அந்த அறை... ஆனால்... அங்கு இல்லாத ஒரு பொலிவு... இங்கு இருந்ததை அவள் உணர்ந்தாள். அது என்னவாக இருக்கும் என்றுதான் புரியவில்லை.

மாமா வீட்டில் பொருத்தமான வண்ணம் அடித்து இதே போல... 'பெயிண்ட்டுக்கு ஏற்ற திரைச்சீலைகளைப் போட்டால்... இதுபோலவே அழகாய் தெரியுமோ என்னவோ...

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்... வீட்டில் பெண்கள் இருந்தால் அந்த ரசனையே தனிதான். அங்கே மாமா வீட்டில் நீண்ட நாட்களாய் பெண்மணமே இல்லாததும் ஒரு காரணமாக இருக்கலாம்...

இனிமேல் அது என் இல்லம்... இனி நானேப் பார்த்து வீட்டின் அழகை மிகைப்படுத்த வேண்டும்...

கொஞ்சம் கருத்துடன் செய்து முடித்தால்... இந்த வீட்டை விட அமர்க்களமாக இருக்கும்... இதைப் பற்றி மாமாவிடம் பேச வேண்டும் என்று முடிவு செய்து கொண்டாள். மனம் எதை எதையோ எண்ணித் துள்ளியது...

மாளிகைப் போன்ற ஒரு பெரிய வீட்டை எஜமானி ஸ்தானத்தில் இருந்து கட்டிக் காக்கும் பொறுப்பு இனி தன்னுடையது என்று நினைக்கும் போது... ஒரு புறம் பெருமையாக இருந்தாலும்... கூடவே மலைப்பாகவும் இருந்தது. பரவாயில்லை... மாமா இருக்கிறார்... அவரது அன்பும் ஆதரவும் இருக்கிறது... அத்தையின் ஆசியும் துணையிருக்கையில் எதற்குப் பயப்பட வேண்டும்.

மாமாவும் அத்தையும் வெகு அந்நியோன்னியமாய் வாழ்ந்த அருமையான வீடு... நினைத்துப் பார்க்காத வசதியான வாழ்க்கை... கணவனாய் வினோத்... சந்தோஷமே...

அந்த எண்ணத்தில்... எதிர்காலம் கோடிச் சூரிய பிரகாசத்துடன் 'ஜகஜக'வென்று ஒளிர்வது போல உணர்ந்தாள்.

என்ன... அந்த ஒளிவட்டத்தில்... சின்னக் கரும்புள்ளியாய் இருந்தது வினோத்தின் ஒதுக்கம்தான்... இறுகிக் கிடக்கும் அவன் மனதில் இருப்பது என்ன என்று அறிய முடியுமானால்.. ப்ச்சு... அது இன்னும் சிதம்பர ரகசியம் போல் அல்லவா இருக்கிறது.

என்னிடம் சிரித்துப் பேசுகிறார்... அதில் குழைவு இல்லை...

என்னைப் பார்த்ததும் அவர் முகம் மலர்கிறது. ஆனால்.. அகம் மலர்ந்ததாய் தெரியவில்லையே...

அவரது கண்களில் கூரியப் பார்வை தெரிகிறது...

ஆனால் குறுகுறுப்பு அதில் இல்லையே...

உதட்டில் பூத்து நிற்கும் புன்னகையில் உயிர் இல்லையே.

எல்லாம் இருந்தும் ஏதோ இல்லாத குறை...

ஒரு தடவை... ஒரே ஒரு தடவை... 'வைஜயந்தி... உன் மீது எனக்கு அளவில்லாத காதலால்தான் கல்யாணத்



திற்கு சம்மதித்தேன்' என்று சொன்னால் போதும்... அவரது காலடியில் கிடப்பேன்...

நினைவலைகளின் ஓட்டத்தில் எப்போது உறங்கினாளோ அது அவளுக்கே தெரியாது.

சமயபுரத்து மகமாயியின் சன்னதி... ஜேஜேவென்று கூட்டம்.

ராமலிங்கம் விசேஷ ஆராதனைக்குக் கொடுத்திருந்ததால்... சிறப்பு தரிசனம் கிடைத்தது. அதனால் நின்று நிதானமாய் கும்பிட முடிந்தது.

வினோத் அருகே நின்றிருந்த வைஜயந்தி ஒருவித சிலிர்ப்புடன் தேவியை மனமுருக வேண்டினாள்.

"அம்மா... என் வாழ்க்கையில் இதுவரை சந்தித்ததெல்லாம் துக்கமும் தோல்விகளும்தான்... தாயை இழந்து நிற்கும் எனக்கு... நீயே தாயாய் இருந்து தயை காட்ட வேண்டும்... எனக்கு அமைந்திருக்கும் இந்த ஆனந்த வாழ்வு நின்று நிலை பெற வேண்டும்... அதற்கு உன் துணை வேண்டும் தாயே..."

"நான் கேட்டுக் கொண்டேன்" என்பது போல அம்மனின் அழகிய வதனத்தில் தெரிந்த மந்தகாச புன்னகை அவளுக்கு நம்பிக்கையூட்டியது...

பிழிந்து விடுவது போல இருந்த அந்த ஜனநெரிசலில் இருந்து விடுபட்டு... வெளிவந்து... ஒரு ஓரமாய் அமர்ந்தார்கள்.

விமலா அத்தை கோவில் பிரசாதத்தை அனைவருக்கும் பகிர்ந்தவாறு... தன் மலரும், நினைவுகளையும் பகிர்ந்தாள்.

"அப்போல்லாம் இத்தனை ஜன நெரிசல் இல்லை. நாங்க கட்டுச் சோறு கட்டிக் கொண்டு வருவோம்... நம்

வீட்டு மாட்டு வண்டியில் தான்... ஜல் ஜல் என்று சலங்கை மணி அசைய... காளை மாடுகள் ஓடுவதைப் பார்க்கும்போது ரொம்ப குஷியா இருக்கும்... அந்த சவாரியே தனிதான்.. வழியில் தண்ணீரைப் பார்த்து விட்டால்... அவ்வளவுதான். நிறுத்திவிட்டு ஜலக்கிரீடை செய்வோம்.

"போதும்... வாங்கம்மா..." என்று பெரியவர்கள் கத்தினாலும் காதில் போட்டுக்க மாட்டோம்... ஏக ரகளைதான்... நினைவிருக்காண்ணா... ஒரு தடவை... என் அத்தை பையன்... அதான்... கண்ணா... வேணும் என்றே பேச்சு மூச்சில்லாமல் கட்டை மாதிரி நீரில் கிடக்க.. எல்லோரும் அலறி அடித்துக் கொண்டு கிட்டே வந்ததும் 'ஹே'ன்னு குதித்து எழுந்தானே... பெரியவர்கள் கிட்டே நல்லா வாங்கிக் கட்டிக் கொண்டானாக்கும். ஒரே அமர்க்களம் அன்னிக்கு... அப்புறம்... கோவில் மண்டபத்தில் வட்டமாய் அமர்ந்து கொண்டு, கொண்டு வந்த புளியோதரையையும்... எலுமிச்சை சாதத்தையும் சாப்பிடுவோம்... வாயும் கையும் மணக்கும்... அடடா... நினைத்தாலே இனிக்கும் நினைவுகள் இல்லேண்ணா..."

சொல்லும்போதே... நடந்த நிகழ்ச்சிகளை கண் முன் கொண்டு வந்து நிறுத்திய மாதிரி இருந்தது விமலா அத்தையின் 'பிளாஷ் பேக்' சம்பவங்கள். மாமாவும் உற்சாகத்துடன் அதில் கலந்து கொண்டது இன்னும் வியப்பு...

இருவரும் தங்களை மறந்து... அந்த சிறு பிராய நாட்களுக்குப் போய் விட்டார்கள் போலும்.

அவர்களின் இளமைப் பருவம் இனிமையானது... ரசித்து மகிழக் கூடியது.

என் இளமைப் பருவத்தின் நினைவுகள்.. அம்மாடி!



நினைக்கவே பயங்கரம்...

வறுமை... வேதனை... ஏமாற்றம்... ஏக்கம்... நிராசை... துக்கம்... அடிமை வாழ்வு என்று எல்லாமாய் சேர்ந்த மோசமான கலவையாய் இருந்த இறந்த கால நினைவுகளை அறவே மறுக்க நினைத்தாள் வைஜயந்தி... ஞாபகத்திலிருந்து அவைகளை வழித்தெடுத்து... துடைத்துப் போட வேண்டும் என்று துடித்தாள்... பாலைவனத்தின் கொடுமையின் நடுவே... பாலைவனச் சோலையின் இனிமையைப் போல... தன் தாயின் நினைவுகள் மட்டும் தங்கினால் போதும்...

"வினோத்... வைஜயந்தியை அழைத்துக் கொண்டு மலைக்கோட்டை பிள்ளையார் கோவில்... கடை வீதி என்று ஒரு 'ரவுண்ட்' போய் வாயேன்.

திருச்சிக்கு வருகிறவர்கள் அந்தக் கோவிலுக்குப் போகாமல் இருக்க மாட்டார்கள். வைஜயந்திக்கு அதை காட்டுப்பா... எங்களுக்குத்தான் அலுப்பு... சின்னஞ் சிறுசுகள்... உங்களுக்கென்ன... ஜாலியா போய் வாங்கப்பா..." உரிமையுடன் அத்தை சொன்னதும்... அதுவும் சரிதான் என்பது போல தலையசைத்தார் பெரியவர்.

அதைக் கேட்டதும் வைஜயந்திக்கு குதூகலம் உண்டானது. வினோத்துடன் வெளியே உலாவ... நெஞ்சம் படபடக்க வினோத்தை ஏறிட்டாள்.

ஆனால் அவன் முகத்தில் தெரிந்தது அலுப்பும் சலிப்பும்தான்.

"அதை இன்னொரு தடவை பார்த்துக் கொள்ளலாம் விடுங்கள் அத்தை... இன்றைக்கு ஒரு கோவிலை சுத்தி வந்ததே போதும். மறுபடியும் வெளியே என்றால்... சுத்த போர்..." என்று சுரத்தின்றி சொன்னான் அவன்.

பெரியவர்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

போரா... இதென்ன கூத்தாக இருக்கிறது. திருமணமாகப் போகும் ஜோடி... தனிமையை விரும்புவார்கள்... கைகோர்த்துக் கொண்டு ஜோடிப் பறவைகளாய் திரிவார்கள் என்று பார்த்தால்... இப்படி சொல்கிறானே... எல்லோரையும் போல் இல்லாமல்... இவர்கள் என்ன... இப்படி விசித்திரமாய் இருக்கிறார்கள். ஒருவேளை ஒரே வீட்டில் தங்கியிருப்பதால் இயல்பான பரபரப்பும் தனிமை விருப்பமும் வரவில்லையோ... ஊகூம்... வைஜயந்தியின் முகம் வாடிப்போனதைப் பார்த்தால் அவளுக்கு உள்ளூர ஆசையிருக்கிறது போல... இவன் தான் அலட்டிக் கொள்கிறான்... விடக்கூடாது...

விமலா அத்தை ஜாடை காட்ட... ராமலிங்கம் தொண்டையை கனைத்துக் கொண்டார்.

''டேய்... உனக்கு இந்த ஊர் பழக்கம்தான். ஆனால் வைஜயந்திக்கு இது புது ஊர்.

அவளை எங்கேயாவது சினிமாவுக்கோ... இல்லை கடைக் கண்ணிக்கோ அழைத்துக் கொண்டு... போய் ஏதாவது வாங்கிக் கொடு... இதெல்லாம் நாங்க சொல்லித் தரணுமா என்ன...'' என்று எடுத்துக் கூறினார் அவர்.

'சுள்'ளென்ற கோபத்தில் முகம் சிவக்க அவன் பதில் சொன்னான்.

''சொன்னா புரியாதா உங்களுக்கு... எல்லாம் கல்யாணத்துக்கப்புறம் பார்த்துக்கலாம்... அப்போ... இருக்கவே இருக்கு... சேர்ந்து சுத்துவது... எல்லோரும் அலுத்து சலித்து வந்திருக்கோம்... வைஜயந்திக்கும் ஓய்வு தேவை... இல்லையா வைஜயந்தி...''



இப்படி 'சட்'டென்று மடக்கி கேட்பான் என்று எதிர்பார்க்கவில்லை வைஜயந்தி... 'இல்லை' என்று தலையாட்ட விரும்பியவள்... திகைத்துப் போய் 'ஆமாம்' என்று தலையசைத்தாள்...

அப்படியே சொல்லியிருந்தாலும்... அழைத்துப் போயிருப்பார் என்று என்ன நிச்சயம்... அவரே விரும்பாதபோது வற்புறுத்துவது பிரயோசனமில்லை தான். அதற்கு மேல் பெரியவர்கள் என் பேசப் போகிறார்கள்...

பெரியவருக்கு மட்டும் உள்ளுக்குள் நெருடல்... இந்த திருமணத்திற்கு பிள்ளை முழு மனதுடன்தான் சம்மதித்தானா... அவனிடம் புது மாப்பிள்ளைக்கு இருக்க வேண்டிய சந்தோஷத்தையும்... கலகலப்பையும் காணவில்லையே. ஒருவேளை... இன்னும் அந்த மூளி அலங்காரியின் நினைப்பில் இருக்கிறானா... வைஜயந்தியின் மேல் பிரியம் இல்லையோ...

இந்த அமுக்குளி ராஸ்கலின் மனதில் என்னதான் இருக்குன்னு தெரியலையே...

'பாவம்... வைஜயந்தி... அவள் திருமணம் செய்து கொண்டு சந்தோஷமா இருக்கணும் என்று நினைத்தால் இவன் என்னவோ விட்டேத்தியாக அல்லவா இருக்கிறான்... என் கணிப்பு தவறாகிப் போனதோ என்று தவித்தவர் பிறகு சமாதானம் அடைந்தவராய்... எல்லாம் கல்யாணம் ஆனதும் சரியாகிவிடும்... இப்ப விலகி இருப்பவன்... கல்யாணம் ஆன பிறகு பொண்டாட்டி முந்தானையைப் பிடிச்சுகிட்டு சுத்துவான்...' என்று மனதைத் தேற்றிக் கொண்டார்.

# 9

கல்யாண ஏற்பாடுகள் வெகு மும்முரமாய் நடந்து கொண்டிருந்தன...

கல்யாண மண்டபம் பேசி முடித்து... கேட்டரிங் சர்வீஸுக்கு காண்ட்ராக்ட் கொடுத்து... பூ அலங்காரம்... மின் விளக்கு என்று அனைத்துக்கும் ஏற்பாடு செய்து விட்டார் ராமலிங்கம்.

எல்லாவற்றிற்கும் அவரே அலைவது கண்டு வைஜயந்தி வருத்தப்பட்டாள். வினோத் கல்யாண விஷயமாய் என்ன... ஏது என்று கேட்காமல் யாருக்குவந்த விருந்தோ என்று... இல்லை... யாருக்கு அமைந்த கல்யாணமோ என்று விட்டேத்தியாய் இருந்தான்.

அதற்காகப் பெரியவரும் கவலைப் படவில்லை... இன்னும் பத்து வயது குறைந்தவர் போல... துள்ளித் திரியாத குறையாய் ஓடியாடி வேலைகளைக் கவனித்தார். ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்துச் செய்தார். வைஜயந்திக்கு தாய் வீட்டுச் சீதனம் ஏதுமில்லை என்பதால் புகுந்த வீட்டுச் சீதனமாய் வகை வகையாய் செய்து வைத்து விட்டார் ராமலிங்கம்.

கெட்டியான தாலிச் சங்கிலி... கல் வைத்த வளையல்கள் இரண்டு... தங்க வளையல்கள் ஆறு... உள் கழுத்து நெக்லஸ்... புது டிஸைனில் செட் நகை... வைரத்தோடு என்று வரிசையாய் அவர் எடுத்துக் காட்டியதைப் பார்த்து... இத்தனையும் எனக்கா என்று 'திக் பிரமை' அடைந்தாள் வைஜயந்தி. ஒரு குந்துமணி தங்கமும் காணாத எனக்கு இத்தனை அதிர்ஷ்டமா என்று எண்ணி மாய்ந்துப் போனாள். அது மட்டுமல்ல... உன் அத்தையோட நகைகள்... அட்டிகை... காசு மாலை... நவரத்தின வளையல்கள் என்று பீரோ நிறைய இருக்கும்மா என்று சொன்னதும் அவளுக்கு மூச்சே நின்று விடும் போல இருந்தது...



இதையெல்லாம் கட்டிக் காக்கும் சாமர்த்தியம் தனக்கு இருக்கிறதா என்ற பயமும் வந்தது...

அப்புறம்... பட்டுப் புடவைகள்... வினோத்திற்கு டிரஸ் அவனுக்கு பட்டு வேட்டி... பட்டுச் சட்டை இதையெல்லாம் வாங்க வேண்டும்.. அதென்ன ஒரே நாளில் முடித்து விடலாம்தான்... நல்ல நாள் பார்த்து தட்டானிடம் தாலி பண்ணச் சொல்லி விட்டால்... கல்யாண ஏற்பாடுகள் முடிந்த மாதிரி தான் என்றார் பெரியவர்.

ஏனோ... கல்யாணம் நெருங்க நெருங்க வைஜயந்திக்கு உள்ளம் 'திக் திக்' என்று அடித்துக் கொண்டது. வினோத் பட்டும் படாமல் இருப்பதைப் பார்க்கும்போது இன்னும் 'பகீர்' என்றது...

அதை அறியாமல் ராமலிங்கம் சின்னப் பிள்ளை போல சந்தோஷத்துடன் வளைய வந்தார்... எல்லாம் தன் விருப்பப்படி நடக்கிறது என்ற மகிழ்ச்சியில் திளைத்தார்.

விமலா அத்தைக்கு போன் செய்து... கல்யாணத்திற்கு ஒரு மாசம் முன்னே வந்து விடணும்... என்று உத்தரவும் போட்டார்... தனக்கு ஒத்தாசையாக இருப்பாள் என்றுதான்.

திருமணத்திற்கு இன்னும் இருபத்திரண்டு நாட்களே பாக்கி.

அந்த நிலையில் தான் வினோத்தின் நண்பன். தான் வாங்கியிருக்கும் பிளாட்டின் குடிபுகும் விழாவைக் கொண்

டடும் நிகழ்ச்சிக்கு அவனை அழைத்தான். உன் வருங்கால மனைவியையும் அழைத்து வாப்பா என்று வேண்டுதலுடன்...

அவனது வார்த்தைக்கு மதிப்பு தந்து வைஜயந்தியையும் உடன் அழைத்துச் சென்றான். அதற்காகவே காத்திருந்தவளைப் போல... உற்சாகத்துடன்... சிரத்தையுடன் தன்னை அலங்கரித்துக் கொண்டு புறப்பட்டாள் அவள்.

பாவம்... அப்போது அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை... அவளது சந்தோஷத்தைச் சிதறடித்து சுக்கு நூறாக்கப்போகும் வெடிகுண்டு ஒன்று காத்திருக்கிறது என்று.

இருவரையும் வரவேற்ற வினோத்தின் நண்பன் பிரகாஷ்... அவன் காதில் ரகசியமாய் ஏதோ கிசு கிசுப்பதையும்... அதைக் கேட்டு விட்டு வினோத்தின் முகம் மாறுவதையும் கண்ட வைஜயந்திக்கு அப்படியென்ன ரகசியமோ என்று எண்ணினாள்... நண்பர்களுக்குள் ஏதேதோ இருக்கும்... நமக்கென்ன என்று நினைத்துக் கொண்டாள்.

ஆனால் அந்த 'கிசுகிசு' என்னவென்று பத்து நிமிடங்களில் புரிந்து போனது...

சரிகையால் இழைத்துப் பின்னியிருக்கும் டிசைனர் புடவையை உடுத்தி... சினிமா நட்சத்திரம் போல அசைந்து நடந்து வந்த ரூபாதான் அது...

ஷாம்பூ போட்டு குளித்த கேசம் விளக்கொளியில் பட்டாய் ஜொலிக்க... 'ஐ'லைனர் தீட்டிய விழிகள் கர்வத்துடன் அலைய... சாயம் பூசியிருந்த இதழ்களில் மயக்கும் புன்னகை நெளிய... ஒய்யார நடையுடன் வந்தவளைப் பார்த்து அதிர்ந்து போனாள். அவள் எங்கே இங்கு வந்தாள்.



அவள் யாரைத் தேடுகிறாள்...

மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு கவனித்தாள்...

நினைத்த மாதிரியே... வினோத் மீது அவளது விழிகள் லயிப்புடன் பதிந்தன.

அவனைப் பார்த்த சந்தோஷத்தில் விழிகள் விரிந்து முகமும் மலர்ந்து போனது ரூபாவுக்கு.

அவன் வருவது தெரிந்துதான் அவளும் வந்திருப்பதோ... அவள் வரும் விஷயத்தை தான் அந்த நண்பன் கிசுகிசுத்தார் போலும்...

வினோத் இதை எப்படி எதிர்கொள்ளப் போகிறாரோ தெரியவில்லையே... இந்த திடீர் சந்திப்பு அவரை தடுமாறச் செய்து விடுமோ... பயந்தவளாய் ஓரக் கண்ணால் வினோத்தைப் பார்த்தாள்.

அவனிடம் தெரிந்த மாற்றத்தைக் கண்டு அவளுக்கு அடிவயிற்றில் கலக்கம் உண்டானது.

முகம் செவசெவ என்று இருந்தது... தாடை இறுகிக் கிடந்தது... கல் போன்று இறுகி.. தன் காதலியை வெறித்து நோக்கிக் கொண்டிருப்பதைக் காணும்போது அவன் தன் கொந்தளிக்கும் உணர்ச்சியை அடக்க முயல்கிறான் என்று தெரிந்தது. அவன் மனதிலும் ஏதோ போராட்டம் நடக்கிறது என்று அறிந்து கொண்டாள்.

அது என்னவாக இருக்கும் என்று அவளால் ஊகிக்க முடியவில்லை.

பழைய நினைவுகளின் தாக்கமா... இன்றைய இயலாமையை நினைத்து ஏக்கமா... இழந்து விட்டதை எண்ணித் தவிப்பா... இல்லை ஏன் வந்தாள் என்ற வெறுப்பா... தெரியவில்லை.

ஆனால் அவனது பார்வை ரூபாவின் மேல் சில வினாடிகள் நிலைக்குத்தி நின்றது என்னவோ உண்மை...

நெஞ்சுக்குள் ஆனந்தப் பரவசத்துடன் வந்த வைஜயந்திக்கு... இப்போது ஏண்டா வந்தோம் என்று தோன்றியது.

ரூபாவின் கவர்ச்சியும்... கண்களைக் கூச வைக்கும் அழகும் அவளை மிரள வைத்தது நிஜம்.

ஐம்பது வயதைக் கடந்தவர்களே அவளைப் பார்த்து விட்டு 'ஆ'வென்று வாய் பிளந்து நிற்கையில்... இளம் வயது வினோத் எம்மாத்திரம்... பார்வையை தழைத்து தன் தோற்றத்தையும் பார்த்துக் கொண்டாள் அவள்.

ரூபாவின் முன்... தன் அழகு வெகு சாதாரணம்... அவளைப் போல் தான் அழகி இல்லைதான். ஆனால் இருக்கும் கொஞ்சம் அழகையாவது மேம்படுத்திக் கொள்ளலாம் என்றால் அதற்கு திறமையும் இல்லை... தைரியமும் இல்லை.

பழக்க தோஷம்... அதுதான் எப்போதும் போல எண்ணெய் பூசி... வழித்து வாரி முடித்த கூந்தல்... வெறும் பவுடர் பூச்சு மாத்திரமே...

கண்களிலும் மையும் இல்லை. உதட்டுச் சாய வழக்கமும் இல்லை...

போகட்டும்... சேலையாவது இன்றைய ரசனைக்கு ஒத்திருக்கிறதா என்றால் அதுவும் இல்லை.

அத்தை காலத்துப் புடவை... அத்தையின் புடவையே தான்!

"முதன் முதலா என் பிள்ளையோட ஜோடியா போறேம்மா... அந்த விழாவிற்கு நிறையப் பேரு வந்திருப்பாங்க. அழகா பட்டுப் புடவை கட்டிக்கிட்டு போம்மா...



அத்தையோட பட்டுப் புடவைகள் பீரோவில் இருக்கு... அதில் ஒன்றை எடுத்துக் கட்டிக்கோ... அம்சமா இருக்கும்" என்றதோடு மட்டுமல்லாமல்... தானே போய் மாம்பழ வண்ணத்திற்கு மெரூன் கரையமைத்த புடவையை எடுத்து வந்து கொடுத்தார்.

"இது உன் அத்தைக்கு எடுப்பா தெரியும்மா... நீயும் அத்தை மாதிரி தானே இருக்கே... உனக்கும் லட்சணமா இருக்குமே" என்று பாராட்டு வேறு.

அப்போதென்னவோ மாமா சொன்ன மாதிரி அழகா தெரிந்த அந்தப் பட்டுச் சேலை... இப்போது ஏனோ... பட்டிக்காட்டுத்தனமாய்... கண்ணை உறுத்துவது போல் பட்டது... புடவை மட்டுமா... அவளும் தான்... பட்டிக்காட்டுத் தனமாய் இருக்கிறாள்...

அதுவும்... கண்ணைப் பறிக்கும் வண்ண மயில் என வந்திருக்கும் ரூபாவின் முன்னே... தான் வான் கோழியைப் போல வசீகரமில்லாமல் இருக்கிறோம் என்று நன்றாகவே தெரிந்தது... இதை வினோத்தும் உணர்ந்திருப்பாரோ...

அவளுக்கு அழுகை முட்டி மோதிக் கொண்டு வந்தது. அங்கிருந்து ஓடி விடலாமா என்றும் தோன்றியது. அப்படியே கற்பூரமாய் கரைந்து விட மாட்டோமோ என்று ஏங்கினாள்.

ஆனால்... அசையவும் முடியவில்லை... கால்கள் பூமியில் வேரூன்றி போனது போல... அடியெடுத்து வைக்கவும் முடியாமல் ஸ்தம்பித்துப் போயிருந்தாள் அவள்.

அவள் பயந்த மாதிரியே... ரூபா வினோத்தை நோக்கி வந்தாள்... மயக்கும் புன்னகையுடன்.

"ஹலோ... வினோத்... எப்படி இருக்கிறீர்கள்...?"

கொஞ்சும் குரலில் வினவினாள் ரூபா.

"அதான் கண்ணால் பார்க்கிறாயே... நன்றாக... ஆரோக்கியமா... முன்னைவிட திடமாகவே இருக்கிறேன்" இறுக்கம் மாறாமலே சொன்னான் அவன்.

"எனக்கும் சந்தோஷமாக இருக்கிறது... வினோத். முன்னை விட இன்னும் அழகாய் தெரிகிறீங்க..."

"தாங்க்ஸ் ஃபார் யுவர் காம்ப்ளிமெண்ட்ஸ்... அதற்குக் காரணம் வைஜயந்திதான்... ஸோ... கிரெடிட் கோஸ் டு வைஜயந்தி. யெஸ்... அவள் தான் அருகில் இருந்து என்னை கண்ணும் கருத்துமாய் கவனித்துக் கொண்டது... ஆ... சொல்ல மறந்து விட்டேன். எனக்கும் வைஜயந்திக்கும் திருமணம் நிச்சயமாகி விட்டது. உனக்கும் அழைப்புண்டு... கண்டிப்பாய் வரணும் ரூபா..." அவன் சொல்லச் சொல்ல ரூபாவின் முகத்தில் கோபமும்... கடுப்பும் தெரிந்தது.

அதே நேரம்... வைஜயந்திக்கு அதிர்ச்சி... அதுவும் இனிய அதிர்ச்சி... பேசியது வினோத்தானா... இப்படி முகத்தில் அறைந்தாற்போல பேசினானே... அப்படியென்றால்... ரூபாவைச் சந்தித்ததில் எந்த பாதிப்பும் இல்லை என்று தெரிகிறதே...

நான்தான் கிறுக்குத் தனமாய் ஏதேதோ எண்ணி கலங்கி விட்டேன் போல...

நல்லவேளையாய் வினோத் மாறவில்லை... அது போதும்... இப்போது நிம்மதியாய் பெருமூச்சு விட்டாள்...

"வைஜயந்தி... வா... போகலாம்... சீக்கிரம் சாப்பிட்டு விட்டுக் கிளம்பலாம்..." என்று சொன்னவன்... உடனே அவளது கரத்தைப் பற்றி வலுக்கட்டாயமாய் இழுத்துக் கொண்டு நடந்தான்...



துள்ளும் உள்ளத்துடன் அவனுடன் சென்றாள் வைஜயந்தி.

பின்னால் திரும்பியும் பார்க்கவில்லை அவள்... அவர்கள் செல்வதைப் பார்த்து விட்டு பற்களை நறநறவென்று கடித்தாள் ரூபா.

அவளுக்கு மட்டும் சிவனைப் போல நெற்றிக் கண் இருந்திருந்தால்... இவர்களை எரித்து சாம்பல் ஆக்கியிருப்பாள்... அந்த அளவு கோபத்தில் உடம்பு தகித்தது அவளுக்கு.

இனி வினோத் பற்றிய கவலை இல்லை வைஜயந்திக்கு... எப்போது ரூபாவைப் பார்த்தும் சித்தம் தடுமாறாமல் கல்லாய் இருந்தானோ... அப்போதே மாறி விடுவானோ என்ற கவலையும் போய் விட்டது... அப்பாடா... நிம்மதி என்று மகிழ்ந்து போனாள் அந்தப் பேதைப் பெண்... ஆனால் 'எறும்பூர கல்லும் தேயும்' என்று ஆன்றோர் பழமொழியொன்று இருக்கிறது என்பதை சுத்தமாய் மறந்து விட்டாள் போலும்...

ஆம்... அப்படித்தான் ஆனது.

இரண்டு நாட்கள் கழித்து. ரூபாவிடம் இருந்து அழைப்பு வந்தது... 'செல்'லில் பேசினாள்...

"வினோத்... உங்களிடம் பேசணுமே..." அவன் அதைக் கேட்டு விட்டு முகம் சுளித்தான்.

"பேசுவதற்கு எதுவும் இல்லையே..." பட்டும் படாமல் பதில் சொன்னான் அவன்.

"எத்தனையோ இருக்கு வினோத்... என்னைப் பற்றி... நம்மைப் பற்றி... எதிர்காலம் பற்றி... நிறையப் பேச வேண்டி இருக்கு..."

அந்த நேரத்தில் தான் அவனுக்காக ஹார்லிக்ஸ் கலந்து எடுத்து வந்தாள் வைஜயந்தி...

யாருடனோ அவன் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தும் டம்ளரை அங்கிருந்த டீபாயின் மீது வைத்தாள்.

வேண்டாதவர் போல தெரிகிறது... சிடுசிடுவென்று இருக்கிறார்... பேசி முடித்ததும் குடிக்கட்டும்... என்று திரும்பிச் செல்ல எத்தனித்தவளின் காதில் ரூபா என்ற பெயர் விழுந்ததும்... 'சடக்'கென்று நின்றாள்... ரூபா...? அவள் எதற்கு இப்போது பேசுகிறாள்... அன்றைக்கே முற்றுப்புள்ளி வைத்தாகி விட்டதே... சே... இந்தப் பெண்ணுக்கு தான் வெட்கம்... மானம்... சூடு... சொரணை எதும் இல்லையா... இப்படி விரட்டியடித்துப் பேசுகிறானே.

நல்லவேளை... வினோத்தும் பிடி கொடுத்துப் பேச வில்லை.

''ஐம் சாரி ரூபா... கண்டதையெல்லாம் பேசி என் நேரத்தை வீணாக்க எனக்குப் பிடிக்காது... நான் வருவதாக இல்லை'' என்று சொன்ன வினோத்தை மனசுக்குள் பாராட்டவும் செய்தாள். வேறு ஒருத்தியாக இருந்திருந்தால் இத்தனை நேரம் கழன்று கொண்டிருப்பாள்... இவள் என்ன... கழுத்தைச் சுற்றிய பாம்பு மாதிரி... விடமாட்டேன் என்கிறாள். அவள் விஷயத்தில் வினோத்தின் மனம் 'கான்கிரீட்' மாதிரி இறுகி விட்டது என்பதை எப்போது தான் உணரப் போகிறாளோ...

இனி என்னதான் கெஞ்சினாலும்... வினோத்... அடகடவுளே... அவர் இப்போது வேறு மாதிரியல்லவா பேசுகிறார்...

சாகசக்காரி... அவள் என்ன சொன்னாள் என்று தெரியவில்லையே...



''சரி... வந்து தொலைக்கிறேன்... நீ என்ன சொல்லப் போகிறாய் என்ற ஆர்வத்தில் என்று நினைக்காதே. அது வீண் கற்பனை... நீண்ட நாளாய் என்னுள் குமுறும் எரிமலையை... அதன் குழம்பை உன் மீது கொட்ட வேண்டும் என்று காத்திருந்தேன்... அதற்காகவாவது வருவேன்...'' என்றவன் பேச்சு முடிந்ததும்... கோபத்துடன் அங்கும் இங்குமாய் நடை பயின்றான்... கூண்டில் உறுமலுடன் அலையுமே சிறுத்தை... அதன் ஞாபகம் தான் வந்தது வைஜயந்திக்கு.

மெல்ல அவன் அருகில் சென்று... ''வினோத்... உங்களுக்கு ஹார்லிக்ஸ்'' என்று அவள் ஆரம்பித்ததும் 'சட்'டென்று திரும்பி ஒரு முறைப்புடன் அவளைப் பார்த்தான்.

அவனது கண்களில் தெரிந்த அனல் வீச்சு... அவளை நடுங்க வைத்தது.

மேலே எதுவும் பேசாமல் அங்கிருந்து ஓடினாள். அரை மணி நேரம் ஒதுங்கியே இருந்தவள்... மெல்ல எட்டிப் பார்த்தபோது அங்கே அவனைக் காணோம்... ஹார்லிக்ஸ் மட்டும் அப்படியே இருந்தது...

அவன் போயிருப்பது எங்கே என்று அவளுக்குத் தெரிந்து விட்டது... ரூபாவைத் தேடி... அதை நினைக்கையில் வேதனையாக இருந்தாலும்... மனதை தேற்றிக் கொண்டாள்.

இப்போது என்ன ஆசையாகவா பார்க்க போயிருக்கிறான்... இல்லையே... தன் ஆத்திரத்தைக் காட்டத் தானே சென்றிருக்கிறான்... பின்னே... எதற்கு வருத்தப்பட வேண்டும்... கலங்காதே மனமே... நெஞ்சில கொதிக்கும் எரிமலையை எத்தனை நாள் தான் அடக்கி

வைத்திருக்க முடியும்... ரூபா... பாவம்... வீண் வம்பை விலைக்கு வாங்க இருக்கிறாள்... இன்றைக்குத்தான் வினோத்தின் மறு பக்கத்தை நரசிம்ம அவதாரத்தைப் பார்க்கப் போகிறாள்... அதைத் தாங்கும் சக்தியில்லாமல் போதுமடா சாமி... என்று ஓடப் போகிறாள். உள்ளுக்குள் கற்பனை செய்து பார்த்தவளுக்கு ரூபாவின் மீது அய்யோ பாவம் என்று பரிதாபம் வந்தாலும்... அதையும் மீறி சிரிப்பு வந்தது.

இது அவளுக்கு நெத்தியடிதான்... பின்னே... வேண்டாம் என்றபோது ஒதுக்கவும்... விரும்பும் போது தேடி வரவும்... காதல் என்ன கடைசரக்கா இல்லை... வினோத் என்ன.. முட்டாளா... அவரால் அவளின் நம்பிக்கை துரோகத்தை மறக்கவும் முடியாது... மன்னிக்கவும் முடியாது தான். இப்போது அவளைச் சந்திக்கச் சென்றதே அதை உணர்த்தத்தான். அதுவும் நல்லது. இனி ரூபா வாழ்வில் குறுக்கிடாமல் இருப்பாள்.

அங்கே என்ன நடந்ததோ... வினோத்தின் சினத்தை எப்படித் தாங்கினாளோ அந்த ரூபா... ஆர்வத்துடன் காத்திருந்தாள் வைஜயந்தி.

நீண்ட நேரத்திற்குப் பின் வினோத் வந்தான். அவனது முகபாவனையிலிருந்து அவளால் எதையும் ஊகிக்க முடியவில்லை.

அவனது மனநிலை என்ன... சந்தோஷமா... இல்லை வருத்தமா... நிம்மதியா... இல்லை... ஏமாற்றமா... அறிய முடியாமல் தவித்தாள் அவள்.

பசியுடன் இருப்பானே என்ற பரபரப்பில்... அவசர அவசரமாய் அவனுக்காக எல்லாவற்றையும் எடுத்து வைத்தாள்.



அவன் அறைக்குள் தயங்கிக் கொண்டு சென்றவள்.

''சாப்பாடு தயார்... சாப்பிட வருகிறீர்களா'' என்று அழைத்தாள்.

''எனக்கு எதுவும் வேண்டாம்..'' என்று பதில் சொன்னான் வினோத்.

''வேண்டாமா... ஏன்?'' என்று திகைப்புடன் கேட்டாள் அவள்.

''இதென்ன கேள்வி... வெளியே சாப்பிட்டு விட்டேன்... அவ்வளவுதான்...'' பட்டென்று மறுமொழி வந்தது... அவனிடமிருந்து.

வெளியிலா... எங்கே ஓட்டலிலா... ரூபாவுடனா... நெஞ்சில் வண்டொன்று துளைத்தாற்போல வலி... வேதனையின் அழுத்தத்தில் 'மளுக்'கென்று தளும்பி நின்றது கண்ணீர்... விம்மலை அடக்கிக் கொண்டு அங்கிருந்து விரைந்தாள்.

மறுபடியும் காதல் வென்று விட்டதோ என்று மனம் பேதலித்தது...

உடனே அறிவு இடித்துரைத்தது.

'அடமட்டி... மணியைப் பார்... மூன்றரை... இத்தனை நேரம் யாராவது சாப்பிடாமல் இருப்பார்களா... யோசி... பசித்திருக்கும். சாப்பிட்டிருப்பான்... ஏன் வீண் கற்பனையில் இறங்குகிறாய்.'

'அப்படியும் இருக்கலாமே... அதை யோசிக்காமல்... மடச்சி... எதையோ கற்பனை பண்ணி தவிக்கிறேன்' என்று தலையில் அடித்துக் கொண்டாள்.

''அம்மாடி கொஞ்சம் இங்கே வாம்மா...''

மாமாவின் குரல் கேட்டு... கை வேலையை விட்டு விட்டு அவரை நோக்கி விரைந்தாள் வைஜயந்தி. தன் முன் விதவிதமான திருமண அழைப்பிதழ்களை பரப்பிக் கொண்டு அமர்ந்திருந்தார் ராமலிங்கம்.

"எனக்குத் தெரிஞ்ச கடை... முதலாளி என் சிநேகிதர். இதோ... இத்தனையையும் மாதிரிக்கு தந்திருக்கிறார். உனக்குப் பிடிச்சது எதுன்னு சொல்லும்மா... அது மாதிரியே அச்சடிச்சு தரச் சொல்லி விடுகிறேன்..." மாமா சொன்னதைக் கேட்டு தயங்கினாள் வைஜயந்தி.

"இதெல்லாம் பெரியவங்க பார்த்து முடிவு எடுக்க வேண்டிய சமாச்சாரம்.. மாமா... நீங்களே தேர்ந்தெடுத்துக் கொடுத்திடுங்க... நான் எதுக்கு மாமா" என்றாள் அவள்.

"என்னம்மா... நான் அந்தக் காலத்து மனுஷன்... இந்தக் காலத்து பசங்களோட ரசனையே வேறுதான். அதான் உன்னைக் கேட்டுச் செய்யலாம்னு நினைச்சேன்..." என்று கூறினார் பெரியவர்.

"அப்போ... உங்க பிள்ளையை கேட்டுட்டுச் செய்யுங்க மாமா... அவரது விருப்பம் எப்படியோ... அவருக்கும் பிடிச்ச மாதிரி இருக்கணும் இல்லையா."

"அடடா... இப்பவே புருஷனுக்கு 'சப்போர்ட்டா' சரிதான்... ஆனா... அவன்தான் கண்ணில் படவே மாட்டேன்கிறானேம்மா. இன்னிக்கே போய் 'ஆர்டரை'த் தந்தால் தான் இரண்டு நாள்ல கைக்கு வந்துடும். சீக்கிரம் போய் எல்லோரையும் அழைக்க வேண்டாமா... அப்புறம் வெளியூர் வாசிகளுக்கு வேறு அனுப்பியாக வேண்டுமே... தலைக்கு மேல் வேலையிருக்குமா... அவனைக் கேட்டு முடிவு செய்ய இப்ப நேரம் இல்லை..."

அவர் சொல்லிக் கொண்டிருக்கும்போது அங்கு வந்தான் வினோத்.



"என்னை என்ன கேட்க வேண்டும்..." என்று கேட்டான்.

"அதான்டா... அழைப்பிதழ்களை அச்சடிக்க தர வேண்டாமா... எந்த மாதிரி என்று நீ 'செலக்ட்' பண்ணணுமாம்... வைஜயந்தி சொல்கிறாள். நீ எங்கே ஆற அமர உட்கார்ந்து பேசறே... உனக்கு பேசறதுக்கு பொழுதும் இல்லையே... அதைத்தான் சொல்லிக் கொண்டு இருந்தேன். சரி... இப்பவாவது உனக்கு நேரம் இருக்கா... 'செலக்ட்' பண்ணி சொல்லு..." என்று மகனை அழைத்தார் தந்தை.

அங்கிருந்த அழைப்பிதழ்களை சுவாரஸ்யமின்றி வெறித்தான் வினோத்... உதட்டில் ஏளன சுளிப்புடன்.

"என்னடா குழப்பம்... எல்லாமே நல்லா இருக்கே. எதை 'செலக்ட்' பண்ணுவது என்றா... இதோ. இதை பார்.. இந்த அழைப்பிதழ் அருமையா இருக்கு. என்ன காஸ்ட்லி தான். இருந்துவிட்டு போகட்டும்.. என்ன சொல்றே..." ஆர்வத்துடன் சொன்னார் ராமலிங்கம்.

"இந்தக் கல்யாணம் நடந்தால்தானே இது அவசியம். விடுங்கள்.." வெகு அலட்சியமாய் சொன்னான் மகன்...

அதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்தார் ராமலிங்கம். இவன் என்ன சொல்கிறான்...

இந்த கல்யாணம் நடந்தால் தானே என்றால்...

அவர் கண்களில் கலக்கம் வந்தது...

## 10

வைஜயந்தி... தன்னுடைய அறையினுள் சுவற்றில் சாய்ந்து அமர்ந்திருந்தாள். கண்களில் இருந்து நீர் அருவியாய் வழிந்தது...

ஏது நடந்து விடுமோ என்று அஞ்சினாரோ... அது நடந்து விட்டதே... என்ன சொல்லி மாய்மாலம் செய்தாரோ... வினோத் மாறிப் போனாரே... நினைக்கவே நெஞ்சம் வெடிப்பது போல இருந்தது அவளுக்கு.

வைஜயந்தியைத் தேடிச் சென்ற ராமலிங்கம் அவள் இருந்த நிலை கண்டு வேதனைப்பட்டார்.

பாவம்... குழந்தை... எத்தனை ஆசையுடன் இருந்தாள்... கல்யாணக் கனவுகளோடு காத்திருந்தவளுக்கு... இப்படி ஒரு பேரிடியைத் தந்து விட்டானே ராஸ்கல்... பாவி...

பற்களைக் கடித்தார் அவர்.

அவரால் இன்னும் நம்ப முடியவில்லை... வினோத்தா அப்படிப் பேசியது... இதுநாள் வரை மறுப்பு ஏதும் சொல்லாமல் இருந்தானே... திடீர் என்று என்னவாயிற்று... ஏதாவது முனி... கினி பிடித்து அவனை ஆட்டுகிறதா என்ன... அவரும் புரியாமல் விழித்தார்.

சே... என்னவெல்லாம் பேசிவிட்டான். மறுபடியும் அவன் பேசியது நினைவில் வந்து ஆடியது...

''இந்த கல்யாணத்தில் எனக்கு விருப்பமில்லை... நிறுத்தி விடுங்கள்...'' என்று அவன் சொன்னதும் அவருக்கு ஆத்திரம் வந்தது உண்மைதான்.

''என்னடா உளறல் இது... உனக்கு ஏதாவது பித்துப் பிடித்து விட்டதா... கல்யாணம் நெருங்கி வர்ற நேரத்தில்... இது என்ன அபசகுன பேச்சு... விளையாடுவதற்கு நேரம் காலம் இல்லையா...'' என்றார் கோபமாய்.

''இது ஒன்றும் விளையாட்டுப் பேச்சு இல்லை... எனக்கு பித்துப் பிடிக்கவும் இல்லை... நான் தெளிவாத்தான் பேசுகிறேன். நன்றாய் காது கொடுத்துக் கேட்டுக்



கொள்ளுங்கள்... எனக்கு இந்த கல்யாணத்தில் விருப்பம் இல்லவே இல்லை... போதுமா...'' என்று அழுத்தமாய் வந்தது பதில்.

அவன் உறுதியாய் சொன்னதைக் கேட்டு விட்டு விக்கித்துப் போனார் ராமலிங்கம்.

கல்யாணத்தை நிறுத்துவதா... அன்றைக்கு சரி... சரி என்று தலையாட்டினானே... அது ஏன்... அப்போது அவனுக்கு பைத்தியம் பிடித்திருந்ததா... க்ஷண பித்தம்... க்ஷண பைத்தியம் என்பது போலல்லவா இருக்கிறது இவன் பேசுவது. ஒருவேளை... அவனுக்கு தலையில் அடிபட்டதால் இப்போது மூளைக் குழப்பம் வந்து பேசுகிறானோ என்னவோ... அதான் இப்படி தத்து பித்து என்று உளறுகிறான் பிள்ளை...

ஒரு திருமணத்தை நடத்த எப்படியெல்லாம் கஷ்டப் பட வேண்டி இருக்கிறது... எங்கேயெல்லாம் அலைய வேண்டி இருக்கிறது.

பணத்தை நீராய் செலவு செய்து... அத்தனை ஏற்பாடுகளையும் முடித்தாகி விட்டது... கடைசி நேரத்தில் இப்படி கழுத்தை அறுக்கிறானே... சரி... பணம் போகட்டும்...

மானம்... மரியாதை...?

ஊர் முழுக்க எங்க வீட்டில் கல்யாணம் என்று தமுக்கு அடிக்காத குறையாய் சொல்லிவிட்டு... இப்போது நிறுத்த வேண்டுமாமே... மானம் கப்பலேறாதா... இத்தனை நாள் தள்ளிப் போட்டது மட்டுமல்லாமல் நடக்க விருக்கும் திருமணம் திடீர் என்று நின்றால் ஊரில் நாலு விதமாய் பேச மாட்டார்களா...

எந்தப் புத்தில் என்ன பாம்போ... வீட்டுப் பிள்ளைக்கு நோய்... நொடின்னு என்ன கண்றாவியோ... யார் கண்டது.

அதான்... தெரியாமல் திருமண ஏற்பாட்டை பண்ணி விட்டு... தெரிஞ்சதும் நிறுத்தி விட்டார் போலும் என்று ஊர் உலகம் பேசாதா...

அது மட்டுமா பேசுவார்கள். விபத்தில் அடிபட்டதில் கல்யாணத்துக்கு லாயக்கில்லைன்னு சொல்லியிருப்பார் டாக்டர்.. அதான் கல்யாணம் நின்னுடுச்சு என்று கூட பேசுவார்கள்... நினைக்கவே அசிங்கமாத் தெரிகிறது.. இதையெல்லாம் யோசித்துப் பார்க்காமல் திருமணத்தை நிறுத்தி விடுவதாமே... மடையன்... முட்டாள்.. இதனால் பாதிக்கப்பட்றது வைஜயந்தியும் தான்... முதல் படியிலிருந்து விழுந்தால் அடி வலிக்காது... ஆனால் உச்சியிலிருந்து விழுந்தால்... உயிர் போகும் வலி ஆச்சே...

கல்யாணப்பேச்சு எடுத்தப்பவே சொல்லியிருந்தால்... அப்பவே நின்று போயிருந்தால்... வைஜயந்திக்கு அதிகம் ஏமாற்றம் இருந்திருக்காது... கல்யாணம் வரை வந்து விட்டு இப்போது இல்லையென்றால் துவண்டுப் போயிடுவாளே... அது மரண அடியாக இருக்குமே... ஊகூம் அப்படி ஆக விடக் கூடாதுதான்... அது சரி... இப்போ எதற்கு திருமணத்தை இவன் நிறுத்தச் சொல்கிறான்... ஏன் இந்த திடீர் குழப்பம். இன்னும் அந்த ஒய்யாரியின் நினைப்பு விடவில்லையாக்கும்...

மகனே... நீ தலைகீழாய் நின்றாலும் சரி... என் விருப்பப்படி தான் நடக்கும்... நடக்க வைப்பேன்...

ஆனால் அவரது பிள்ளையாயிற்றே... அவரைப் போலவே பிடிவாதத்துடன் பேசினான் வினோத்.

''என் முடிவை சொல்லியாச்சு... இனிமேல் எந்தப் பேச்சும் இல்லை...'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பிய மகனை அதட்டி நிறுத்தினார்.



''என்னடா மனசில் நினைச்சிருக்கே... கல்யாணம் என்கிறது விளையாட்டு சமாச்சாரம் இல்லை... ஏற்பாடு செய்யறதுக்கும்... திடீர் என்று நிறுத்துவதற்கும்... இது வாழ்க்கைப் பிரச்சனை. மானப் பிரச்சனையும்தான்... இந்தக் கல்யாணம் நடந்தேயாகணும். இதுக்கப்புறம் நீ ஏதாவது பேசினே... நான் மனுஷனா இருக்க மாட்டேன் ஆமாம்'' என்று உரத்தக் குரலில் சொன்னார் பெரியவர்.

''அது எப்படி நடக்கும் என்று நானும் பார்க்கிறேன்'' என்று உறுமினான் பிள்ளை.

''அதை நடத்திக் காட்டறேன்டா... உட்கார்ந்து தாலி கட்டுன்னா... கட்டித்தான் ஆகணும்... மறுபேச்சு பேசினாயே சுட்டுத்தள்ளிடுவேன்...'' என்று பதிலுக்குக் கர்ஜித்தார் ராமலிங்கம். அவரை முறைத்து விட்டுச் சென்றான் வினோத். அதைப் பார்த்து பொருமினார் பெரியவர்.

இதெல்லாம் வைஜயந்தியின் காதில் விழுந்திருக்குமே... ஆடிப்போயிருப்பாளே... போய் அவளைத் தேற்றுவோம் என்று அவளைத் தேடி வந்தவருக்கு... அவளின் கோலம் இதயத்தை பிசைந்தது... நினைத்தது போலவே உள்ளம் சோர்ந்து கிடக்கிறாள். இவளுக்கு எப்படி ஆறுதல் சொல்வது என்று தவித்துப் போனார் அவர்.

அழுது சிவந்த கண்களால் நிமிர்ந்து அவரைப் பார்த்த வைஜயந்தி... ''மாமா... நான் தோற்றுப் போய் விட்டேன்'' என்று கூறி விம்மியழுதாள்.

அவள் அருகே சென்றவர்... குனிந்து அவளது தலையை தடவிக் கொடுத்தார்...

''அம்மாடி... அழாதேம்மா. நீ தைரியசாலின்னு நினைச்சேன்... இப்படி மனம் தளர்ந்து போறேயேம்மா... சரி... ஒன்னு கேட்பேன்... மறைக்காமல் சொல்வாயா...'' என்று கேட்டார் அவர்.

"என்ன" என்பதுபோல் அவரைப் பார்த்தாள்.

"என் பிள்ளைக்கு திடீர்னு என்ன ஆச்சு... நல்லாத் தானே இருந்தான். இப்போ திடீர்னு இப்படி மோசமா யாட்டம் போடுகிறானே... அந்த மோகினியை மறுபடியும் பார்த்தானா... அந்த குடி கேடியைத் தப்பித் தவறி எங்கே யாவது சந்திச்சதா. உன்கிட்டே சொன்னானா.. சொல் லும்மா... இந்த திடீர் 'பல்டி'க்கு ஏதோ காரணம் இருக் கணும்..." என்று விசாரித்தார் ராமலிங்கம்...

ஆமாம் என்று அவள் தலையசைத்ததும் திடுக்கிட்டார் அவர்.

"என்ன... பைசாவிற்கும் அருகதையில்லாத ரூபாவை சந்திச்சானா... போச்சுடா... எப்போம்மா..."

சொன்னாள்... நண்பன் வீட்டு விழாவில் நடந்த சந்திப்பை... தொடர்ந்து அவள் போன் செய்து அழைத் ததை... அவன் சென்று அவளைப் பார்த்ததை... ஒன்றை யும் விடாமல் சொன்னாள். "இந்த நான்கு நாட்களா அவளைத் தொடர்ந்து சந்திக்கிறார் போலத் தெரிகிறது மாமா... இப்போ எல்லாம் அவர் வீட்டில் சாப்பிடுவ தில்லை... வெளியில் முடித்துக் கொண்டு வருகிறார். அப்பப்ப... அவளிடமிருந்து போன் வரும் போல... உடனே தனியாய் போய் பேசுகிறார். எனக்கு சந்தேகம் வந்தது. ஆனால் இந்த அளவுக்குப் போகும் என்று நினைக்கவில்லை மாமா..." அழுகைத் தொண்டையை கவ்வ... சொன்னாள் வைஜயந்தி...

சிறிது மௌனத்திற்குப் பின் அவர் பேசினார். "இப்போ எனக்குப் புரியுதும்மா... என் பிள்ளையை அழைத்து நைச்சியமாய் பேசி... குழையடித்திருக்கிறாள்... ஆம்பிளை யாச்சே... ஆரம்பத்தில் இருந்த பிகுமானம் நீர்த்துப்



போச்சு... மறுபடியும் எழுந்து நின்னுட்டான் இல்லையா... வந்து ஒட்டிக்கிட்டா அந்த ஜாலக்காரி... பணக்கார வீட்டுப் பிள்ளையை விட மனசு வருமா... சரி... இந்த மடையனுக்கு புத்தி வேண்டாம். பழசையெல்லாம் மறந்துட்டு அவ பின்னால் போகிறானே... ராஸ்கல்... என்னடா... அடிப்பட்டு சாகக் கிடந்தபோது விட்டுட்டு ஓடினவ... இப்ப வந்து ஒட்டறாளே... இவளை நம்ப லாமான்னு அவனுக்குத் தெரியாது... அந்த அளவா அவள் மீது மோகக் கிறுக்கு அவனுக்கு... அதை விடும்மா... நீ கவலையில்லாமல் இரு... நான் பார்த்துக்கறேன்... அவனது கைக் காலைக் கட்டியாவது உட்கார வைத்து உன் கழுத்தில் தாலி கட்டச் சொல்றேன்... எழுதி வச்சுக்கம்மா... இந்த வீட்டுக்கு நீதான் மருமகள்... அதை யாராலும் மாத்த முடியாது... சரிம்மா... நீ ஏதாவது சாப்பிட்டாயா... அதைச் சொல்லு... இல்லையா... அப்ப எழுந்திரும்மா... போய் ஹார்லிக்ஸ் கலந்து எடுத்து வா... நானும் சேர்ந்து குடிக்கிறேன்..."

"எனக்கு எதுவும்..." என்று ஆரம்பித்தவளை இடை மறித்து சொன்னார் அவர்.

"ஊச்... மனசில் ஆயிரம் வேதனை இருந்தாலும் வயித்துக்கு வஞ்சனைக் கூடாதும்மா... ஓடிப்போய் கொண்டுவா... பார்க்கலாம்... ரொம்பப் பேசிட்டேன் இல்லையா... என் தொண்டையும் வரண்டிருக்கு... சூடாய் ஏதாவது குடிச்சால் தான் சரிப்படும்..." என்றார் அவளை உற்சாகப்படுத்தும் விதமாய்...

அவள் எழுந்து சென்றதும்... அவர் கூடத்துக்கு வந்து சோபாவில் அமர்ந்து கொண்டார்.

அவரிடமிருந்து பெருமூச்சு வெளிப்பட்டது...

ஒரு நல்ல காரியம் நடக்க தடங்கலா... இது எப்படி போய் முடியுமோ...

நெற்றியைத் தேய்த்துக் கொண்டார்.

முன்னறிவிப்பின்றி விமலா வந்து இறங்கியதும் ராமலிங்கத்திற்கு ஆச்சர்யம்... அதே சமயம் மகிழ்ச்சியும் உண்டானது...

"என்னம்மா... விமலா... இப்படி சொல்லாமல் கொள்ளாமல் வந்திருக்கே... ஒரு போன் பண்ணியிருந்தா ஸ்டேஷனுக்கு வந்திருப்பேன் இல்லையா..." என்றார் கரிசனத்துடன்.

"நீதான் ஒரு மாசத்துக்கு முன்னாலேயே வந்திருன்னு சொன்னாயே... அத்தனை நாள் முடியாதே... ஒரு பத்து பதினைந்து நாளாவது இருக்கலாமேன்னு வந்தேன் அண்ணா... ஆமாம்... கல்யாண ஏற்பாடெல்லாம் எதுவரைக்கும் வந்திருக்கு... இப்போ நான் என்ன செய்ய வேண்டும்... சொல்லண்ணா..." என்று விசாரணையில் இறங்கினாள் விமலா..."

"ஏதோ... என்னால் முடிஞ்ச அளவு செய்திருக்கேன்ம்மா... இன்னும் சொந்தக்காரர்களையெல்லாம் அழைக்கணும். நண்பர்கள்... அக்கம் பக்கத்து வீடுகள்னு பெரிசாய் 'லிஸ்டே' இருக்கு..." சலிப்புடன் சொன்னார் அவர்.

"நீயே ஏன் எல்லாத்தையும் இழுத்துப் போட்டுக் கொள்கிறாய்... வினோத்துக்கும் கொஞ்சம் பொறுப்புக்களை கொடேண்ணா. ஆமாம்... நம்ம கல்யாண மாப்பிள்ளையை எங்கே காணோம். வேலை... வேலைன்னு கிடக்கிறானா... வரட்டும் கேட்கிறேன்... அட— வைஜயந்தியும் என் கண்ணில் படவில்லையே..."



என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே... அவள் காபியுடன் அங்கு வந்தாள். அவளைப் பார்த்ததும...

"என்ன... கல்யாணப் பொண்ணு... கல்யாணம் என்றதும் பூரித்துப் போக வேண்டாமா... நீ என்ன... வர வர இளைத்துக் கொண்டு வர்றே... கல்யாண டென்ஷனா. இல்லே... கல்யாண நாள் சீக்கிரம் வந்துடாதா என்கிற ஏக்கமா..." என்று பரிகாசம் செய்தாள் விமலா. வைஜயந்தியின் முகத்தில் வெட்கத்தின் சிவப்போ... நாணத்தின் சிரிப்போ இல்லை... மாறாய்... இளம் புன்னகை... அதுவும் மூன்றாம் பிறையைப் போல்... சின்ன கீற்றாய்... தோன்றிவிட்டு உடனே மறைந்து போனது. அவளை உற்றுப் பார்த்தாள் விமலா.

இவளுக்கு என்ன ஆச்சு... புதுமணப் பெண்ணுக்கு இருக்க வேண்டிய குஷியோ... உற்சாகமோ இல்லாமல்.. எதையோ பறி கொடுத்தவள் மாதிரி அல்லவா இருக்கிறாள்... திருச்சிக்கு வந்திருந்தபோது கூட நன்றாகத் தானே இருந்தாள். சந்தோஷத் துள்ளலுடன் வளைய வந்தாளே...

அண்ணா கூட என்னவோ போல் இருக்கிறார். கல்யாண விஷயத்தை சலிப்பா சொல்கிறான். அவர் முகமும் 'டல்'லாக இருக்கிறது...

ஏதோ சரியில்லை...

ஏதோ நடந்திருக்கிறது... அது என்ன...?

அண்ணனிடம் கேட்கலாமா... அவரது குடும்ப விஷயம்... அவராகச் சொல்ல வேண்டும்... நாமே கிளறுவது சரியில்லையே...

பார்க்கலாம்... அவராக வாய்விட்டுச் சொல்கிறாரா என்று... அந்த முடிவில் பொறுமையாய் காத்திருந்தாள் விமலா.

நீறுபூத்த நெருப்பாய் உள்ளுக்குள்ளேயே கனன்று கொண்டிருந்ததை மூடி வைக்க முடியுமா... அது வெடித்து வெளியே சிதறி விட்டது.

வினோத் வீட்டுக்கு வந்தான்... ஆனால் விமலா அத்தையிடம் சரியாகப் பேசவில்லை... விமலாவே வலியப் போய் பேச்சுக் கொடுத்தாள்.

''என்னடா... மாப்பிள்ளை... இவ்வளவு 'லேட்டா' வந்தா எப்படி... சீக்கிரமே வந்து வைஜயந்தியோட கொஞ்சம் ஜாலியா பொழுதைக் கழிப்போம் என்ற எண்ணம் இல்லையா...

சரியாப் போச்சு... பாரம்மா வைஜயந்தி... கல்யாணத்துக்கப்புறமும் இவன் இப்படியே செய்தால்... காதைப் பிடித்துத் திருகிக் கேள்... என்ன...''

''அத்தை... இப்ப எதற்கு வேண்டாத பேச்செல்லாம்... எனக்கு ஆயிரம் வேலை இருக்கிறது... இப்போ அதுதான் எனக்கு முக்கியம்... கண்டதையெல்லாம் பேசி என் 'மூடை' கெடுக்காதீங்க...'' என்று முகத்தில் அடித்தாற் போல் பேசினான் வினோத்.

விமலா திகைப்புடன் அவனைப் பார்த்தாள்.

கண்டதையெல்லாமா...

''நான் என்னடா அப்படிச் சொல்லி விட்டேன். ஏதோ உன்னைக் கொஞ்சம் கிண்டல் பண்ணிப் பார்க்கலாம் என்று பேசினால்... அதற்கு ஏன் முகம் சுளிச்சுக்கிறே... இதோ பாருடா... கல்யாணம் என்றால்... மத்த வேலை களை...''

''அடச்சே... இங்கே கல்யாணம் ஒன்றும் நடக்கப் போவதில்லை. கருமாதி வேண்டுமானாலும் நடக்கும்...



இருந்து பார்த்து விட்டுப் போங்கள்... திரும்பத் திரும்ப... கல்யாணம் என்று பேசிக் கொண்டு...'' 'வள்'ளென்று எரிந்து விழுந்த அண்ணன் மகனை வெறித்தாள் அத்தை...

அவளுக்கு எதுவுமே புரியவில்லை...

இவன் என்ன சொல்கிறான்... கல்யாணம் நடக்காதா. ஈசுவரா - இதென்ன குழப்பம்...

அண்ணாவும் இது பற்றி எதுவும் சொல்லவில்லையே... அவர் கல்யாணம் நடக்கிற மாதிரி தானே பேசினார். ஆனால் இவன்... தலை சுற்றுவது போல் இருந்தது விமலாவிற்கு...

இங்கே என்ன நடக்கிறது என்று தெரியவில்லையே... அண்ணன் அழைத்தான் என்று வந்து விட்டோமே... இப்போது இங்கே இருப்பதா... இல்லை கிளம்பி விடுவது நல்லதா... குழம்பித் தவித்தாள் விமலா...

இதைப் பற்றி தெளிவாய் அண்ணனிடமே கேட்டு விடுவது நல்லது என்று முடிவு செய்தவள்... ராமலிங்கம் வந்ததும் கேட்டு விட்டாள்.

''அண்ணா... நம்ம வினோத் ஏதேதோ சொல்கிறானே... எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே... இந்தக் கல்யாணம் நடக்காது மாதிரி இருக்கு அவனது பேச்சு... என்ன விஷயம் அண்ணா...''

''அவன் கிடக்கிறான் விடும்மா... இந்தக் கல்யாணம் நடக்கத்தான் போகிறது... நீ கவலைப்படாதே...''

''அவனுக்கு விருப்பம் இல்லை மாதிரி தோணுகிறது யோசிண்ணா... அப்புறம் குளறுபடியேதும் ஆகிவிடக் கூடாது இல்லையா...''

"அட நீ ஒண்ணு... கோழியைக் கேட்டுட்டா மசாலை அரைக்கிறாங்க. கல்யாணம் ஆனதும் எல்லாம் சரியாகி விடும்மா..."

"என்னண்ணா பேச்சு இது... கோழி செத்தா அது பெரிய விஷயமா... இங்கே... வாழ்வே செத்திடுமே... வைஜயந்தியோட சந்தோஷம் தானே நமக்கு முக்கியம்."

"அந்த எண்ணம் எனக்கும் இருக்கும்மா விமலா... நான் எது செய்தாலும் அது நல்லதுக்குன்னு நினை... வினோத்துக்கு வைஜயந்திதான் ஏத்தவள்... கண்ட கழுதையெல்லாம் இந்த வீட்டுக்கு மருமகளாக முடியாது... அவ்வளவு தான் சொல்வேன்!" என்று உறுதியான குரலில் சொன்னார் பெரியவர். அதற்குப் பின் விமலா எதுவும் பேசவில்லை என்றாலும் இது சரி வருமா என்ற நெருடல் துளைக்க ஆரம்பித்தது.

இரவு உணவுக்குப் பின்... அண்ணனும் தங்கையும் மும்முரமாய் பேசிக் கொண்டிருந்தனர்.

மெல்ல... தயங்கியவாறு... அங்கு வந்து நின்றாள் வைஜயந்தி...

அவள் எதையோ சொல்ல விரும்புகிறாள் என்று தெரிந்து கொண்ட ராமலிங்கம்...

"என்னம்மா... ஏதாவது வேண்டுமா..." என்று வினவினார்.

"மாமா... நான் சொல்வதைத் தப்பாக எடுத்துக் கொள்ளாதீர்கள்... இந்த கல்யாணத்தை நிறுத்தி விடுவது நல்லது என்று எனக்குப் படுகிறது மாமா... அவர் என்னிடம் பேசுவதையே நிறுத்தி விட்டார்... அவரது பாராமுகம் என்னைச் சித்ரவதை செய்கிறது. கல்யாணத்துக்கப்புறமும் இப்படித்தான் என்று நினைக்கவும் பயமாக



இருக்கிறது... அதைவிட... திருமணமே இல்லாமல் இருந்து விடுவது நல்லதுன்னு தோணுகிறது மாமா... அவருக்கு விருப்பம் இல்லை என்று தெரிந்தும் இந்தக் கல்யாணத்தை நடத்த நினைக்கிறது சரியாகப் படவில்லை மாமா... ப்ளீஸ்... வேண்டாம் மாமா..." கண்ணீர் மல்க அவள் கெஞ்சும் குரலில் சொன்னாள்.

"என்னம்மா சொல்றே... அவனை மனுஷனாக்கியது நீ... நீ மட்டும் இல்லாதிருந்தால்... அவன் சக்கர நாற்காலிதான் கதி என்றிருந்திருப்பான்... அப்போ... அந்த தளுக்குக்காரி அவனைத் திரும்பிப் பார்த்திருப்பாளா... இப்போ... அதை மறந்துவிட்டு பேசறானே என் பிள்ளை. கொஞ்ச நாள் அப்படி இப்படி இருப்பான் தான். அப்புறம் புத்தி தெளிஞ்சதும் மாறிடுவான்... பாரும்மா..."

"இல்லை மாமா... அவரைப் பத்தி உங்களுக்குத் தெரியவில்லை. அவர் படுக்கையில் பலவீனமாய் படுத்திருந்தபோது என் சேவையும்... கரிசனமும் வேண்டியிருந்தது. ஆனால் இப்போ அவருக்கு வலிமையும் தெம்பும் திரும்பி விட்டதால்... நான் தேவையில்லாதவளாகி விட்டேன். பழைய வினோத்தாக ஆனதும் பழைய காதல் ஜெயித்து விட்டது... நான் தோத்து விட்டேன் மாமா... என்னை..." மேலே சொல்லத் தெரியாமல் முகத்தை மூடிக் கொண்டு விம்மினாள் வைஜயந்தி.

அவளை இழுத்து அணைத்துக் கொண்டாள் விமலா...

"அழக்கூடாதும்மா... வைஜயந்தி... உன் நல்ல மனசுக்கு எந்தக் குறையும் வராது... கடவுள் உனக்கு நல்லதைத்தான் செய்வார்... மனதைப் போட்டு அலட்டிக்காதேம்மா... அண்ணா... எனக்கென்னவோ கொஞ்சம் யோசிச்சு முடிவு எடுக்கறது நல்லதுன்னு படுகிறது..." என்றாள் அவள்.

"நான் நல்லா யோசிச்சுத்தான் இந்த முடிவுக்கு வந்தது விமலா... அவனுக்கு எது நல்லது என்று தெரிஞ்சுதான் பிடிவாதமா இருக்கேன்... நான் கவலைப்பட்டறது அவனது எதிர்காலம் மட்டும் இல்லை... இந்தக் குடும்பத்தோட மானம்... மரியாதை... சொத்து... சுகம் எல்லாத்தோட எதிர்காலத்தையும்... ரூபா இந்த வீட்டுக்கு மருமகளா வந்துட்டா... அவனது எதிர்காலம் மட்டும் இல்லை... இந்த வீடே இருட்டாயிடும்... மானம்... மரியாதை கப்பலேறிடும். சொத்து... சுகம் எல்லாம் சூன்யமாகிடும்... அப்படி ஆகக் கூடாது என்றுதான் பார்க்கிறேன். வைஜயந்தி.. நீயும் அப்படி நினைத்தால்... எந்த மறுப்பும் சொல்லாமல்... கல்யாணத்திற்குத் தயாராகும்மா... நான் இருக்கும் வரை உனக்கு எந்தச் சங்கடமும் வராது... என்னை நம்பும்மா."

மாமாவின் வார்த்தைகள் அவளை மேலே பேச விடாமல் செய்தன...

வினோத்தை நினைக்கும் போது பயமும்... மாமாவின் வார்த்தைகளைக் கேட்கையில் நம்பிக்கையும் வர... என்ன செய்வது என்று புரியாமல் விழித்தாள்...

கடைசியில் நடப்பது நடக்கட்டும் என்ற முடிவுக்கு வந்து சேர்ந்தாள் அவள்.

அவள் சென்றதும்... விமலாவிடம் வெகு மும்முரமாய் ஆலோசனை நடத்தினார் ராமலிங்கம்...

வைஜயந்தியின் எதிர்காலத்தின் நன்மைக்காக அவர் செய்திருக்கும் முடிவைப் பற்றி தங்கையிடம் விலாவாரியாய் சொன்னார் அவர்.

அதைக் கேட்ட விமலா... அந்த முடிவு மிகச் சரியானதே என்று சொன்னதும் அவருக்குத் திருப்தி உண்டாயிற்று.



அவர் எடுத்த அந்த முடிவு சரிதானா... அது வைஜயந்திக்கு நன்மைக்கானதா... என்பதை காலம் தான் பதில் சொல்ல வேண்டும்...

# 11

காலை நேரம்... கணக்கு நோட்டில்... கல்யாண ஏற்பாட்டிற்கான செலவுகளை சரி பார்த்துக் கொண்டிருந்தார் ராமலிங்கம்.

அந்த நேரத்தில் தொலைபேசி அழைக்க... எடுத்துப் பேசினார்.

"ராமலிங்கம் அய்யாதானே... நான் கல்யாண மண்டபத்தின் மேனேஜர் பேசறேனுங்க... இந்தக் கல்யாணம் நடக்கப் போவதில்லை என்று செய்தி வந்ததுங்க... அதான் உங்ககிட்டே கேட்டுத் தெளிவு பண்ணிக்கலாம்னு போன் செய்தேன் அய்யா... இல்லைன்னு தெரிஞ்சதுன்னா... வேறே ஒரு பார்ட்டிக்குக் கொடுத்திடலாம்னுதான்..."

அதைக் கேட்டதும் அவருக்கு 'திடுக்'கென்றது... யார் சொன்னார்கள்... இதென்ன புது தலைவலி... என்று கவலைப்பட்டவர். நேரே அவரிடமே கேட்டு விட்டார்.

"உங்க பிள்ளைதான் சொன்னார்... வேறு யாராவது சொல்லியிருந்தால் நான் நம்பியிருக்க மாட்டேனுங்கய்யா. இதை அவரே சொன்னதால்தான் சந்தேகம் வந்து உங்களுக்கு போன் செய்தேன்."

"இதோ பாருங்க... இதை உங்ககிட்ட நான் சொல்லவில்லை தானே... அப்படீன்னா... அதே தேதியில்...

அதே முகூர்த்தத்தில் இந்தக் கல்யாணம் நடக்கும்னுதான் அர்த்தம் தெரிஞ்சுதா...''

''அப்ப சரி... ஆனா... உங்க பிள்ளைதான்...''

''அவன் ஒரு முட்டாள். அவனது பேச்சை பொருட்டா எடுத்துக்காதீங்க... விடுங்க...''

''சரிங்க அய்யா... வச்சிடட்டுமா...''

ராமலிங்கத்திற்கு ரத்தம் கொதித்தது.

மகன் எப்போது வருவான் என்று காத்திருந்தார்.

அவன் வந்ததும்... கேள்வி கேட்டார்...

''யாரைக் கேட்டு கல்யாண மண்டபத்தோட மேனேஜருக்கு போன் பண்ணி... இந்தக் கல்யாணம் நடக்காதுன்னு சொன்னே...''

''அது தெரிஞ்ச விஷயம் தானே... அதான் சொன்னேன்'' அலட்சியமாய் பதில் சொன்னான் பிள்ளை.

''இதோ பார்... கண் மூடித்தனமா நீ நடந்துக்கறே... நீ அடிபட்டு கிடந்தபோது உன்னை ராப்பகலா கவனித்துக் கொண்டது வைஜயந்திதான்... ஓடிப்போனாளே... அந்த ரூபா இல்லை... அதை நினைவில் வைத்துக் கொள்...'' கோபமாகவே சொன்னார் ராமலிங்கம்.

''அதற்காக... வைஜயந்தியைக் கட்டிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லையே. இதோ பாருங்கப்பா... கல்யாணத்திற்கு அடிப்படையே அன்புதான்... நன்றியோ... விசுவாசமோ கிடையாது... அதைத் தெரிந்து கொள்ளுங்கள் முதலில்.'' பதிலுக்கு அவனும் சீற்றத்துடன் சொன்னான்.

''நீ என்ன சொன்னாலும் சரி... நீ நினைக்கிற மாதிரி எதுவும் நடக்காது. வைஜயந்தி தான் இந்த வீட்டின்



மருமகள்னு நான் என்றோ தீர்மானிச்சட்டேன். அதை இனி மாத்த முடியாது...''

''அது நடக்காது... எனக்கும் ரூபாவுக்கும் தான் கல்யாணம்... அதுவும் சீக்கிரமே நடக்கப் போகிறது. சொல்ல வேண்டாம் என்று நினைத்தேன்... சொல்லும்படி ஆகிவிட்டது. நாங்க ரெண்டு பேரும் ரிஜிஸ்டர் மேரேஜ் செய்து கொள்ளப் போகிறோம். விருப்பம் இருந்தால் வந்து வாழ்த்துங்கள். சட்டப்படி எனக்கு மனைவி என்றால் இந்த வீட்டுக்கு அவள் மருமகள் என்றுதான் அர்த்தம்... தெரிந்து கொள்ளுங்கள்...''

அவனுடைய வார்த்தைகளைக் கேட்டு ஆத்திரம் தலைக்கேறியது ராமலிங்கத்திற்கு...

''அடி செருப்பால... யார் மருமகள்... உன்னை உதறி விட்டுப் போனாளே அவளா... சொல்ல உனக்கு வெட்கமா இல்லை... அப்படி என்னை எதிர்த்து அவளைக் கட்டிக் கொண்டால்... இந்த வீட்டிற்குள் நுழையாதே... இங்கே உனக்கு இடமும் கிடையாது. நாங்க வேண்டுமா... இல்லே... அவ வேண்டுமா... யோசிச்சு முடிவு எடு... ஆமாம்...''

''இதென்ன... அபத்தமான கேள்வி... ஆயிரம் தடவை என்னைக் கேட்டாலும்... எனக்கு என் ரூபா தான் வேண்டும்... அவள் இல்லாமல் என்னால் வாழ முடியாது. என்ன... இந்த சொத்து... பணம் எதுவும் கிடையாது என்று சொல்வீர்கள்.. வேண்டாம்... நீங்களே வைத்துக் கொண்டு அழுங்கள். நான் போகிறேன்...'' என்று சொல்லிவிட்டு 'விர்'ரென்று சென்று விட்டான்.

''அயோக்கிய ராஸ்கல்... என்னிடமே...'' என்று கத்த ஆரம்பித்தவர்... இதயப் பகுதியில் 'மளுக்'கென்று வலி ஏற்பட... நெஞ்சை அமுக்கிக் கொண்டார்.

உடம்பெல்லாம் வியர்த்தது.

"அம்மா... வைஜயந்தி..." என்று கூவியவாறு கீழே சாய்ந்தார்...

அந்தக் குரல் கேட்டு ஓடிவந்த விமலாவும் வைஜயந்தியும்... கீழே விழுந்து... வலியினால் துடித்துக் கொண்டிருந்தவரைப் பார்த்ததும் பதறிப் போனார்கள்.

ஐ.ஸி.யூவில் சேர்க்கப்பட்டிருந்தார் ராமலிங்கம் நிலைமை சீரியஸ் தான் என்றார் டாக்டர்.

ஹார்ட் அட்டாக் என்று அறிந்ததும் பதைத்துப் போனார்கள் இருவரும்...

உடனே வினோத்திற்கு போன் பண்ணி விஷயத்தைச் சொன்னதும்... அவன் கேலிக்குரலில் சொன்னான்.

"அவருக்கு 'ஹார்ட்'டே இல்லையே... எப்படி அதற்கு 'அட்டாக்' வரும்... அந்தக் கல் மனிதர் சும்மா நாடகம் ஆடுகிறார்... அதை நீங்கள் வேண்டுமானாலும் நம்பலாம்... ஆனால் அதை நம்புவதற்கு நான் ஒன்றும் முட்டாள் இல்லை... இனிமே எனக்கு போன் செய்ய வேண்டாம். தெரிஞ்சுதா" என்றவன் தொடர்பை 'கட்' செய்து விட்டான்.

மாமாவின் உயிருக்கு ஆபத்து என்று டாக்டர் சொன்னதும் வைஜயந்தி 'ஓ'வென்று அழத் தொடங்கினாள்...

தனக்கு இருக்கும் ஒரே உறவு... மகளைப் போல நினைத்து அன்பு காட்டும் ஒரே உயிர்... அதுவும் ஊசலாடுகிறதே என்று நினைக்கையில் வேதனை தாளவில்லை...

விமலாவிற்கு துக்கம் தொண்டைக்குள் அடைத்தது... கல்யாணம் என்று மகிழ்ச்சியுடன் வந்தேனே... இப்படி



ஆகிவிட்டதே... என்ற சங்கடம் அவளை ஆட்டு வைத்தது.

அப்போது வினோத் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது— கல்யாணம் எதுவும் நடக்காது... கருமாதி வேண்டுமானாலும் நடக்கும்... இருந்து பார்த்துவிட்டுப் போங்கள் என்றானே... அது பலித்து விடுமோ என்று பதறினாள். அவன் நாக்கில் சனி புகுந்து அப்படி அவனைப் பேச வைத்ததோ... உள்ளம் நடுங்கியது. 'ஈசுவரா... அண்ணனுக்கு எதுவும் ஆகக்கூடாது. அவர் எழுந்து தெம்புடன் நடமாடும்படி செய்யப்பா...' என்று பிரார்த்தித்தாள்.

கொஞ்ச நேரம் கழித்து... ஒரு நர்ஸ் வந்து கேட்டாள். "இங்கே வைஜயந்திங்கறது யாரும்மா..." தயக்கத்துடன் முன் வந்தவளைப் பார்த்து... "உள்ளே வாங்க" என்றாள்.

பயத்தில் உடம்பெல்லாம் அதிர... உள்ளே சென்றாள் அவள்.

மாமா கிடந்த நிலை அவளை அச்சுறுத்தியது. ஏதேதோ இணைப்புகள்... மூக்கிலும்... மார்பிலும் ஆக்ஸிஜன் மாக்ஸ் வேறு... மாமா பிழைக்க மாட்டாரோ என்று பயம் வந்தது... அந்த பயத்தில் அழுகையும் பீறிட்டு வந்தது.

"மாமா... நான் வைஜயந்தி வந்திருக்கிறேன்..." என்றாள் அவள்... தொண்டையிலிருந்து வார்த்தைகள் வர மறுத்தன.

சிங்கம்போல கம்பீரத்துடன் வளைய வந்த மாமா... இப்படி அசையாமல் படுத்துக் கிடக்கிறாரே... வேதனை அவளை புழுவாய் அரித்தது.

அவளது குரலைக் கேட்டதுமே கண் விழித்தார் மாமா...

"மாமா..."

''அம்மாடி... நீ தைரியமா இருக்கணும்... பயப்படாதே. உனக்குக் குறையேதும்... வைக்கவில்லை... நான் உன்... நன்மைக்காக...'' ஆயாசத்துடன் நிறுத்தினார் அவர்.

''மாமா... எனக்கு பயமாக இருக்கிறது. உங்களை விட்டால் எனக்கு யாரும் இல்லையே மாமா... இனி நான் என்ன செய்வேன். தெரியலையே'' விம்மினாள்... வழியும் கண்ணீரைத் துடைக்கவும் அவளுக்குத் தெம்பில்லை.

''அசடு... என்ன பயம்... இனிமே தான்... உனக்கு துணிச்சல் வேண்டும்...'' என்றவர் அதற்கு மேல் பேச முடியாமல் கண்களை மூடிக் கொண்டார்.

நர்ஸ் அவளை வெளியில் செல்லும்படி சைகையில் சொன்னாள்.

விமலாவும்... வைஜயந்தியும் ஆஸ்பத்திரியில் பழி கிடந்தனர்... தூங்காமல்... சாப்பிடாமல்...

இரவு இரண்டு மணிக்கு ராமலிங்கத்திற்கு மறுபடியும் 'அட்டாக்' வந்துவிட... அந்த நிமிடத்தில் அவரது உயிர்ப் பறவை உடலை விட்டு பிரிந்தது...

அந்தச் செய்தியைக் கேட்டதும் வைஜயந்தி கதறியழுதாள். தன்மேல் பாசம் வைத்த ஜீவனும் போய் விட்டதே. இனி... நான் ஒரு அனாதை... அந்த எண்ணமே அவளைத் துடிக்க வைத்தது.

அந்த நேரத்தில் விமலா நான் இருக்கிறேன் என்பது போல அவளை அணைத்துக் கொண்டாள். அத்தையின் தோளில் சாய்ந்து கொண்டு சின்ன குழந்தையைப் போல் அழுதாள் வைஜயந்தி... எதிர்காலம் கரும் பூதமாய் நின்று அவளை பயமுறுத்தியது.

குடும்ப வக்கீல் அனைவரையும் ஒரு பார்வை பார்த்து விட்டு... குரலைக் கனைத்துக் கொண்டார். ''முதலில்...



இந்தக் குடும்பத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பிற்கு என் அனுதாபங்களைச் சொல்லிக் கொள்ள நான் விரும்புகிறேன்... ராமலிங்கம் என் 'கிளையண்ட்' மட்டும் இல்லை... எனது ஆப்த நண்பரும் கூட... அவருடைய இந்த திடீர் மறைவு எனக்கு அதிர்ச்சிதான். ஒரு நல்ல நண்பனை இழந்து விட்டேனே என்ற வேதனை எனக்கு... அது மட்டும் அல்ல... இந்த வீட்டில்... நிச்சயித்த கல்யாணம் நடக்கும் முன்னே, அவர் இறந்து போனது தான் துன்பமான விஷயம்.''

எதிரே அமர்ந்திருந்த வினோத்தின் முகம் கறுத்தது. பற்களை நறநறவென்று கடித்தான்.

வக்கீலின் வளவள பேச்சு அவனுக்கு எரிச்சலைத் தந்தது... எட்டிக்காயை சாப்பிட்டது போல கசப்பாய் இருந்தது. அவனின் பொறுமையை சோதித்தது. அது மட்டுமா... 'கல்யாணம்' என்ற வார்த்தையை கேட்கவும் சகிக்கவில்லை...

தந்தையின் மீது இருந்த கோபம் அவனுக்கு குறையவே இல்லை...

சே... இருந்தும் கெடுத்த மனுஷன்... இறந்தும் கெடுத்து விட்டாரே...

காரியங்கள் முடியும் வரை திருமணம் கூடாதாம் ரூபாவின் தந்தை சொல்லி விட்டதால்... திருமணமும் தள்ளிப் போனது... இல்லாவிட்டால்... இத்தனை நேரம் ரூபா என் மனைவியாகி இருப்பாள்... இருவரும் ஜோடிப் புறாவாய் தேனிலவில்...

''வினோத்... உன் கவனம் இங்கே இல்லை போல் தெரிகிறது... நான் உயிலை வாசிக்க ஆரம்பிச்சாச்சு. கேட்கிறாய் தானே... உன் தந்தை சுய சிந்தனையுடன்

சமீபத்தில் எழுதச் சொன்னது முதலில் சொத்தின் விபரம்... அதை வாசித்து விடுகிறேன்'' என்றவர்... குடும்ப சொத்தின் விவரங்களை எடுத்துரைத்தார். வீடு... நிலம்... கம்பெனி... பாங்க் பாலன்ஸ்.. நகைகள்.. ஷேர்ஸ் என்று பட்டியல் நீண்டது.

வைஜயந்தி பிரமித்துப் போனாள்... மாமா இத்தனை பணக்காரரா... ஆனால் எத்தனை எளிமையாக இருந்தார்... ஆடம்பரமில்லாமல் வாழ்ந்தாரே... எப்போதும்.. வெள்ளை வேட்டியும்... கதர் சட்டையும் தான். மாமாவின் மீது இருந்த மரியாதை இன்னும் கூடியது.

தொண்டையை கனைத்துக் கொண்டார் குடும்ப வக்கீல்...

ஏதோ முக்கியமான விஷயத்தை சொல்ல இருக்கிறார் என்று தெரிந்தது.

அது உண்மைதான் என்பதுபோல பேசினார் அவர்.

''சரி... இப்போது உயிலின் முக்கியமான விஷயத்திற்கு வருவோமா... அவருக்கு வினோத் பிள்ளை என்பதாலும்... மருமகள் வைஜயந்தி.. தன் மனைவி வத்சலாவின் ரத்த சம்பந்தம் என்பதாலும்... இருவர் மீது அக்கறை கொண்டு இந்த உயிலை எழுதியிருப்பதாய் குறிப்பிட்டிருக்கிறார். அவர் கூறியிருக்கும் 'சரத்' படி... வினோத்... வைஜயந்தியை மணக்க வேண்டும்...''

''நோ'' என்று அலறினான் வினோத்.

வைஜயந்திக்கும் அதிர்ச்சிதான்... அரண்டவளாய் விமலா அத்தையைப் பார்த்தாள்... 'அய்யோ... என்ன இது அத்தை' என்பதுபோல...

அத்தை அவளது கை அழுத்தினாள்... தைரியமூட்டுவது போல...



''கூல் டவுன்' வினோத்... உயிலை முழுவதுமாய் படித்து விடுகிறேன்... நடுவே 'டிஸ்டர்ப்' பண்ணுவது தப்பு...'' என்றவர் கழட்டிய கண்ணாடியை ஒரு தரம் துடைத்துவிட்டு... மீண்டும் மாட்டிக் கொண்டபின் தொடர்ந்தார்.

''இரண்டு வருடங்களுக்குள் அவர்களுக்கு வாரிசு இல்லாவிட்டால்... வினோத் தன் விருப்பப்படியே வேறு துணையைத் தேடிக் கொள்ளலாம். அவ்வாறு இருக்கும் பட்சத்தில்... இந்த வீடும்... கம்பெனியும்... மற்றும் பாங்க் பாலன்ஸ் அனைத்தும் மகனுக்கும்... மேலே சொன்ன நில சொத்தும்... நகைகளும்... என் மருமகளான வைஜயந்திக்குப் போய்ச் சேர வேண்டும்.''

''ரப்பிஷ்... இது நடக்கவே நடக்காது...'' என்று கத்தினான் வினோத்.

''அதையும் குறிப்பிட்டிருக்கிறார் உன் தந்தை... ஒரு வேளை... என் மகன்.. என் மருமகளான வைஜயந்தியை மணக்க ஒப்பாவிட்டால்... சொத்துக்கள் அனைத்தும் அனாதை ஆசிரமங்களுக்கு நன்கொடையாய் கொடுக்கப் பட வேண்டியது என்பதுதான்...''

''அந்த மனிதருக்கு கடைசி காலத்தில் புத்தி கெட்டு விட்டது போலத் தெரிகிறது... அதுதான் பெற்ற பிள்ளை என்றும் பார்க்காமல் மோசம் செய்திருக்கிறார்.''

''யாருக்கு வேண்டும் இந்த சொத்து... இதில் பைசாவும் எனக்கு தேவையில்லை... எல்லாவற்றையும் அவரது அருமை மருமகளே அனுபவிக்கட்டும்... என்னால் இதை விட அதிகம் சம்பாதிக்க முடியும்... நான் திரும்ப அமெரிக்காவிற்குப் போய் விடப் போகிறேன்... இந்த சொத்து எப்படிப் போனால் என்ன...'' எரிச்சலைக் காட்டிப் பேசினான் வினோத்...

''எனக்கு எதுவும்'' என்று ஆரம்பித்த வைஜயந்தியை அடக்கியவன்... அவள் மீது அனலாய் வார்த்தைகளை வீசினான்.

''பேசாதே... எதுவும் பேசாதே... இதெல்லாம் உன்னால் தான்... எங்கிருந்தோ வந்து... என் வாழ்க்கையை நரகமாக்கி விட்டாய்... உனக்கு அறிவில்லை. நான் படித்த படிப்புக்கும்... எனக்கிருந்த அந்தஸ்திற்கும் நீ எனக்கு பொருத்தம்தானா என்று யோசிக்க வேண்டாம்... ஒன்று சொல்கிறேன்... நன்றாக கேட்டுக் கொள். உன் மாமா உயிலில் எழுதி வைத்து விட்டார் என்பதற்காக நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்வேன் என்று மட்டும் கனவு காணாதே... எனக்கு இந்தச் சொத்தும் வேண்டாம்... நீயும் வேண்டவே வேண்டாம்...''

அதுவரை பொறுமையாய்... எதுவும் பேசாமல் இருந்த விமலா அத்தை... முதன் முதலாய் வாய் திறந்தாள்.

''என்ன பேச்சு இது வினோத்... இந்தப் பெண் என்ன செய்தாள் உனக்கு... உனக்கு இவள் நல்லதுதான் செய் திருக்கிறாள். அதை மறந்து விட்டு இவள் மீது நெருப்பாய் காய்கிறாயேப்பா... உன் அப்பாவோட ஆசை... நீங்க இரண்டு பேரும் ஒண்ணா இருக்கணும்... இந்த சொத்துக் கள் எல்லாம் பரம்பரை சொத்தாய் உன் வாரிசுக்கு போய்ச் சேரணும் என்பதுதான்... அது தப்பா... வைஜயந்தி யார்... உன் அம்மாவோட சொந்த உறவு... ரத்த சம்பந்தம்... அவளை இப்படி ஏளனமா பேசறது... உன் அம்மாவைக் கேவலப்படுத்தற மாதிரி தான்... தெரிந்து கொள்...''

''அதுக்காக... இவளுக்கு தாலிக் கட்டச் சொல்கிறீர்களா. இதோ பாருங்கள் அத்தை.. அம்மா மீது எனக்கும் மதிப்பு மரியாதை எல்லாம் இருக்கிறது... அது மாதிரி உங்கள்



மீதும் இருக்கிறது... ஏதேதோ பேசி... அதைக் கெடுத்துக் கொள்ள வேண்டாம்.. என் வாழ்க்கை என்னுடையது. என் விருப்பப்படிதான் முடிவு எடுக்க முடியும்... யாருக்காகவோ வாழ முடியாது... அதை முதலில் தெரிந்து கொள் ளுங்கள்.''

''சரி... இப்போ என்ன சொல்றே... இந்தக் கல்யாணம் வேண்டாம் என்றால்... அத்தனையும் அனாதை ஆசிரமத் திற்கு போயிடும்...''

''போய் தொலையட்டும்.''

''அதைவிட... இவள் கழுத்தில் தாலியைக் கட்டி விட்டு... இவளுக்கும் சொத்தைக் கொடுக்கலாம் இல் லையா... அப்புறம் உன் வழியில் போ... யார் வேண்டாம் என்கிறது... உன் பிடிவாதத்தினால் சொத்து யாருக்கும் இல்லாமல் போய்விடும்...''

''அதற்காக... என் வாழ்க்கையை நரகமாக்கிக் கொள்ள எனக்கு விருப்பம் இல்லை...'' என்றான் உறுதியான குரலில்...

''சரி... வக்கீல் சார்.. இனி வைஜயந்தி என் பொறுப்பு. அவளை நான் அழைத்துச் செல்கிறேன்... நீங்கள் செய்ய வேண்டியதைச் செய்யுங்கள்...'' என்று விமலா அத்தை சொன்னதும்... வைஜயந்தி அத்தையை வியப்புடன் பார்த்தாள்...

''நானா உங்களுடனா...'' என்று தயக்கத்துடன் கேட்க...

''அண்ணாவிற்கு சத்தியம் பண்ணியிருக்கிறேன் வைஜயந்தி... நீ பேசாமல் இரு...'' என்றாள் அத்தை...

பெருமூச்சு விட்டாள் வைஜயந்தி... என் வாழ்க்கை என் கையில் இல்லை... விதி வழியே செல்கிறது... யாரையும்

நொந்து கொள்ள முடியாது... எல்லாம் என் தலையெழுத்து... எங்கு போனாலும் சிக்கல்... பிரச்சனை... கை மாறிப் போகும் பண்டம் மாதிரி சுற்றிச் சுற்றி வரும் நிலைமை... சே... உள்ளத்தின் பலவீனமோ என்னவோ... அழுகை வெடித்தது.

"என்னவோ செய்து கொள்ளுங்கள்" என்று உதறி விட்டு வெளியேறினான் வினோத்.

வக்கீலும் சென்று விட்டார்.

சுவற்றில் படமாகி விட்ட மாமாவைப் பார்த்தபோது கண்களில் புதுப்புனலாய் வெள்ளம் பெருகியது.

படத்திற்கு போட்ட மாலையும்... ஏற்றி வைத்த தீபமும் அவர் தெய்வமாகி விட்டதை உணர்த்தின.

மனதில் பாரம் அழுத்த... அந்த தெய்வத்திடம் புலம்பினாள் அவள்.

"மாமா... ஏன் இப்படி செய்தீர்கள்... எனக்கு நல்லது செய்வதாய் நினைத்து... வினோத்தின் தீராத கோபத்திற்கு என்னை ஆளாக்கி விட்டீர்களே... நீங்கள் செய்து விட்டுப் போன இந்த ஏற்பாடு... என் நல்லதற்கா... இல்லை கெட்டதற்கா என்று தெரியவில்லையே மாமா..."

பின்பு கண்களைத் துடைத்துக் கொண்டு... மானசீகமாய் வேண்டினாள் அவள்.

"அனாதையான எனக்கு நீங்கள் தான் எப்போதும் துணையா இருக்கணும். இந்த வீட்டை விட்டுப் போகிறேன் மாமா... உங்கள் நினைவை மட்டும் சுமந்து கொண்டு... நீங்கள் என் மீது காட்டிய பாசத்தையும்... பரிவையும்



மறுநாள் திருச்சிக்கு கிளம்ப வேண்டும் என்று விமலா அத்தை சொல்லிவிட்ட படியால்... அதற்கு தயார் பண்ண வேண்டி இருந்தது.

வீட்டை அப்படியே போட்டுவிட்டு கிளம்பவும் மனம் வரவில்லை... மாமா வாழ்ந்த வீடு... அவர் இருந்த கோவில் கொஞ்ச நாளாய் என் வீடாய் நிலைத்த இடம்...

வீட்டை ஒழுங்கு படுத்திவிட்டு... சாவியை கொடுத்து விட்டு புறப்பட்டால் சமாதானம்... விலையுயர்ந்த பொருள்களை பத்திரப்படுத்த வேண்டுமே... தொலைந்து போனால் என் மீது பழி வரும்... அதையும் செய்வார் வினோத்... தன் உடைமைகளையெல்லாம் எடுத்து வைத்தவள் ஏனோ தவிப்பு... அது ஏன் என்றுதான் அவளுக்குத் தெரியவில்லை.

## 12

தாய் வீட்டிலிருந்து கிளம்பும்போதுகூட வைஜயந்திக்கு இத்தனை தவிப்பு இல்லை... தாயை இழந்த வேதனையும்... புது இடமாயிற்றே என்ற மருட்சியும் இருந்ததே தவிர... எதையோ இழந்து விட்ட சோகமும் அதனால் ஏற்பட்ட தவிப்பும் சத்தியமாய் இல்லை. இப்பவும்... எதிர்காலம் எதையெல்லாம் வைத்துக் கொண்டு காத்திருக்கிறதோ என்ற எண்ணம் அயர்வைத் தந்தாலும்... அதையும் மீறி ஏதோ அரிப்பு இருந்து கொண்டே இருந்தது. அது எதனால் என்று தெரியவில்லை.

மாமாவின் அன்பை இனி பார்க்க முடியாதே... 'அம்மாடி' 'அம்மாடி' என்று அழைப்பாரே... இப்போது அந்தப் பாசத்தை இழந்து நிற்கிறோமே என்ற துக்கமா...

இனி... இதுதான் என் வீடு... என் கோவில் என்று இந்த வீட்டின் ஒவ்வொரு அங்குலத்தையும் நேசித்து... அனுபவித்துப் பார்த்தோமே... இதை விட்டுப் போகும்படி ஆனதே என்ற துயரமா...

இல்லை... இதயத்தை வினோத்திடம் தொலைத்து விட்டு... அவனது கோபத்தை சம்பாதித்துக் கொள்ளும்படி ஆனதே என்ற வேதனையா... இனம் காண முடியாத தவிப்பு அது...

ஆனால்... ஒரு கூரையின் கீழ் இருந்தால் வினோத்தின் பாராமுகமும்... உதாசீனமும் மூச்சு முட்டச் செய்யும். அதைவிட எங்கேயாவது தொலைதூரம் போய் விடுவதே மேல் என்றும் தோன்றியது.

அந்த முடிவில் அவள் அங்கிருந்து புறப்படத் தயாரானாள்...

இரவு வெகு நேரம் கழித்து வந்தான் வினோத். கண்களில் தெரிந்த சிவப்பும்... முகத்தில் இருந்த இறுக்கமும் அவன் இன்னும் அதே மன நிலையில் தான் இருக்கிறான் என்பதை உணர்த்தின.

அவனுக்குள்ளும் ஒரு போராட்டம்.

தலைக்குள் ஆயிரம் வண்டுகள் சேர்ந்து குடைவது போல அவஸ்தை.

புதிதாய் முளைத்திருக்கும் பிரச்சனைக்கு தீர்வு காண முடியாமல் அவதிப்பட்டான்.

தந்தையின் உயிலைப்பற்றி அறிந்து கொண்டதும்... அவன் ஆத்திரத்துடன் ஓடியது காதலியைத் தேடித்தான்.

ஆரம்பத்தில் அவள் மீது இருந்த கோபமும்... வெறுப்பும்... என்றோ தீர்த்துப் போய் விட்டது... அப்படி செய்து விட்டார்கள் தந்தையும்... மகளும்...



அவர்கள் இருவரும் தங்களது சாமர்த்தியப் பேச்சினால் அவனைப் பனிக்கட்டியாய் குளிர வைத்து விட்டனர். அவன் மீது தனக்கு இருக்கும் காதல் இன்னும் அழியவே இல்லை என்றாள்... அது என்றும் மாறாது... அந்தக் காதல் அமரக் காதல் என்றெல்லாம் ஜாலமாய் பேசி... அவனில்லாமல் வாழவே முடியாது என்று சத்தியம் செய்தாள்.

அவளது தந்தையும் தன் பங்கிற்குக் குறைவில்லாமல் வசனம் பேசினார்...

ரூபா மீது எந்தத் தப்பும் இல்லை... தன் கட்டாயத்தின் பேரில் தான் அவனைப் பார்க்க வரவில்லை என்றும்... உண்மையில் அவள் அவனை விட்டு விலகி இருந்தாலும்... மனம் அவனை மறக்க முடியாமல் அவனையே நினைத்துத் துடித்ததாகவும்... ஏதேதோ 'ரீல்' விட்டார்.

இனி எழுந்து நடக்கவே மாட்டான் என்று நினைத்து தவறாகி... அவன் முன்னைவிட ஆரோக்கியமாய்... வலிமையாய் ஆனதை அறிந்து தன் பிகுமானத்தை விட்டுவிட்டார் அந்த மனிதர்...

அவரும்தான் எத்தனையோ வரன்களை அலசினார். ஒருவரும் தேறவில்லை. நல்ல மாப்பிள்ளை அமைவது எத்தனை கஷ்டம் என்பதை அந்தத் தேடுதல் வேட்டையின் போது தெரிந்து கொண்டார்.

பணம் இருந்தால் அழகில்லை... அழகிருந்தால் படிப்பு இல்லை... படிப்பும் பணமும் இருந்தால்... குழுத்து நிற்கவில்லை... அவருக்கு தலைச் சுற்றியது. அந்த நிலையில் தான்... வினோத்... நன்கு குணமாகி பழையபடி ஆகிவிட்டான் என்று தெரிய வந்தது. வினோத்தை விட மனமில்லாமல்... அவனை வளைத்துப் போட விரும்பினார்... அவனுக்கு இருக்கும் சொத்தின் மதிப்பு... அவரைக்

கிறங்கி வரச் செய்தது. பல தலை முறைக்கும் தாங்குமே அந்தப் பணம்...

தன் இறுதி அஸ்திரமாய்... அவன் காலில் விழவும் தயார் என்றார்...

கேட்க வேண்டுமா... வளைந்து விட்டான் வினோத். கொல்லனது பட்டறையில்... கெட்டியான இரும்பை அனலில் காட்டி இளகச் செய்து... அதை அடித்து அடித்து வடிவம் செய்வது போல... விறைத்து நின்றவனை... ஆசை வார்த்தைகளால் தளரச் செய்து... தம் வழிக்குக் கொண்டு வந்து விட்டனர் தந்தையும்... மகளும்...

அதில் ஐஸாகக் கரைந்து போனான் வினோத்.

அப்புறம் சொல்ல வேண்டுமா... உறங்கிக் கொண்டிருந்த காதல் உணர்வு முழித்துக் கொண்டது.

அந்தக் காதல் கண்களை மறைத்து... அவனது அறிவையும் மழுங்கச் செய்தது.

இப்போது காதலிதான் முக்கியம்... வேறு ஒருவரும் தேவையில்லை என்ற நிலையில் இருந்தான்.

ஆரம்பத்திலிருந்து அவனுக்கு தந்தையிடம் அவ்வளவாக ஒட்டுதல் இல்லை... இப்போது காதலுக்கு எதிரி என்ற எண்ணமும் சேர்ந்து கொள்ள... அவரிடம் வெறுப்பு இன்னும் வளர்ந்தது. அதனால்தான் அவரது மரணமும் அவனை அவ்வளவாக பாதிக்கவில்லை...

அந்த உயில் விஷயம் வேறு அவனை கொதிக்க வைத்தது...

வேண்டும் என்றே அப்படி எழுதியிருக்கிறார் அந்த மனிதர்... அவர் நினைத்தது நிச்சயம் நடக்காது... அப்படித் தான் ரூபாவிடம் ஆணித்தரமாய் சொன்னான்.



உயில் விஷயத்தை அறிந்து இருவரும் ஆடிப் போனார்கள்.

இதென்ன கொடுமை... வைஜயந்தியை மணந்தால் சொத்தா... இல்லாவிட்டால் அனாதை ஆசிரமத்திற்காமே... அந்த மனிதனுக்கு என்ன பைத்தியம் பிடித்து விட்டதா...

இருவருக்கும் அடிவயிற்றில் சுரீர் என்று நெருப்பு பற்றிக் கொண்டது போல இருந்தது. அத்தனை சொத்தும் கைவிட்டுப் போக வேண்டுமா... என்ன அஞ்சா... பத்தா... போகட்டும் என்று விடுவதற்கு. கோடிக்கணக்கான சொத்தாச்சே... வீடே பன்னிரண்டு கோடிக்கு மேல் போகுமே... அந்த 'லோகாலிட்டி' வி.ஐ.பி.க்கள் வாசம் செய்யும் பகுதி ஆச்சே...

சே... செத்துப் போன கிழவனுக்கு இப்படியா புத்தி கோணலாகணும்... கிறுக்குத் தனமா எழுதி வச்சுட்டுப் போயிருக்கிறாரே அந்த மனுஷன்...

இவரும் பைசா வேண்டாம் என்கிறார்... பணத்தின் மதிப்பு தெரியாமல்... உள்ளுக்குள் பொருமினாள் ரூபா... அவளது தந்தையைப் பற்றியோ சொல்லவும் வேண்டாம். அந்தக் கிழவன் நரி மாதிரி தந்திரமாய் காரியம் பண்ணியிருக்கிறார்... அதை தந்திரத்தால் தான் ஜெயிக்க வேண்டும்... முள்ளை முள்ளால் எடுப்பது மாதிரி? வினோத்தின் மாப்பிள்ளை தகுதிக்கு அவனிடம் இருக்கும் செல்வம் தான் முக்கியக் காரணம் என்று நினைத்தோமே... அதுவும் இல்லை என்று ஆனால்... அய்யோ... அப்படி விட முடியாது... போராடி ஜெயிக்க வேண்டும்... என்று திட்டமிட்டுக் கொண்டிருந்தார்.

இருவரின் எண்ண வோட்டத்தை அறியாமல்... வினோத் தன் உத்தேசம் என்ன என்பதை சொல்லிக் கொண்டிருந்தான் பாவம்...

"எல்லாவற்றையும் உதறித் தள்ளி விட்டு வந்து விட்டேன் ரூபா... இனி... நீயும் நானும் மணந்து கொள் வதற்கு எந்தத் தடையும் இல்லை" என்று உற்சாகமாய் சொன்னான்.

தந்தையும் மகளும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

ரூபாவின் தந்தையின் வார்த்தைகளில் கொஞ்சம் காரம் தெரிந்தது.

"நீங்க சொல்றது எனக்குச் சரியாகப் படவில்லை வினோத்... ஏதாவது ஒரு வழியில் உங்கள் சொத்துக்களை தக்க வைக்க முடியுமா என்று யோசிக்காமல்... இது என்ன அசட்டுப் பேச்சு... என் மாப்பிள்ளை பெரிய தொழி லதிபர்... பெரிய சீமான் வீட்டு செல்லப் பிள்ளைன்னு பெருமையா எல்லோரிடமும் சொல்லிக் கொண்டிருக் கிறேன். அது தெரியாமல்.. சொத்து வேண்டாம் என்றால் எப்படி... ஒவ்வொருத்தரும் ஆயிரம்... லட்சத்துக்கெல் லாம் சிண்டு பிடித்துக் கொண்டு... சண்டைப் போட்டு வாங்குகிறார்கள். சுண்டைக்காய் பணத்திற்கெல்லாம் தகிடு தத்தம் பண்ணி தனதாக்கிக் கொள்கிறார்கள்... நீங்க என்னவென்றால் கோடிக் கணக்கானதை வேண்டாம் என்கிறீர்களே... ஒன்றா... இரண்டா... பல கோடிச் சொத்து மாப்பிள்ளை... உட்கார்ந்து தின்னாலும் தலைமுறை தலைமுறையா வரும்... உங்க வீடு ஒண்ணே போதுமே... அரண்மனை மாதிரி இருக்கு... அதை விட உங்களுக்கு எப்படி மனசு வந்தது... வினோத்."



"என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்... மாமா... என்னிடம் சொத்து வேண்டுமா... ரூபா வேண்டுமா என்று கேட்டால்... என் ரூபாதான் வேண்டும் என்பேன். உலகில் அவளை விட முக்கியமாய் எனக்கு எதுவும் படவில்லை... ரூபாவை இழந்து... அந்த சொத்தைப் பெற வேண்டும் என்றால் அது வேண்டவே வேண்டாம்..." பட்டவர்த்தனமாய் சொன்னான் வினோத்...

"இதைக் கேட்கும் போது எனக்கும் சந்தோஷமாகத் தான் இருக்கிறது... மாப்பிள்ளை... ஆனால் வாழ்க்கைக்கு பணமும் அவசியமில்லையா... என் பொண்ணை இளவரசி மாதிரி வளர்த்திருக்கிறேன்... அவள் ஒரு பணக்கார வீட்டில் வாழ்க்கைப்பட்டு... சொகுசா வாழணும் என்கிறதுதான் என் ஆசை... நான் ஆசைப்பட்ட மாதிரியே உங்களுக்கு சொத்து பத்து இருக்கிறதைப் பார்த்து விட்டுத்தான் உங்க கல்யாணத்திற்கு சம்மதித்ததே... பொண்ணு வசதியா வாழணும்னு தானே எந்தத் தகப்பனும் ஆசைப்படுவான்... இப்போ சொத்தும் வேண்டாம்... ஒரு மண்ணாங்கட்டியும் வேண்டாம் என்றால் எப்படி... அன்னக்காவடியா இருந்து என் பொண்ணை கஷ்டப் படுத்தப் போறீங்களா... சொல்லுங்க..."

"என் மீது நம்பிக்கை யில்லாமப் பேசுகிறீங்களே மாமா... என் படிப்புக்கும் திறமைக்கும்... என்னால் லட்ச லட்சமாய் சம்பாதிக்க முடியும்... உங்கள் மகளை இளவரசி என்ன... மகாராணி மாதிரி வைத்துக் கொள்வேன்... என்னை நம்புங்கள்..."

"சரி... அந்த படிப்பு கூட உங்கப்பாவோட பணத்தில் தானே... அதை உங்களால் உதற முடியுமா... அதே மாதிரிதான் உங்கப்பாவோட சொத்தும் என்று உரிமையா எடுத்துக் கொள்ளுங்களேன்... வினோத்..."

''அதெப்படி முடியும்... அப்பா குறிப்பிட்டிருக்கும் நிபந்தனை பற்றித்தான் நான் சொன்னேனே. அது தெரிந்துமா இப்படிச் சொல்கிறீர்கள்.''

''தெரிந்து தான் பேசறேன் வினோத்... உயில்படி நீயும் அந்தப் பெண்ணும் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்... இரண்டு வருடங்களில் வாரிசு இல்லாமல் போனால்... நீங்க உங்க விருப்பப்படி வேறு திருமணம் செய்து கொள்ளலாம் என்று இருக்கிறது... இது போதுமே...'' என்றார் ரூபாவின் தந்தை.

''சொல்றதை கொஞ்சம் புரிகிற மாதிரி சொல்லுங்கப்பா...'' என்றாள் அவரது செல்ல மகள்.

''சொல்கிறேன்... அவனவன் சொத்துக்காக கொலை செய்கிறார்கள்... குழி பறிக்கிறார்கள்... நான் உங்களை கல்யாணம் பண்ணிக்கத்தான் சொல்கிறேன்... என்ன பார்க்கிறீர்கள் வினோத்... என்னடா. மகளைக் கொடுக்கும் தந்தை பேசற பேச்சா இது என்றா... மகள் மேல் இருக்கும் அக்கறையால் பேசுகிறேன் மாப்பிள்ளை... ஏன்னா... உங்க சொத்தின் மதிப்பு அப்படி... ஈஸியா விட்டுவிட மனம் வரவில்லை... நாம் புத்திசாலியா செயல்பட்டா... சொத்து முழுசையும் தக்க வைத்துக் கொள்ளலாம்... உங்கப்பா ஒரு அணுகுண்டை வைத்துவிட்டுப் போயிருக்கிறார் இல்லையா... அதை புஸ்வாணமாக்கிக் காட்டுவோம்...''

''அய்யோ அப்பா... நேரா விஷயத்துக்கு வாங்க... எனக்குப் பொறுமை இல்லை...'' என்று சொன்னாள் ரூபா...

''சரி... விஷயத்தை விளக்கமா சொல்றேன். முதல்ல நீங்க இந்த கல்யாணத்துக்கு ஒப்புக் கொள்ளணும். நான் சொல்றதைக் கேட்டுவிட்டு அப்புறம் பேசுங்க வினோத்...



அந்தப் பொண்ணுகிட்டே இது பெயருக்குத்தான் கல்யாணம்... உங்களுக்குள் எந்த வித பந்தமும் இல்லைன்னு ஆரம்பத்திலேயே கறாராய் சொல்லிவிடுங்கள். இரண்டு வருடம்தானே... இரண்டே மாசம் மாதிரி 'விர்'ருன்னு ஓடிடும்... அது வரைக்கும் பொறுத்துப் போங்க... அப்புறம்... வாரிசு இல்லைன்னு பிரிஞ்சுட்டா போச்சு... உங்கப்பாவே வழி சொல்லி வைத்திருக்கிறார்... பிறகு என்ன... அந்தப் பொண்ணு வாயில்லாப் பூச்சியா தெரிகிறா... கிடைத்ததை வாங்கிக் கொண்டு போயிடுவா... ஆனால்... அவள் போவதற்கு முன்னால்... மறக்காம அவள் பெயரில் இருக்கும் சொத்துக்களை உங்க பெயருக்கு மாத்திக்கணும்... இப்போ... சொத்தெல்லாம் உங்க கையில்... ரூபாவும் உங்களுக்கு கிடைப்பாள்.. தவிர... அப்பா சொல்லை மீறாத பிள்ளைங்கற பெயரும் கிடைக்கும்... எப்படி என் 'ப்ளான்' சாணக்கியத்தனமா இருக்கு இல்லை...'' முகம் சுளித்தான் வினோத்...

''கேட்கவே சகிக்கவில்லை மாமா... நீங்க என்ன... வெகு சுலபமா சொல்லி விடுவீர்கள்... அவஸ்தை எனக்குத்தானே... வைஜயந்தியுடன் இரண்டு வருடங்களா... அய்யோ... அது சிறைத் தண்டனை மாதிரி தெரிகிறதே... உங்கப் பொண்ணுக்கும் நீங்க சொன்ன 'பிளான்' பிடிக்காது... அவளும் வேண்டவே வேண்டாம் என்று சொல்வாள்... இல்லையா ரூபா'' என்று காதலியை துணைக்கு அழைத்தான் அவன்.

''ஊகூம்... டாடி சொல்வதிலும் அர்த்தம் இருக்கிறது போல் படுகிறது வினோத்... அந்த சொத்து நம் கைவிட்டுப் போகக்கூடாது என்பதில் டாடி மும்முரமாக இருக்கிறார். எனக்கும் அது சரிதான் என்று தோன்றுகிறது'' என்றாள் அவள்.

"ஓகோ... அப்போ... சொத்துதான் முக்கியம் என்கிறாய் இல்லையா ரூபா..." கோபத்துடன் வினவினான் அவன்.

"அய்யோ... அப்படி இல்லை வினோத். அது உங்க சொத்து... நம் பிள்ளைகளுக்குப் போக வேண்டிய சொத்து. அதுக்காக எதுவும் செய்யலாம்... அதைப் புரிஞ்சுக்குங்க வினோத். எனக்கு எதுவும் வேண்டாம்... இதெல்லாம் எனக்கு துச்சம் தான்... உங்க அப்பா அம்மா வாழ்ந்த இடமாச்சே. அந்த வீட்டில் நம் பிள்ளைகள் வளரணும்னு ஆசைப்பட்டேன். அது தப்பா வினோத்..." சமயோசிதமாய் பேசிய மகளை மெச்சும் விதமாய் பார்த்தார் தந்தை... 'சபாஷ் மகளே' என்று பார்வை சொன்னது.

"இதோ பாருங்கள் வினு... நமக்கு நம் சொத்து வேண்டும்... அப்பா சொல்வது போல... அதுக்காக நாம் எதையும் செய்யலாம்... நாம் என்ன கொலையா செய்யப் போகிறோம். இல்லையே... அனாதை ஆசிரமத்திற்கு சொத்து போக விடாமல் நிறுத்தணும்... அதற்காக ஒரு போலித் திருமணம்... அதனால் அவளுக்கும் லாபம் தானே வினோத்... ஏன் தயங்கறீங்க..."

வினோத்திற்கு தலையை வலித்தது... யோசித்து... யோசித்து மண்டை காய்ந்து... மூளை வரண்டு போனதோ என்று நினைத்தான்.

வைஜயந்தியோட வாழ்க்கை... அது இரண்டு வருடங்கள். நினைக்கவே நெஞ்சம் பதறியது...

அதைவிட சிறைத் தண்டனையே மேல்...

ஆனால் இவர்கள்...

"ப்ளீஸ்.. வினோத்... நமக்காக... நம் வாரிசுகளின் எதிர்காலத்திற்காகவாவது 'சரி' என்று சொல்லுங்களேன்" கெஞ்சினாள் ரூபா.



அவளை உற்றுப் பார்த்தான் அவன்.

"இதில் உனக்கு வருத்தம் எதுமில்லையா ரூபா..." என்றான் வருத்தத்துடன்.

"சத்தியமாக இல்லை... நீங்கள் நிகழ்காலத்தை நினைக்கிறீர்கள் வினோத்... நான் எதிர்காலத்தைப் பற்றி யோசிச்சு இந்த முடிவுக்கு வந்திருக்கிறேன். ஆனால் ஒன்று... இது பெயருக்குத்தான் கல்யாணம். தனிமையில் அவள் யாரோ... நீங்க யாரோ புரிந்ததா வினு சார்... உங்க சுண்டு விரல் கூட அவள் மீது படக்கூடாது... இரண்டு வருடங்கள் அப்படி இருக்கணும்... எனக்கு சத்தியம் செய்து கொடுங்கள்" என்று ரூபா கையை நீட்டினாள்...

"என் மீது நம்பிக்கையில்லையா ரூபா... இரண்டு வருடங்கள்... கல்யாணம் ஆகியும் பிரம்மச்சாரியாய் இருப்பேன்... என் சுண்டு விரலின் நகம் கூட அவள் மீது படாது போதுமா..." கசப்புடன் சொன்னான் அவன். ரூபா திருப்தியுடன் சிரித்தாள். நினைத்ததை நிறைவேற்றி விட்ட சந்தோஷம் அவள் முகத்தில் தெரிந்தது...

அதை கவனிக்கும் மனநிலையில் அவன் இல்லையே... அவன் நடக்கவிருக்கும் கல்யாணத்தை நினைத்து அப்போதே கலங்க ஆரம்பித்து விட்டான்...

தன் அறையிலும் அதையே எண்ணி மறுகினான்.

ரூபா இருக்க வேண்டிய இடத்தில் வைஜயந்தி. அவனால் அதை சகித்துக் கொள்ள முடியவில்லை.

இந்த விஷயத்தில் ரூபாவின் தந்தை பிடிவாதமாய் இருக்கிறார் என்றால்... ரூபா கூட ஒத்து ஊதுகிறாளே...

அவருக்கு 'ஸ்டேட்டஸ்' முக்கியம்... அவளுக்கு பரம்பரைச் சொத்து முக்கியம்...

இடையில் அவதிப்படும் ஜென்மம் அவன்தான்.

உள்ளுக்குள் புழுங்கி தவித்தான் வினோத்... சரியான தூக்கம் இல்லாததோ என்னவோ... மறுநாள் காலையில் கண்களில் எரிச்சலும்... தலையில் நண்டின் குடைச்சலுமாய் இருந்தது.

படுக்கையில் கரங்களால் தலையைத் தாங்கியவாறு அமர்ந்திருந்தவன்... அத்தையின் குரல் கேட்டு நிமிர்ந்து பார்த்தான்.

தன் கையில் இருந்த சாவியை அவன் முன் வைத்து விட்டுச் சொன்னாள் அத்தை.

''சாவியை எடுத்துக் கொள் வினோத்... எல்லா 'காஸ்ட்லி' சாமான்களையும் பீரோக்களில் வைத்தாச்சு... வைஜயந்தி... தன் நகைகளைக் கழட்டி சேஃப்டி லாக்கரில் வச்சுட்டாள். வேணும்னா நீயும் ஒரு தடவை 'செக்' பண்ணிக்கோ. நாங்கள் ஊருக்குப் புறப்படுகிறோம்...''

வினோத் அத்தையை திகைப்புடன் பார்த்தான். புறப்பட்டு விட்டார்களா.

விஷயத்தைச் சொல்லு முன்னாலே பெட்டிப் படுக்கையுடன் தயாராகி விட்டார்களா.

இவர்களை எப்படி நிறுத்துவது... விஷயம் வாயிலிருந்து வரமறுக்கிறதே... எப்படிச் சொல்வது.

தடுமாறும் நேரத்தில் அத்தை வெளியேறி விட்டாள். பரபரப்புடன் எழுந்து விரைந்தான்.

பெட்டியுடன் தயாராக இருந்தார்கள் விமலா அத்தையும் வைஜயந்தியும்.

''அத்தை'' என்று அழைத்தான்... தொண்டையில் கட்டி வந்து விட்டது கரகரப்பு...



''என்னப்பா... ஏதாவது சொல்லணுமா... எங்களை வழியனுப்ப வரவேண்டிய அவசியமில்லை... நாங்கள் டாக்ஸி பிடித்துக் கொண்டு போய் விடுகிறோம்...'' என்றாள் விமலா... கொஞ்சம் பிகுவாய்...

''அதில்லை அத்தை... வந்து...''

''சீக்கிரம் சொல்லுப்பா... நேரத்துடன் போயாக வேண்டும்... இல்லை... வண்டி தவறிவிடும்...''

''வைஜயந்தியை மணந்து கொள்ள சம்மதம் என்று சொல்ல வந்தேன்... நீங்கள் போக வேண்டாம்.'' ஒரு வழியாய் விஷயத்தைச் சொல்லியாயிற்று. கழுத்தில் சுருக்கு விழ நாள்தான் பார்க்க வேண்டும். உள்ளம் அறுந்த பல்லி வாலாய் துடித்தது.

''உண்மையாகவா வினோத்...'' என்று கேட்ட அத்தை அவனைக் கூர்ந்து பார்த்தாள். எதற்காக இந்த மாற்றம்... ஏன் இந்த திடீர் மாற்றம்.

தனிமையில்... நிதானமாய் யோசித்திருப்பானோ... இருக்கும்.

அப்பா மீதிருந்த கோபம் மறைந்ததும்.. புத்தி தெளிந்திருக்கும்... இருக்கும் போதுதான் எதிர்த்தோம். அவர் போன பின்பாவது அவர் விருப்பப்படியே நடந்து கொள்வோம் என்று தோன்றியிருக்கும் போல... எப்படியோ... வைஜயந்தி பிழைத்தாள். அண்ணாவின் ஆத்மாவுக்கும் சாந்தி கிடைக்கும்.

நிம்மதியுடன் சொன்னாள் விமலா...

''சந்தோஷம் வினோத். இதைக் கேட்க உன் அப்பா இல்லையேன்னு இருக்கு... சரி.. அய்யரிடம் கேட்டு விட்டு நாள் குறித்திடலாம்...''

அதை முகத்தில் சலனமில்லாமல் கேட்டுக் கொண்டான் வினோத். உள்ளத்திலோ சுனாமியின் கொந்தளிப்பு!

அவனது பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த வைஜயந்திக்கு அவன் சொன்னது மகிழ்ச்சியைத் தரவில்லை... அதிர்ச்சியைக் கொடுத்தது.

அவனது இந்த 'அந்தர் பல்டி' அவளுக்கு நெருடலைத் தந்தது.

நேற்று சொத்தும் வேண்டாம் ஒரு மண்ணும் வேண்டாம் என்று உதறிவிட்டு சென்றவருக்கு திடீர் மாற்றம் எப்படி வந்தது... அத்தனை எகிறிக் குதித்தவருக்கு திடீர் ஞானோதயமா... இப்போது எதுவுமே நடக்காதது போலல்லவா சம்மதம் என்கிறார்... ஏதோ காரணம் இருக்கிறது... அது என்ன என்று அவளால் ஊகிக்க முடியவில்லை.

ஆனால் ஒன்று மட்டும் உள் மனதில் பட்டது...

ஏதோ சரியில்லை என்பதுதான்.

அது என்ன... அதுதான் அவளுக்குப் புதிராய் இருந்தது.

## 13

வாழ்க்கை தான் என்ன விசித்திரம். நடக்கும் என்பதெல்லாம் நடப்பது இல்லை... நடக்காது என்று நினைப்பதெல்லாம் நடந்து விடுகிறது.

வைஜயந்திக்கு பிரமிப்பு இன்னும் தீரவில்லை.

அவள் வினோத் மனைவி! திருமதி வினோத்! கனவில் நடப்பது மாதிரி கல்யாணம் நடந்து விட்டது. வெகு எளிமையாய்... எந்த தடபுடலும் இன்றி... பதிவுத் திருமணம்!



ரிஜிஸ்டர் ஆபீஸில்... பதிவேட்டில் கையெழுத்து இடும்போது அவன் முகம் 'உம்'மென்று இருந்ததை இப்போது நினைத்தாலும் உள்ளம் சில்லிட்டது.

அவளுக்குக் குழப்பம் தீர்ந்தபாடில்லை.

அவனுக்கு தன் மீது அவ்வளவு வெறுப்பு இருக்கையில்... ஏன் இந்தத் திருமணத்திற்கு ஒப்புக் கொள்ள வேண்டும்.

அந்த ரூபாவையே கட்டிக் கொண்டு சந்தோஷமாய் குடித்தனம் நடத்தலாமே... இத்தனைக் கசப்புடன் தாலிக்கட்ட வேண்டிய அவசியம் என்ன...

எல்லாமே பதில் தெரியாத கேள்விகள் தான்... கல்யாணம் முடிந்த கையோடு அத்தை புறப்பட்டு விட்டாள்.

அந்தப் பெரிய வீட்டில் வினோத்துடன் தனியாகவா... நினைக்கும்போதே நெஞ்சில் நடுக்கம் தோன்றியது.

''வருகிறேன்ம்மா.. வைஜயந்தி... அவன்கிட்டே பார்த்து நடந்துக்கோ... அவனுக்கு இன்னும் கோபம் தீரவில்லை... கூடியவரை ஒதுங்கியே இரு... வீணாய் பேச்சுக் கொடுத்து மாட்டிக் கொள்ளாதேம்மா... அவனா பேசினா பதில் கொடு... எத்தனை நாள் இப்படி துர்வாசரா இருப்பான்னு பார்க்கலாம். அப்பப்போ நானும் உனக்கு போன் பண்ணி விசாரிக்கிறேன். சரிதானே...'' புறப்படும் போது அறிவுரையாக சொன்னாள் அத்தை.

இத்தனை நாள் தாய் மாதிரி அரவணைத்து ஆதரித்த அத்தையின் பிரிவைத் தாளும் சக்தியின்றி அவளது தோளில் முகம் புதைத்து விம்மினாள் அவள்.

''அழக் கூடாதும்மா... வைஜயந்தி... தைரியமா இருக்கணும். எதுக்கும் பயப்படாதே... எல்லாம் சரியாகிவிடும்...

பார்... எங்கே... கண்களைத் துடைத்துக் கொள்..." பரிவுடன் சொன்னாள் விமலா அத்தை.

"அத்தை... எனக்கு பயமாக இருக்கு... அவரைப் பார்த்தாலே எனக்கு கிலியாக இருக்கு... அடிப்பட்ட சிறுத்தை மாதிரி உறுமிக் கொண்டிருக்கிறார்... நீங்க போனதும் என்மீது எரிச்சலைக் காட்டப் போவது உறுதி. இன்னும் கொஞ்ச நாள் இருந்து விட்டுப் போங்களேன்." அழுகையின் நடுவே சொல்லி முடித்தாள் அவள்.

அவளது கேசத்தை வருடியவாறு இதமாய் சொன்னாள் விமலா.

"அடி அசடு... திருமணம் ஆன புதுசு... உங்களுடன் நானும் இருந்தால் நாலு பேர் சிரிச்சுப் பேசுவார்கள். என்னடா... சின்னஞ்சிறுசுகளை தனியாக விடாமல் இன்னும் அட்டையாக ஒட்டிக் கொண்டு இருக்கிறாளே என்று கேலி செய்ய மாட்டார்களா... அண்ணா ஆசைப் படியே கல்யாணம் நடந்து விட்டது. என்ன... அண்ணா இருந்து விமரிசையாய் நடந்திருக்க வேண்டிய கல்யாணம்... இப்படி யாரும் இல்லாமல் ஆனதுதான் ஆதங்கமா இருக்கு... அவன் கோபக்காரன்தான்ம்மா... வைஜயந்தி... ஆனால் கெட்டவன் இல்லை... இனி நீதான்... உன் சாமர்த்தியத்தால் அவனை முந்தானையில் முடிச்சுக்கப் பார்க்கணும். தெய்வாதீனத்தால் இந்தக் கல்யாணம் நடந்தாச்சு... இனி யாராலும் எதுவும் செய்ய முடியாதும்மா. துணிச்சலோடு இரும்மா வைஜயந்தி எல்லாம் சரியாகிவிடும்..."

ஆனால் ஏனோ வைஜயந்திக்கு துளியும் நம்பிக்கை வரவில்லை.

"இல்லை அத்தை... அவரைக் கட்டாயப்படுத்தி இருக்கக் கூடாது... மாமா தப்பு செய்து விட்டார். எனக்கு



நல்லது செய்யத்தான் பார்த்தார். ஆனால் அது விபரீதத்தில் முடிந்து விட்டது அத்தை... அவரது கோப சொரூபத்தைப் பார்க்க பயமாக இருக்கிறது. சருகாய் காற்றில் கரைந்து விட மாட்டோமா என்று தோன்றுகிறது" என்றாள் கிலேசத்துடன்.

"இல்லேம்மா... வைஜி... என் அண்ணா அனுபவஸ்தர்... அவர் எதைச் செய்தாலும் ஆற அமர யோசித்துதான் செய்வார். இப்போதும் அப்படித்தான்ம்மா... அவன் தவறான துணையைத் தேர்ந்தெடுக்கக் கூடாது... நீயும் அனாதையாகிவிடக் கூடாது என்று நினைத்து தான் உயிலை அப்படி எழுதினார். அது விஷயமாய் என்கிட்டே கலந்து பேசிவிட்டு தான்... அப்படி மாற்றி எழுதியிருக்கிறார். எனக்கும் அதுதான் சரின்னு பட்டதும்மா... இப்பவும் மோசமில்லை... நீ பொறுமையா இருந்து... உன் அன்பைக் காட்டி அவன் மனசை காந்தமா உன் பக்கம் இழுக்கலாம்..."

"ஆனா அவர் மனசு இரும்பா இல்லையே... அத்தை... கல்லாக அல்லவா இருக்கு..."

"கொஞ்ச நாள்ல பார்... அதில் உன் சிலையை செதுக்கி... ஆராதிக்க ஆரம்பிப்பான்... தாலியின் மகிமை அப்படிம்மா... பயப்படாதே..."

ஏதேதோ சொல்லி தைரியமூட்டிவிட்டு புறப்பட்டுச் சென்றாள் அத்தை.

தனிமையின் கொடுமை அவளை வாட்டியது. கண்களை கட்டி எங்கேயோ வனாந்தரத்தில் விட்டு விட்ட மாதிரி ஏதோ ஒருவித அச்சத்தில் நடுங்கிக் கொண்டிருந்தாள்.

அந்த சஞ்சலத்தில் அவளுக்கு பசியும் இல்லை தூக்கமும் இல்லை.

வினோத் எங்கே போனான் என்று கூடத் தெரியவில்லை. அவன் சொல்லிவிட்டுச் செல்வதும் இல்லையே...

சமையற்காரர் தலையை சொறிந்து கொண்டார். விருந்து சமைக்க வேண்டுமா... வேண்டாமா...

கல்யாண களையே இல்லை... இதை எப்படி கல்யாணம் என்று சொல்ல முடியும்.

ம்ம்... பெரியவர் இருந்திருந்தால் விஷயமே வேறு.

வீடு தேவலோகம் மாதிரி இருந்திருக்கும். பந்தல் என்ன... தோரணங்கள் என்ன... வாழைக்கம்பம்... மாவிலை... வண்ண மலர்கள் என்று அமர்க்களமாய்... ஆடம்பரமாய் இருந்திருக்கும். 'ஜேஜே' என்று வந்திருக்கும் உறவினர்களுக்கு வயிறார விருந்து செய்து ஜமாய்த்திருப்பார் என்பது நிச்சயம்...

உம்ம்... பெரியவரும் போயாச்சு... அவருடன் வீட்டின் சந்தோஷமும்... களையும் போய் விட்டது...

இழவு விழுந்த வீட்டில் கல்யாண சந்தோஷத்தையும் எதிர்பார்க்க முடியாதுதான்.

பெரியவரின் ஆத்ம சாந்திக்காக இந்தக் கல்யாணம்... அதைக் குறை கூறவும் கூடாதுதான்.

இதில் வேலைக்காரர்களுக்கும் வருத்தம் தான்.

வீட்டில் கல்யாணப் பேச்சு வந்ததும் வேலைக்காரர்களுக்கு படு கொண்டாட்டமாய் இருந்தது.

எல்லோருக்கும் புதுத்துணிமணிகள்... விதவிதமாய் பலகாரங்கள். மூன்று நாட்கள் வயிறு புடைக்கச் சாப்பாடு... என்ற எதிர்பார்ப்புடன் இருந்தார்கள்.

ஆனால்... இந்த மாதிரி மிகவும் எளிமையாய் திருமணம் நடக்கும் என்று நினைக்கவில்லை.



அது அவர்களுக்கு ஏமாற்றம் தான்...

நேரம் கிடைத்தபோது கூடி நின்று அங்கலாய்த்தனர்.

இரவு நேரம் கழித்து வந்தான் வினோத்.

வரவேண்டுமே என்று வேண்டா வெறுப்புடன்.

அவன் எதிரில் செல்லவும் அஞ்சினாள் வைஜயந்தி எப்படி பேசுவானோ...

நெஞ்சில் படபடப்புடன் தன் அறையில் அடைந்தே கிடந்தாள்.

தெய்வமே... காலம் முழுக்க இப்படியே சிறைவாசம் போல அடைந்து கிடக்க வேண்டி இருக்குமோ...

இதைவிட அண்ணன் வீட்டிலேயே இருந்திருக்கலாமே... வேலைக்காரியாய்...

அந்த நினைப்பில் கண்களில் உடைப்பெடுத்தது.

வினோத் ரூபாவை சந்திக்காமல் இருந்திருந்தால்... அவர் என்னிடம் பிரியமாய் இருந்திருப்பார்... என்னை மனைவியாய் கூட ஏற்றுக் கொண்டிருப்பார்... அப்படித் தானே பழகினார்... சிரிக்கப் பேசி... இனிமையாய் பழகி... என் மீது அன்பு காட்டும் வேளையில்... ரூபா வர வேண்டுமா.. சே... விதிக்கு என்னுடன் மட்டுமே விளையாட ஆசை போலும்... பெருமூச்சு விட்டாள்.

உள்ளம் ஏங்கியது... அந்த நாளும் வந்திடாதோ... பழைய வினோத்தாக என்னிடம் வேடிக்கையாக பேசி மகிழ வைக்க மாட்டாரா...

அது நடக்காது என்று தெரிந்தும் பேதை மனம் அதையே எண்ணி பரிதவித்தது.

மன உளைச்சலும்... சோர்வும் சேர்ந்து அவளை ஆட்டுவித்தன... துவண்டுப் போய் அப்படியே உறங்கிப் போனாள்.

மனித வாழ்வில் எத்தகைய மாற்றம் வந்தாலும் இயற்கை மட்டும் மாறாமல் தன் கடமையைச் செய்கிறது. சூரியன் வழக்கம் போல் கிழக்கே உதித்த வானில் பவனி வர ஆரம்பித்தான்.

புள்ளினங்கள் எப்போதும் போல சுப்ரபாதம் பாடி ஆரவாரத்துடன் வரவேற்றன...

பூத்து நிற்கும் மலர் கூட்டம் மணம் வீசி வாழ்த்துப் பாடின...

மனிதனுக்கும் அவைகளுக்கும் எத்தனை வித்தியாசம். அவைகளுக்குத் துன்பமில்லை... துயரமில்லை... அழுகை இல்லை... வாழ்க்கை போராட்டமில்லை... நீயா... நானா என்று போட்டியும் இல்லை... எல்லாமே மனுஷனுக்குத்தான்.

ஓரறிவு உயிர் முதல் ஐந்தறிவு பிராணிகள் வரை அனைத்துக்கும் உள்ள கொடுப்பினை... ஆறறிவு மனிதனுக்கு இல்லையே...

வாழ்க்கை முழுக்க பிரச்சனைகள்... சிக்கல்கள்... தீர்வு காண போராட்டங்கள்... வெற்றி... தோல்விக்கிடையே அல்லாடும் அவலம்... கடைசி வரையில் இது ஒரு தொடர்கதைதான்.

வைஜயந்திக்கு வாழ்க்கையே சலித்து விட்டது...

அரண்மனை போன்ற வீட்டில்... மகாராணி மாதிரி வாழ்க்கை தான். ஆனால் உப்பு சப்பில்லாத வாழ்க்கை.

ஏவலுக்கு பணியாட்கள்... எடுபிடிக்கு ஆண்கள்...

எல்லாம் இருந்தும் என்ன பிரயோசனம்.. கணவனின் அன்பு இல்லையே... ப்ச்சு...

தங்கக் கூண்டிலிருக்கும் பச்சைக்கிளியை போன்ற நிலை. உயிர் இல்லாத நடைப்பிணம் போன்றதொரு ஜீவனம்.



திருமணம் என்றதொரு சடங்கு நடந்து முடிந்து ஒரு மாதம் ஓடிப்போய் விட்டது.

ஒரே வீட்டில் இருந்தும் கணவனும் மனைவியும் எதிர் எதிர் திசையில்...

அவளை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை வினோத்.

ஏன் என்னைத் திருமணம் செய்து கொண்டீர்கள் என்று அவனது சட்டையைப் பிடித்து உலுக்கிக் கேட்க வேண்டும் போல ஒரு வேகம் எழும் அவளுக்கு... கஷ்டப்பட்டு அடக்கிக் கொள்வாள்.

ஆரம்பத்தில்... அவன் மனம் மாறி வந்து இந்த திருமணத்திற்கு ஒப்புக் கொண்டிருப்பானோ என்று உதித்த சின்ன நப்பாசையும்... பிறந்ததும் இறந்து விட்ட குழந்தையாய் செத்துப் போனது.

திருமணம் ஆன மறுநாளே நெருடலுக்கு விடையும் கிடைத்தது. அவர்களைப் பார்க்க வந்த ரூபாவின் முகத்தில் கோபத்தின் கொந்தளிப்பும் இல்லை. அவளிடம் ஆத்திரத்தின் ஆர்ப்பாட்டமும் இல்லை.

சண்டை போடத்தான் வந்திருக்கிறாள் என்று அஞ்சி ஒதுங்கியிருந்த வைஜயந்திக்கு ஆச்சர்யம்...

கையில் அன்பளிப்புடன் வந்திருந்தாள் அவள்.

அவளைப் பார்த்ததும் வினோத் குற்ற உணர்வில் குறுகவும் இல்லை... பதிலாய்... ஆகாசத் தாமரையாய் முகம் மலர்ந்து போனது. அதுவும் ஆச்சர்யமே... ரூபாவின் கையில் இருந்த அன்பளிப்பைப் பார்த்து விட்டு முகம் சுளித்தான் அவன்.

"என்ன ரூபா இது... தெரிந்துமா விளையாடுகிறாய்... இது பொய்யான திருமணம்... போலியான வாழ்க்கை...

இதற்கு எதற்கு அன்பளிப்பு... தூக்கி எறி அதை...'' என்றான் கடுப்புடன்.

அப்போதுதான் வைஜயந்திக்கு தலையில் 'செடேர்' என்று பலமாய் யாரோ அடித்தது போல இருந்தது.

ஆக... ரூபாவுக்கும் தெரியும்... இது உண்மையான திருமணம் அல்ல என்று... ஏதோ திட்டம் போட்டுத்தான் செயல்பட்டிருக்கிறார்கள்... காரணம் தெரிந்ததுதானே... கடல் போன்ற சொத்து கைவிட்டு போகக்கூடாது என்பதற்காக இந்த திருமண நாடகம் அரங்கேறியுள்ளது.

ஏதோ சொல்வார்களே. ஆடு திருடிய கள்வனுக்கு ஆக்கி வைத்த கள்ளி என்று...

அது மாதிரிதான்... இவர்கள் இருவரும் கூட்டு சேர்ந்து நடத்தியிருக்கிறார்கள்... மெச்ச வேண்டியது தான்... எரிச்சலுடன் நினைத்தாள் வைஜயந்தி.

வினோத்திடம் ரூபா கொஞ்சி பேசுவதும் காதில் விழுந்தது.

''சாரி வினு... வெறுங்கையுடன் வரப்பிடிக்கவில்லை. ஒருவேளை... உங்க உறவினர்கள் யாராவது இருந்து... அவர்கள் தப்பா நினைக்கக் கூடாது இல்லையா. அதான்... இது உங்களுக்கு இல்லை வினு... ம்ம்... என்ன பெயர்... ஆங்... வைஜயந்திக்கு தரத்தான் கொண்டு வந்தேன்... கொஞ்சம் கூப்பிடுகிறீர்களா...'' என்று சொல்லும் போதே... வைஜயந்தி அங்கே சென்றாள்... அவன் அழைக்கும் வரை காத்திருக்காமல்...

''ஹலோ வைஜயந்தி... இதோ... இது உங்களுக்குத் தான்... இது உங்கள் கல்யாணத்திற்கு கொடுத்தது என்று நினைத்து விட வேண்டாம்... இரண்டு வருடங்கள்



இவருக்கு மனைவியா இருக்க வேண்டுமே... அதுவும் உரிமையில்லாத மனைவியாய... அதற்கு... அந்தப் பொறுமைக்கு நான் தரும் பரிசு... பாவம் வினோத்... இந்த திருமணத்தில்... அதாவது உன்னை மணந்து கொள்வதில் அவருக்கு சுத்தமாய் விருப்பம் இல்லை... அப்புறம் நிதர்சனத்தை உணர்ந்து கொண்டு ஒப்புக் கொண்டார்... ஜஸ்ட்... இரண்டு வருடங்கள்... எழுநூற்று முப்பது நாட்கள் தான்... பொறுத்துக் கொள் என்ன...'' என்று ஏளனமாய் சொன்னாள் ரூபா.

அவளது வார்த்தைகள் அமிலத் துளிகளாய் தெறித்து வைஜயந்தியின் நெஞ்சை சுட்டன...

மாமா இருக்கும் வரை வாலை சுருட்டிக் கொண்டு கிடந்தவள் இப்போது இங்கு வந்து நின்று ஏகத்தாளமாய் பேசவும் செய்கிறாள் என்றால்... அது வினோத் கொடுக்கும் இடம்தான்....

இத்தனையும் கேட்டுக் கொண்டு இறுகிப் போய் கிடக்கிறாரே. அவரைச் சொல்லி குற்றமில்லை...

காதல் அந்த அளவு அவரது அறிவை மழுங்க வைத்து விட்டது...

இல்லாவிட்டால்.. பணத்திற்காக காதலை விற்கத் தயாரான ஒருத்தியை நம்பி கிடப்பாரா...

உண்மையான காதலாக இருந்திருந்தால்... பணம் வேண்டாம்... நீங்கள் மட்டும் போதும் என்று சொல்லத் தோன்றும்.. ரூபாவின் காதல் பணத்தைப் பார்த்து வந்தது ஆயிற்றே... இதை அறியாமல்... அவளைக் கண் மூடித் தனமாய் நம்புகிறாரே இவர்...

உயிலை எழுதும்போது.. இப்படியும் நடக்கும் என்று நினைத்திருக்கமாட்டார் மாமா.

அவர் நினைத்தது ஒன்று... ஆனால் நடப்பதோ வேறாக இருக்கிறது...

மாமா... யாரிடமிருந்து உங்கள் மகனை காப்பாற்ற வேண்டும் என்று நினைத்தீர்களோ... அவளின் வலையிலே விழுந்து விட்டார் உங்கள் பிள்ளை... மனசுக்குள் புலம்பினாள் அவள்...

இருவரும் ஏதோ ஒரு 'கான்ஸெர்ட்'க்கு புறப்பட்டுக் கொண்டிருப்பது அவர்களது பேச்சிலிருந்து தெரிந்தது...

வேண்டும் என்றே.. வைஜயந்தியின் காதில் விழட்டும் என்றே... உரக்கவே சொல்லிக் கொண்டிருந்தாள் ரூபா.

"அப்படியே... ஓட்டலில் சாப்பிட்டு விட்டு வரலாம் வினு டியர்... 'கல்யாணம்' நடந்ததற்கு நீங்க தரும் பார்ட்டியாக்கும்... அதுவும் உயர்தர ஓட்டலில்... ஓகே..." என்று சொல்லி இன்னும் வெறுப்பேத்தினாள் ரூபா...

அவள் முகம் போன போக்கைப் பார்த்து விட்டு 'களுக்' என்று சிரித்தாள்...

உள்ளுக்குள் கொந்தளித்தாலும்... அதை வெளிக்காட்டாமல் கற்சிலையாய் நின்றிருந்தாள் வைஜயந்தி.

புறப்படும் முன்னர் வைஜயந்தியைப் பார்த்து...

"நாங்கள் போனதும்... உனக்கு தனிமை போரடிக்கும் இல்லையா... உனக்கு பொழுது போகா விட்டால் நான் கொண்டு வந்திருக்கும் அன்பளிப்பை பிரித்துப் பார்... அருமையான புத்தகம்... ராமகிருஷ்ணர்... சாரதா தேவியின் மண வாழ்க்கையைப் பற்றி விளக்கமா அதில் தந்திருக்கிறது... திருமணம் ஆகியும் துறவு வாழ்க்கை வாழ்ந்ததைப் பற்றி கண்டிப்பாய் நீ படிக்கணும் வைஜயந்தி... உனக்கு அதே மாதிரி மனப்பக்குவம் வந்துவிடும்... பாரேன்... பை..."



அவர்கள் செல்வதை வெறித்தவாறு நின்றிருந்தாள் அவள்...

காக்கைக்கு எருதின் வேதனை தெரியாதாம்... இந்த மனிதக் காக்கையும் சீண்டிப் பார்க்கிறது.

எல்லாம் திமிர்... தான் நினைத்தபடியே நடக்கிறது என்ற எண்ணம் தந்த திமிர்.

இதற்கெல்லாம் ஒரு நாள் தெய்வம்...

சே... தெய்வம் கூட இப்படிப்பட்ட பாதகர்களுக்குத்தான் துணை போகிறது.

நல்லவர்களை மட்டுமே சோதிக்கிறது... இன்னும் எத்தனை நாளுக்கு இந்த அவஸ்தை... தெரியவில்லையே... ஏதோ சூன்யத்தை நோக்கிப் போவது போல... எதிர்காலம் அந்தகார இருட்டாய் தெரிந்தது வைஜயந்திக்கு.

உடம்பும் உள்ளமும் தொய்ந்து போய் உட்கார்ந்து விட்டாள்.

## 14

திடீர் என்று தன் அண்ணன் வந்து நின்றதைப் பார்த்து திகைப்படைந்தாள் வைஜயந்தி.

வந்த உடனேயே தங்கையிடம் மனத்தாங்கலுடன் கேட்டான்.

"என்னம்மா... வைஜயந்தி... அண்ணன்னு நான் ஒருத்தன் இருப்பதை மறந்துட்டியா... யாரோ ஒரு மூன்றாம் மனுஷன் சொல்லி... எனக்குத் தெரிய வேண்டியிருக்கு... உன் கல்யாண விஷயத்தை தான்

சொல்கிறேன்... மாமா இறந்ததைக் கூட எனக்கு தெரிவிக்கவில்லையே... அந்த அளவுக்கு நாங்க வேண்டாதவர்களாகிப் போனோமா.. புரியுதும்மா... நாங்க உனக்கு எதுவும் செய்யவில்லை என்ற வருத்தம்... அப்படித் தானே..."

"அப்படி இல்லேண்ணா" என்றவளை இடைமறித்து பேசினான் ரங்கன்.

"அப்படியே இருந்தாலும் அது தப்பில்லைம்மா... ஏதோ இயலாமையில் தப்பு செய்திட்டேன்... என்னை மன்னிச்சிடும்மா... ஆனா... நீ மாமா வீட்டுக்கு வந்ததும் நல்லதா போச்சு... உன்னை இந்த நிலையில் பார்க்கிறப்போ எனக்கு சந்தோஷமா இருக்கும்மா... மனசு கேட்கல்லே.. உன்னைப் பார்க்கணும்னு தோணிச்சு... அப்படியே மாமா செத்துப் போன துக்கத்தையும் விசாரிக்கலாம்னு தான் வந்தேன். நீரடிச்சு நீர் விலகாதும்பாங்க... அண்ணன்... தங்கை உறவும் அப்படித்தான் வைஜயந்தி... விட்டுப் போகாது..." பாசத்துடன் பேசிய அண்ணனை கண்கள் விரியப் பார்த்தாள்.

பேசுவது அண்ணனா... அவனுக்கு இப்படியும் பேச வருமா என்ன... அவனிடம் வந்த மாற்றத்தைக் கண்டு வெகுவாய் மலைத்துப் போனாள்.

அவளுக்கு மட்டுமா மலைப்பு...

ரங்கனுக்கும் தான்...

தங்கையின் திருமண விஷயத்தைப் பற்றித் தெரிந்து கொண்டதும்... அவனுக்கு வியப்பு... தங்கையை மாமாவுடன் அனுப்பி வைக்கும்போது... இப்படி ஒரு நிலை தங்கைக்கு வரும் என்று எதிர்பார்க்கவில்லை... ஏதோ மாமா இந்த மட்டும் அழைத்துப் போனாரே... எனக்கு சுமை குறைந்தது என்று சந்தோஷப்பட்டது உண்மை...



அதற்குப் பிறகு தங்கையைப் பற்றிய நினைப்போ... ஆதங்கமோ இல்லவே இல்லை. அவள் என்ன ஆனாள் என்று அறியவும் மனமில்லை...

எல்லாம் சுயநலம் தான்...

நானும்... என் குடும்பம் மட்டுமே என்று பெரும்பாலான ஆண் பிள்ளைகளுக்கு தோன்றும் எண்ணம் தான் அவனுக்கும் வந்தது.

அதற்கு இன்னொரு காரணம் இயலாமை தான். அவனுக்கு வரும் சம்பளம் கைக்கும் வாய்க்கும்தான் என்ற நிலையில் இருக்கையில் எப்படி தங்கைக்கு வழிகாட்ட இயலும்...

தன் கையாலாகாத தனத்தை எரிச்சலாக வெளியிட்டான் அவன்.

தன் குடும்பத்தைக் கவனிப்பதே மூச்சு முட்டும் போது.. உடன் பிறந்தவளை எப்படி வைத்துக் கொள்வது... அதற்கு தூபம் போடுவது போல மனைவியும் சிடுசிடுத்துப் பேசினாள்... தனிமையில் அவனைக் குடைந்தெடுத்தாள். அவன் மீது இருக்கும் கோபத்தை வைஜயந்தியின் மீது திருப்பினாள் சரோஜா...

ராமலிங்கம் அழைத்துப் போகிறேன் என்றதும் அம்மாடி... இந்த மட்டும் சனியன் விட்டது என்று நிம்மதி அவளுக்கு...

அப்போதுதான்... வைஜயந்தியின் விஷயம் யாரோ ஒரு தூரத்து உறவினர் மூலம் தெரிய வந்தது...

சுமை என்று நெட்டித் தள்ளிய தங்கை... இப்போது செல்வந்தர் வீட்டு மருமகள்... அவனால் அதை நம்பவும் முடியவில்லை.

அந்த உறவினர் அவனிடம்... "என்ன ரங்கா... இங்கே நீதான் கஷ்டத்தில் அல்லாடிக்கிட்டு இருக்கே... உன் தங்கை கோடீஸ்வரனின் மனைவியா ஆயிட்டா... போய் அவளைப் பார்க்கவில்லையா... ஏதாச்சும் உனக்கு உதவுவா இல்லே..." என்று சொன்னதும் ரங்கனுக்கு பிரமிப்பு.

என்ன... என் தங்கை கோடீஸ்வரியா... இதென்ன புது செய்தி... யாரை மணந்து கொண்டு அவள் செல்வ சீமாட்டியானது... ஏதோ கதைகளில் வருமே... அது மாதிரி ராஜகுமாரன் வந்து மணந்து கொண்டானா... அவனால் நம்ப முடியவில்லை.

அதுவும் அந்த உறவினர் வாயிலாகவே தெரிய வந்தது.

மாமா ஆசையாய் ஏற்பாடு செய்திருந்த கல்யாணம்... திடீர் என்று மாமா இறந்து விட்டாலும்... அவர் ஆசைப் படியே அந்தத் திருமணம் நடந்து முடிந்து விட்டது... வெகு எளிமையாய்...

அதைக் கேட்டதும்... ராமலிங்கம் மாமா மீது மதிப்பும் மரியாதையும் கூடியது. அவரது நல்ல மனதைப் புரிந்து கொள்ளாமல் ஏதேதோ பேசினோமே... பாவம்... அத்தனையையும் பொறுத்துக் கொண்டு... வைஜயந்தியை அழைத்துச் சென்றாரே.

அண்ணன் என்ற முறையில் வைஜயந்திக்கு எதுவும் செய்யவில்லை... ஆனால்... மாமா என்ற உறவில் வந்தவர்... என் தங்கைக்கு ஒரு நல்வழி காட்டியிருக்கிறார் என்றால்... பரந்த மனசு அவருக்கு.

அந்த உயர்ந்த மனிதரை புரிந்து கொள்ளாமல் போனோமே... அவர் இறந்த விஷயம் தெரிந்திருந்தால் உடனே போய் அவருக்கு அஞ்சலி செலுத்தியிருக்கலாம் நான். இப்போது யாரோ ஒருவர் சொல்லி... அவரது



மறைவைப் பற்றியும்... தங்கையின் கல்யாணம் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டிய நிலை... யாரோ மூன்றாம் மனிதரைப் போல...

வைஜயந்திக்கு கூட அண்ணனுக்குச் சொல்ல வேண்டும் என்று தோன்றாமல் போனதே என்று வருத்தப்பட்டான்...

தங்கைக்குத் திருமணம் செய்து வைக்க வக்கில்லாதவனுக்கு அதையெல்லாம் எதிர்பார்க்கும் உரிமை ஏது... இல்லைதான். குற்ற உணர்வு ஊவா முள்ளாய் உறுத்தியது அவனுக்கு...

இருக்கும் ஒரே உறவு... உடன் பிறந்த சகோதரன் புறக்கணித்து விட்டதால்தான்... தெய்வமே நின்று அவளுக்கு ஒரு நல்ல வாழ்வை தந்து விட்டது போலும். அவனது மனதின் எங்கோ துளிர்த்த கொஞ்சம் பாச உணர்வு அவனை அவ்வாறு நினைக்கச் செய்தது...

தான் கேள்விப்பட்ட அந்த சந்தோஷச் செய்தியை மனைவியிடம் சொன்னான்...

சரோஜாவுக்கும் ஆச்சர்யம்தான்...

யார்... வைஜயந்தியா... இப்போது பணக்கார வீட்டு மருமகளா... அடடா... இதுவல்லவா குருட்டு அதிர்ஷ்டம் என்கிறது... விளங்காதவள் என்று ஏசினேனே... அவளுக்கா இந்த வாழ்வு... சரோஜாவிற்கு மகிழ்ச்சியை விட வயிற்றெரிச்சல் தான் கொஞ்சம் அதிகம்.

அன்றெல்லாம் அவளுக்கு சரியான தூக்கமில்லை. ஏதேதோ சிந்தனைகள்.

தங்களது ஏழ்மையையும்... நாத்தினியின் திடீர் சுக போகத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து பெருமூச்சு விட்டாள்...

யாரை மூதேவி... தரித்திரம் என்று ஏசினாளோ அவள் இப்போது செல்வநாயகி... அவள் முன் நாம் தான் தரித்திரங்கள் என்று நினைத்தபோது வயிறு காந்தியது.

இனி அவள் தங்களை நினைப்பாளா... பதிலுக்கு பதிலாய்... எங்கேயாவது சந்தித்தால் முகத்தை திருப்பிக் கொள்ள மாட்டாளா... ஏதேதோ நினைத்து உள்ளம் பொருமியது.

என்ன தோன்றியதோ அவளுக்கு... கணவனிடம் சொன்னாள்.

''இதோ பாருங்க... பிறந்த வீட்டுக்காரங்கன்னு நாம் வைஜயந்தியை அழைத்து வந்து விருந்து கொடுக்கணும்... அது நம்ம கடமைங்க... வைஜயந்திக்கு சொந்தம்னு நம்மளை விட்டா யார் இருக்காங்க. அதனால... உடனே புறப்பட்டுப் போய்... உங்க தங்கையையும்... மாப்பிள்ளையையும் பார்த்து விட்டு... அப்படியே விருந்துக்கு அழைச்சிட்டு வாங்க... என்ன புரியுதா...''

பேசுவது என் மனைவியா... தங்கையைப் பார்த்தால் எரிந்து விழும் சரோஜாவா இப்படிப் பேசியது... இல்லை. நான் ஏதாவது கனவு காண்கிறேனா... ஆ... இல்லையே... வலிக்குதே... இதென்ன திடீர் மாற்றம்... ஏழைத் தங்கையை ஒதுக்கியவள்... பணக்கார வைஜயந்தியை வரவேற்க ஆவலுடன் இருக்கிறாள். அடடா... பணமே.... உன் மகிமையே தனி...

''என்னங்க அப்படிப் பார்க்கறீங்க... நான் ஒண்ணும் தப்பா சொல்லவில்லையே.. உங்க தங்கை இப்போ உசந்த நிலையில் இருக்கா. அவளுக்கு குறையேதும் இல்லை... இது நமக்கும் பெருமைதானே. மாப்பிள்ளையோட உங்க தங்கை 'ஜம்'முன்னு பெரிய காரில் வந்து இறங்கிறதை



நாலு பேர் பார்த்தா... அது நமக்குத்தான் மதிப்பு.. போய் கூப்பிட்டு வாங்க. இதோ பாருங்க... நான் எது சொன்னாலும் அதுக்கு ஒரு அர்த்தம் இருக்கும்...''

அவனுக்கு மட்டும் என்ன... தங்கையைப் பார்க்கும் ஆசையில்லையா... இருக்கத்தான் செய்தது... அவளைப் பார்த்து வாழ்த்திவிட்டு வரவேண்டும் என்ற துடிப்பு வந்தது.

ஆனால் தயக்கமும் இருந்தது. எந்த முகத்தை வைத்துக் கொண்டு போவது... தங்கையே இல்லை என்று உறவை வெட்டிக் கொண்டு... அவளை வெளியே அனுப்பி விட்டு... இப்போது 'தங்கச்சி... நல்லா இருக்கிறாயம்மா'' என்று நலம் விசாரிக்க வாய் வருமா... வந்தாலும் அதை ஏற்றுக் கொள்வாளா...

இதென்ன... பணம் இருக்கிறது என்றதும் வந்து விட்டானாக்கும் என்று ஏளனமாக நினைக்க மாட்டாளா... இந்தப் பாசம் கூட வெளி வேஷம் தான் என்று இகழ்ச்சியாய் எண்ண மாட்டாளா... அந்த நினைவில் குன்றினான் ரங்கன்...

ஆனால் சரோஜா விட்டால் தானே... ஏதேதோ சொல்லி அவனைக் கிளம்ப வைத்து விட்டாள்.

''நாம என்ன... வச்சுகிட்டா அவளுக்கு வஞ்சனை செய்தோம்... இல்லாமல் தானே அவளை அனுப்பினோம். அதுவும் நல்லாத்தானே முடிஞ்சுது. போய்ப் பாருங்க... உங்களைப் பார்த்து ரொம்பவும் சந்தோஷப் படுவாள். அண்ணா உன்னால் தான் இந்த அருமையான வாழ்வு எனக்கு அமைஞ்சதுன்னு உங்களைப் புகழப் போறா. அங்கே, உங்களுக்கு வரவேற்பு பலமா இருக்கும்... பாருங்க...''

அவளது வார்த்தைகள் உசுப்பேற்றி விட... கொஞ்சம் துணிவு வந்தவனாய்... தங்கையைப் பார்க்கப் புறப்பட்டான்.

அரண்மனையைப் போன்ற வீடும்... சுற்றி இருந்த தோட்ட அமைப்பும்... போர்டிகோவில் இருந்த விலை உயர்ந்த சொகுசு காரையும் கண்டு விட்டு வாயைப் பிளந்தான் ரங்கன்.

'கேட்'டருகில் விறைத்து நின்றிருந்த 'செக்யூரிட்டி' 'வைஜயந்தியின் அண்ணா' என்று அறிந்ததும் உடல் வளைத்து வினயமாய் சல்யூட் அடித்ததும்.. ரங்கன் பெருமையடைந்தான்.

மாளிகை வீட்டில் திரும்பிய பக்கம் எல்லாம் செல்வத்தின் செழிப்பு... வீட்டின் உள் அலங்காரமும் கண்களைக் கவர்ந்தது. தேக்குமர சோபாக்கள். மேல் விதானத்தில் இருந்து தொங்கும் அலங்கார சர விளக்கு... தரையில் விரிக்கப்பட்டிருக்கும் விலையுயர்ந்த காஷ்மீர் ரத்ன கம்பள விரிப்பு... சுவற்றில் தொங்கும் தஞ்சாவூர் ஓவியங்கள்... எல்லாமே அவனுக்கு பிரமிப்பைத் தந்தன.

அம்மாடி! மாமா இத்தனை பணக்காரரா... தன் தங்கைக்கு இத்தனை அதிர்ஷ்டமா... அவன் கண்களை விரித்தான்.

அவனைப் பார்த்த ஒரு பணியாள் விசாரித்தான்.

''யாரு... யாரைப் பார்க்க வந்தீங்க...''

தான் யார் என்பதை கர்வத்துடன் சொன்னான் ரங்கன்.

எதிர்பார்த்தது போலவே... பவ்யம் காட்டினான் அந்த வேலைக்காரன்.

''அம்மாவோட அண்ணனா நீங்க... உட்காருங்கய்யா... இதோ அம்மாவிடம் சொல்லிவிட்டு வர்றேன்...'' என்று நகர்ந்தான் அவன்.



சில வினாடிகளில் மெட்டி ஒலி கேட்டது... திரும்பிப் பார்த்தான்...

தன் தங்கையைப் பார்த்தவனின் கண்களில் மலைப்பு... வைஜயந்தியா...

அதிர்ஷ்டக்கட்டை... ராசியில்லாதவள்... மூதேவி என்றெல்லாம் தன் வாயால்... சரோஜா வாயால் ஏசப்பட்டவளா இவள்... ஸ்தம்பித்துப் போனான் அவன்.

திருமகளைப் போல... கழுத்திலும் கைகளிலும் பொன் அணிகள் மின்ன... அழகானதொரு புடவையில் அலங்காரப் பதுமையாய் இருந்த வைஜயந்தியை கண் கொட்டாமல் பார்த்தான்.

கழுத்தில் ஏழு பவுனுக்கு குறையாத கெட்டியான தங்கச் சங்கிலி... உள் கழுத்தை ஒட்டிய கெம்பு அட்டிகை. பொன்னிறத்துக்குப் போட்டியாய் மினுக்கும் மஞ்சள் கயிறு... கைகளில் அடுக்கியிருந்த தங்க வளையல்களுக்கிடையே கண் சிமிட்டும் கண்ணாடி வளையல்கள்... காதுகளில் கர்வமாய் அசைந்தாடும் தோடும் ஜிமிக்கியும்... மொத்தத்தில் புதுமணப் பெண்ணின் பொலிவுடன் நின்றிருந்த தங்கையைப் பார்த்ததும் அவனையும் அறியாமல் பெருமிதம் உதித்தது... அவளுடைய பொறுமைக்கும் அமைதிக்கும் கடவுளே இப்படியொரு அருமையான வாழ்க்கையைத் தந்திருக்கிறார் போலும்... அவன் ஆடாவிட்டாலும் அவனது சதை அப்போது அதிர்ந்தது உண்மை... அதான்... தன் வரவை எதிர்பார்க்காமல்... திகைத்து நின்றவளிடம் நெகிழ்வுடன் பேசினான்.

சுதாரித்துக் கொண்டவளாய் ''வாங்கண்ணா... எப்படி இருக்கீங்க... அண்ணி நலமா இருக்கிறார்களா... அண்ணியையும் குழந்தைகளையும் கூட்டி வந்திருக்கலாமே...'' என்று சிரித்த முகமாய் வரவேற்றாள்.

பேசுவாளோ... இல்லை முகம் திருப்பிக் கொள்வாளோ என்று தயங்கி வந்தவனுக்கு... அவளது வரவேற்பு குன்றச் செய்தது நிஜம்...

அவள் நினைத்திருந்தால்... 'எந்த முகத்தை வைத்துக் கொண்டு இங்கு வந்தேன்னு கேட்டிருக்கலாம். ஏன் வந்தே... வேண்டாம் என்று வெளியே துரத்தியவனுக்கு இப்போது என்ன திடீர்னு தங்கைப் பாசம் பீறிட்டு வந்து விட்டதாக்கும். இது நாள் வரைக்கும்... இருக்கும் ஒரே தங்கை... இருந்தாளா... செத்து விட்டாளா என்று எட்டியும் பார்க்காத உனக்கு இப்போ வரத்தோன்றியதாக்கும்...' என்று முகத்தில் அறைந்த மாதிரி கூடக் கேட்டிருக்கலாம்... ஆனால் அப்படி கேட்காததுதான் ஓங்கி அறைந்தாற் போல அவனுக்கு இருந்தது.

"வீட்டில் எல்லோரும் சௌக்கியம் தான் வைஜயந்தி. மாமா விஷயம் தான் மனசுக்கு வருத்தமா இருக்கிறது. நல்ல மனுஷர்... இப்படி சட்டுன்னு போயிடுவார்னு நினைக்கவே இல்லை... நல்லவங்களுக்கு ஆயுசு கம்மின்னு சும்மாவா சொன்னாங்க... அம்மா வைஜயந்தி... இந்தா... உனக்குப் பிடிக்கும்னு உன் அண்ணி நெய் முறுக்கு பண்ணி அனுப்பியிருக்கா. அப்புறம் வெறுங்கையோட போக வேண்டாம். பூ, பழம்... இனிப்பு எல்லாம் வாங்கிக் கொண்டு போங்கன்னு சொன்னா... உனக்குப் பிடிச்ச ரஸ்தாளி பழம்... ஜாதிப்பூ.. திருநெல்வேலி அல்வா எல்லாம் வாங்கி வந்திருக்கிறேன்... வாங்கிக்கோம்மா.. வீடு ரொம்ப பெரிசா இருக்கும்மா... இப்படி ஒரு நல்ல வாழ்வு உனக்குக் கிடைச்சிருக்குன்னு நினைக்கிறப்போ மனசுக்கு நிறைவா இருக்கு... இதைப் பார்க்க அம்மா இல்லையேன்னுதான் வருத்தமா இருக்கும்மா."



உணர்ச்சி வேகமோ... அவனது குரல் கரகரத்தது.

தாயின் நினைவில் அவளும் தடுமாறிப் போனாள். உண்மைதான். அம்மா இப்போது இல்லையே என்று அவளும் ஏங்கினாள்.

அம்மா இருந்திருந்தால்... அவள் மடியில் தலை வைத்து அழுதிருக்கலாம். மனச்சுமை குறைந்திருக்கும்... அப்போதுதான் தாயின் இழப்பை முழுமையாய் உணர்ந்தாள் வைஜயந்தி... நெஞ்சு கனக்க... அண்ணன் தந்ததை எடுத்துக் கொண்டு போய் உள்ளே வைத்தாள்.

"ஏம்மா... மாப்பிள்ளை எங்கே காணோம்... வேலை விஷயமா போயிருக்கிறாரா" என்று கேட்டான் ரங்கன்.

"மாமா போனப்புறம்... கம்பெனி நிர்வாகம் எல்லாவற்றையும் இவர்தானே கவனிக்கணும். அதனால் பொறுப்பு அதிகம் அண்ணா... சரி... நீங்க போய் கைகால் கழுவிக் கொண்டு வாங்கண்ணா. சாப்பிடுவீர்களாம்" என்று பாத்ரூம் பக்கம் சுட்டிக் காட்டினாள்.

பெரிய தேக்குமர சாப்பாட்டு மேஜை மீது... பதார்த்தங்கள் தயாராய் இருந்தன.

சமையல்காரர் பார்த்து பார்த்து பரிமாற... வயிறார உண்டான் ரங்கன்... அண்ணனின் அருகே அமர்ந்து உபசரித்தாள் வைஜயந்தி.

"ராமண்ணா.. புதுசா காய்ச்சி வைத்திருக்கும் நெய் இருக்குமே... அதைக் கொண்டு வந்து ஊத்துங்க... அப்புறம்... 'ப்ரிஜ்'ஜில் கெட்டி தயிர் இருக்கு. அதை அண்ணனுக்கு வையுங்க... அது புளிப்பா இருக்காது..." என்று அவள் உத்திரவு இடுவதைப் பார்க்கையில்... அவனுக்கு வியப்பு. என்ன சொன்னாலும் வாய் பேசாமல்...

சொன்ன வேலைகளையெல்லாம் மளமளவென்று செய்து முடிக்கும் தங்கையா... இப்போது... பட்டத்து ராணியைப் போல கம்பீரத்துடன் வேலையாட்களை அதிகாரம் பண்ணி வேலை வாங்குவது... தன் வீட்டில் ஒரு வேலைக் காரியை விட கேவலமாக நடத்தினோமே... அவளுக்கு இப்படி ஒரு ராஜயோகம் வரும் என்று தெரியாமல்... எல்லாம் அவளது அதிர்ஷ்டம்தான்...

இருந்தும்... துளியாவது கர்வமோ... தலை கனமோ இல்லாமல்... பழைய வைஜயந்தியாகவே இருக்கிறாளே... அதைச் சொல்ல வேண்டும்.

பழசை நினைத்து முகம் தூக்கி வைக்காமல்... கலகலப்பாகப் பேசுவதையும் மெச்சத்தான் வேண்டும்.

தங்கையின் நல்ல மனசை இப்போதாவது புரிந்து கொண்டோமே... அது போதும்... இனியாவது... அவளுக்கு ஒரு நல்ல அண்ணனாய் இருந்து பாசத்தைக் காட்ட வேண்டும்... உனக்கு நான் இருக்கிறேன்னு என் அன்பால்... பாசத்தால் உணர்த்த வேண்டும்.

அந்த எண்ணத்தில் அவளைப் பார்த்துக் கேட்டான் ரங்கன்.

''நீ சாப்பிடலையாம்மா வைஜி.''

அதைக் கேட்டதும் வைஜயந்தியின் கண்களில் நீர் தளும்பியது.

தன்னையும் அன்போடு விசாரிக்க ஒரு ஜீவன் இருக்கிறதே என்பதால் மட்டும் இல்லை...

சிறு பிராயத்தில் அவன் செல்லமாய் விளிப்பது போல தன்னை 'வைஜி' என்று அழைத்ததால் வந்த ஆனந்தக் கண்ணீர்.



''எனக்கு பசியில்லைண்ணா... அப்புறம் சாப்பிட்டுக் கொள்கிறேன்...'' என்றாள் அவள்.

''அப்புறம் ஒரு முக்கியமான விஷயம்மா வைஜி. உங்க அண்ணி சொல்லச் சொன்னா... உங்களை மறுவீடு அழைக்கும் சம்பிரதாயம் ஒண்ணு இருக்காம். அதை நாம செய்யணும். கல்யாணம் தான் நாம இல்லாம நடந்து விட்டது... நம்ம வீட்டுக்கு அழைச்சு... விருந்து வைக்கணும்... அதுதான் முறையாம். அதான் நீங்க போய் நேர்ல அழைச்சிட்டு வாங்கன்னு சொன்னா... நீயும்... மாப்பிள்ளையும் நம்ம வீட்டுக்கு வந்து தங்கி... விருந்து சாப்பிடணும்மா... ஏதோ இந்த ஏழை அண்ணன்... என்னால் முடிஞ்சதை செய்வேன்ம்மா...'' அண்ணனின் வார்த்தைகள் உள்ளத்தைக் குளிர வைத்தாலும்... அவளால் பழைய விஷயங்களை அத்தனை சீக்கிரம் மறக்க முடியாதே...

இந்த தலைகீழ் மாற்றத்தை ஜீரணித்துக் கொள்ள கொஞ்சம் கால அவகாசம் வேண்டியிருந்தது.

செல்லா காசாய் இருந்த தனக்கு பிறந்த வீட்டில் சீராடல் என்பதை நம்ப முடியவில்லை... தாயை இழந்து தவித்த தனக்கு அரவணைத்து ஆறுதல் சொல்ல வேண்டிய அண்ணி... அன்று வாசலைக் காட்டிவிட்டு... இன்று இரு கரங்களை நீட்டி வரவேற்கக் காத்திருக்கிறாள் என்றால்... பணம் செய்யும் மாயமோ...

அன்று அன்னக்காவடியாக இருந்த வைஜயந்திக்கு பைசா மதிப்பும் இல்லை... இன்று... கோடீசுவரன் மனைவிக்கு ரத்ன கம்பள வரவேற்பு... உலகில் பணத்திற்குத் தான் மதிப்பு போலும்.

விரக்தியுடன் நினைத்தவள் அடுத்த கணமே தலையை உதறிக் கொண்டாள்.

சே... உலகில் யாருக்குத்தான் பணத்தாசை இல்லை. பணத்தில் புரளும் வினோத்திற்கு இல்லையா... வசதிகளுடன் இருக்கும் ரூபாவிற்கு இல்லையா... அவளது தந்தைக்கு இல்லையா.

பணத்தின் மேல் இருக்கும் மோகத்தால் தானே இந்த நாடகமே அரங்கேறியுள்ளது.

பணத்தைக் கண்டவர்களுக்கே தலை கிறுகிறுப்பு என்றால்... கஷ்ட ஜீவியான அண்ணனுக்கும்... வாழ்க்கையில் எந்த சுகமும் அறியாத அண்ணிக்கும் இருப்பதில் வியப்பேது...

ஊகும் பணத்தைக் கண்டு ஆடிப் போனதில் தவறே இல்லை.

ஒருவேளை... உண்மையிலேயே அண்ணன் மாறியிருந்தால் அதைவிட சந்தோஷம் வேறு ஏது...

இந்த மட்டும் மாறினார்களே... அது போதும்.

எனக்கும் இவர்களை விட்டால் யார் இருக்கிறார்கள். உறவு என்று எனக்கு இருப்பது இவர்கள்தான்... பிறந்த வீட்டு உறவு...

ஆனால் தன் சொந்த அத்தையின் அழைப்புக்கே செவி சாய்க்காதவர்... இவர்கள் அழைத்ததும் வந்து விடுவாரா... பெருமூச்சு விட்டாள் அவள்...

வினோத் எட்டு மணிக்கு வந்தான்.

சாம்பல் நிற பேண்ட்டும்... வெளிர் நீல சட்டையும் அணிந்து.. மிடுக்காய் காரிலிருந்து இறங்கியவனைப் பார்த்த ரங்கன் கேள்வியுடன் தங்கையைப் பார்க்க... அவள் 'ஆம்' என்பது போல தலையசைத்தாள்.

ரங்கனுக்கு பிரமிப்பு...



தங்கைக்கு இத்தனை அழகான மாப்பிள்ளையா... அடடா... ராஜா மாதிரியல்லவா இருக்கிறார்.

என் கண்ணே பட்டுவிடும்போல இருக்கிறதே... இப்படியொரு மாப்பிள்ளை கிடைக்க என் தங்கை கொடுத்து வைத்திருக்கணும். நம் உறவில் கண்ணுக்கு லட்சணமாய் யாரும் இல்லையே என்று நினைத்தேன். வினோத் இருப்பது தெரியாமல்...

கடவுள்தான் மாமாவை வீட்டுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்... பின்னே... ஊர் பெயர் தெரியாத இந்த உறவு... திடீர் என்று வந்து... வைஜயந்தியை தன்னுடன் அழைத்துச் சென்றிருக்கிறார் என்றால்... அது தெய்வ சித்தம் தான் என்று சொல்ல வேண்டும். அது வைஜயந்தியின் அதிர்ஷ்டமும் கூட.

பணம்... படிப்பு... அழகு எல்லாமே ஓரிடத்தில் சேர்ந்திருப்பது அபூர்வம்... இந்த மூன்றுமே மாப்பிள்ளையிடம் இருக்கிறதே.

அந்த நினைப்பில்... மாப்பிள்ளை உள்ளே வரும் வரை கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான் ரங்கன்.

உள்ளே வந்த வினோத் தன் புருவங்களை உயர்த்தினான்.

'யார் இவர்' என்பது போல...

தன் அண்ணனை அறிமுகப்படுத்தினாள் வைஜயந்தி.

''விருந்துக்கு அழைத்து விட்டுப் போகலாம் என்று வந்தேன் மாப்பிள்ளை. இரண்டு பேரும் ஜோடியா வரணும்.'' என்று அழைப்பு விடுத்தான் ரங்கன்.

வினோத்தின் தாடை இறுகியது. இதென்ன கூத்து... என்பது போல பார்வையால் அவளை வெட்டினான்.

சமய சந்தர்ப்பம் தெரியாமல் அண்ணா ஏதாவது பேசி விடுவார் என்று பதைத்தவளாய் நின்றிருந்த வைஜயந்தி 'மறு வீடு சம்பிரதாயம் அழைக்க வந்திருக்கிறார் அண்ணா' என்று சொன்னாள்.

"இங்கே சம்பிரதாயமாக எதுவும் நடக்கவில்லை. இழவுதான் நடந்திருக்கிறது... இதில் விருந்து வேறு. அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்... எனக்கு நேரமும் கிடையாது..." முகத்தில் அடித்தாற்போல பேசிவிட்டு மேலே பேசுவதற்கு இடம் தராமல் அங்கிருந்து விரைந்தான் வினோத்.

"என்னம்மா வைஜயந்தி. மாப்பிள்ளைக்கு என்ன கோபமா... இப்படி சொல்லி விட்டுப் போகிறார்" என்றான் ரங்கன்.

என்ன சொல்வது என்று தெரியாமல் விழித்தாள் வைஜயந்தி.

## 15

பாவம்.. அண்ணா.... இந்தக் கல்யாணம் நிஜமானது இருவரும் மனமொத்த தம்பதிகள் என்று நினைத்துப் பேசியிருக்கிறார்... அவரைக் குற்றம் சொல்ல முடியாது. இப்போது நிலைமையை சமாளிக்க வேண்டும்... தவிப்புடன் யோசித்தாள்.

அவளது தவிப்பைப் பார்த்துவிட்டு அண்ணன் கேட்டான்.

"அவர் கோபம் என் மீதா வைஜி... என்னை கையாலாகாதவன்னு நினைச்சு..."

"சேச்சே... அப்படியொன்றும் இல்லைன்னா... ஏதோ டென்ஷன் அவருக்கு... தவிர... மாமா போனதிலிருந்த



அவருக்கு எதுவும் பிடிக்கலே... இழவு விழுந்த வீட்டில் சம்பிரதாயம்னு எதுவும் கூடாதுன்னு நினைப்பு. விருந்து கேளிக்கையெல்லாம் வேண்டாமே என்கிறார் அவ்வளவு தான்" அம்மாடி! ஒருவிதமாய் சமாளித்து விட்டோம்... என்று உள்ளுக்குள் சந்தோஷம்.

"என் தப்பு... வந்ததும் கேட்டிருக்கக் கூடாதுதான். மாப்பிள்ளை எந்த மனநிலையில் இருந்தாரோ அது தெரியாமல் பேசிவிட்டேன்... சரிம்மா... நாளைக்கு நான் கிளம்பணும். நீயும் மாப்பிள்ளையும் வருவதற்கு முன் ஒரு போன் பண்ணிடும்மா!" என்று அண்ணன் சொன்னதற்கு தலையசைத்து வைத்தாள் அவள்.

ஒரு மரியாதைக்குக் கூட அண்ணனை இருக்கச் சொல்லவில்லை...

எந்த நேரத்தில் எது வெடிக்குமோ என்ற அச்சம் தான்... அண்ணனுக்கு எதுவும் தெரியாமல் இருப்பதே நல்லது.

அண்ணன் உறங்குவதற்கு ஏற்பாடு செய்து விட்டு வினோத்தை நாடிச் சென்றாள் அவள்.

அறையில் அவன் அன்றைக்கு வந்த கடிதங்களைப் படித்துக் கொண்டிருந்தான்.

அவளை நிமிர்ந்து பார்த்தவன் 'என்ன' என்பதுபோல் ஒரு பார்வை பார்த்தான்.

"என் அண்ணாவிற்கு நம் விஷயம் எதுவும் தெரியாது. அதுதான் ஏதோ புரியாமல் விருந்துக்கு அழைத்து விட்டார்... மன்னித்து விடுங்கள்" என்று மென்குரலில் சொன்னாள்.

அவ்வளவுதானா என்ற அர்த்தத்தில்... திரும்ப தன் வேலையில் கவனம் பதித்தான் அவன்.

அவன் நகராமல் இன்னும் நின்று கொண்டிருப்பதைக் கண்டு திமிர்ந்து எரிச்சலுடன் பார்த்தான்.

'இன்னும் என்ன?' என்ற அர்த்தம்.

''ஒரு வேண்டுகோள்... அவரை என் அண்ணா என்று நினைக்க வேண்டாமே... உங்க அம்மாவின் தம்பி மகன் என்ற சொந்தம் வைத்து அவரிடம் பேசலாம் இல்லையா... உங்க அம்மா உயிருடன் இருந்திருந்தால்... அவரது ரத்த சம்பந்தத்தை உதாசீனம் செய்வதை பொறுத்திருப்பாரா... இல்லையே. அதை நினைத்து அவரிடம் சுமுகமாகப் பேசுங்கள். ப்ளீஸ்...'' எப்படியோ... மனதில் இருப்பதைக் கொட்டியாகி விட்டது. ஏற்றுக் கொண்டால் சரி... அவனது பதிலை எதிர்பார்க்காமல் சென்று விட்டாள். புருவங்களுக்கு இடையே முடிச்சு விழ... அவள் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தான் வினோத்.

மறுநாள்... ரங்கன் புறப்பட்டுக் கொண்டிருந்தான். அங்கு வந்த வினோத்தைப் பார்த்ததும் ''நான் புறப்படுகிறேன் மாப்பிள்ளை'' என்றான்.

''அதற்குள்ளாகவா.. இருந்து விட்டுப் போகலாம் இல்லையா... ஏன் இந்த அவசரம்...'' என்று உபசாரமாய் அவன் சொன்னவுடன்...

வைஜயந்தி அவனை வியப்புடன் பார்த்தாள். கணவனின் வாயிலிருந்து உபசரிப்பா... அடடா... இதென்ன அதிசயம்... இன்றைக்கு சூரியன்... எங்கே... மேற்கில் உதித்தானா என்ன... பரவாயில்லை... ராத்திரி நான் சொன்னதை காதில் போட்டுக் கொண்டிருக்கிறார்... இது என் பொருட்டாக இல்லை... தாயின் சொந்தம் என்ற நினைப்பில் மட்டுமே.. அப்படியாவது பேசினாரே... அது போதும்.



''இன்னொரு தடவை வரும்போது நீங்க சொன்ன மாதிரி இருக்கிறேன். இப்போது நான் போயே ஆக வேண்டும். உங்களுக்கு நிறைய வேலை இருக்கும் மாப்பிள்ளை... இருந்தாலும்... பெரிய மனசு பண்ணி எங்க வீட்டுக்கு வரணும்... அது உங்க தாத்தா வீடு... உங்கம்மா பிறந்து வளர்ந்த வீடு மாப்பிள்ளை... அந்த வீட்டைப் பார்க்கும் ஆசை உங்களுக்கு நிச்சயம் இருக்கும்... இல்லையா...'' என்று ரங்கன் சொன்னான்.

இங்கே... வைஜயந்திக்கு மனம் திக்திக் என்று அடித்துக் கொண்டது.

அவன் வாயிலிருந்து அனலாய் வெளிவரப்போகும் வார்த்தைகளுக்காகக் காத்திருந்தாள்.

ஆனால் அவன் எதுவும் சொல்லவில்லை... நல்ல வேளையாய்... தப்பித்தேன்.

அப்புறமாய்... அண்ணாவுக்கு போன் செய்துவிட்டு... நாசூக்காய் வரமுடியாதண்ணா என்று சொல்லிவிட வேண்டியதுதான் என்று நினைத்தவளுக்கு இன்னொரு அதிசயம் காத்திருந்தது.

அன்று இரவு அவளிடம் சொன்னான் வினோத்.

''உங்க அண்ணனிடம் நாளை புறப்பட்டு வருவதாய் போன் செய்து சொல்லிவிடு... என்ன பார்க்கிறாய்... மாப்பிள்ளை என்ற மரியாதைக்காகவோ... விருந்து என்கிற மண்ணாங்கட்டிக்காகவோ இல்லை. என் அம்மா வாழ்ந்த வீட்டைப் பார்க்க வேண்டும் என்று தோன்றியது. அதற்காகத்தான்...'' வைஜயந்திக்கு திகைப்பும்... கூடவே வியப்பும் தான். வர மாட்டார் என்று நினைத்ததற்கு மாறாய் வர சம்மதித்து விட்டாரே என்ற திகைப்பு... எப்படியோ இந்த மட்டும் ஒத்துக் கொண்டாரே என்ற மகிழ்ச்சி...

உள்ளம் துள்ள உடனே ரங்கனுக்கு செய்தியை அறிவித்தாள்.

தன் அண்ணியிடமிருந்து அத்தகைய வரவேற்பை எதிர்பார்க்கவில்லை வைஜயந்தி.

தன்னை ஒரு புழுவாய் பார்த்த அண்ணியா...

தன்னை ஆரவாரமாய் வரவேற்பது... பரவாயில் லையே... என்று எண்ணினாள்.

காரிலிருந்து இறங்கிய புதுமணத் தம்பதியரை ஆர்ப்பாட்டத்துடன் வரவேற்றவள்... அவர்களை வாசலில் நிறுத்தி ஆரத்தி சுற்றினாள்.

"முதன் முதலாய்... ஜோடியாய் வந்திருக்கீங்க... ஆரத்தி எடுத்து உள்ளே அழைச்சிக்கிறதுதான் சம்பிரதாயம்... வலது காலை எடுத்து வச்சு உள்ளே வாங்க... வைஜயந்தி... இப்படி நீங்க ரெண்டு பேரும் ஜதையா வந்ததைப் பார்க்க அத்தை இல்லையேன்னு தான் வருத்தம்..." தேனில் குழைத்தது போல்... அண்ணியின் வாயிலிருந்து வந்த வார்த்தைகள் வைஜயந்திக்கு சிரிப்பூட்டின.

இந்த மதிப்பும் மரியாதையும் எனக்காக அல்ல. இப் போது எனக்கு வாய்த்திருக்கும் செழிப்பான வாழ்க்கைக்கு.. மீண்டும் பழைய வைஜயந்தியாய் வந்தால்... இதே வரவேற்பு. இருக்குமா... ஊகூம்.

பழையகுருடி கதை தான்.

இந்த நாடகத்திற்கு திரை விழுந்ததும்... வேறு எங்கே யாவது போய்விட வேண்டும்... இங்கே வந்தால் கேவலம்.

ஆமாம்... வினோத் எங்கே... கண்களால் தேடினாள் அவன் சுவற்றில் மாட்டியிருந்த பழைய புகைப்படங்களை உற்று நோக்கிக் கொண்டிருந்தான். ரொம்ப வருடங்



களுக்கு முன் எடுத்த படங்கள்... அவற்றில் வத்சலாவின் படங்களும் இருந்தன. ஆர்வத்துடன் ஒவ்வொன்றாய் பார்த்துக் கொண்டு வந்தான்.

பள்ளிப் பருவத்தில்... இரட்டைப் பின்னல்களில் ஒன்றை முன்புறம் போட்டுக் கொண்டு... புன்சிரிப்புடன் 'போஸ்' கொடுத்த அம்மாவின் படத்தைப் பார்த்ததும் முகத்தில் இருந்த இறுக்கம் தளர்ந்தது.

அம்மாவுக்கு திருமணம் ஆன புதிது போலும். வெட் கத்துடன் அப்பாவின் அருகே நின்றிருக்கும் படத்தைப் பார்த்ததும் அவன் முகத்தில் புன்னகை வந்தது.

அப்பாவும் சின்ன வயதில் வசீகரமாய் தான் இருந் திருக்கிறார்... அம்மாவின் அழகுக்குப் பொருத்தமாய்... அம்மாவின் மடியில் இருப்பது யார்... நானா... கண்களில் குறும்புடன்... உதட்டில் விஷமச் சிரிப்புடன்... அம்மா வின் முகத்தில் தெரிந்த தாய்மையின் பெருமை... அந்த போட்டோவைப் பார்த்ததும் உள்ளத்தில் நெகிழ்வும் அதனால் கண்களில் கசிவும்...

இதே போல வரிசையாய் போட்டோக்கள்...

ஒரு போட்டோவில் வினோத்தும் ரங்கனும் கட்டிப் பிடித்துக் கொண்டு... வெகு அந்நியோன்னியமாய் நின்றிருந்ததையும் பார்த்தான்.

ஒவ்வொன்றாய் பார்த்துக் கொண்டு வந்தவன் ஒரு படத்தின் முன் 'சட்'டென்று நின்றான்.

அந்தப் படம் அவனது கவனத்தை ஈர்த்தது. அருகே வந்த ரங்கன் "என்ன மாப்பிள்ளை... அது யாருன்னு பார்க்கிறீர்களா... நீங்கதான்... உங்க மடியில் இருப்பது யாருன்னு தெரிகிறதா... நம்ம வைஜயந்தி தான். அவ

ளுக்கு முதல் மொட்டை போட்டப்போ எடுத்தது... காது குத்தியதால் அழுது பலூன் வாங்கி வந்து கையில் கொடுத்து அழுகையை நிறுத்தினோம்... அப்போது எடுத்த படம்... பாருங்க... அப்பவே வைஜி மேல் உங்களுக்கு அன்பு... வருங்கால மனைவியோன்னு தெரியாம... மடியில் வச்சுகிட்டீங்க...'' என்று பரிகாசம் செய்தான் அந்த மைத்துனன்.

அதைக் கேட்கவும் பிடிக்காமல் அங்கிருந்து நகர்ந்தான் வினோத்...

அவன் அந்த வீட்டுக்கு வர சம்மதித்ததே. தன் தாய் வாழ்ந்த வீட்டைப் பார்க்க... தான் வளர்ந்து ஓடியாடிய பாட்டனாரின் இல்லத்தைப் பார்க்க... மாப்பிள்ளை உறவைக் கொண்டாட இல்லை. அந்த வீட்டின் ஒவ்வொரு இடத்தையும் பார்க்கும்போது... பழைய ஞாபகங்கள் மங்கலாய் மனத்திரையில் எட்டிப் பார்த்தன...

இதோ... இந்த முற்றத்தில் தான்... தாத்தா வெளியில் போய் விட்டு வந்ததும் கால் கழுவிக் கொள்வார். மேலிருந்து அடை மழையாய் கொட்டும்போது... தாத்தா அவனுக்கும் ரங்கனுக்கும் காகிதக் கப்பல் செய்து கொடுப்பார்... அதை முற்றத்து நீரில் விட்டு ரசிப்பார்கள்...

இந்தக் கூடம்... நன்றாக நினைவிருக்கிறது. தாத்தாவின் ஈஸிசேர் இருக்கும்... அதில் தாத்தா சாய்ந்திருப்பார். ஓடிவந்து தாத்தாவின் மடியில் அமர்வான் அவன். பாட்டி ஒரு தட்டில் வறுத்த கடலையும் வெல்லமும்... கொண்டு வந்து தாத்தாவிடம் தருவார்... கடலையை உடைத்து... பருப்புடன் வெல்லமும் சேர்த்து அவனுக்கு ஊட்டுவார் தாத்தா... வெல்லத்தை விட... அந்தப் பாசம் தான் இனித்தது போலும்...



இன்னும்... ரேழியில் பாட்டி மாவு திரிக்கும் ஓசை... பின் கட்டில் துணி துவைக்கும் சத்தம்... அவையெல்லாம் மறக்க முடியாதவை.

ஆடி மாதம் ஆனால் செல்வம் மாமா பட்டம் செய்து தருவார். மாமாவும் மூன்று வயது மருமகனும் நேரம் போவது தெரியாமல் மொட்டை மாடியில் நின்று பட்டம் விடுவார்கள்.

எல்லாமே... நெஞ்சில் நின்று விட்ட நினைவுகள். இனிய நினைவுகளில் மூழ்கியிருந்தவனை மெட்டி ஒலி கட்டி இழுத்தது.

''சாப்பிட வரணுமாம்...'' என்று அழைத்து விட்டுச் சென்றதும்... நிகழ்காலத்தின் கசப்பு உறைத்தது அவனுக்கு.

முகம் சுளித்தவாறு... வேப்பங்காயை சாப்பிடச் செல்வது போல வேண்டா வெறுப்பாய் நடந்தான்.

தலை வாழை இலை போட்டு இருவருக்கும் தடபுடலாய் விருந்து பரிமாறப்பட்டது. அண்ணனும் அண்ணியும் விழுந்து விழுந்து உபசாரம் செய்ய... திணறிப் போனாள் வைஜயந்தி.

வினோத்துக்கு அந்த விருந்து ருசிக்கவில்லை... யாருக்கு வந்த விருந்தோ என்று பெயருக்கு சாப்பிட்டான்.

அண்ணனின் பிள்ளைகள் தூர நின்று கொண்டு... வைஜயந்தியையும்... புதிதாய் வந்திருக்கும் மாமாவையும் சங்கோஜத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அவர்களுக்காக ஊரிலிருந்து விளையாட்டு சாமான்களையும்... விலையுயர்ந்த இனிப்பு வகைகளையும் இன்னும் அவர்களுக்கு இஷ்டமான க்ரீம் பிஸ்கட்... காட்பரீஸ் என்று வாங்கி வந்திருந்தாள்.

அவர்களுக்கு அவற்றைத் தந்தபோது அவள் அடைந்த குஷி...

இங்கிருக்கும்போது ஒரு எட்டணா சாக்லேட் வாங்கித் தர முடியவில்லையே என்று ஏங்கியது நினைவுக்கு வந்தது. அதை ஈடு செய்யும் வகையில்... இப்போது கை நிறைய வாரிக் கொண்டு வந்திருந்தாள்.

அவற்றை அவர்களிடம் தந்து விட்டு... ''எங்கே... அத்தைக்கு முத்தம் கொடுங்கள்'' என்று கன்னத்தைக் காட்ட... ஓரக் கண்ணால் வினோத்தைப் பார்த்துக் கொண்டு வெட்கத்துடன் முத்தம் கொடுத்தனர்.

''வைஜிம்மா... மாப்பிள்ளையை அழைத்துக் கொண்டு வெளியே போய் வாயேன்... ஜாலியா ஒரு சுற்று சுத்திட்டு வரலாம் இல்லையா...'' என்றான் ரங்கன்.

''அதெல்லாம் வேண்டாம்... இங்கே... என் அம்மாவோட சாமான்கள் என்று ஏதாவது இருக்கிறதா... புத்தகம்... பழைய உடை... அம்மாவோட கை வேலை என்று ஏதாவது... இருந்தால் கொடுங்கள். பார்க்க ஆவலாய் இருக்கிறது...'' என்று விசாரித்தான் வினோத்.

''இருக்கிறதா என்று பார்க்கிறேன் மாப்பிள்ளை. ரொம்ப நாளா பரண் மீது ஒரு பெட்டி இருக்கிறது. அதில் பார்க்கிறேன். மாடியில் கூட ஒரு அலமாரி பூட்டியே இருக்கு... அதிலும் பார்க்கலாம் இருங்க...'' என்றவன் மின்னலாய் செயல்பட்டான்.

பரண்மேல் இருந்த பெட்டியில் எதுவும் இல்லை. நாலைந்து கரப்புகள் அதில் வாசம் செய்ய... வேண்டாத ஓட்டல் ஒடிசல் சாமான்கள்தான்.

எதற்காக இதையெல்லாம் தூக்கிப் போடாமல் வைத்திருந்தாள் அம்மா... அப்பா உபயோகப்படுத்தியது



என்றா... இருக்காதே... இருவரிடையே அப்படியொன்றும் அந்நியோன்னியம் கிடையாதே.

ம்ம்... யார் கண்டது. அப்பா இறந்த பின்பு அம்மாவுக்கு ஞானோதயம் வந்திருக்கலாம்... அதனால் இவற்றை பத்திரமாய் வைத்திருந்தாளோ என்னவோ.

அது போகட்டும்... இதில் அத்தையின் வஸ்துன்னு எதுவும் இல்லையே...

பெட்டியை மூடி வைத்து விட்டு மாடியேறினான் ரங்கன்.

பூட்டிக் கிடந்த அலமாரியைத் திறந்து பார்த்தான்.

பழைய புத்தகங்கள்... தூசிப் படிந்து கிடந்தன.

அந்தக் காலத்து சுதேசமித்திரன்... கலைமகள்... தினமணி கதிர் வார மாத இதழ்கள்... தவிர ஒன்றிரண்டு பைண்ட் பண்ணிய புத்தகங்கள் உதட்டைப் பிதுக்கினான் ரங்கன்.

''சாரி... மாப்பிள்ளை... அத்தையோடதுன்னு எந்தப் பொருளும் கிடைக்கவில்லை. நிதானமாய் தேடிப் பார்க்கிறேன். அப்படி ஏதாவது கிடைத்தால் எடுத்து வைத்து உங்களுக்குக் கொடுக்கிறேன்'' என்று சொன்னான் ரங்கன்.

வினோத்திற்கு ஏமாற்றம்... கூடவே கடுப்பும் தான்.

தாயை வேண்டாம் என்று ஒதுக்கியவர்கள்... அவருடைய உடைமைகளை மட்டும் பத்திரப்படுத்தி வைப்பார்களா என்ன... அப்படி எதிர்பார்த்தது என் முட்டாள் தனம். சே... தாயை புறக்கணித்தவர்களின் சங்காத்தமே கூடாது என்று இருந்தால்... அவர்கள் வீட்டிற்கு மாப்பிள்ளையாகும்படி ஆனது என் கர்மம்தான்.

நோ... இதை... அப்பாவால் வந்த வினை என்றுதான் சொல்ல வேண்டும்.

வேலியோடு போன ஓணானை... வீணாய் மடியில் கட்டிக் கொண்ட கதையாய்... ஒட்டும் உறவும் வேண்டாம் என்று தொலைந்து கிடந்த உறவைக் கொண்டாடி... அவர்கள் வீட்டுப் பெண்ணை என் தலையில் கட்டி விட்டார்...

வீட்டுக்கு வந்த மாப்பிள்ளையாம்... கேட்கவே எரிச்சலாக இருக்கிறது. 'மாப்பிள்ளை' என்ற வார்த்தை காதில் பட்டாலே உடம்பெல்லாம் தகிக்கிறது... பற்களைக் கடித்தான் அவன்.

அவனது அப்போதைய மனநிலையை புரிந்து கொள்ளாமல் அப்பாவியாய் பேசினான் ரங்கன்.

"வருத்தப்படாதீங்க மாப்பிள்ளை... தேடினால் நிச்சயம் ஏதாவது..." என்றவனை இடைமறித்தான் வினோத்.

"இதோ பார்.. இப்படி மாப்பிள்ளை.. கீரிப்பிள்ளைன்னு கூப்பிடுவதை முதல்ல நிறுத்து. கேட்க சகிக்கவில்லை" என்று சீறினான் அவன். அதைக் கேட்டதும் ரங்கனின் முகம் வாடியது. கவலையுடன் தங்கையைப் பார்த்தான்... 'நான் ஏதாவது தப்பா பேசிவிட்டேனா...' என்று அவனது பார்வை கேட்டது.

வைஜயந்திக்கும் திகைப்புத்தான்.

பரவாயில்லையே... வந்ததிலிருந்து தன் கோபத்தை வெளிக்காட்டாமல் அடங்கி இருக்கிறாரே... என்று எண்ணி உள்ளூர மகிழ்ந்தவள் அவனது திடீர் சீற்றத்தைக் கண்டு அதிர்ந்து போனாள்.

எங்கே... எதையாவது சொல்லி... தங்களிடையே நிலவும் பனிப்போரை வெளிவிட்டு விடுவாரோ என்று பதறினாள்.



அண்ணனுக்கும் அண்ணிக்கும் தெரிந்தால் அது அசிங்கமாகி விடுமே... இப்போது இருக்கும் மதிப்பும் மரியாதையும் அதள பாதாளத்திற்கு போய்விடும். அதற்குள் ஏதாவது செய்ய வேண்டும்.

அந்த தவிப்புடன் அவள் சொன்னாள்.

"அண்ணா... அவர் என்ன சொல்கிறார் என்றால்... அவருக்கும் உனக்கும் சில வருடங்கள் தான் வித்தியாசம். தவிர.. இந்த வீட்டில் மாப்பிள்ளை என்ற உறவை விட.. நம் அத்தையோட பிள்ளை என்ற உரிமை தான் அதிகம்... அதனால் இந்த 'மாப்பிள்ளை' என்பதெல்லாம் வேண்டாம்... 'வினோத்' என்று பெயர் சொல்லி அழைத்தால் போதும் என்கிறார்" என்றவள் கணவனை கெஞ்சுவது போல பார்த்தாள்.

"ஓ! அப்படியா விஷயம்... அப்ப சரி... அப்படியே பெயர் சொல்லி அழைத்தால் போச்சு..." என்று சமாதானமடைந்தான் ரங்கன்.

கடவுளே... இந்த நாடகம் அந்த மேடையில் இன்னும் எத்தனை நாளைக்கோ... புலம்பியது மனம்.

இப்படி நடிப்பதும் வெறுப்பாக இருந்தது.

எப்போதடா கிளம்புவோம் என்று கூடத் தோன்றியது.

எந்த நேரத்திலும்... எப்போது வேண்டுமானாலும் எரிமலை வெடிக்கக் கூடும் என்று நடுங்கிக் கொண்டு மூச்சை இழுத்துப் பிடிக்கும் டென்ஷனுடன் அவளால் இருக்க முடியவில்லை.

அங்கே... ஊரில் என்ன வேண்டுமானாலும் பேசிக் கொள்ளட்டும்.. எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்ளட்டும்.

இங்கிருக்கும் வரை அமைதியாய் இருந்து என் மரியாதையைக் காப்பாற்றினால் போதும்... அதைத் தான் வேண்டியது அவளது உள்ளம்.

அவளது தவிப்பை உணராதவனாய் அவன் யாரு டனோ 'செல்'லில் பேசிக் கொண்டிருந்தான். யாருடனோ என்ன... அந்த ரூபாவுடன்தான் இருக்கும்... அதோ... பல்லைக் காட்டிச் சிரிக்கிறார் என்றால் நிச்சயம் அவள்தான்.

அவனது நகைப்பைப் பார்த்துவிட்டு.. ரூபாவின் மேல் பொறாமை வந்தது வைஜயந்திக்கு.

வினோத்தின் இதயத்தை வலை போட்டு இழுத்து.. தன் வசம் வைத்துக் கொண்டிருக்கிறாளே...

அவள் மட்டும் வந்திரா விட்டால்...

ப்ச்சு... நடந்ததை நினைத்து வருந்துவது... குழிப் பிள்ளையை எடுத்து வைத்துக் கொண்டு ஒப்பாரி வைப்பது மாதிரிதான்.

அதைவிட நடக்கப்போவதைப் பற்றி யோசிப்பது புத்திசாலித்தனம்...

இரண்டு வருடங்கள் விரைவில் ஓடிவிடும்... அதற்கு பின்...

எங்கே... எப்படி... எந்த மாதிரி வாழ்க்கையை அமைத் துக் கொள்ள வேண்டும் என்று திட்டமிட வேண்டும். இந்தப் பணமும் பகட்டும் வேண்டவே வேண்டாம். என் படிப்புக்கு ஏற்ற சின்ன வேலையாக இருந்தாலும் போதும். ஏழைக்கேத்த எள்ளுருண்டையாய் நினைத்து வாழ்க்கையை ஓட்டி விடலாம் தான்... அதுவும் அருகில் கூடாது... எங்கேயாவது தொலைவில்... யாரும் அண்டாத தொலைவில்... ஒரு வேளை சாப்பிட்டாலும் போதும்.



நிம்மதியாய் வாழலாம். ஆனால்... நினைக்கும்போதே மனதில் நிம்மதியில்லையோ... எங்கோ வலிக்கிறதே. ஏன் என்று தெரியவில்லை அவளுக்கு.

அந்த நேரத்தில் ரங்கன் வந்து சொன்னான்.

"வைஜி... உங்க ரெண்டு பேருக்கும் மாடியறையை ரெடி பண்ணி வச்சிருக்கோம். மாப்... தப்பு... வினோத்தை அழைத்துக் கொண்டு மாடிக்குப் போம்மா.. நாளைக்கு சீக்கிரம் புறப்படணும்னு சொன்னார் வினோத். சீக்கிரமே படுத்துத் தூங்கினால் நல்லது இல்லையா. அதான்..."

வைஜயந்தி கணவனைத் திரும்பிப் பார்த்தாள்.

அவனும் புறப்பட்டான். அவனுக்கும் படுத்தால் போதும் என்று இருந்தது போலும்... அதுதான் மறுப்பு சொல்லவில்லை என்று நினைத்தாள் அவள்.

இருவரும் மாடியேறுவதை புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தான் ரங்கன்.

அறையின் கதவைத் திறந்து உள்ளே நுழைந்த இரு வருக்கும் படு அதிர்ச்சி... வைஜயந்திக்கோ... பூமி அப் படியே பிளந்து தன்னை விழுங்கி விடக் கூடாதா என்று துடித்தாள்...

## 16

சாந்தி முகூர்த்தம் போல் அறையில் அலங்காரம் செய்யப் பட்டிருந்தது.

கட்டிலின் மேல் புது விரிப்பு... அதன் மேல் மல்லிகை மலர் தூவப்பட்டிருந்தது. கட்டிலைச் சுற்றிலும் மலர்ச்

சரங்கள்... டைபாயின் மேல் பலவகை இனிப்பு வகைகள்... பழங்கள்... ஊதுபத்தியின் மணம் அறையினுள் சுழன்றது.

அவற்றையெல்லாம் கண்டதும் வைஜயந்தியின் நெஞ்சுக்குள் 'பகீர்' என்று தீப்பிடித்துக் கொண்டது...

அய்யோ... இதென்ன விபரீதம்...

அண்ணன் மாடிக்கும் கீழுக்குமாய் அலைந்தது இதற்குத் தானா... தெரிந்திருந்தால் தடுத்திருக்கலாமே... இப்போது எப்படிச் சமாளிப்பது... கையைப் பிசைந்து கொண்டு நின்றிருந்தாள் அவள்.

வினோத் அவளை சுட்டெரிப்பது போலப் பார்த்தான்.

''இது உன் 'பிளானா..' உன் அண்ணனிடம் அழுது புலம்பினாயாக்கும்... அதுதான் இந்த ஏற்பாட்டை செய்திருக்கிறான்'' கர்ஜனையாய் வந்தது அவனது குரல்...

''அய்யோ... எனக்கு எதுவும் தெரியாது...'' என்று அலறுவது போல சொன்னாள் அவள்.

ஆனால்... அதை நம்பாதவன் போல வெறித்தான் வினோத்.

அந்தத் தகிக்கும் பார்வையில் தான் முழுவதும் எரிந்து சாம்பலாகி உதிர்வது போல உணர்ந்தாள் வைஜயந்தி.

''தட்... தட்... தட்'' கதவு தட்டும் ஓசைக்கேட்டு ஓடினாள் அவள்.

வெளியே பால் சொம்புடன் நின்றிருந்தாள் சரோஜா.

''இதை மறந்துட்டியே வைஜி...'' என்றாள் புன்னகையுடன்...

அறைக்குள் நெருப்பு ஜ்வாலை ஒன்று தகித்துக் கொண்டிருப்பதை அறியாமல் புன்னகைக்கிறாளே இந்த



அண்ணி... இதெல்லாம் யார் கேட்டது... இந்தப் பால் சொம்பைப் பார்த்தால்... ஜ்வாலை இன்னும் கொழுந்து விட்டு எரியுமே... உள்ளுக்குள் குமைந்தவாறே... அந்தப் பால் சொம்பை வாங்கிக் கொண்டாள்.

''எதுக்கண்ணி இந்த அலங்காரம் எல்லாம்... தெரிந்திருந்தால் வேண்டாம் என்று தடுத்திருப்பேன்'' என்று சொன்னாள் வைஜயந்தி.

''என்னம்மா... கல்யாணம்தான் நாங்க இருந்து பண்ண முடியாமல் போச்சு... இதையாவது நடத்தி திருப்தி பட்டுக்கலாமேன்னுதான்... சரிம்மா... நேரம் கடத்தாமல் உள்ளே போய் தாளிட்டுக்கோ வைஜி...''

வேறு வழியில்லையே... எதுவுமே வேண்டாம் என்று கீழிறங்கி ஓட முடியாதே...

பெருமூச்சுடன் அறைக்குள் நுழைந்தாள். கதவைத் தாழிடவும் பிடிக்கவில்லை.

கையில் சொம்புடன்... இப்போது என்ன செய்வது என்று விழித்துக் கொண்டு நின்றிருந்தாள்.

வினோத் அவளை ஏளனமாய் பார்த்தான்.

''பாலும் வந்தாச்சா... குட்... அதில் சர்க்கரைக்கு பதிலாய் ஏதாவது சொக்குப் பொடி சேர்த்திருக்கிறதா... இதோ பார்.. இதற்கெல்லாம் மயங்குகிற ஆசாமி நான் இல்லை... தெரிந்து கொள்... இரண்டு வருடங்கள்... என் சுண்டு விரலின் நுனி கூட உன் மீது படாது... அதை உறுதியாகச் சொல்கிறேன்...'' வார்த்தை அம்புகளை வீசினான் அவன்.

''அய்யோ... என்னை நம்புங்கள்... ப்ளீஸ்... அண்ணாவு அண்ணியும் இப்படிச் செய்வார்கள் என்று எனக்கு

தெரியாது... தெரிந்திருந்தால் நான் தடுத்திருப்பேனே... எனக்கும் இதெல்லாம் பிடிக்கவில்லைதான். என்ன செய்வது... அவர்களின் திருப்திக்கு செய்து வைத்திருக்கிறார்கள். நமக்கென்ன வந்தது... வழக்கம் போல் நாம் விலகியே படுத்துக் கொள்ளலாம்...'' என்றாள் கெஞ்சும் குரலில்.

அவளை முறைத்துவிட்டு... கட்டிலின் ஒரு ஓரமாய் போய்ப் படுத்துக் கொண்டான் வினோத்.

பால் சொம்பை ஒரு மூலையில் வைத்து விட்டு... ஒரு தலையணையையும்... போர்வையையும் எடுத்துக் கொண்டு அந்த அறையின் மறு ஓரத்திற்கு சென்றாள் வைஜயந்தி.

போர்வையை விரித்துப் போட்டு... அதில் படுத்தவளுக்கு உறக்கம் வர மறுத்தது.

எப்படி வரும்... உள்ளம் ஊமைக்குழந்தையாய் வேதனைப்படும்போது இமைகள் மூடவும் மறுக்கின்றனவே. எதை எதையோ நினைத்து அல்லல்பட்டது.

இன்னும் எத்தனை நாட்களுக்கு இப்படி மல்லுக்கட்ட முடியும்... சலிப்புடன் நினைத்தாள்.

இரண்டு வருடம் என்பது இரண்டு யுகங்களாய் பட்டது அவளுக்கு... அத்தனை நாட்கள் வினோத்துடன் எப்படி காலம் கழிப்பது...

பேசாமல் விலகி எங்கேயாவது போய் விடலாமா என்று கூட யோசித்தாள்...

ஆனால் மாமாவின் முகம் அவள் மனசுக்குள் வந்து கெஞ்சியது... அவருக்கு மதிப்புக் கொடுத்து... அவருடைய விருப்பத்திற்கு மதிப்பு கொடுத்து இருக்கத்தான் வேண்



டும். தன்னை அழைத்து வந்து அன்பும் பாசம் காட்டிய அந்த அன்பு உள்ளத்திற்கு நான் செலுத்தும் நன்றிக் கடன் அதுதான்.

எவ்வளவோ துன்பங்களை சகித்துக் கொண்டேன். பத்தோடு பதினொன்று என்பதுபோல் இதையும் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்...

திரும்பிப் பார்த்தபோது வினோத் உறக்கத்தில் ஆழ்ந்து விட்டிருந்தான்.

அதெப்படி... நித்ரா தேவிக்கு ஆண்கள் என்றால் பிடிக்கும் போல... உடனே போய் அணைத்துக் கொண்டு விடுகிறாளே... பெண்ணுக்கு பெண் எதிரி என்பது போல என்னிடம் வரவே தயங்குகிறாள்... வருத்தத்திலும் சிரிப்பு வந்தது அவளுக்கு.

அவர்கள் புறப்படும் போது... சரோஜாவும் ரங்காவும் வைஜயந்திக்கு பட்டுப் புடவையும்... வீட்டு மாப்பிள்ளைக்கு மயில்கண் வேஷ்டியும் சட்டையும் வைத்துக் கொடுத்தார்கள்...

இருவரையும் விழுந்து கும்பிட்டாள் வைஜயந்தி.

''சீக்கிரமே என்னை மாமா ஆக்கும்மா... அதுதான் எனக்கு வேண்டும்'' என்று ரங்கன் வாழ்த்த மிரண்டுப் போய் கணவனைப் பார்த்தாள் அவள். அவள் பயந்தது போலவே நடந்தது.

"அந்த ஆசையெல்லாம் வைத்துக் கொள்ள வேண்டாம்..." என்று 'வெடுக்'கென்று பதில் சொன்னான் வினோத்.

'இவன் என்ன சொல்கிறான்... இவனுக்கு குழந்தை வேண்டாம் என்ற எண்ணத்திலா...' குழப்பத்துடன் பார்த்தான் ரங்கன்.

மறுபடியும் சமாளிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டாள் வைஜயந்தி.

"வந்து அண்ணா... இப்போதைக்கு வேண்டாம் என்று இருக்கோம். அதைத்தான் அப்படிச் சொல்கிறார்.." என்று சொல்லிவிட்டு வினோத்தை அர்த்தத்துடன் பார்த்தாள் அவள்.

வினோத் தாடை இறுக... முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

அவர்களது சாமான்களை எடுத்துக் காரில் வைத்துக் கொண்டிருக்கையில் ஒரு இளைஞன் ஏர்பேக்குடன் வந்தான்...

சரோஜாவின் முகத்தில் ஆயிரம் வால்ட் பல்பு எரிந்தது.

"சந்தோஷ்... என்ன... திடீர்னு வந்து நிற்கறே..." என்று கேட்க...

"சும்மா... பார்க்கணும் என்று தோணிச்சு... அதான் வந்துட்டேன்" என்று பதில் சொன்னவனின் கண்கள் ஆச்சர்யத்துடன் வைஜயந்தியின் மேல் பதிந்தன.

"நம்ம வைஜயந்திடா... இப்போ... சமீபத்தில் தான் கல்யாணம் ஆச்சு... அவர்தான் மாப்பிள்ளை பேரு வினோத்... அத்தை பிள்ளைதான்... விருந்துக்கு அழைத்தோம்... அதான் வந்துட்டு... இப்போ புறப்பட்டாச்சு... நல்ல வேளை... அவர்கள் புறப்படும் முன்னால் வந்தாயே..." என்றாள் சரோஜா.

வினோத்தின் கரம் பற்றி குலுக்கினான் சந்தோஷ்.

வைஜயந்தியைப் பார்த்து "எப்படி இருக்கே வைஜயந்தி." என்று அவளை குசலம் விசாரித்தாலும்... அவனது பார்வை எதையோ சொன்னது.



குரலிலும் கொஞ்சம் கரகரப்பு... எதிர்பாராமல் அவளை சந்தித்ததால் உணர்ச்சி வசப்பட்டானோ என்னவோ...

"நான் சந்தோஷமா இருக்கேன்" என்று பதில் சொன்னாலும்... அவள் முகத்தில் வாட்டம் இருந்ததை அவனும் கவனித்தான்.

அருகே இருந்த பெரிய காரையும்... வினோத்தையும் ஒரு பார்வை பார்த்துவிட்டு... "பார்த்தாலே தெரிகிறது வைஜயந்தி... என் வாழ்த்துக்கள்..." என்றான் கம்மிய குரலில்.

"புறப்படலாம்" என்று சொல்லிவிட்டு காரில் போய் அமர்ந்தான் வினோத்.

"அண்ணா... அண்ணி வரட்டுமா... குட்டிங்களா... அத்தை டாடா... சந்தோஷ்... வருகிறேன்..." என்று விடை பெற்றுக் கொண்டபோது சந்தோஷ் எதையோ சொல்ல வருவது கண்டு நின்று கேட்டாள்.

"எனக்கு சென்னையில் ஒரு இன்டர்வ்யூ வந்திருக்கு வைஜயந்தி... நாளைக்குப் புறப்படுகிறேன்" என்றான்... தான் வரும் விஷயம் அவளுக்குத் தெரியட்டும் என்ற ஆர்வமாய்...

"ஓ... வேலை கிடைக்க என் வாழ்த்துக்கள் சந்தோஷ். நீங்க கண்டிப்பாய் எங்க வீட்டுக்கு வரணும்... என் அண்ணியோட உடன் பிறந்தவர்... எனக்கும் சொந்தம் மாதிரி... அதை நினைவில் வைத்துக் கொண்டு மறக்காமல் வாங்க சந்தோஷ்..." என்று சொன்னாள் அவள்.

அதற்குள் பொறுமையிழந்தவனாய் ஆரன் அடித்து அவளை அழைத்தான் வினோத்.

இன்னும் நின்றால்... தன்னை அங்கேயே விட்டு விட்டுப் போய் விடுவான் என்று அஞ்சி... காரை நோக்கி விரைந்தாள் வைஜயந்தி.

எல்லோருக்கும் கையசைத்து விட்டு... முன் சீட்டில் அமர்ந்து கொண்டாள்.

கார் புறப்பட்ட சில வினாடிகள் கழித்து திரும்பிப் பார்க்கையில்... எல்லோரும் வீட்டுக்குள் போயிருந்தார்கள். சந்தோஷைத் தவிர...

சந்தோஷ் மட்டும் அங்கேயே நின்றிருந்தான். கார் சென்ற திசையை வெறித்த வண்ணம்.

அதைப் பார்த்து சங்கடப்பட்டாள் வைஜயந்தி...

'சந்தோஷ்... நீங்கள் இன்னும் மாறாமல் இருக்கிறீர்களே... உங்கள் மனதில் இருக்கும் என் நினைவுகளை துடைத்தெறிவது தான் உங்களுக்கு நல்லது...' வேதனையுடன் நினைத்தது நெஞ்சம்...

''யார் அவன்...'' கணவனின் திடீர் கேள்வியில் திடுக்கிட்டுப் பார்த்தாள் வைஜயந்தி.

''யார்... யாரைக் கேட்கிறீர்கள்...'' தடுமாற்றத்துடன் கேட்டாள் அவள்.

''அதான்... புறப்படும் வேளையில் 'திடும்' என்று வந்து நின்றானே... 'சந்தோஷ்' என்று... அவன் தான்.''

''ஓ... அவரா... அவர் அண்ணியின் சகோதரர்.''

''அவன் அடிக்கடி உன் வீட்டுக்கு வருவான் போலத் தெரிகிறது...''

எதற்காக இந்தக் கேள்வி என்று விளங்காமல் பதில் சொன்னாள் அவள்.



''அப்பப்போ வருவதுண்டு. குழந்தைகளைப் பார்க்க ஆசையாய் வருவார்.''

''குழந்தையைப் பார்க்கவா... இல்லை... குமரிப் பெண்ணைப் பார்க்கும் ஆசையாலா... எனக்கு என்னவோ இரண்டாவது காரணம் தான் உண்மை என்று படுகிறது'' குதர்க்கமாய் பேசும் அவனை வெறித்துப் பார்த்தாள் அவள்.

வேண்டும் என்றே வார்த்தைகளால் வதைக்கப் பார்க்கும் இவரிடம் எதைச் சொல்லி விளக்குவது... அப்படியே சொன்னாலும் நம்புவாரா. அதை விட மௌனமாய் இருப்பதே மேல்...

அந்த எண்ணத்தில் சன்னல் வெளியே தெரியும். இயற்கையில் தன் கவனத்தைப் பதித்தாள். வழியெல்லாம் ஓங்கி உயர்ந்து நின்ற தென்னை மரங்களும்... நடுநடுவே கண்களில் பட்ட பசுமையான நெல் வயல்களும்.. தூரத்தில் தெரிந்த மலையும் கண்களுக்கும் மனதுக்கும் ரம்யமாய் இருந்தன. வழிப்பயணம் முழுக்க மௌனம்தான்.

வழியில் ஒரு ஓட்டலின் முன் வண்டியை நிறுத்தினான்.

சாப்பிடலாமா... வருகிறாயா என்று கேட்காமல்... காரிலிருந்து இறங்கி நடந்தான் வினோத். அவளைப் பற்றி கவலையில்லாமல்...

அப்படி இந்த சாப்பாடு அவசியமா... அதைவிட பட்டினி கிடப்பதே மேல்... அந்த வைராக்கியத்துடன் காருக்குள் அமர்ந்திருந்தாள் வைஜயந்தி.

அரைமணி நேரம் கழித்து வந்தவன்...

''ஏன் வரவில்லை... வரவேண்டியதுதானே...'' என்று அதிகாரத்துடன் கேட்டது வேறு எரிச்சலைக் கிளப்பியது.

என்னை மனைவியாய் நினைத்து அழைக்க வேண்டாம். ஒரு மனுஷியாய் மதித்து அழைத்திருக்கலாம் தானே. நாக்கு துடித்தாலும்... அதை அடக்கிக் கொண்டு "எனக்குப் பசியில்லை" என்று மட்டும் சொன்னாள்.

'ஏன் பொய் சொல்கிறாய்' என்று வயிறு ஓலமிட்டது அதனை அடக்கி வைக்க 'மினரல் வாட்டரை' எடுத்து வயிறு நிறைய குடித்தாள்.

உன் இஷ்டம்... எனக்கென்ன... என்பதுபோல தன் தோள்களைக் குலுக்கியவன் காரைத் திறந்து அமர்ந்து கொண்டான்.

பசியும் சோர்வும் கைக்கோர்த்துக் கொண்டு அவளை ஆட்டுவிக்க... அப்படியே சீட்டில் சாய்ந்து கொண்டு கண்களை மூடிக் கொண்டாள்.

மெல்ல... மெல்ல தூக்கம் அவளை ஆட்கொண்டது. அவளது தலை சாய்ந்தது... ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தவளின் தலை சரிந்து அவனது தோளில் மெல்ல பதிந்தது.

எரிச்சலுடன் திரும்பினான் வினோத்... அவளை விலக்க நினைத்தவன்... அவளது முகத்தில் தெரிந்த சோர்வையும்... குழந்தைப் போன்ற உறக்கத்தையும் பார்த்துவிட்டு தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டான்.

பாவம்... நல்ல தூக்கம்... ஏன் கலைக்க வேண்டும்.. இளகியவனாய்.. தன் தோளில் முகம் வைத்து உறங்கும் மனைவியின் உறக்கம் கெடாமல் நிதானமாய் வண்டியை ஓட்டினான்...

அவள் கூந்தலில் சூடியிருந்த மல்லிகை மணமா...

இல்லை அவளது மேனியிலிருந்து வந்த சந்தன சோப்பின் மணமா... ஏதோ ஒன்று அவனது நாசியை



வருடி... மூளையை கிறுகிறுக்க வைத்தது.. கஷ்டப்பட்டு மனதை அடக்கி வைத்தான் வினோத்.

தோட்டத்தில் பூத்திருந்த மலர்களைத் தொடுத்து மாலையாக்கி மாமாவின் படத்திற்கு அணிவித்துக் கொண்டிருந்த வைஜயந்தி... வேலைக்காரன் தன்னிடம் ஏதோ சொல்ல வந்ததை அறிந்து நிதானித்தாள்.

"யாரோ உங்களைப் பார்க்க வந்திருக்காங்கம்மா" என்றான் அவன்.

யார் வந்திருப்பது என்று யோசனையுடன் கூடத்திற்கு வந்தவள்... வந்திருப்பவனைக் கண்டு ஆச்சர்யம் அடைந்தாள்.

சந்தோஷ்!

"வாங்க சந்தோஷ்... உட்காருங்க... 'இன்டர்வ்யூ' முடிந்து விட்டதா.. வேலை கிடைத்ததா சந்தோஷ்" என்று விசாரித்தாள் வைஜயந்தி.

"வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கு வைஜயந்தி... இனி இந்த ஊரில்தான் வாசம்... புறப்படுவதற்கு முன் உன்னைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்..."

"வந்ததுக்கு சந்தோஷம்... சந்தோஷ்... ஆமாம்... எங்கே தங்கியிருக்கிறீர்கள்..."

"இந்த ஊரில் தான் என் சித்தப்பா இருப்பது... அங்கேதான் தங்கியிருக்கிறேன் வைஜயந்தி... தனி வீடு பார்க்கும் உத்தேசம் இல்லை... சித்தப்பா ஒப்பவும் மாட்டார். ஆ... மறந்து விட்டேனே... சரோஜா உனக்காக பலகாரம் செய்து அனுப்பியிருக்கிறாள். இந்தா வைஜயந்தி" என்று அவன் நீட்டிய பையை வாங்கிக் கொண்டாள்.

அந்தப் பெரிய வீட்டை கண்களால் அளந்து விட்டுக் கேட்டான்.

"எல்லா வசதிகளும் உனக்கு கிடைத்திருக்கிறது. அதை நினைக்கிறபோது எனக்கு மகிழ்ச்சி தான் வைஜயந்தி ஆனால்... இப்போ நீ சந்தோஷமா இருக்கிறாயா... வைஜயந்தி."

அந்த கேள்வி அவளைத் திகைக்கச் செய்தது.

"ஏன்... ஏன் கேட்கிறீங்க சந்தோஷ்..." கொஞ்சம் தடு மாற்றத்துடன் கேட்டாள் அவள்.

"என்னவோ தோணிச்சு... கேட்டேன்.. பதில் சொல்லு வைஜயந்தி."

"நான் சந்தோஷமாகத்தான் இருக்கிறேன். எனக்கு எந்தக் குறையும் இல்லை சந்தோஷ்..."

"அதை உன் வாய் சொல்கிறதே தவிர... முகம் காட்ட வில்லையே வைஜயந்தி... எதையோ பறி கொடுத்தவள் போலத் தெரிகிறாயே... புது மணமகளிடம் இருக்கும் கலகலப்போ... கண்களில் மினுமினுப்போ... கணவ னுடன் தனிமையில் இருக்க வேண்டும் என்ற பரிதவிப்போ எதுவுமே உன்னிடம் இல்லையே. அதான் கேட்டேன். உன் மனதில் ஏதாவது குறையா..."

"அதெல்லாம் ஒன்றுமில்லையே சந்தோஷ்..." தலை குனிந்து சொன்னாள் அவள்.

"ஊகூம்... பொய் சொல்றே வைஜயந்தி எங்கே என்னைப் பார்த்து சொல்... பார்ப்போம்... உன்னால் அது முடியாதும்மா... இதோ பார் வைஜயந்தி... உன் பிரச்சனையை என்னிடம் தாராளமாய் சொல்லலாம்... நீதான் அன்றைக்கு சொன்னாயே... நான் உனக்கு சொந்தம்



மாதிரின்னு... அந்த உரிமையில் கேட்கிறேன்ம்மா... எனக்கு உன் சந்தோஷம் தான் முக்கியம்..."

ஆதரவாய் அவன் பேசுவதைக் கேட்டு நெஞ்சு விம்மியது. அழுகை வெடித்து வரும்போல் இருந்தது. பற்களால் இதழ்களை அழுத்திக் கொண்டாள்.

அவளது தயக்கத்தைக் கண்டு அவன் மனம் விட்டுப் பேசினான்.

"அப்போ... என்னை நீ அந்நியனாய் தான் நினைக்கிறே. அப்படித்தானே. அதனால் தான் இந்தத் தயக்கம்... ஒன்றைத் தெரிந்து கொள் வைஜயந்தி... என் தங்கையை உன் அண்ணாவிற்கு கட்டிக் கொடுத்தபோதே... நீ என் மனதில் குடியேறிட்டே.... உன்னை மணக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். ஆனால் சரோஜா அதுக்கு குறுக்கே நின்றாள்... நான் இதுவரைக்கும் கல்யாணமே பண்ணிக்காமல் இருப்பதற்கு காரணமே உன் மீது நான் வைத்திருக்கும் அன்பு தான்... என் வாழ்க்கையில் வந்த தேவதை நீ... உன்னை இழக்க மனமில்லை எனக்கு... அதான்... என் வீட்டினரின் மனசை மாற்றி... அவர்களின் சம்மதத்துடன் உன்னைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்று காத்திருந்தேன்... எனக்கு ஒரு அசட்டு நம்பிக்கை... என் வைஜயந்தி எங்கே போய் விடுவாள் என்றுதான். உன் அண்ணனால் உனக்கு கல்யாணம் செய்து வைக்க முடியாது. அதனால் காத்திருப்போமே என்று இருந்தேன். ஆனால் திடும் என்று மாமான்னு ஒருத்தர் வருவார்... விதி அவர் ரூபத்தில் வந்து விளை யாடப் போகிறது என்று எனக்கு தெரியாமல் போனது. கிணற்று நீரை ஆற்று வெள்ளம் கொண்டு போகுமான்னு அசட்டு தைரியத்துடன் இருந்தேன்... ஆனால் கனவிலே

வந்து சுருட்டிக் கொண்டு போனது தான் என் இ
அதிர்ஷ்டம்'' சொல்லும்போது அவனது குரல் தழுதழுத்தது

அவளுக்கும் தெரியும் தான்...

சந்தோஷின் பார்வையில் தெரிந்த காதலை உணர
முடியாத முட்டாளில்லை அவள்.

ஏதோ காரணம் சொல்லி அடிக்கடி வீட்டுக்கு வருவதும்...
எதையோ சாக்கு வைத்து தன்னிடம் அவன் பேச
முயல்வதும் அவளுக்கு மட்டுமல்ல... அண்ணிக்கும்
குறிப்பாக உணர்த்தியது. தன்னையும் ஒருவன் நேசிக்
கிறான்... தனக்காக தவம் கிடக்கிறான் என்ற விஷயம்
உள்ளத்தைக் கிளுகிளுக்கச் செய்தாலும்... இது நடக்காத
விஷயம் என்று மனக்குரல் இடித்துரைத்தது.

தன் அடிமை வாழ்விற்கு விடுதலை கிடைக்காதா...
தனக்கும் ஒரு விடிவு காலம் வராதா என்று ஏங்கி நின்ற
வளுக்கு... சந்தோஷ் தன்னை விரும்புவது பரவசத்தைத்
தந்தது என்றால் அது நிஜம்.

படர நினைக்கும் இளந்தளிர் கொடி... ஏதாவது கொம்பு
கிடைத்தால் அதைச் சுற்றிக் கொள்ளப் பார்ப்பது போலத்
தான்... அந்த நரக வாழ்க்கையிலிருந்து தப்ப ஒரு வழி
கிடைக்காதா என்று துடித்துக் கொண்டிருந்தவளுக்கு
சந்தோஷின் துணை வேண்டியிருந்தது. அதை காதல்
உணர்வு என்று சொல்ல முடியாது தான்.

அதனால் தானோ என்னவோ... அண்ணி அவளிடம்
''என் தம்பியை வளைத்து.. கல்யாணம் பண்ணிக்கலாம்
என்ற கனவெல்லாம் காணாதே... அவனுக்கு பிரகாசமான
எதிர்காலம் இருக்கு... அவனுடைய படிப்புக்கும்... தகுதிக்
கும் ஏற்ற மாதிரி மனைவி வரணும்னு நாங்க எதிர்பார்க்
கிறோம்... உன் விடியா மூஞ்சியை இனி அவன் முன்



காட்டாமல் இரு... என்ன புரியுதா...'' என்று எச்சரித்த
போதும் மனம் வலிக்கவே இல்லை.

என்ன... இங்கிருந்து தப்பிக்க... இருந்த ஒரு வழியும்
மூடிப் போனதே என்ற ஏமாற்றம்தான். ஆனால்... அதுகூட
நல்லதுக்குத்தான் என்றும் தோன்றியது...

வாணலிக்கு தப்பி நெருப்பில் விழுந்த கதையாய்
ஆகிவிடுமே... அண்ணியாய் இருந்து வாட்டியவள்...
நாத்தனாராய் இருந்து வதைத்திருப்பாள் என்பது சர்வ
நிச்சயம்...

இல்லை... மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் இடி
மாதிரியும் ஆகியிருக்கும்... யார் கண்டது. சந்தோஷ்
சென்ற பின்பும் அவனது வார்த்தைகள் காதில் ரீங்காரம்
செய்வது போல் உணர்ந்தாள் வைஜயந்தி.

''இப்பவும் சொல்கிறேன் வைஜயந்தி... என் மனசில்
இருப்பது நீதான்... இதயத்தை கோவிலாக்கி... அதில்
உன்னை வைத்திருக்கிறேன்... அதனால்தான் இப்படி
பேசுகிறேன்... உன் முகத்தில் தெரியும் வேதனை... என்
நெஞ்சை வலிக்கச் செய்கிறதும்மா... ஒன்று மட்டும்
ஞாபகத்தில் வைத்துக் கொள் வைஜயந்தி. உன் துன்
பத்தைப் பகிர்ந்து கொள்ள யாரும் இல்லையே என்று
வேதனைப்பட வேண்டாம்... உனக்காக... நான் ஒருத்தன்
இருக்கிறேன்.''

அந்த வார்த்தைகள் அவளது உள்ளத்தைக் கரையச்
செய்தது.

என்ன விநோதம்!

இங்கே... என்னைப் பார்க்கவும் பிடிக்காமல் ஒதுங்க
நினைக்கும் கணவன்...

என்னையே நினைத்து வாழும் ஒருத்தர். விசித்திர வாழ்க்கைதான்... என்று நினைத்தாள் வைஜயந்தி.

## 17

அடுத்த முறை வந்தபோது இனிப்புடன் வந்தான் சந்தோஷ்... அவன் முகத்தில் தெரிந்த ஆனந்தத்தைப் பார்த்ததும்... காரணம் தெரிந்து விட்டது வைஜயந்திக்கு.

''கங்கிராட்ஸ்... சந்தோஷ்... வேலை கிடைத்து விட்டது போல...'' என்று வாழ்த்தினாள் அவள்.

''ஆமாம்... நல்ல வேலை இது வைஜயந்தி... சம்பளம் முன்னை விட இரு மடங்கு... அதான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன்'' உற்சாகத்துடன் சொன்னான் அவன்.

''ஓகோ... உங்க சந்தோஷத்தை இப்படி அரை கிலோ ஸ்வீட்டோட முடிச்சுக்க எண்ணமாக்கும். நான் அதற்கு ஒப்புக்க மாட்டேன்...'' என்று கேலி செய்தாள் வைஜயந்தி.

''நான் அப்படிச் செய்வேனா வைஜயந்தி... முதலில் இனிப்பான சமாச்சாரத்தை இனிப்புடன் சொல்லலாம் என்று வந்தேன். சம்பளம் வரட்டும்... பாரேன்... உனக்கு பெரிய ஓட்டலில் விருந்தே தருகிறேன். சரிதானே...'' என்றான் அவன்.

''நீங்க சொன்னதே எனக்கு விருந்து சாப்பிட்ட மாதிரி இருக்கு சந்தோஷ். அதே போதும்.''

''என்ன வைஜயந்தி... உனக்குத் தராமல்... வேறு யாருக்குத் தரப் போகிறேன்... என் சந்தோஷத்தை உன்னுடன்



பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். கண்டிப்பாய் பார்ட்டி உண்டு...''

திடீர் என்று கனைக்கும் குரல் கேட்க... இருவரும் திகைத்துப் போய் திரும்பிப் பார்த்தனர். கடுகடுவென்று கடுவன் பூனையைப் போல நின்றிருந்தான் வினோத்.

அதற்கு மேல் அங்கு இருக்க விரும்பாமல் புறப்பட்டு விட்டான் சந்தோஷ். அவன் செல்வதை முகச் சுளிப்புடன் பார்த்தான் வினோத்.

அவன் சென்றதும் மனைவியிடம் திரும்பினான்.

''உன் அண்ணியோட 'பிரதர்' சந்தோஷ் தானே... அவனுக்கு இங்கே என்ன வேலை. தேவை இல்லாமல் ஏன் வருகிறான்'' என்று எரிச்சலுடன் கேட்டான்.

''அவருக்கு வேலை கிடைத்திருக்கும் விஷயத்தை சொல்ல வந்தார்... இதோ அவர் கொண்டு வந்திருக்கும் 'ஸ்வீட்' எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று சொல்லி அந்த ஸ்வீட் பாக்ஸை அவன் முன் நீட்டினாள்.

அதை ஒதுக்கி விட்டு... ''எனக்கும் சேர்த்து நீயே சாப்பிடு... இதை உனக்காக ஸ்பெஷலாய் வாங்கி வந்திருப்பான்'' என்று விறைப்புடன் சென்றவனை வியப்புடன் பார்த்தாள் அவள். அவளுக்குப் புரியவில்லை...

எதற்கு இந்த ஆத்திரமும்... ஆர்ப்பாட்டமும்... இதில் என்ன நியாயம் இருக்கிறது.

இல்லை... சொல்லால் வதைக்க வேண்டும் என்ற எண்ணமோ... அதான்... வார்த்தைகளால் சுடுகிறார். அதுதான் சொல்வார்களே.. வேண்டாத மனைவி... கைப்பட்டால் குற்றம்... கால் பட்டால் மகா குற்றம் என்று... அது மாதிரி தான்... எதையாவது சாக்காய் வைத்து நாவால் சுழற்றி அடிக்கிறார்.

செய்யட்டும். மேலே... மேலே அடிபட்டு உடம்பும் மனமும் மரத்துப் போய் விட்டது... இனி ஜடமாய் இருக்க வேண்டியது தான்...

கையில் இருந்த இனிப்பைப் பார்த்தாள்... சந்தோஷ மகிழ்ச்சியுடன் கொடுத்தது... கசப்புடன் அதை மூலையில் வைத்தாள்... நாளைக்கு வேலைக்காரர்களுக்கு கொடுத்து விட்டால் போச்சு... என்று முடிவுக்கு வந்தவளாய்...

இரவு... உணவை முடித்துக் கொண்டு தனது அறையை நோக்கிச் செல்ல இருந்தவளை நிறுத்திப் பேசினான் வினோத்.

''நாளைக்கு என் நண்பன் வீட்டில் 'பார்ட்டி' போக வேண்டும்.''

''போய் வாருங்கள்... அதற்கு என் அனுமதி எதுக்கு'' அவள் கோபத்துடன் முறைத்தாள்...

''உன் அனுமதியை யாரும் கேட்கவில்லை... நீயும் அந்தப் பார்ட்டிக்கு வரவேண்டும் என்று சொல்ல வந்தேன்...''

''சாரி... நான் வருவதாய் இல்லை... என்னை வற்புறுத்தாதீர்கள்... ப்ளீஸ்.''

''ஏன்...''

''எனக்கு வரப் பிடிக்கவில்லை.''

''எனக்கும் உன்னை அழைத்துப் போகப் பிடிக்கவில்லை தான். ஆனால் என்ன செய்வது... உன் மனைவியைக் கண்டிப்பாய் அழைத்து வர வேண்டும் என்று சொல்லியிருக்கிறான் அந்த நண்பன். வேறு வழி இல்லை. நாம் போய்த்தான் ஆக வேண்டும்'' என்றவன் பேச்சு அத்துடன் முடிந்தது என்பது போல ஏதோ ஒரு 'மேகஸீனை' எடுத்து வைத்துப் படிக்க ஆரம்பித்தான்.



நண்பனுக்காகவா... நண்பன் அழைத்தான் என்பதற்காக மட்டுமா... அவளுக்கு ஆத்திரமாக வந்தது. அங்கு செல்ல விருப்பமில்லா விட்டாலும்... போகத்தான் வேண்டும்... சே...

வேண்டா வெறுப்பாய் புறப்பட்டாள் வைஜயந்தி.

வழியில் ஒரு பெரிய 'மால்' முன் காரை நிறுத்தினான்... அவனே சென்று 'அன்பளிப்பு' என்று எதையோ வாங்கி வந்தான்... அது என்ன என்று அவளுக்கு தெரிவிக்கவும் இல்லை. அசோக் நகரில் இருந்த அந்த நண்பனின் வீட்டிற்குச் செல்ல நாற்பது நிமிடங்கள் ஆகியது.

அவர்களைப் பார்த்ததும் ஓடி வந்து வரவேற்றான் அந்த நண்பன்...

''வெல்கம்... வெல்கம்... மிஸஸ் அண்ட் மிஸ்டர் வினோத்... எங்கே ஏதாவது காரணம் சொல்லி உன் திருமதியை அழைத்து வராமல் இருந்து விடுவாயோ என்று நினைத்தேன்... நல்லவேளை... நீ அப்படிச் செய்யவில்லை... கொஞ்சம் இரு வினோத். முதல்ல... என் மனைவிக்கு உன் பெட்டர்ஹாஃப்பை அறிமுகப் படுத்தி விடுகிறேன். அப்போதிலிருந்து துடித்துக் கொண்டு இருக்கிறாள்... யாருன்னு பார்க்கணுமாம்... நீதான் எங்களை உன் கல்யாணத்திற்கு அழைக்கவே இல்லையே. எங்களுக்குச் சொல்லாமல் ரகசியமாய் பண்ணிக் கொண்டு விட்டாயே... கில்லாடிடா நீ...'' என்று சொல்லி விட்டு... விரைந்தோடி தன் மனைவியை அழைத்து வந்தான்.

ஒன்பது மாதக் குழந்தை தன் கைவளைவில் பூவாய் சிரிக்க... தாய்மையின் பூரிப்புடன் வந்தவளிடம் வினோத்... வைஜயந்தியை அறிமுகப்படுத்தினான்.

''ஏண்டா... எங்களைப் பத்தி நாங்களே சொல்லிக் கொள்ள வேண்டுமா... என்ன... எங்களை அறிமுகப் படுத்தி வைடா... இடியட்...'' என்று உரிமையாய் அதட்டினான் அந்த சிநேகிதன்.

அந்தக் கட்டாயத்தில்... அறிமுகம் செய்து வைத்தான் வினோத்...

''இவன் என் நண்பன் பாலா... பாலாவோட மனைவி ராதிகா...''

''இதென்னடா உப்பு சப்பில்லாத அறிமுகம்... நாம யாரு... நம்ம நட்பு எப்படிப்பட்டது... நமக்குள் எத்தனை வருஷப் பழக்கம்... அப்புறம் நாம் காலேஜில் இருக்கிறப்போ செய்த லூட்டி... எதையும் உன் மனைவிக்கு சொல்ல மாட்டாயா... மொட்டையாய் சொல்றே... இதோ கேளுங்க மிஸஸ்... அடடா... உங்க பெயரைக் கூட இந்த மடையன் எங்களுக்குச் சொல்லவில்லை... பாருங்கள்... அடேய்... உன் உள்ளம் கவர்ந்த இல்லத்தரசியின் பெயரை உன் திருவாய் இனிக்க ஒரு தடவை சொல்லுப்பா. நாங்க கேட்டுக் கொள்கிறோம்'' என்று பரிகாசம் செய்தான் அந்த பாலா.

அதை வினோத்தால் ரசிக்க முடியவில்லை...

''இனிக்கச் சொல்வதற்கு அவள் பெயர் லட்டோ... ஜாமூனோ இல்லை. வைஜயந்திதான்'' என்றான் கொஞ்சம் கடுப்புடன்.

''அடப் போடா... கணவனுக்கு மனைவி பெயர் தான் லட்டும் ஜாமூனும்... தெரிஞ்சுக்கோ... என் மனைவி பெயரை தினமும் நூறு தடவைக்கு மேல் சொல்வேன். ராது... ராது என்று கொஞ்சலாய் கூப்பிடும்போது வரும்



சுகம் இருக்கே... ஆகா... அது அருமை... இல்லையா ராது...'' மனைவியிடம் காதல் பார்வையுடன் பாலா கேட்டதும்... ராதிகாவின் முகம் வெட்கத்தால் சிவந்து போனது...

''வழியாதீங்க... வர்றவங்களை கவனிங்க...'' என்றாலும் கணவனின் கொஞ்சலை அவள் ரசித்தாள் என்பதும் தெரிந்தது.

அவர்களின் அந்நியோன்னியத்தை... பரஸ்பர அன்பைக் கண்டு மனசுக்குள் ஏக்கம் வந்தது வைஜயந்திக்கு. இது வல்லவா தாம்பத்தியம். சுருதியுடன் இழைந்த நாதமாய்... இந்த மனமொத்த வாழ்க்கையைப் பார்க்கும்போது சிலிர்ப்பு வருகிறது.

என் வாழ்வில் எல்லாமே தப்புதாளங்கள்தான். சுருதி தப்பிய அபஸ்வரம் போல் சகிக்க முடியாத தாம்பத்தியம்... சே... இதுவும் ஒரு வாழ்க்கை... நெஞ்சை முட்டிக் கொண்டு வந்த அழுகையை முழுங்கி அடக்கினாள் வைஜயந்தி.

''போதும்... நிறுத்தப்பா... பாலா... உனக்குக் கல்யாணம் ஆகி மூணு வருஷம் ஆகிவிட்டது. கையில் குழந்தையும் வந்தாச்சு. அதை நினைவில் வைத்து பேசப்பா... குரு... ஏதோ... நேத்துதான் கல்யாணம் ஆன மாதிரி இல்லே வழியறே... இதோ... சமீபத்தில் கல்யாணம் ஆன ஜோடியே ஒட்டி உரசாமல் தள்ளி இருக்காங்க. நீ என்னவோ 'தேனிலவு ஜோடி' மாதிரியல்லவா உருகறே... திஸ் இஸ் டூ மச்... பாலா...'' பாலாவின் இன்னொரு நண்பர் பரிகாசம் செய்ய... அங்கே சிரிப்பலை எழுந்தது.

''இதோடா... வருஷம் ஆனா... பொண்டாட்டியை கொஞ்சக் கூடாதுன்னு ஏதாவது சட்டம் இருக்கா...

இன்னிக்கு எங்க வெட்டிங் அன்னிவர்சரி.. ஒவ்வொரு வருடமும் புதுசா கல்யாணம் ஆன மாதிரி தான் நாங்க ஃபீல் பண்ணுவோம்... இல்லையா ராது...'' பாலா சொன்னதும்...

''ஓகோ... அப்போ ஒவ்வொரு வருடமும் 'ஹனிமூனும்' உண்டு போல...'' என்று யாரோ ஒருவர் குறும்பாய் கேட்க...

''ஏன் கூடாது. இந்த வருடம் ஹனிமூன் கேரளா பக்கமாக்கும்... நாலைந்து நாள் ஜாலியா இருந்து விட்டு வருவதாய் உத்தேசம்... லுக்... மை டியர் பிரண்ட்ஸ் இளமைங்கறது மனசில்தான் இருக்கு... நாங்க என்னிக்கும் புதுமணத் தம்பதிகள் தான்... இப்போ... வினோத்தையும் கேட்டுப் பாருங்க... அவனும் அதையேதான் சொல்வான்... என்னடா வினோத்...'' என்று வினோத் பக்கம் திரும்பி வினவினான்.

வினோத் திகைத்தான். இதற்கு ஆமாம் என்பதா... இல்லை என்பதா... புரியாமல் விழித்தான்.

நல்லவேளையாய் வெளிப்பக்கம் ஏதோ சலசலப்பு கேட்க... அனைவரின் கவனமும் அந்தப் பக்கமாய் தாவியது.

புது விருந்தாளிகள் வந்திருப்பது கண்டு அவர்களை வரவேற்க ஓடினான் பாலா.

எட்டிப் பார்த்த வைஜயந்திக்கு 'திக்' என்றது.

ரூபா... மறுபடியும் அவள்...

இதென்ன விந்தை! வினோத் போகும் இடம் எல்லாம் இவளும் வருகைத் தருகிறாளே... சொல்லி வைத்தது போல...



ஒருவேளை... வினோத் இங்கு வருவதைச் சொல்லியிருப்பானோ... நீயும் வா என்று அழைத்திருப்பான் போலும்.

ஆனாலும்... அறிமுகம் இல்லாத இடம் ஆயிற்றே... கூச்சமாய் இருக்காதா... காதல் கூச்சத்தைக் காணாதே... ஊகூம்... வினோத்தின் காதலி என்ற முறையில் பாலாவுக்குத் தெரிந்திருக்கலாம்... வினோத்தும் அவளை தன் எதிர்கால மனைவி என்று இவர்களுக்கு அறிமுகப் படுத்தியிருக்கலாம்...

அவளது சந்தேகத்தை தீர்த்து வைப்பது போல ராதிகா சொன்னாள்.

''வந்திருப்பது என் 'பாஸ்'. இவரிடம்தான் நான் 'பி.ஏ.'வாக வேலை பார்க்கிறேன். வினோத் தான் இந்த வேலையை எனக்கு வாங்கி தந்தது வைஜயந்தி... அப்போது ரூபாதான்... ம்கும்... இருங்க... வைஜி... வருகிறேன். அவர்களை வரவேற்று விட்டு அப்புறம் பேசுகிறேன். ஓ.கே. வைஜி... இவனைக் கொஞ்சம் வைத்துக் கொள்ள முடியுமா... உங்களுக்கும் குழந்தை பிறந்தால்... சமாளிக்கத் தெரிய வேண்டுமே... அதற்கு இது முன் அனுபவமாய் இருக்கும் வைஜி...'' பரிகாசம் செய்து விட்டுச் சென்றாள் ராதிகா.

சிணுங்கிய குழந்தையை அணைத்து முத்தமிட்டாள் வைஜயந்தி... விரலை சூப்பியபடி அவளையே வியப்புடன் பார்த்தது குழந்தை.

ரூபாவைப் பார்த்ததும் முகத்தில் சிரிப்பு வந்தது வினோத்திற்கு... அவளும்... அவளது தந்தையும் நின்றிருந்த இடம் நோக்கிச் சென்றான் அவன்.

''என்ன வினோத்... உங்க மனைவியை வழக்கம் போல உதறி விட்டு வந்துட்டீங்க போல... அதான் முகத்தில் சிரிப்பு... ம்ம்... கல்யாணமாகியும் பிரம்மச்சாரி.. ஜாலி தான்...'' கிண்டலாய் சொன்னாள் ரூபா.

''பிள்ளையைக் கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டும் கலை உனக்கு அழகாகவே வருகிறது ரூபா. இந்த நாடகத்தின் சூத்ரதாரி நீ... இப்போ கேலி வேறு.. ப்ச்சு... பாலாவும் ராதிகாவும் வற்புறுத்தியதால் அவளை யும் அழைத்து வர வேண்டியதாயிற்று...'' என்று முகம் சுணங்கியவாறு சொன்னான் வினோத்.

''அவர்களுக்கு வேறு வேலையில்லை. ஆமாம்... உங்கள் திருமதி எங்கே காணோம்... எங்கேயாவது ஒரு மூலையில் இருக்கிறாளோ... சரியான பட்டிக்காடு ஆச்சே...'' கண்களால் தேடினாள் ரூபா.

உண்மையிலே... கொஞ்சம் தள்ளி நின்று... யாருக்கும் தொந்திரவு வரக்கூடாது என்று ஓரமாய்... குழந்தையைக் கொஞ்சிக் கொண்டிருந்தாள் வைஜயந்தி.

அவளைப் பார்த்ததும் ரூபாவின் வளைந்த புருவங்கள் மேலேறின... உதட்டில் ஏளனச் சிரிப்பு உதிக்க வினோத் திடம் கேட்டாள்.

''இதென்ன விந்தை... ரிஷி கர்ப்பம் மாதிரி... அதற்குள் உங்களுக்கு குழந்தையும் வந்து விட்டதா. என்ன... அங்கே பாருங்க... உங்க அசட்டு மனைவி ஏதோ தனக்குப் பிறந்த குழந்தை மாதிரியில்லே கொஞ்சிக் கொண்டு இருக்கிறாள். அய்யோ... பாவம்... அது நடக்காத விஷயம் ஆச்சே...'' என்று சொல்லி விட்டு... 'களுக்' என்று சிரித்தாள்.



வினோத்தும் திரும்பிப் பார்த்தான்.

வினோத்தின் கண்கள் விரிந்தன.

தன்னை மறந்தவளாய்... சூழ்நிலையை மறந்தவளாய்... குழந்தையைக் கொஞ்சிக் கொண்டிருந்தாள்.

அண்ணனின் குழந்தைகளை வளர்த்தவளாயிற்றே.

அதனால் குழந்தையைக் கொஞ்சிக் குலவும் கலையைத் தெரிந்து வைத்திருந்தாள்.

அதுவும் வெறுமை சூழ்ந்த மனதிற்கு... மென்மையான குழந்தையின் ஸ்பரிசமும்... மழலை வார்த்தைகளும் இதமாக இருந்தது...

குழந்தையின் அர்த்தம் புரியாத வார்த்தைகளில் சொக்கியவளாய் 'என் தங்கம்.. என் செல்லம்' என்று கொஞ்சியவள்.. அதன் மெத்தென்ற கன்னத்தில் அழுந்த முத்தமிட்டாள். ஆகா... இதுவல்லவா சொர்க்க சுகம் என்று உடம்பு சிலிர்த்துப் போனது.

அந்தக் குட்டிச் செல்லம் தன் எச்சில் விரல்களால் அவளது கன்னத்தைத் தடவ... ''ஏய்.. போக்கிரி...'' என்று அவனை உயர்த்திப் பிடித்து விளையாட்டுக் காட்டினாள் அவள். அதுவும் 'கெக்கே' என்று பொக்கை வாயைக் காட்ட... அந்த அழகில் மயங்கி அவளும் சிரித்தாள்.

'உன்னை... ம்ம்' என்று அவனை அணைத்து.. பட்டுக் கன்னத்தில் அழுத்தி முத்தமிட்டு நிமிர்ந்தவள்...

வினோத் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு தூக்கி வாரிப் போட்டது.

இதயமும் ஒரு கணம் நின்று விட்டதோ.. என்னவோ.. ஏன் இப்படி உறுத்துப் பார்க்கிறான். வந்த இடத்தில்

அமரிக்கையாக இல்லாமல் குழந்தையுடன் விளையாடுவது அவனுக்குப் பிடிக்கவில்லையா...

இல்லை... உனக்கு குழந்தை ஆசை வேறா... வேண்டியது தான் என்று சொல்லாமல் உணர்த்துகிறானா...

ஒரு கணம் தடுமாறிப் போனாள் வைஜயந்தி.

ஆனால் குழந்தையின் பிஞ்சு விரல்கள் அவளது முகத்தைத் திருப்பி... 'ப்பூ' என்று சொல்ல... நிகழ்கால கவலைகள் மறந்து போயின. மறுபடியும் அவனைக் கொஞ்ச ஆரம்பித்தாள்.

குழந்தையும் கையுமாய் அவள் நின்றிருந்த கோலம் வினோத்தை ஈர்த்தது என்று தான் சொல்ல வேண்டும். அவளது கையில் குழந்தையும் பொருத்தமாய் தெரிந்தது. அதை லாவகமாய் வைத்துக் கொண்டு... அதனுடன் கொஞ்சி விளையாடும் விதமே... அவள் ஒரு நல்ல தாயாக இருப்பாள் என்பதை உணர்த்தியது. ரூபாவை அந்த இடத்தில் நிறுத்திப் பார்க்கையில் ஏனோ பாந்தமாய் தெரியவில்லை.

வைஜயந்தியைப் போல அவள் குழந்தையைக் கொஞ்சுவாளா... எடுத்து அணைத்து முத்தம் தருவாளா... உதட்டைப் பிதுக்கினான் அவன்.

அவனது கற்பனையில் வந்த ரூபா... ஜீன்ஸும் டாப்புமாய் நிமிர்ந்து நடக்க... அருகே ஒரு பணிப் பெண்... அவளது குழந்தையை சுமக்க பின் தொடரும் தோற்றம்...

மறுபடியும் அவன் வைஜயந்தியை நோக்கினான்.

குழந்தை இப்போது வைஜயந்தியின் கழுத்தைக் கட்டிக் கொண்டிருக்க 'டிக்கு' என்று தன் தலையால் அந்த சின்னத் தலையைச் செல்லமாய் முட்டினாள் வைஜயந்தி...



உடனே அந்தக் குட்டியும் சிரித்துவிட்டு 'ம்ம்' என்று மறுபடியும் செய்யச் சொன்னது.

அவனையும் மீறி அவனது உதடுகளில் புன்னகை வந்தது.

புதுமுகம் என்றில்லாமல் அவளுடன் ஒட்டிக் கொண்டு விட்டானே இந்தச் சுட்டிப் பயல்... வைஜயந்தி கெட்டிக் காரிதான். மெல்ல குழந்தையை வசப்படுத்தி விட்டாளே...

இன்னும் அவளது குழந்தை என்றால் கீழே விடவும் மாட்டாள் போல... அதுவும் அவனது கற்பனையில் காட்சியாக வந்தது.

அவளது கரங்களில் 'கொழுக்... மொழுக்' என்று ஒரு அமுல் பேபி குழந்தை. தாய்மை பொலிவுடன் அதை அரவணைத்துக் கொஞ்சுகிறாள்... பார்க்க... அவனது ஜாடையில்... ஏன்... அவனது குட்டி உருவமாய் இருக்கிறது... அவனது குழந்தை!

அடச்சே... தலையை உதறிக் கொண்டான் வினோத்.

அவிழ்த்து விட்ட குதிரை மாதிரி எங்கெங்கோ திரிகிறதே கற்பனை... கண்றாவி!

குழந்தையும் கையுமாய் நின்றிருப்பதைப் பார்த்து விட்டு இளகிவிட்டேன் போலும்.

அருகே... ரூபா ஏதோ வளவளப்பதை அறிந்து காதை அவள் பக்கம் கொடுத்தான்.

ரிலீஸ் ஆகப் போகும் ஷாருக்கானின் படம் பற்றி உற்சாகத்துடன் பேசிக் கொண்டிருந்தாள்.

அவனுக்கு அது சலிப்பைத் தந்தாலும்... வேறு வழியின்றி அதைக் கேட்பது போல தலையசைத்து வைத்தான்.

'டின்னர் ரெடி' என்றதும்... 'தப்பித்தோம்' என்ற மன நிறைவுடன் நடந்தான் வினோத்.

விருந்து முடிந்து புறப்படும் வேளையில் ராதிகா வைஜயந்தியை தனியே அழைத்து... அழகானதொரு பட்டுப் புடவையை வைத்துக் கொடுத்தாள்.

அதை சற்றும் எதிர்பார்க்காத வைஜயந்தி... சங்கோஜத்துடன் பார்த்து... "இதெல்லாம் எதுக்கு" என்று தயக்கத்துடன் கேட்டாள்.

"மறுக்க வேண்டாம் வைஜி... வினோத் எங்களுக்கு செய்திருக்கும் உதவிக்கு... நாங்கள் தினமும் நினைத்து பார்க்கணும்... அதைப் பார்க்கும் போது... இந்த அன்பளிப்பு சாதாரணம்தான்.

திருமணத்திற்கு நாங்க வந்திருந்தால் பொன் நகையாகவே கொடுத்திருப்போம்... வாங்கிக் கொள்ளுங்கள் வைஜி..." என்று வற்புறுத்தினாள் ராதிகா.

கூச்சத்துடன் அதை எடுத்துக் கொண்டாள் வைஜயந்தி.

"நீங்களும் வீட்டுக்கு வரவேண்டும் ராதிகா... குட்டிப் பயலை விட்டுச் செல்ல எனக்கு மனசே இல்லை... சரியான போக்கிரி... இல்லே..." என்றாள் அவள்.

வழியனுப்பி வைக்கும்போது... வைஜயந்தியைப் பற்றி புகழ்ந்து பேசினாள் ராதிகா.

"வைஜயந்தியை எனக்கு ரொம்பவும் பிடித்து விட்டது வினோத்... ஸ்வீட் கேர்ள்... பழகறதுக்கு ரொம்ப இனிமையானவங்க... இப்படி ஒரு மனைவி கிடைக்க நீங்க ரொம்பவும் கொடுத்து வச்சிருக்கணும். யூ ஆர் வெரி லக்கி வினோத்..." என்று அவள் சொன்னதும்...



ரூபாவின் உதட்டில் ஏளனச் சிரிப்பு ஓடிப் பார்த்தது.

"அதெப்படி ராதிகா... வைஜயந்தியின் மனசுக்குள் போய் பார்த்துவிட்டு வந்த மாதிரி சொல்றீங்க... புது இடம் என்றால் எல்லோரும் முகத்திரைப் போட்டுக் கொண்டு இனிமையாகத்தான் பழகுவாங்க... உள்ளே இருக்கும் வக்கிரபுத்தியை வெளிக்காட்டிப்பாங்களா என்ன... பாராட்டணும் என்று நினைத்து ஏதேதோ சொல்கிறீர்கள்... ராதிகா.. ரப்பிஷ்!" என்று கடுப்பாய் சொன்னாள்.

ராதிகாவின் முகம் சுண்டிப் போனது.

உண்மையில் ரூபாவிற்கு பொறாமை... தான் இருக்கும் இடத்தில் வைஜயந்தி இருக்கிறாளே என்ற பொருமல்... அதுதான்... இந்தக் குத்தல் பேச்சு... அதை ராதிகாவும் உணர்ந்தாள்.

"நீங்கள் சொல்லுவதை நிஜம் என்று வினோத் எடுத்துக் கொள்ளப் போவதில்லை... எதற்கு இந்த முகஸ்துதி பேச்செல்லாம்... ராதிகா" என்று மேலும் எகத்தாளமாய் சொன்னதும்..

"ஷட் அப் ரூபா... எங்கே... எதைப் பேச வேண்டும் என்ற விவஸ்தை வேண்டாம்... ராதிகா பாராட்டி பேசியது என் மனைவியை... ராதிகாவிற்கு என் மனைவியைப் பிடித்திருக்கிறது என்றால் அது அவளது சொந்த விருப்பம்... நீ ஏன் அனாவசியமாய் மூக்கை நுழைக்கிறாய்... தாங்க்ஸ் ராதிகா... நீ சொன்னது முழுக்க முழுக்க உண்மைதான். வைஜயந்தி மென்மையானவள்... அதிர்ந்தும் பேச மாட்டாள். அந்தக் குணம் தான் எல்லோரையும் ஈர்க்கிறது. பாரேன்... யாரிடமும் போகாமல் அடம் பிடிக்கும் உன் குழந்தைகூட சமர்த்தாய் அவளிடம் இருந்து விட்டானே... இதிலிருந்தே தெரியவில்லையா...

ஓகே... பாலா... நேரமாகி விட்டது... நாங்கள் புறப்படு கிறோம்'' என்று புறப்பட்ட வினோத்தை பின் தொடர்ந் தாள் வைஜயந்தி... பிரமிப்புடன்.

வினோத்தா... தன்னை மெச்சிப் பேசியது வினோத் தானா... அவளால் நம்பவும் முடியவில்லை.

தலை கிறுகிறுப்பது போல இருந்தது... உள்ளம் மகிழ்ச்சி சாகரத்தில் தத்தளித்தது.

இருவரும் ஜோடியாய் சென்று காரில் ஏறுவதைப் பார்த்து உள்ளுக்குள் கொதித்தாள் ரூபா...

அவளது கண்கள் வைஜயந்தியை வெறுப்புடன் பார்த்தன.

அவளது மனதில் எரிமலையொன்று கனன்று கொண்டிருப்பதை அறியாமல் பாலா அப்பாவித்தனமாய் மனைவியிடம் சொல்லிக் கொண்டிருந்தான்.

''மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்னு பாடியிருப்பது உண்மை தான் ராது. எனக்கு நீ அமைஞ்ச மாதிரி... என் நண்பனுக்கு அருமையான மனைவி கிடைத்து விட்டாள். என்னைப் போலவே அவனும் அதிர்ஷ்டக்காரன் தான்... என்ன சொல்றே ராது டியர்'' என்று பேசிய கணவனை கண்களால் அடக்கி னாள். அவளது பார்வை ரூபா பக்கம் தாவி... சாடையாய் எச்சரித்தது.

''என்னம்மா ரூபா... புறப்படலாமா...'' என்று கேட்டு வந்த தந்தையிடம் 'வள்'ளென்று எரிந்து விழுந்தாள் ரூபா...

''எங்கே போய் தொலைந்தீர்கள்... நேரம் ஆகிவிட்டது புறப்படுங்க...'' என்றவள் அவருக்காக காத்திராமல்



நடந்தாள். எதற்காக இந்தக் கோபம் என்பது புரியாமல்... ஓடாத குறையாய் அவள் பின்னே சென்றார் அந்த மனிதர்.

## 18

எண்ணெய் குளியலை முடித்து விட்டு... கூந்தலை உலர்த்திக் கொண்டிருந்தாள் வைஜயந்தி...

மயிலின் தோகை போல அடர்த்தியான... நீண்ட கேசம் பட்டாய் விரிந்திருந்தது.

மஞ்சள் மினுமினுக்கும் முகத்தில் வெறும் பிந்தி மட்டுமே. வேறு எந்த வித ஒப்பனையும் இல்லாமல் எளிமையாய் இருந்தாள் அவள்... பிந்தியின் கீழ் சின்ன தாய் விபூதித் தீற்று... பார்க்க லஷ்மிகரமாய் தெரிந்தாள். அவளுக்குள் பனிச்சாரலாய் ஏதோ ஊடுருவியது.

பரவச உணர்வில்... நெஞ்சம் சிந்து பாடியது... எல்லாவற்றிற்கும் காரணம் வினோத் தன்னை மெச்சி பேசியதுதான்... மனைவியென்று உரிமையுடன் தனக்கு பரிந்து பேசியதை நினைக்கையில் நெஞ்சக் கூட்டில் களிப்பு தாண்டவமாடியது.

மாமாவின் படத்திற்கு கதம்ப மாலையை அணிவித்து ''மாமா... இன்னிக்கு நான் ரொம்ப சந்தோஷமா இருக் கிறேன்... ஏன் தெரியுமா... உங்க உம்மண்ணா மூஞ்சிப் பிள்ளை... கொஞ்சம் மனம் இளகி வந்திருக்கிறார்... எனக்காக பரிந்தும் பேசி விட்டார்... ஆச்சர்யமாக இருக்கு. இல்லையா மாமா... எனக்கும் தான். இந்த சந்தோஷம் நிலைக்கணும்னு ஆசி கூறுங்கள் மாமா...'' என்று மானசீகமாய் வேண்டினாள்.

ஆனால் அந்த சந்தோஷத்திற்கு அல்ப ஆயுசு என்று பிறகுதான் தெரிந்தது.

சொல்லாமல் கொள்ளாமல் வந்து நின்ற ரூபாவைப் பார்த்து அவள் திகைத்துப் போனாள்.

ஆனால் அதை வெளிக்காட்டாமல்... ''வாங்க ரூபா'' என்று வரவேற்றாள்...

உள்ளே வந்து அமர்த்தலாய் சோபாவில் அமர்ந்த ரூபா... அலட்சியமாய் கால் மேல் கால் போட்டுக் கொண்டாள்.

''என்னவோ... உன் சொந்த வீடு மாதிரி இல்லே இருக்கு நீ வரவேற்கிறது... இரண்டு வருடம் ஆனாலும் உனக்கே இங்கே இடம் கிடையாது... அது ஞாபகத்தில் இருக்கட்டும். ஓ... நேத்து வினோத் உனக்குப் பரிஞ்சுகிட்டு வந்ததைப் பார்த்ததும் தலை கனம் வந்து விட்டதாக்கும். சரிதான்... இவ்வளவு முட்டாளா இருப்பேன்னு நான் நினைக்கவே இல்லை... மத்தவங்களுக்காக வினோத் பேசிய வசனம் அது... அதை அப்படியே நம்பிப் பூரிச்சுப் போய் விட்டாயாக்கும்... அவர் இன்னும் என் வினோத் தான்... அதை உனக்கு நிரூபித்துக் காட்டட்டுமா...'' என்றவள்... தன் செல்லை இயக்கி வினோத்திடம் பேசினாள்.

''அலோ'' என்று சொன்னபோது அவளிடம் வந்த மாற்றம்... முகத்தில் சூரிய காந்தியின் மலர்ச்சி... இதழ்களில் சாகசப் புன்னகை... குரலில் ஐஸ்கிரீம் குழைவு.

இடத்திற்கு ஏற்றபடி நிறம் மாறிப் போகும் பச்சோந்தி மாதிரி... சமயத்திற்கு தகுந்த மாதிரி நிறம் மாறும் ரூபாவின் மேல் வைஜயந்திக்கு கோபம் வந்தது.



என்ன திமிர்... என்ன கர்வம்... எல்லாம் என் கையில் என்பது போல் பேசுகிறாளே...

''என்ன வினோத்... இங்கே நான் வந்து காத்திருக்கிறேன்... என்னைவிட உங்களுக்கு வேலை தான் முக்கியமாகி விட்டதா... இப்போது நீங்கள் இங்கு வருகிறீர்கள்... அதுவும் அரை மணி நேரத்துக்குள் வராவிட்டால் உங்களுடன் காய்'' என்று சொல்லிவிட்டு கலகலவென்று சிரித்தாள்.

ரிஸீவரை வைக்கும்போது... வைஜயந்தியைப் பார்த்து வெற்றி சிரிப்பு வேறு...

''இப்போது என்ன சொல்கிறாய்... நான் அழைத்ததும் ஓடி வருகிறார் பார்த்தாயா... இனிமேலாவது இங்கே உன் நிலை என்ன என்று உணர்ந்து நடந்து கொள்... சரி... இப்ப என்ன செய்யறே.. போய் சில்லுன்னு பழரசம் இருந்தால் அதைக் கொண்டு வந்து தர்றே... தொண்டையில் வறட்சியா இருக்கு...'' அதிகாரம் தொனிக்க அவள் சொன்னதும் உள்ளம் ஒடுங்கிப் போனாள் வைஜயந்தி.

ரூபா சொல்வது உண்மை தானோ.. வினோத் தனக்காக பரிந்து பேசியது மற்றவர்களுக்காக நடத்திய 'ஷோ'வா... அது புரியாமல் துள்ளினேனே...

சோகக் குயிலாய் மனம் ஓலமிட்டது...

ரூபா கொக்கரித்தபடியே வினோத்தும் வந்து விட்டான். வாசலில் அவனது கார் வந்து நின்றதும்... 'பார்த்தாயா...' என்பது போல வைஜயந்தியைப் பார்த்து விட்டு... வாசலுக்கு விரைந்தோடினாள்.

''என்ன விஷயம் ரூபா... எதற்கு அவசரமாய் வரச் சொன்னாய்... அவசர வேலைகளையெல்லாம் விட்டு

விட்டு வந்திருக்கிறேன்..." கொஞ்சம் கோபமாகவே வினோத் கேட்டான்.

"எனக்கு அர்ஜெண்டா ஷாப்பிங் போகவேண்டும் வினோத்... என்னுடன் வரணும் நீங்க..." கெஞ்சுவதைப் போலச் சொன்னாள் ரூபா.

"ஷாப்பிங்கா.. அதை இன்னொரு நாள் வைத்துக் கொள்ளக் கூடாதா ரூபா... 'பிஸினெஸ் அப்பாயிண்ட் மெண்ட்'டை 'கான்ஸல்' பண்ணி விட்டு வந்திருக் கிறேன்... தெரியுமா..."

"எனக்காகத்தானே செய்திருக்கீங்க... என்னை விட அது முக்கியமா... வினோத்..."

"அப்படி என்ன வாங்க வேண்டும்... நகையா... இல்லே... டிரஸ்ஸா... என்ன ரூபா... இதுக்கு நான் வர வேண்டுமா... அதுவும் வேலைகளை ஒதுக்கி விட்டு..."

"அய்யோ... வினு... நகை... உடை இதுக்கெல்லாம் உங்களைக் கூப்பிடுவேனா... எனக்கு ஒரு 'லேப்டாப்'பும்... பிரிண்டரும் வாங்கணும்... நீங்க வந்தா நல்லதா பார்த்து 'செலக்ட்' பண்ணுவீங்கன்னு கூப்பிட்டா ஏதோ பிகு பண்ணுகிறீர்களே..."

உள்ளே நுழைகையில்... வைஜயந்தியின் காதில் விழ வேண்டும் என்றே சொன்னாள்.

"சரி... புறப்படுங்கள்... வினு... 'பர்ச்சேஸ்' முடிந்ததும்... ஏதாவது படம் பார்த்துவிட்டு... அப்படியே ஒரு நல்ல ஓட்டலில் சாப்பிட்டு விட்டு வரலாம்... இன்னிக்கு என்னோட 'ட்ரீட்'டாக்கும்... அழைத்தவுடன் வந்தீங்க இல்லையா... அதுக்காக... சரி.. போகலாமா..."

மறுப்பேதும் சொல்லாமல் அவனும் புறப்பட்டதைக் கண்டு வைஜயந்தி மனம் நொந்தாள்.



சந்தோஷமாய் விடிந்த அந்த நாள்... சஞ்சலத்தில் முடிந்தது. எதுவும் செய்யப் பிடிக்காமல்... சிலையாக அமர்ந்திருந்தாள்... பசியும் எடுக்கவில்லை...

இரும்பை விழுங்கினாற்போல உள்ளம் கனத்திருந்தது. எத்தனை நேரம் கழிந்தது என்று தெரியாமல் செயலற்றுக் கிடந்தவள் அத்தையின் குரலில் திகைத்து விழித்துப் பார்த்தாள்.

"என்னம்மா வைஜயந்தி... எத்தனை தடவை குரல் கொடுத்தும் பார்க்காமல் அமர்ந்திருக்கிறாயே... அப்படி என்ன யோசனை..." என்று கேட்டாள்.

"வாங்க அத்தை... நீங்க வந்தது எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு..." என்றாள்... சேலைத் தலைப்பால் முகத்தைத் துடைத்துக் கொண்டு.

அவளது முகத்தை உற்றுப் பார்த்தாள் விமலா. அழுது சிவந்த கண்களும்... முகத்தில் தெரிந்த வேதனையும் ஏதோ ஒன்றை உணர்த்த... அத்தை உடனே விஷயத்திற்கு வந்தாள்.

"என்னம்மா... இன்னும் அவன் சரியாகவில்லையா... அடக்கடவுளே.. என்ன பிள்ளை அவன்... உன்னை இப்படி வாட்டி வதைக்கிறானே... கொஞ்சம் பொறுமையா இரும்மா வைஜயந்தி... காலம் இப்படியே இருந்து விடாது... கண்டிப்பாய் மாறும்மா..." காலம் மாறுகிறதோ... இல்லையோ அத்தையின் வரவும்... அவளது ஆறுதலான வார்த்தைகளும் அவளுக்கு இதமாக இருந்தது.

சமையல்காரரிடம் காபியைக் கொண்டு வரச் சொன்னாள். அத்தைக்கும் கொடுத்து விட்டு... அவளும் அருந்தினாள்.

காலி வயிற்றில் காபி விழுந்ததும் பசியை அது கிள்ளி விட்டது... சமையல்காரரிடம் சீக்கிரமே சமைத்து விடும் படி சொன்னாள்.

மணி நான்கிருக்கும்போதும்... சந்தோஷ் வந்தான்.

''யார் இந்தப் பிள்ளை...'' என்ற அத்தையின் விசாரிப்புக்கு... தன் பிறந்தகத்து உறவு என்று சொன்னாள் அவள்.

சந்தோஷ்... தான் வந்த காரணத்தை சொன்னான். சித்தப்பா வீட்டிற்கு அழைத்துப் போகும் எண்ணமாம். அவர்கள் வைஜயந்தியை பார்க்க விரும்புகிறார்களாம். அதைக் கேட்டு வைஜயந்தி தயங்கினாள். அத்தை ஊரிலிருந்து வந்திருக்கும்போது... அவரை விட்டு விட்டு வெளியே போவதா...

"எதுக்கும்மா தயங்கறே.. நீ பாட்டுக்குப் போய் வா... என்னைப் பத்திக் கவலைப்படாதே... பிறந்த வீட்டு உறவுங்கறே... சொந்தம் விட்டுப் போகக் கூடாதும்மா..." என்றாள் கரிசனமாய்...

"இல்லே அத்தை... நீங்க..."

''எனக்கு ஒண்ணும் இல்லை... சீக்கிரம் சாப்பிட்டு விட்டு தூங்கி விடுவேன்... பயண அலுப்பு இல்லையா... நீ சந்தோஷமாப் போய் வாம்மா...''

அத்தை முழு மனசாய் சொன்னதும்... மகிழ்ச்சியுடன் அவள் புறப்பட்டாள்.

இருவரும் செல்வதைப் பார்த்த விமலாவின் முகத்தில் புன்னகை பூத்தது. அந்தப் புன்னகையில் ஏதோ அர்த்தமும் இருந்தது.

புதிய இடம் என்ற நினைப்பு கிஞ்சித்தும் தோன்ற வில்லை வைஜயந்திக்கு.



சந்தோஷின் உறவினர்கள் அத்தனை சகஜமாய்... கலகலப்புடன் பழகினார்கள்.

''சந்தோஷ் உன்னைப் பத்தி அப்பப்போ பேசுவான்ம்மா... என்னடா.. இப்படி வைஜயந்தி புராணம் பாடுகிறானே... இவன் சொல்வதெல்லாம் நிஜமான்னு சந்தேகம் வந்தது... இப்போத்தான் தெரிகிறது... அவன் உன்னைப் புகழ்ந்தது மிகையில்லை. உன்னிடம் கொஞ்சமும் கர்வமோ... அகங்காரமோ இல்லை... சகஜமாய் பழகுகிறாய்.. பணம் வந்தும் வைஜயந்தி மாற வில்லை என்று சந்தோஷ் சொன்னது உண்மைதான்... இந்தக் காலத்தில் அரை வேக்காடு எல்லாம் ஒன்றுமில்லாததற்கு பேயாட்டம் போடும் போது... அமைதியா... அடக்கமா... எளிமையா நீ இருக்கிறதை பாராட்டத்தான் வேண்டும்... ஒரு பொண்ணு எப்படி இருக்கணும் என்கிறதுக்கு நீ உதாரணம்மா... வைஜயந்தி...'' சந்தோஷின் சித்தப்பாவின் புகழ்ச்சியைக் கேட்டு அவள் முகம் சிவந்து போனது.

''நம்ம சந்தோஷுக்கும் உன்னை மாதிரியே ஒருத்தி மனைவியா அமைஞ்சுட்டா... அது போதும்மா... அந்த அதிர்ஷ்டம் நம்ம பிள்ளைக்கு இருந்துட்டா நல்லது" இது சந்தோஷின் சித்தியோட மறைமுகப் பாராட்டு... காலையில் இருந்த வருத்தம்... வாட்டம்... துக்கம் எல்லாமே மாயமாகி... உள்ளத்தில் தன்னம்பிக்கையும்.. சந்தோஷமும் ததும்பி வழிந்தது.

வினோத்தை தவிர... எல்லோருக்கும் என்னை பிடித்திருக்கிறது. என் மேல் நல்ல எண்ணமும் மதிப்பும் இருக்கிறது. வினோத்திற்கு மட்டும் ஏனோ என்னைக் கண்டால் ஆகவில்லை... அது மட்டும் குறைதான்.

அவர்களிடம் விடைபெற்று வெளிவரும்போது பல நாட்கள் பழகியதைப் போன்ற உணர்வும்... சீக்கிரம் கிளம்புகிறோமே என்ற வருத்தமும் வந்தது நிஜம்.

"வைஜயந்தி... என்னிடம் காரில்லை என்ற வருத்தம். இருந்திருந்தால்... உன்னை சொகுசாய் அழைத்துச் சென்றிருக்கலாம்... என்ன செய்ய... ஏழைக்கேத்த எள்ளுருண்டையாய் என் 'கைனடிக்' தான் இப்போதைக்கு என் ரதம்."

பாதி வேடிக்கையாய்... பாதி வருத்தமாய் சொன்னான் சந்தோஷ்.

"இந்த சொகுசும்... வசதிகளும் இப்போது வந்த வாழ்வு சந்தோஷ்... நான் என்னோட கடந்த காலத்தை மறக்கவில்லை... என்னால் மறக்கவும் முடியாது சந்தோஷ்... எப்போதும் நான் பழைய வைஜயந்திதான்.." கம்மிய குரலில் சொன்னாள் அவள்.

இன்னும் இருபத்தொரு மாதங்கள்... அதற்குப் பிறகு... திரும்பவும் பழைய வாழ்க்கைத்தானே... அதை சந்தோஷுக்குச் சொல்ல முடியுமா... ப்ச்சு... எச்சிலைக் கூட்டி மிழுங்கினாள். வருத்தத்தை ஒட்டு மொத்தமாய் விழுங்குவது போல...

"இந்தக் குணம்தான் உன்னை உயர்த்திக் காட்டுகிறது வைஜயந்தி... என் சித்தப்பா அத்தனை சீக்கிரத்தில் யாரையும் பாராட்ட மாட்டார்... அப்படிப்பட்டவர் உன்னை புகழ்கிறார் என்றால்... பாரேன்" 'ஸ்பீட் பிரேக்கர்' மீது நிதானமாய் வண்டியை செலுத்தியவாறு சொன்னான் சந்தோஷ்.

"எனக்கு அதையெல்லாம் கேட்க கூச்சமாக இருந்தது சந்தோஷ்... நீங்க என்னைப் பற்றி உயர்த்தியாய் ஏதேதோ சொல்லி வச்சிருக்கீங்க போலிருக்கிறது..."



பறந்த சேலைத் தலைப்பை இழுத்து போர்த்தியபடி சொன்னாள் வைஜயந்தி.

"ஏதேதோ இல்லைம்மா... எல்லாம் உண்மைதான். அவர் மனதில் வருத்தம்... அவருடைய பிள்ளை... என்னைவிட இரண்டு வயசு சின்னவன்... திடீர் என்று தன் காதலியை ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக் கொண்டு வந்து விட்டான். வந்த மகராசியாவது வீட்டுக்கு அடங்கி இருந்தாளா என்றால் அதுவும் இல்லை... ஆர்ப்பாட்டங்களையெல்லாம் பண்ணி... தன் புருஷனை குடும்பத்திலிருந்து பிரித்து... தனிக் குடித்தனம் போய் விட்டாள். அதுவும் பெயருக்குத்தான். தாய் வீட்டு மாடியில் வாசம்... அந்தக் காயம் தான் அவர் மனதில் அப்படியே ஆறாமல் இருக்கு... அதை மனதில் வைத்து தான் உன்னைப் புகழ்ந்து பேசினார் வைஜயந்தி... அவருக்கு என் மீது கொள்ளைப் பிரியம்... தன் பிள்ளை மாதிரி தறுதலையாக இல்லாமல்... பெற்றவர்களை, மதித்து நடக்கிறேன் என்ற நல்லெண்ணம் தான்..." பேச்சின் ஆர்வத்தில் வண்டி செல்லும் வழியை கவனிக்காமல் இருந்தவள்... பரிச்சயம் இல்லாத வழியில் செல்வதைப் பார்த்துவிட்டு வினவினாள்.

"சந்தோஷ்... நாம் இப்போ எங்கோ போகிறோம்..."

"ஓட்டலுக்கு..."

"வேண்டாமே சந்தோஷ்... வீட்டுக்குப் போக வேண்டும்..."

"உஷ்... வேலை கிடைத்ததுக்கு 'பார்ட்டி' கொடுப்பதாய் நான் 'பிராமிஸ்' பண்ணியிருக்கிறேன்... உன் அத்தை தான் அனுமதி கொடுத்து விட்டாரே..."

"அதுக்காக... ரொம்பவும் 'லேட்'டாகப் போவதும் சரியல்ல சந்தோஷ்..."

"அது எனக்கும் தெரியும் வைஜயந்தி... மணி இப்போ ஏழு... கரெக்டா எட்டரை மணிக்குள் உன்னை வீட்டில் சேர்த்து விடுகிறேன்... ஓகே... இப்போ... சந்தோஷமா என்னோடு வாம்மா... கமான்... வைஜயந்தி."

அது பெரிய ஓட்டலாகத்தான் இருந்தது. தன் வண்டியை ஒரு பக்கமாய் பார்க் செய்தான் சந்தோஷ். கொஞ்சம் படபடப்பு அவளுக்குள் இருக்கத்தான் செய்தது... அத்தனை பெரிய ஓட்டலுக்கு... சந்தோஷுடன் வந்தது கொஞ்சம் உதறலாக இருந்தது. யாராவது தப்பாக நினைத்து விட்டால்... யார் என்ன... வினோத்தே நினைக்கலாம்... பதற்றத்துடன் உள்ளே சென்றாள் அவள்.

ஓட்டல் முழுக்க ஏ.ஸி.யின் குளிர்ச்சி 'சில்'லென்று உடலை தொட்டு சிலிர்க்க வைத்தது...

வந்திருந்தவர்கள் அனைவருமே பணக்கார வர்க்கம் போலத் தெரிந்தார்கள்... சந்தோஷ் ஏன் இங்கு அழைத்து வந்தார்... சம்பளத்தில் பெரும் பங்கை இங்கே கொடுத்து விட்டுப் போகப் போகிறாரா... என்ன... சந்தோஷ் பக்கம் திரும்பிப் பார்த்தாள்....

"சந்தோஷ்... வாங்க... போயிடலாம்... எல்லாமே 'காஸ்ட்லி'யா தெரிகிறது..." என்றாள் அவள்.

"விலையைப் பத்திக் கவலைப் படாதே வைஜயந்தி... நான் உனக்குக் கொடுக்கும் இந்த விருந்துதான் என் வாழ்க்கையில் முக்கியமானதாய் நினைக்கிறேன். எப்போதும் அது நினைவில் இருக்க வேண்டும் என்பதுதான் என் ஆசை... இப்போ... எதுவும் பேசாமல் என்னுடன் வாம்மா..."



அதற்கு மேல் அவள் வாயைத் திறக்கவில்லை.

இருவரும் எதிர் எதிராய் அமர்ந்து கொண்டனர். உடனே 'ஆர்டர்' கேட்டுக் கொள்ள அங்கே வந்து நின்றான் ஒருவன்... டிப் டாப்பாக உடையணிந்து... மெனு கார்டை பார்த்து விட்டு... தான் தேர்ந்தெடுத்த உணவு வகைகள்... வைஜயந்திக்கு பிடித்தமா என்பதை உறுதி செய்து கொண்டு... பிறகு 'ஆர்டர்' தந்தான்.

தன் விருப்பு... வெறுப்புகளை அறிய முயலும் அவன் மீது இருந்த மதிப்பு இன்னும் உயர்ந்து போனது.

வெஜ் கார்ன் சூப்... பேபி கார்ன் மஞ்சூரியன்...

பிங்கர் சிப்ஸ்... மசாலா பப்பட்... ஸ்பிரிங் ரோல்ஸ்.

காஷ்மீரியன் புலவ்... நூடில்ஸ் என்று வகை வகையாய் மேஜை மீது வந்தன.

பதார்த்தங்களின் 'கம்'மென்ற மசாலா மணம்... நாசியுள் நுழைந்து... அடக்கிக் கிடந்த பசியைத் தட்டி எழுப்பியது.

கடைசியாய் ஸ்ட்ரா பெர்ரி ஐஸ்கிரீம்... அதை சுவைத்த வாறு கண்களால் சுற்றிப் பார்த்தாள்.

அந்த ஓட்டலில் கூட்டம் அதிகம் தான்.. அனைவரும் கவலை ஏதுமின்றி... ஜாலியாக சிரித்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

அதைப் பார்த்ததும்... இவர்களுக்கு எந்தக் கவலையும் இல்லையோ... எனக்கு மட்டுமே வேதனையும்... துன்பம் போலும் என்று தோன்றியது அவளுக்கு.

அதோ... சற்றுத் தள்ளி அமர்ந்திருக்கும் இளம் ஜோடி ஒன்று... ஒருவருக்கொருவர் ஊட்டாத குறையாய்... கொஞ்சி குலவிக் கொண்டு இருக்கிறார்களே.

பக்கத்தில்... கணவனும் மனைவியும் தங்கள் குழந்தைகளுக்கு ஊட்டிக் கொண்டு... நடுவே அவர்களை கொஞ்சிக் கொண்டு இருந்ததையும் கண்டாள்.

ஒவ்வொருத்தராய் கவனித்து வந்தவளின் கண்கள் அப்போது உள்ளே வந்த ஒரு ஜோடியின் மீது விழுந்தன...

வாய் வரை சென்று விட்ட ஐஸ்கிரீம் 'தடக்'கென்று நின்று விட்டது.

கண்களில் மிரட்சி தெரிய அமர்ந்திருந்தவளைப் பார்த்து விட்டு... சந்தோஷும் திரும்பிப் பார்த்தான்.

யாரைப் பார்த்து இப்படி மிரள்கிறாள்... கண்கள் கூட்டத்தை அலசின...

வினோத்... ரூபாவுடன்...

சந்தோஷுக்கும் திகைப்பு... அடச்சே... உலகம் இத்தனை சின்னதா என்ன... எங்கே போனாலும் அங்கு சந்திப்பு நிகழ்கிறதே...

இருந்தும் சுதாரித்துக் கொண்டான்...

அவர்களையே வெறித்துக் கொண்டு அமர்ந்திருந்த வைஜயந்தியிடம் கேட்டான் அவன்.

"அவர்கள் இங்கு வருவது உனக்குத் தெரியாது இல்லையா வைஜயந்தி. எதற்கு பயப்படுகிறாய். உன் கணவன் தப்பாக நினைப்பார் என்றா..."

"இல்லை" என்று தலையசைத்தாள் அவள்.

"பின்னே... எதற்கு இந்தத் தடுமாற்றம்... நீ ஒன்றும் தப்பு செய்யவில்லையே... ரிலாக்ஸ்... வைஜயந்தி..." ஆனால் அவளால் அது முடியவில்லை.

மனசுக்குள் 'திக்திக்' என்று அடித்துக் கொண்டது. அவன் எங்கே பார்த்து விடுவானோ என்று உள்ளத்தில்



சஞ்சலம்... அந்தப் பதற்றத்தில்... ஏ.ஸி. குளிரிலும் அவளுக்கு வியர்த்தது.

நல்லவேளை... அவர்கள் இந்தப் பக்கமே திரும்பவில்லை. ஏதோ மும்முரமாய் பேசிக் கொண்டு... சற்று தள்ளியிருந்த மேஜை முன் அமர்ந்தனர். அப்பாடா... என்று நிம்மதி வந்தாலும்... அடுத்த வினாடியே... அய்யோ... போகும்போது அவர்களைத் தாண்டியல்லவா செல்ல வேண்டும் என்ற நினைப்பால் உதறல் ஏற்பட்டது...

வாயில் இருந்த ஐஸ்கிரீம் கசந்து வழிந்தது.

## 19

அவளையே பார்த்துக் கொண்டிருந்த சந்தோஷ்... அவளது முகத்தில் தெரிந்த பலவித உணர்வுகளைக் கவனித்தான்.

சஞ்சலம்... நிராசை... வேதனை... பயம் என்று மாறி வந்த உணர்ச்சிகளையும் அவளது முகம் கண்ணாடியாய் காட்டியது.

நீண்ட நாளாய் அவனுள் குடைந்து கொண்டிருந்த கேள்விக்கு விடை கிடைத்தது போல இருந்தது... அவளது தாம்பத்திய வாழ்க்கை சரியில்லையோ.

"வைஜயந்தி..." என்று அழைத்தான்.

திடுக்குற்று அவனைப் பார்த்தாள் அவள்... அவளது கண்களில் தெரிந்த கலக்கம்... அவனது நெஞ்சில் வலியை உண்டாக்கியது.

என் கண்மணிக்கு ஏன் இந்த தவிப்பு... எதை நினைத்துக் கலங்குகிறாள்... அவளை அணைத்து... நான் இருக்கிறேன். உனக்கு என்று தோளில் சாய்த்துக் கொள்ள வேண்டும் போல் வந்த துடிப்பை கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டான்.

"உங்களிடையே ஏதோ சரியில்லை என்று தெரிகிறது. வைஜயந்தி... உன் மனதில் அரிக்கும் வேதனை என்ன என்று நான் தெரிஞ்சுக்கலாமா... என்னிடம் சொல்லலாம் என்று உனக்குத் தோன்றினால்... அதைக் கேட்க நானும் தயார் தான்.. ஆனால் கட்டாயம் எதுவும் இல்லை... வைஜயந்தி... யாரிடமாவது சொன்னால் தான் மனச்சுமை குறையும்... என்னை சுமை தாங்கியாய் நினைத்துச் சொல்லலாமே..." மனதை வருடித்தருவது போல இதமாய் அவன் பேசியது அவளது உள்ளத்தைத் தொட்டது.

தன் வேதனையை யாரிடமாவது கொட்டமாட்டோமா என்று தவித்துக் கொண்டிருந்தவள். அவன் காட்டிய அக்கறையில் கரைந்தவளாய்... நடந்ததை அவனுக்கு ரத்ன சுருக்கமாய் சொன்னாள்.

வினோத்... இப்போது ரூபாவிடம் சரணாகதியாகி கிடப்பதைச் சொல்லும்போது... அவளது குரல் தழுதழுத்தது. "நீ அந்த ரூபாவை விட எந்த விதத்திலும் தாழ்ந்தவள் இல்லைம்மா.. முதலில்... உன் தாழ்வு மனப்பான்மையை ஒழிம்மா... ஆமாம். நீ எதுவரைக்கும் படிச்சிருக்கே... வைஜயந்தி..." என்று வினவினான் அவன்.

"பி...யூ...சி வரைதான்."

"மேலே நீ ஏன் படிக்கக்கூடாது... உன் திறமையை வளர்த்துக் கொண்டு... என்னாலும் சாதிக்க முடியும் என்று நிரூபித்துக் காட்டேன்... நான் படிக்காத முட்டாள் என்கிற நினைப்பை முதல்ல கழட்டி எறிம்மா... ஏதாவது கம்ப்யூட்டர் கோர்ஸோ... இல்லை ஃபேஷன் டிஸைனிங்கோ



படிக்கலாம்தான்... யோசிச்சு முடிவு எடு... வைஜயந்தி... இந்த விஷயத்தில் நான் உனக்கு உதவுகிறேன்... 'டைவர்ஸ்'க்கு பின் என்ன செய்வது என்று கவலைப் படாமல்... எதையாவது செய்ய வேண்டும் என்ற முடிவெடு... கையில் கிடைத்த தங்கத்தின் மதிப்பை வினோத் வேண்டுமானாலும் அறியாமல் இருக்கலாம்... ஆனால் அது எனக்குத் தெரியும்மா... இப்பவும் அவனை உதறிவிட்டு வந்தாலும் சரி... உன்னை ஏற்றுக் கொள்ள நான் தயார்.. எல்லாம் நீ எடுக்கும் முடிவில் தான் இருக்கு வைஜயந்தி..." என்றவன் 'வெயிட்டருக்கு டிப்ஸை' வைத்துவிட்டு எழுந்தான்.

"போகலாம் வைஜயந்தி... தைரியமாய் வா... நீ எந்தத் தப்பும் பண்ணவில்லை... உன்னை வெளியில் அழைத்துச் சென்று... உன்னை சந்தோஷமாய் வைத்துக் கொள்ள வேண்டிய கடமை உன் கணவனுக்கு இருக்கு... அதை செய்ய மறந்தவனுக்கு... உனக்குப் பதிலாய்... வேறொருத்தியை அழைத்துச் செல்பவனுக்கு உன்னைக் கேள்வி கேட்கும் அதிகாரம் கிடையாது... அதைப் புரிந்து கொள்... வைஜயந்தி... இப்போ... தலையை நிமிர்த்திக் கொண்டு என்னுடன் வா... பார்க்கலாம்" என்று அவன் சொன்னாலும்...

அவளால் முடியவில்லை... கால்கள் பின்னிக் கொண்டன... நெஞ்சில் தடக்... தடக் என்று ரயில் வண்டியின் சத்தம்... கஷ்டப்பட்டு நடந்தாள் அவள். வினோத்தின் அருகே சென்றதும்... சந்தோஷே அருகில் சென்று வலியப் பேசினான்.

"ஹலோ... வினோத்... எதிர்பாராத சந்திப்பு இல்லே..."

அவனது குரலைக் கேட்டு திகைத்தவனாய் நிமிர்ந்து பார்த்தவன்... சந்தோஷைப் பார்த்து புருவங்களை உயர்த்தினான்... நீ எங்கே... இங்கேயும் என்பது போல...

அவனது பார்வை சந்தோஷின் அருகே நின்ற வைஜயந்தியின் மேல் விழுந்தது...

அவனது உதடுகளில் அழுத்தம் வந்ததைக் கண்டு வைஜயந்தியின் இதயத் துடிப்பு வேகம் பிடித்தது...

சந்தோஷ் அத்துடன் இருந்திருக்கக் கூடாதா...

"வைஜியை எங்க வீட்டுக்கு அழைத்துப் போயிருந் தேன். அப்படியே இந்த ஓட்டலுக்கு வந்தோம்... நாங்கள் சாப்பிட்டாகி விட்டது... வருகிறோம்... பை..." என்று வேண்டும் என்றே சொன்னான்.

அதைக் கேட்டதும் வினோத் முகத்தில் வந்த மாற்றம்... அவளை நடுங்க வைத்தது.

கோபத்தில் முகம் சிவந்து போய்... தாடையில் இறுக்கம் வந்து... கண்களில் ஜ்வாலை தெரிய... விறைப்புடன் அமர்ந்திருந்தவனை பார்க்கவே பயமாக இருந்தது...

அதை உணர்ந்து விட்டதைப் போல ரூபாவின் உதட்டில் நமுட்டுச் சிரிப்பு வேறு வைஜயந்தியை இம்சித்தது.

ஓட்டலை விட்டு வெளிவந்ததுமே வருத்தத்துடன் கேட்டாள் அவள்...

"ஏன் அவர் முன் வைஜி என்று சொன்னீர்கள் சந் தோஷ்... அவர் அதை தப்பாய்..."

"நினைக்கட்டுமே... அப்படி தப்பாய் பட வேண்டும் என்று தான் நான் சொன்னது... என் மனைவி என்ற எண்ணம் வினோத் மனதில் இருந்தால்... தப்பாய் படத்தான் செய்யும்... என் மனைவியை அழைத்துப் போக இவன் யார் என்று கோபம் வரணும்... அந்தக் கோபத்தைக் கிளறத்தான் அப்படிச் சொன்னேன்... வைஜயந்தி..."

"அப்படி நடக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை சந்தோஷ்... இது வீண் முயற்சி."



"பார்க்கலாம்மா... முயற்சி செய்து பார்ப்பதில் தப்பில் லையே இதோ பார் வைஜயந்தி நான் செய்வது உன் நல்லதுக்குத்தான் என்ற நம்பிக்கை உனக்கு இருக்கு தானே... அது போதும்..." வீடு வந்ததும் அவளை இறக்கி விட்டவன் அவளிடம் வினவினான்.

"வைஜயந்தி... உன்னிடம் ஒன்று கேட்கட்டுமா... ஒருவேளை இரண்டு வருடங்கள் கழித்தும் வினோத் மனம் மாறாமல் 'டைவர்ஸ்' என்று போனால்... உனக்காக நான் ஒருவன் இருக்கிறேன் என்பதை நினைவில் வைத்துக் கொள்வாய் தானே..."

என்ன சொல்வது என்று தெரியாமல் அவள் விழிப் பதைப் பார்த்துவிட்டு... "சரி... உள்ளே போ வைஜயந்தி..." என்றான்.

அவள் உள்ளே செல்லும் வரை காத்திருந்து விட்டு அவன் கிளம்பினான்.

வீட்டினுள் நுழைந்தவள்... ஹாலில்... சோபாவில் அலட்சியமாய் அமர்ந்திருந்த வினோத்தைப் பார்த்து விட்டு அதிர்ந்தாள்...

அவன் காரைப் பார்க்கவில்லையே... ஒரு வேளை... டென்ஷனில் பார்க்கவில்லையோ... இல்லை... சந் தோஷின் கேள்வி தந்த குழப்பத்தில் பார்க்க மறந்து விட்டேனா.. தனக்கு முன் வந்து விட்டாரே... கார் என்ப தால் விரைவில் வந்துவிட்டாரா...

எப்படியோ... இப்போது அவனது கோபத்தை சந் தித்தே ஆகவேண்டும்... மனமே... துணிவுடன் இரு... எந்தத் தப்பும் செய்யவில்லை என்ற நினைப்பில் இரு. தனக்குள் துணிச்சலை வரவழைத்துக் கொண்டாள். அவன் பேசாமல் அவளையே உறுத்துப் பார்த்துக் கொண் டிருந்தான்...

அவனுக்குப் பேசவும் பிடிக்கவில்லை போலும் என்று எண்ணி... தன் அறையை நோக்கி ஒரு எட்டு வைத்தவளை இடியின் உறுமலாய் அவனது குரல் ஒலித்து நிறுத்தியது.

"நில்... என்ன தைரியம் இருந்தால்... யாரோ ஒருவனுடன் ஓட்டலுக்குப் போவாய்..."

"அவர் யாரோ இல்லை.. எனக்கு உறவினன்..."

"நீ திருமணம் ஆனவள்... அது நினைவிருக்கட்டும். நாளைக்கு... என் மனைவி கண்டவனுடன் ஊர் சுற்றுகிறாள் என்று யாரும் சொல்லக்கூடாது. தெரிந்து கொள்."

அவளையும் அறியாமல் துணிச்சல் வந்துவிட...

"அதே மாதிரி... உங்களையும் பேச மாட்டார்களா... கட்டின மனைவியை விட்டு விட்டு யாரோ ஒருத்தியுடன் சுத்துவதை பார்த்துவிட்டு... கேவலமாய் யாராவது பேசலாம் இல்லையா... நாம் வாழறதே நாடகம்... இரு வருட ஒப்பந்தம்... ஏன் பெரிசா எடுத்துக்கணும்... ஒப்பந்தம் முடிந்த பிறகு உங்க வழி வேறே... அந்த ரூபாவோடு... என் வழி வேறே..." என்றாள் தைரியமாய்... பரவாயில்லையே. தனக்கும் பேச வருகிறதே என்ற மகிழ்ச்சியும் வந்தது.

"அந்த சந்தோஷூடனா..."

"அதில் தப்பில்லையே... உண்மையை சொன்னால். அவர் என்னை மனதாரக் காதலித்தவர். அண்ணி தடை போட்டதால் இந்தத் திருமணம் நடக்காமல் போச்சு. ஒருவேளை நடந்திருந்தால் நானும் சந்தோஷமா இருந்திருப்பேன். விதி... வாழ்க்கையைப் புரட்டிப் போட்டு விட்டது. இதில் உங்களைவிட எனக்குத்தான் அதிக வருத்தம்... மாமாவிற்காகத்தான் இந்தப் பொறுமை... இரண்டு வருட கெடு முடிந்ததும்... நான் உங்கள் வாழ்க்கையிலிருந்தே போய்விடுவேன்... எனக்கு சொத்து எதுவும்



வேண்டாம்... மன நிம்மதி மட்டும்தான் வேண்டும்... எல்லா சொத்தையும் நீங்க அனுபவித்துக் கொள்ளுங்கள்... அதுக்காக நான் நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறேன்..." மனதில் இருப்பதையெல்லாம் கொட்டி விட்டதில் நிம்மதி...

"நானும்தான்... அந்த நாளுக்காக காத்திருக்கிறேன். இன்னும் ஒரு வருடம்... ஒன்பது மாதங்கள்.. கடவுளே..." அவன் குரலில் தெரிந்த கசப்பை உணர்ந்தவள் அங்கே இருக்கவும் பிடிக்காமல் ஓடினாள். நெஞ்சு வெடிப்பது போல அழுகை வந்தது... தன் அறைக்குள் சென்று படுக்கையில் குப்புற விழுந்து... தலையணையில் முகம் புதைத்து விம்மினாள். எதற்காக இந்தக் கண்ணீர் என்ற காரணம் புரியாமலே அழுது தீர்த்தாள்.

மறுநாள் அத்தை அவளிடம் விசாரித்தாள். "என்னம்மா... வைஜி... நேத்து எத்தனை மணிக்கு வந்தே... எனக்கு நல்ல தூக்கம்... நீ வந்ததும் தெரியாமல் தூங்கிக் கொண்டிருந்தேன்... பாரு..." என்று ஆரம்பித்தவள்... அவளது முகம் சிவந்து போய்... கண் இமைகள் வீங்கி இருப்பது கண்டு பதைத்துப் போனாள்.

"என்ன ஆச்சும்மா... என்ன விஷயம்னு சொல்லு..." என்று விசாரித்தாள்...

கண்ணீர் மல்க... நடந்ததை எடுத்துரைத்தாள் வைஜயந்தி.

"எத்தனை தைரியமாக இருந்தாலும்.. அவரது உதாசீனத்தை... அவரது அலட்சியப் பேச்சை என்னால் தாங்க முடியவில்லை அத்தை. இந்த நரகவேதனைக்கு விடிவே வராதா என்றிருக்கிறது..." என்றாள் துயரத்துடன்.

"நீ அவனை கல்லுன்னு சொன்னே இல்லே... நான் கல் இல்லே... மனுஷன் தான்னு காட்டிக்கிறான். எந்தப் புருஷனும் தாலிகட்டிய மனைவியை இன்னொருத்தனுடன்

பார்க்க சகிக்க மாட்டான்... நீறு பூத்த நெருப்பாட்டம் அடி மனதில்... தன்னோட வஸ்துங்கற உரிமைதான் காரணம்... இதுவும் நல்ல அறிகுறிதான்... வைஜி... நீ கவலைப் படாமல் இரும்மா...'' என்று ஆறுதல் சொன்னாள்.

அத்தை வந்த காரணமே... வடபழனி கோவிலில் நடைபெறவிருக்கும் தூரத்து உறவினர் வீட்டு திருமணத் திற்காகத்தான்... அது முடிந்ததும் புறப்பட்டுச் சென்று விட்டார்... அவர் இன்னும் சில நாட்கள் தங்கியிருந்தால்... தனக்கு ஆறுதலாய் இருக்குமே என்று அவளுக்குத் தோன்றினாலும்... எத்தனை நாட்கள் அப்படி இருக்க முடியும் என்றும் எண்ணினாள்.

இருவரின் வாக்குவாதத்திற்கு பிறகு வினோத்திடம் கொஞ்சம் மாற்றம் தெரிந்தது.

இப்போதெல்லாம் நேரம் கழித்து வருவதில்லை... ரூபாவுடன் ஊர்வலம் வந்ததை நிறுத்தி விட்டான் போலும்... தன் பேச்சை மதித்தோ... இல்லை குற்ற உணர்வோ யாருக்குத் தெரியும்.

இந்த மட்டும் தன்னை கொஞ்சம் மதித்தாரே என்று மகிழ்ச்சியடைந்தாள் வைஜயந்தி.

இந்த அமைதியை ஏன் கெடுத்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணி... சந்தோஷிடம் சொல்லி விட்டாள்.

''இனி வீட்டுக்கு வரவேண்டாமே சந்தோஷ்... ஏன் வீண் பிரச்சனை... போனில் பேசிக் கொள்ளலாம்...'' என்று அவள் சொன்னதை ஏற்றுக் கொண்டான் சந்தோஷ்...

ஒரு வாரம் கழித்து சந்தோஷ் போன் செய்தான். 'இன்டீரியர் டெக்ரேஷன்' கோர்ஸில் சேருகிறாயா... அப்ளிகேஷன் வாங்கியனுப்புகிறேன்'' என்று கேட்டான்.

''அதைப் பற்றி எதுவும் தெரியாதே சந்தோஷ்...'' என்றாள் அவள்...



அவனும் அதைப்பற்றி அவளுக்கு விளக்கினான். அவளுக்கும் பிடித்து விட்டது...

ஆனால் வினோத்திடம் அனுமதி வாங்க வேண்டுமே... அவர் என்ன சொல்வாரோ... ''உனக்கு இந்த ஆசையும் இருக்கிறதாக்கும்'' என்று ஏளனம் செய்தால்... கேட்கா மலே கோர்ஸில் சேருவதும் தப்பு...

ஒரே வீட்டில் இருந்து கொண்டு அவரிடம் சொல்லா மல் எப்படி இருப்பது...

அனுமதிக்காக என்று இல்லாவிட்டாலும் எங்கு போகிறேன் என்று தெரிந்து கொள்ள வேண்டாமா.

அதற்காகவாவது அவனிடம் பேசித்தான் ஆகனும். பெருமூச்சு விட்டாள் அவள்.

அன்று இரவு... அவன் சாவகாசமாய் இருக்கையில் அவனிடம் பேசினாள்.

''உங்களிடம் ஒன்று சொல்லணும்.''

''என்ன அது...'' அசட்டையாகக் கேட்டான் அவன்.

''எனக்கு வீட்டில் சும்மா இருக்கப் பிடிக்கவில்லை... அதனால் மேலே படிக்கும் உத்தேசம்...''

''அதற்கு நான் என்ன செய்ய வேண்டும். பணம் வேண்டும்... அவ்வளவுதானே...''

அடக்கி வைத்தாலும் எரிச்சல் எழப் பார்க்கிறதே... பற்களைக் கடித்துக் கொண்டாள்.

''விஷயத்தைச் சொன்னேன்... அவ்வளவுதான். உங்கப் பணம் எதுவும் தேவையில்லை...'' என்றாள் கொஞ்சம் பிகுவுடன்...

''ஓ... என் பணம் வேண்டாம்... அப்போ... படிப்புக்கு யார் பணம் கட்டுகிறார்கள்... அந்த சந்தோஷ்... அப்படித்தானே...''

"யாராக இருந்தால் என்ன... ஏன்... நானே எங்கே யாவது பார்ட் டைம் வேலைப் பார்த்துக் கொண்டு... படிக்க முடியும்" என்றாள் சுய மரியாதையை விடாமல்...

அவன் தோள்களைக் குலுக்கினான்... என்னவோ செய்... உன்னிஷ்டம் என்பதுபோல...

எப்படியோ... அவன் காதில் விஷயத்தைப் போட்டாகி விட்டது... அது போதும்.

அந்த நிம்மதியில் சந்தோஷிற்கு மறுநாளே போன் செய்தாள்...

'கோர்ஸில் சேரத் தயார்' என்று அவள் சொன்னதும் சந்தோஷின் குரலில் குதூகலம் கொப்பளித்தது.

"குட்... வெரிகுட் வைஜயந்தி... எனக்கு ஆனந்தமாக இருக்கிறது... சரி... உடனே அப்ளிகேஷன் அனுப்பி வைக் கிறேன்... பாஸ்போர்ட் 'சைஸ்' போட்டோ உன்னிடம் இருக் கிறதா... இல்லையென்றாலும் பரவாயில்லை... ஸ்டுடி யோவில் எடுத்தால்... மின்னல் வேகத்தில் தந்து விடு வார்கள்... சரி கூரியரில் அப்ளிகேஷனை அனுப்பு கிறேன்... ஏதாவது சந்தேகம் என்றால் என் 'செல்'லுக்கு பண்ணி.. கேள் வைஜயந்தி..." என்று சொல்லிவிட்டு தொடர்பை வெட்டினான் சந்தோஷ்...

பெரிதாய்... உன் பணம் தேவையில்லை என்று சொல்லி விட்டாளே தவிர... படிப்புக்கு ஆகும் செலவை எப்படிச் சமாளிப்பது... ஆரம்பத்தில்... கோர்ஸில் சேர பணம் தேவையாயிற்றே...

கௌரவத்தை விட்டுவிட்டு கணவனிடம் கேட்க பிடிக்கவில்லை...

கணவன் என்ற உறவே பொய்யாய் இருக்கும்போது– எந்த உரிமையில் பெறுவது... வேண்டவே வேண்டாம்.



சந்தோஷ்... ஊகூம்... அவர் இந்த அளவு உதவுவதே பெரிய விஷயம்... அவரிடம் மீண்டும் உதவி கேட்பது சரியல்ல... யோசித்ததில் மண்டை காய்ந்ததுதான் மிச்சம்.

சொன்ன மாதிரியே... சந்தோஷ் 'கூரியரில்' விண்ணப் பத்தை அனுப்பி வைத்திருந்தான்.

அதைப் பூர்த்தி செய்யும்போது அவளுக்குச் சிரிப்பு வந்தது.

கணவன் பெயர் என்ற இடத்தில் 'வினோத்' என்று நிரப்பும் போது... அவளுக்கு சந்தோஷத்திற்கு பதிலாய் விரக்தி தான் வந்தது... ஏனோ அது பொருத்தமாய் அவ ளுக்குப் படவில்லை.

ஆனாலும் எழுதியாக வேண்டும்... தாலிகட்டிக் கொண்ட கடனுக்காக...

அன்பில்லாத வாழ்க்கை... நாறா மலர் மாதிரி என்று வெறுப்புடன் நினைத்தாள்.

இந்த ஒரு வருட படிப்பு முடிந்ததும் ஏதாவது வேலை தேடிக் கொள்ள வேண்டும்... யாருடைய கையையும் எதிர்பார்க்காமல் என் காலில் நிற்க வேண்டும்...

அப்புறம்... வினோத்தை விட்டு விலகி... தூரம்... வெகு தூரம் போய்விட வேண்டும்... அவனது கண்களில் விழாத தொலைவுக்கு...

ஆனால் அந்த முடிவு கூட மகிழ்ச்சிக்கு பதில் வலியைத்தான் தந்தது...

"கங்கிராட்ஸ்... வைஜயந்தி... நீ கோர்ஸில் சேர்ந்தாச்சு" என்று சந்தோஷ் சொன்னதும் மலைத்துப் போனாள் அவள்.

சேர்ந்தாச்சா... விண்ணப்பத்தில் கையெழுத்து போட்டு... பாஸ்போர்ட் சைஸ் போட்டோவும்... என் சான்றிதழ்களை மட்டும் தான் தந்தேன்.

அதெப்படி... பணம் இன்னும் கொடுக்கவில்லையே... பணம் இப்போது கட்டத் தேவையில்லையா... இருக்காதே... பணத்தைக் கட்டினால்தானே சேர முடியும்... அப்போ... சந்தோஷ்தான்...

"என்ன வைஜயந்தி... திகைத்து நிற்கிறே... இத்தனை சீக்கிரத்தில் முடிந்து விட்டதே என்றா... அய்யோ கருமமே கண்ணாயினராய் இருக்கையில் எப்படி முடியாமல் இருக்கும்..." என்று தன் காலரைத் தூக்கி விட்டுச் சொன்னான் அவன்.

"பணம் எப்படி... நீங்க எவ்வளவு என்று சொல்லவில்லையே... அதுதான் நான் காத்திருந்தேன்."

"எனக்குத் தெரியும்மா... உன்னால் பணத்தைக் கட்ட முடியாது என்று... அதான்... நானே கட்டிவிட்டேன்."

"எவ்வளவு சந்தோஷ்... தொகையைச் சொன்னால் திருப்பித்தர எதுவாக இருக்கும்."

சொன்னான் அவன்... அய்யோ... அவ்வளவா... அத்தனை பணத்திற்கு எங்கே போவேன்... சே... தெரிந்திருந்தால் இந்தக் கோர்ஸில் சேர்ந்திருக்க மாட்டேனே... இப்போது சந்தோஷுக்கு கடன் பட்டு விட்டோமே. பேசாமல்... வினோத்திடமே கேட்டிருக்கலாம். சுய கௌரவத்தை அடகு வைத்து விட்டு...

அவளுக்குள் போராட்டம் நடப்பதை உணர்ந்தவனாய் சொன்னான் அவன்.

"இதோ பார் வைஜயந்தி... இந்தப் பணத்தை உனக்கு கடனாகத்தான் கொடுத்திருக்கிறேன் என்று வைத்துக் கொள்... ஓகே... உனக்கு எப்போ முடியுமோ அப்போது கொடுத்தால் போதும்... சரிம்மா... இப்போதாவது கொஞ்சம் சிரியேன் பார்க்கலாம்" என்றான் கெஞ்சுவது போல...

அவளும் மனம் விட்டுச் சிரித்தாள்... முதல் முதலாக...



# 20

வீட்டில் இருந்தபோது நொண்டி நடந்த நாட்கள்... 'கோர்ஸில்' சேர்ந்த பிறகு வாயு வேகத்தில் பறந்தது... அந்தக் கால ஓட்டத்தில் தான் எத்தனை மாற்றங்கள்... வைஜயந்தியிடம் வந்த மாற்றம்... அது வியக்க வைத்த மாற்றம்தான்...

அது வரையில் கிணற்றுத் தவளையாய் வீட்டினுள் முடங்கிக் கிடந்தவளுக்கு... வெளியுலக வாழ்க்கை சுதந்திர உணர்வை ஏற்படுத்தியது... தன்னம்பிக்கையை வளர்த்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

வாழ்க்கை என்பது வாழ்வதற்கே என்ற உண்மையைக் கற்றுத் தந்தது...

தன்னை ஒத்த வயசுப் பெண்கள் பட்டாம் பூச்சிகளாய் வளைய வருவதைக் கண்டு முதலில் திகைத்தவள்... மெல்ல... மெல்ல... தன்னைச் சுற்றியிருந்த கூட்டை உடைத்து வெளிவந்தாள்.

கற்பது என்பது வெறும் பாடத்திலிருந்து மட்டும் அல்ல... அனுபவங்களிடமிருந்தும்தான் என்று உணர்ந்ததும்... கல்விக் கூடத்தில்தான்.

ஆரம்பத்தில்... ரொம்பவும் எளிமையாய்... கிட்டத்தட்ட கிராமத்துப் பெண் போல என்றே சொல்ல வேண்டும்... எந்தவித ஒப்பனையும் அலங்காரம் இல்லாமல் சென்றாள் வைஜயந்தி...

அங்கே படிக்கும் பெண்கள் வெகு நாகரிகமாய் அலங்காரப் பிரியர்களாய் வருவது கண்டு அயர்ந்து போனாள்.

எப்படி இவர்களின் முகம் கண்ணாடியாய் பளபளக்கிறது... எப்படி இவர்களின் கூந்தல் பட்டாய் பளபளக்

கிறது... உடம்பும் மொழுமொழுவென்று இருக்கிறதே... என்று ஆச்சர்யத்துடன் பார்ப்பாள்.

ப்யூட்டி பார்லரின் கைங்கர்யத்தால் அதுவெல்லாம் சாத்தியம் என்று அப்புறம் தான் தெரிந்தது.

வகுப்பில் அவளுக்கும் தோழிகள் கிடைத்தார்கள். அதில்... மிகவும் நெருக்கமான தோழி என்றால் சோனியா... பூர்வீகம் பூனா என்றாலும் பிறந்து வளர்ந்தது எல்லாம் சென்னையில்.

அவளது துணிச்சலும்... வெளிப்படையான பேச்சும்... உள்ளத்தில் இருப்பதை 'பளிச்'சென்று தயங்காமல் சொல்லும் விதமும்... ஆண்களிடம் சகஜமாய்... அதே சமயம் எல்லை மீறாமல் பழகும் விதமும் வைஜயந்தியைக் கவர்ந்தது... அது மட்டுமல்ல...

அவளது சரளமான ஆங்கிலமும்... நகைச்சுவை உணர்வும் கண்டு வியந்தாள்...

தன்னால் அப்படிப் பேச முடியுமா... என்ற தாழ்வு மனப்பான்மை அவளை ஒடுங்கச் செய்தது...

சந்தோஷிடம் அதைக் கூறினாள்...

அவன் அதைக் கேட்டுச் சிரித்தான்... ''முதலில் தயக்கத்தை விட்டு பழகும்மா... தயங்காம பேசு... எல்லாம் கைவந்த கலையாகி விடும்... பார்...'' என்றான்.

அவளுக்காக ஆங்கிலம் கற்பது எப்படி... சரளமாய் பேசுவது எப்படி என்ற புத்தகங்கள்... சி.டி.களை வாங்கி வந்து தந்தான்... அவற்றை முழு மனதுடன் பெற்றுக் கொண்டாள் வைஜயந்தி.

சோனியாவிடமிருந்து கற்றுக் கொண்டதில் இன்னொன்று. பிறர் தரும் அன்பளிப்புகளை... உதவிகளை நன்றியுடன் ஏற்றுக் கொள்வதும் ஒருவகை நாகரீகம்



தான்... ஆனால் அது கொடுப்பவரைப் பொறுத்து இருக்கிறது... என்பதுதான்.

சந்தோஷ் வாங்கித் தந்த புத்தகத்தைப் படித்து... தன் ஆங்கில அறிவை வளர்த்துக் கொண்டாள். சந்தோஷின் தூண்டுதலால்... வீட்டிற்கு வரும் ஆங்கில செய்தித்தாளை ஆர்வமாய் வாசிக்க ஆரம்பித்தாள். அர்த்தம் தெரியாத வார்த்தைகளை ஆங்கிலம்... தமிழ் அகராதியில் படித்து பொருள் அறிந்தாள்...

சோனியாவிற்கும் அவளது தயக்கம் தெரிந்ததால்... அவளும் பிடிவாதமாய் தன்னுடன் ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்று நிபந்தனைப் போட்டு விட்டாள். ஆரம்பத்தில் தட்டுத் தடுமாறியவளுக்கு போகப் போக சரளமாய் பேச வந்தது... உச்சரிப்பையும்... தவற்றையும் சோனியா திருத்தினாள்...

சித்திரமும் கைப்பழக்கம்.. செந்தமிழ் நாப்பழக்கம் என்பதுபோல... ஆங்கிலமும் நாப்பழக்கத்தில் அழகாக வந்து விட்டது அவளுக்கு...

சோனியாவுடன் சரிக்கு சமமாய் உரையாட ஆரம்பித்தாள் வைஜயந்தி...

அது மட்டுமா... தோற்றத்திலும் நல்ல மாற்றம் வந்து விட்டது. அதுவும் சோனியாவின் கைங்கர்யம் தான் என்று சொல்ல வேண்டும். தான் வழக்கமாகச் செல்லும் பியூட்டி பார்லருக்கு அவளையும் அழைத்துச் சென்றாள் சோனியா.

ஏன் கூடாது... என்னை அழகு படுத்திக் கொள்ளும் உரிமை எனக்கு இருக்கிறது என்று தயக்கத்தை விடுத்துச் சென்றாள் அவள்...

பேஷியல்... ஹேர் மசாஜ்... மெனிக்யூர்... பெடிக்யூர் என்று எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு வெளியே வந்தவளைப் பார்த்து விட்டு 'வாவ்!' என்று கூவினாள் சோனியா.

கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்ட வைஜயந்திக்கு இது நான் தானா என்ற பிரமிப்பு...

இதுநாள் வரை ஒளிந்து கிடந்த வனப்பை வெளிக் கொண்டு வந்தது மட்டுமல்லாமல்... அதை ஒளிரும்படி செய்திருக்கும் அழகுக் கலையை... அழகுக் கலை நிபுணரை போற்றத்தான் வேண்டும்...

இப்போது... வினோத் என்னைப் பார்த்தால்... என்ன நினைப்பார்... என்னை... தலையை உதறிக் கொண்டாள் அவள்... வேண்டாம் என்றாலும் இந்த மடமனம் அவரையே நினைக்கிறதே... சே... அலை பாயும் மனதை அடக்கப் பார்த்தாள்...

இப்போதெல்லாம் வினோத்திடமும் சகஜமாய் பேசிப் பழகினாள் வைஜயந்தி.

விரிந்து கிடக்கும் பரந்த வெளியுலகத் தொடர்பினால் வந்த நன்மைகளில் அதுவும் ஒன்று...

மன இறுக்கம் தளர்ந்து... அவனிடம் சுமுகமாய் ஏன் வேடிக்கையாகக் கூடப் பேச முடிந்தது...

அவனுக்கும் அது வியப்பு தான்...

அவளிடம் வந்த மாற்றத்தை அவனும் கவனித்துக் கொண்டிருந்தான்... நடை... உடை பாவனையில் வந்த மாற்றம் அவனை அயர வைத்தது... சேலையிலிருந்து சுரிதாருக்கு இயல்பாய் மாறி விட்டதை கவனிக்கவும் செய்தான்.

இறுகப் பின்னலிட்ட சடையும்... எண்ணெய் வழியும் முகமுமாய்... பட்டிக்காட்டு பெண்ணாய் தயங்கி... தயங்கி நின்ற வைஜயந்தியா இவள்... மூக்கின் மேல் விரல் வைக்காமல் ஆச்சர்யப்பட்டான் அவன்...

தான் கற்று வந்த கலையை வீட்டிற்குள் தன் கை வண்ணமாக்கி அழகு படுத்தினாள்... திரைச்சீலை... மேஜை விரிப்பு... சாப்பாட்டு மேஜையின் மேல் விரிப்பு என்று அனைத்திலும் புதுப்புது ரகம்... புது புது உத்திகளை கையாண்டு... கலக்கினாள்...



இங்கு ஒரு விஷயத்தைச் சொல்ல வேண்டும்...

ஆரம்பத்தில் பணம் இல்லையே என்று அவள் மனசுக்குள் உளைந்தது என்னவோ நிஜம்... வினோத்திடமிருந்து பெற தன்மானம் இடம் தரவில்லை... சந்தோஷிடமிருந்து பெறவும் கூச்சம்.

என்ன செய்வது என்று தவித்த போதுதான் அத்தையின் மூலமாய் தெரிய வந்தது...

இது போல கஷ்டம் வர நேரிடும் என்றோ... வினோத்தை நம்ப முடியாது என்று நினைத்தோ... தெரியவில்லை. மாமா... வைஜயந்தியின் பேரில் ஒரு கணக்கு ஆரம்பித்து அதில் மூன்று லட்சம் போட்டு வைத்திருக்கிறார் என்ற விஷயம் தான் அது... என்றோ ஒரு நாள் தன்னிடம் கையெழுத்து வாங்கிய நினைவு அப்போது வந்தது. அந்த செய்தியைக் கேட்டதும் அவளது கண்கள் கலங்கின... மாமாவின் முன்னெச்சரிக்கையான செயலை உள்ளுக்குள் மெச்சினாள்...

அப்புறம் என்ன... சந்தோஷின் கடனும் தீர்க்க முடிந்தது... தனக்காகும் செலவையும் சமாளிக்க முடிந்தது...

அதே போல... 'குக்கரி' வகுப்புக்கும் விரும்பிச் சென்று வட இந்திய... தென் இந்திய... செட்டிநாடு... சைனீஸ் என்று அனைத்து சமையலையும் கற்று வந்தது மட்டுமல்லாமல்... வீட்டிலும் தினுசு தினுசாய் செய்தாள். வீட்டில் சனி... ஞாயிறு... மற்றும் விடுமுறை நாட்களில்... அவளே நின்று புதுப்புது பதார்த்தங்களை செய்து டைனிங் டேபிளில் வைப்பது வழக்கமாகிப் போனது...

முதலில் உம்மென்று அமர்ந்து சாப்பிட்ட வினோத்திடம் கூட சொல்லிவிட்டாள்.

"இதோ பாருங்கள் வினோத்... நாம் கணவன் - மனைவி என்ற உறவை மறந்து விட்டு... நாம் இருவரும் நல்ல நண்பர்கள் என்று நினைத்துப் பழகலாமே... எதற்காக ஒரே வீட்டில் இருந்து கொண்டு வைரிகளாய் ஒதுங்கி இருக்கனும்... சேர்ந்திருப்பது இன்னும் கொஞ்ச நாட்கள் தான்... அதை சந்தோஷமாய் கழிப்போம்... இப்படி உம்மண்ணா மூஞ்சியாக இருப்பதை விட்டு விட்டு... சகஜமாய் பேசுவோம். சரியா வினோத்" என்று அவள் சொன்னதை... அவனும் ஏற்றுக் கொண்டான்... அப்போதிலிருந்து இருவருக்கும் இடையே இருந்த திரையும் கிழிந்து மூலையில் போய் விழுந்தது.

அதனால்தானோ என்னவோ... முன்பெல்லாம் வீட்டிற்குப் போக வேண்டுமே என்று வேண்டா வெறுப்பாய் போகும் நிலை மாறி... இப்போது... எப்போது வீட்டுக்குப் போவோம்... இன்றைய நிகழ்ச்சிகளை சுவாரஸ்யமாய் வைஜயந்தியிடம் சொல்ல வேண்டும் என்ற துடிப்பு வந்தது அவனுக்கு...

மாலை வேளையில்... தொலைக்காட்சியில் ஏதாவது ஒரு சானலைப் போட்டு விட்டு... இருவரும் அதில் வரும் நிகழ்ச்சியைப் பற்றி விவாதிப்பார்கள்... தங்களது கருத்தை வெளியிடுவார்கள்.. இப்படியிருந்தால் இன்னும் சுவையாக இருந்திருக்கும் என்று கருத்துப் பரிமாற்றம் செய்வார்கள்.

அந்த நேரத்தில்... வைஜயந்தியின் பொது அறிவு சுடர் விடும்... அவளது வாதாடும் திறமை வெளிப்படும். அவளது ஆங்கிலப் புலமை அவனை வியக்கச் செய்யும் நாள் செல்ல... செல்ல... வைஜயந்தி மட்டும் அல்ல. வினோத்தும் தான்... அந்த மாலைப் பொழுதுகளுக்காக ஆசையுடன் காத்திருக்க ஆரம்பித்தான்.



தன்னிடத்தில் வந்த மாற்றத்தைக் கண்டு வினோத்தால் நம்ப முடியவில்லை... மீண்டும் மீண்டும் வைஜயந்தியின் நினைப்பு வந்து அவனை தத்தளிக்க வைத்தது. அவன் மனதை மெல்ல மெல்ல ஆக்கிரமித்து... முழுவதுமாய் நிறைந்து விட்டது போல பிரமை... அதனால் தானோ... ரூபாவின் நினைப்பு அவ்வளவாக இல்லை. எதைப் பார்த்தாலும் வைஜயந்தியின் நினைவு வருகிறதே தவிர... ரூபா ஞாபகத்திற்கு வருவதே இல்லை என்பது தான் ஆச்சர்யம்.

ஆபீஸில் மதியத்திற்காக சாண்ட்விச் வரவழைத்து சாப்பிடும்போது... வைஜயந்தி இதைவிட நன்றாக செய்வாளே என்று தோன்றும்...

தன் டேபிள் மேல் இருக்கும் பூங்கிண்ணத்தில் சிரிக்கும் பூக்களைப் பார்க்கும்போது... ஊகூம்... இது ஏனோ தானோ என்று சொருகப் பட்டிருக்கிறது. வைஜயந்தியின் ரசனையே வேறு... வெகு அழகாய் அடுக்கி வைத்திருப்பாளே என்று நினைப்பான்...

அலுவலகத்தில் வேலை பார்க்கும் லிஸிக்கு அன்று வெட்டிங் அன்னிவர்சரியாம்... "சார் நானே செய்து கொண்டு வந்தேன்" என்று சொல்லி சாக்லேட் கேக்கை எடுத்து அவன் முன் வைத்தாள்... அதைப் பார்த்ததும்... வைஜயந்தியின் ஞாபகம் தான்... ஆகா... அவள் செய்த கேக் ஸ்பான்ஜ் போல மென்மையாய் ருசியாய் இருந்ததே...

இதோ... இங்கே... சாக்லேட் இருக்கிறது... கேக்கைத் தான் காணோம்...

அன்று மாலை அதை வைஜயந்தியிடம் சொல்லி விட்டு சிரித்தான் வினோத்... வைஜயந்தியும் சேர்ந்து சிரித்தாள்...

அவர்கள் இருவரும் சுமுகமாய் பழகுவதைப் பார்த்து வேலைக்காரர்களும் மகிழ்ந்தார்கள்... இந்த மட்டும் இந்த வீட்டில் சிரிப்பொலி வந்ததே என்ற மகிழ்ச்சி.

என்னதான் வினோத். சகஜமாய் பழகினாலும் அவனுக்குள் நெருடல் இருக்கத்தான் செய்தது. நண்பர்களாய் பழகுவோம் என்று சொன்ன வைஜயந்தி... ஒரு விஷயத்தில் தன்னை அந்நியப்படுத்துகிறாளே என்பதுதான்...

தன்னிடம் பைசாவும் வாங்காமல்... செலவுக்கு என்ன செய்கிறாள்... வீட்டின் அலங்காரத்திற்கு... அவளது போக்குவரத்து செலவுக்கு... அவளது அழகு சாதனங்களுக்கு... இன்னும் படிப்பு செலவுக்கு என்று பணத்தை செலவிடுகிறாளே... எப்படி... சந்தோஷ் தருகிறானா... நினைக்கும் போதே அவனுள் தகதக என்று எரிந்தது. கணவன் என்று நான் ஒருவன் இருக்கையில்... அவன் யார்... என் மனைவிக்கு பணம் தருவதற்கு... இதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்தாக வேண்டும். அந்த நாளுக்காகவும் காத்திருந்தான்.

அன்று வழக்கம் போல்... வினோத் வந்ததும்... தான் செய்திருந்த காரட் அல்வாவையும்... முந்திரி கேக்கையும் அவனுக்கும் கொடுத்துவிட்டு... அவளும் தட்டில் வைத்துக் கொண்டு அவன் எதிரே அமர்ந்தாள்.

அவன் ஏதும் பேசாமல்... மௌனமாய் இருப்பது கண்டு யோசனையுடன் பார்த்தாள்...

சாப்பிட்டதும் 'சூப்பர்...' 'அருமை...' 'ரொம்ப சுவையாக இருக்கிறது வைஜயந்தி' என்று ஏதாவது சொல்லி பாராட்டுவாரே... என்னவாயிற்று இவருக்கு... வேலை டென்ஷனா... இருந்தால் சொல்வாரே... இப்போதெல்லாம் மனம் விட்டு பேசுகிறாரே... ஊகூம் அதுவும் இருக்காது...

இருக்கட்டும்... அவரே பேசும் வரை காத்திருக்கலாம்... என்று அவளும் மௌனம் காத்தாள்.



எத்தனை நேரம் தான் அப்படி இருக்க முடியும்.

அவன் திருவாய் மலர்ந்தான்... "வைஜயந்தி... உன்னிடம் ஒன்று கேட்க வேண்டும்... உன் படிப்புக்கு... உன் கைச் செலவுக்கு... இதர செலவுகளுக்கு யார் பணம் கொடுப்பது... சந்தோஷா..." என்று வினவினான்.

'ஓ... இவ்வளவுதானா... இதுக்குத்தான் மௌன விரதமாக்கும்... சரிதான்...' என்று எண்ணி உள்ளுக்குள் சிரித்தவள்...

"ஓ... அய்யாவிற்கு அந்த சிந்தனையா... நான் யாரிடமும் பணம் வாங்கவில்லையே... திடீர் என்று ஏன் இந்தக் கேள்வி... வினோத்..." என்று வினவினாள்.

இப்போதெல்லாம் அவனுடைய பெயரை தயங்காமல் சொல்லவும் ஆரம்பித்து விட்டாள்... அதை அவனும் ரசித்தான் என்றுதான் சொல்ல வேண்டும்...

அவளது பதிலைக் கேட்டு விட்டு அவன் விழித்தான்... யாரிடமும் பணம் வாங்கவில்லையா... அப்படியென்றால் இந்தப் பணப்புழக்கம் எப்படி... நானும் தரவில்லையே... வேலைக்குப் போய் என்பதும் சாத்தியமில்லை தலைக்குள் நண்டாய் பிராண்டியது அந்த விஷயம்.

"என்ன யோசனை... வினோத்... பணத்திற்கு என்ன செய்கிறேன் என்று தெரிந்துகொள்ள ஆர்வம்... அப்படித்தானே..." பளிச்சென்று கேட்டாள் அவள். தன் குழப்பத்தையும் அதனால் ஏற்பட்ட தவிப்பையும் புரிந்து கொண்டு விட்டாளே என்று வியப்புடன் பார்த்தான் அவன்...

"சொல்கிறேன்... மாமா என்னை நிராதரவாய் விட்டு விடவில்லை வினோத்... பணத்திற்காக நான் அல்லாடக் கூடாது என்றோ... எதிர்காலத்தில் எனக்குப் பணம் தேவைப்படலாம் என்றோ... அவர் என் பெயரில் மூன்று லட்சம் போட்டு வைத்திருந்தாராம்... இந்த விஷயம்

எனக்கு அத்தை சொல்லித்தான் தெரியும். அந்தப் பணத்தை தான் நான் எடுத்து செலவழித்தது. இது என் மாமா. அதாவது அத்தையின் கணவர் தன் மருமகளுக்காக வைத்து விட்டுப் போனதாக்கும்...'' விஷமமாய் சிரித்த வாறு சொன்னாள் அவள்.

அதாவது மாமனார் பணம் என்று நான் நினைக்க வில்லை என்று அர்த்தத்தில்... அதுவும் அவனுக்குப் புரிந்தது.

புரிந்தது மட்டுமல்ல... மனதுக்கு நிறைவாகவும் இருந்தது.

கொஞ்ச நாளாகவே மனசுக்குள் உறுத்தல் இருந்தது. அவனுக்கு... தன்னை அண்டி இருப்பவள் வைஜயந்தி... அவளைக் கவனிக்கவில்லையே...

இந்தக் காலத்தில் எங்கோ... யாருக்கோ... எதுவோ நடந்தால் நன்கொடை என்ற பெயரில் பணத்தை அள்ளித் தருகிறோம்.

உதவும் கரங்கள்... அன்பு இல்லம்... கருணாசிரமம் என்று எத்தனையோ நற்பணி மன்றங்களுக்கும் பண உதவி செய்திருக்கோமே...

சொந்த பந்தமில்லாத... மூன்றாம் மனிதரிடம் காட்டும் மனித நேயத்தையும்... கரிசனத்தையும் கூட... தன்னை நம்பியிருக்கும் வைஜயந்தியிடம் காட்டவில்லையே.

அவள் சொல்வது போல்... மனைவி என்று நினைக்க வேண்டாம்... உறவினள் என்று பார்க்கலாமே... சிநேகிதியாய் நினைத்திருக்கலாமே...

பக்கத்து வீட்டில் இருப்பவர்களை கூட... நலமா என்று அன்புடன் விசாரிக்கிறோம்... அது கூட வைஜயந்தியிடம் காட்டவில்லையே... அவளை எதிரியாய்... தன் சொத்தைக் கொள்ளை அடிக்க வந்த பகையாளியாகத்தானே



நினைத்து அவளை வாட்டினேன்.. என்று மனதுக்குள் தெரிந்து கொண்டதும் நிஜம்...

வைஜயந்தியின் நல்ல குணம்... அதையெல்லாம் மறந்து விட்டு... நண்பர்களாக இருப்போம் என்கிறாள்...

''இன்னா செய்தாரை ஒறுத்தல்... அவர் நாண நன்னயம் செய்து விடல்'' என்று சின்ன வயதில் படித்த குறளின் நினைவுதான் அவனுக்கு வந்தது.

ஆம்... அவள் அப்படித்தான் செய்திருக்கிறாள். எப்படியெல்லாம் அவளை நோக அடித்திருக்கிறோம். வார்த்தை ஊசிகளால் அவளது இதயத்தை சல்லடையாக்கியிருக்கிறோம்... இருந்தாயா. செத்தாயா என்று கூட விசாரிக்கவில்லையே...

என் உதாசீனத்தை சகித்துக் கொண்டு... என் அமில வார்த்தைகளைத் தாங்கிக் கொண்டு... எல்லாவற்றையும் விட... அவளை மனுஷியாகக் கூட நடத்தாமல் இம்சைப் படுத்தியதை பொருட் படுத்தாமல் பொறுமையின் பூஷணமாய் இருந்திருக்கிறாள். அதை நினைக்கையில் நெஞ்சம் விம்மியது.

ஆனால் எதையும் மனதில் வைக்காமல்... நாம் நல்ல சிநேகிதர்களாக இருப்போமே என்று சொல்லியது மட்டுமல்லாமல்... எனக்காக ஏதேதோ செய்து வைத்து காத்திருக்கிறாள்...

சே! எத்தனை நாட்கள் இவளைப் பட்டினியுடன் இருக்கச் செய்திருக்கிறேன். அதைச் சொல்லியும் காட்டவில்லையே... இவளல்லவோ பெண் என்று பெருமையாய் நினைத்தது அவன் உள்ளம்.

இப்போது குழப்பம் தீர்ந்ததும்... அவனது மன உறுத்தலும் மாயமானது...

தான் கொடுக்காவிட்டாலும்... அப்பா அவனுக்காக பாங்கில் போட்டு வைத்திருக்கிறார்... அது போதும்... பிள்ளை இப்படிச் செய்வான் என்று அவர் முன் ஆலோசனையாய் செய்து வைத்திருந்தாரோ... அது நாள் வரையில் தந்தை மீது இருந்த ஆத்திரமும் கோபமும் கரைந்து போனது... தான் செய்ய மறந்த கடமையை... தந்தை செய்து விட்டுச் சென்றிருக்கிறாரே என்று பெருமிதமும் அடைந்தான்.

எப்படியோ... என் மனைவி... கண்டவனிடம் கை ஏந்தி நிற்கவில்லை... அதுவரைக்கும் நல்லதுதான்... என்று நிம்மதியடைந்தான் அவன்.

அந்த நிம்மதியில்... மனம் மயிலிறகாய் லேசாகிப் போக... தன் மனைவிப் பக்கம் திரும்பினான்.

சோபாவில் தன் கால்களை மடக்கிக் கொண்டு... குழந்தை போல அமர்ந்து... டி.வி.யில் ஏதோ நிகழ்ச்சியைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள் வைஜயந்தி. அவளது தாமரைப் போல் மலர்ந்திருந்த வதனமும்... சிரிக்கும் விழிகளும்... மொட்டாய் விரிந்திருந்த இதழ்களும்... அவனைக் கவர்ந்தன...

அவளையே குறுகுறுவென்று பார்த்துக் கொண்டிருந்தான் வினோத்...

அவனது கரங்கள் துடித்தன... அவளை இழுத்து தன் தோளோடு சாய்த்துக் கொள்ள வேண்டும் போல ஒரு வேகம்... அதைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டான்...

மறுநாள் வைஜயந்தி புறப்படும்போது அவனே முன் வந்து சொன்னான்.

''காரில் அழைத்துப் போகிறேன். இரு வைஜயந்தி பஸ்ஸில் போக வேண்டாம்...'' என்று அவன் சொன்



ஏதும்... 'சொன்னது நீதானா' என்பது போலப் பார்த்தாள் அவள்.

பின் சீட்டில் அமரப் போனவளைத் தடுத்து...

''முன்னால் வா... வைஜயந்தி...'' என்று அழைத்தான் அவன்.

''ஊகூம்... அது ரூபாவோட இடம்... நான் உட்காரக் கூடாது... இடையில் வந்து... போகிறவளுக்கு பின் சீட்டுத்தான் லாயக்கு...'' என்று சிரித்துக் கொண்டே சொன்னாள் அவள்.

அவனுக்கு அது 'சுருக்' என்றது... அதற்கு மேல் வற்புறுத்தவில்லை.

ஆரம்பத்தில் முன் சீட்டில் அமர்ந்தவள் தான்... ஏனோ இப்போது மறுக்கிறாள்...

நான் உன்னிடம் சுமுகமாய் பழகினாலும்... என் மனதில் எந்தவித கல்மிஷமும் இல்லை என்று உணர்த்தப் பார்க்கிறாளா இல்லை... எதிர்காலத்தில் நீயும் ரூபாயும் தான் என்பதை குத்திக் காட்டுகிறாளா...

எதுவோ இருந்து விட்டுப் போகட்டும்... வருகிறேன் என் றாளே அது போதும் என்று நினைத்து மகிழ்ச்சியடைந்தான். காரை ஓட்டிக் கொண்டிருந்தவனின் கண்கள் அடிக்கடி 'ரியர்வ்யூ' கண்ணாடி வழியாய் வைஜயந்தியைப் பார்த்தன.

ஏதோ ஒரு ஆங்கில நாவலை வைத்துக் கொண்டு அதில் சுவாரஸ்யமாய் ஆழ்ந்திருந்தவள்... அவனது பார்வை தன் மீது லயித்திருப்பதை கவனிக்கவில்லை. ஷாம்பூ போட்டு குளித்திருப்பாளோ... கேசம் கட்டுக்கடங்காமல் காற்றில் பறந்தது... கேசக் கற்றைகள் நெற்றியில் புரள... அதை நாசூக்காய் ஒதுக்கி... மை தீட்டிய விழிகள் புத்தகத்தில் அலை பாய... 'நெயில் பாலீஷ்' பூசியிருந்த வெண்டை விரல்கள் அவ்வப்போது கேசத்தை அளைய...

இவள்... பழைய பட்டிக்காட்டு வைஜயந்திதானா என்று அதிசயித்தான்... நாகரீகப் பெண்தான். ஆனால் இவளது நாகரீகம் கண்களை உறுத்தவில்லையே...

ரூபாவின் 'சிக்'கென்ற உடையழகும்... அரிதாரம் பூசியது போன்ற 'மேக்கப்'பும் நினைவுக்கு வந்து முகம் சுளிக்க வைத்தது... பார்த்தவர்களின் வாயை பிளக்கச் செய்யும் நாகரீகம்... மனதில் கண்றாவி எண்ணங்களை உண்டாக்கும் நாகரீகம் சே! அவனது கண்கள் வண்டுகளாய் மனைவியின் மேல் மொய்த்தன...

கடல் நீரின் நீல வண்ணத்தில் சுரிதார் அணிந்து அழகுச் சிலையாய் அமர்ந்திருந்தவளை பார்க்கும்போது அவனையும் அறியாமல் கர்வம் வந்தது.

இவள் என் மனைவி... என்னுடையவள்... அந்த எண்ணம் திகைப்பையும் தந்தது.

## 21

ஒரு வருடம் எப்படி ஓடியது என்று தெரியவில்லை... இப்போதுதான் 'கோர்ஸி'ல் சேர்ந்தது போல இருக்கிறது... அதற்குள் ஒரு வருடம் ஓடி... கோர்ஸும் முடிந்து... 'சர்டிபிகேட்'டும் வந்தாகிவிட்டது..

அடுத்து...?

அதற்கும் சந்தோஷ் வழி சொன்னான்...

"தனி ஆபீஸ் ஒன்று தொடங்கி... நல்ல 'ஆர்க்கிடெக்ட்ஸ்...' "பில்டர்ஸ்'களின் தொடர்புடன்... தொழிலை ஆரம்பித்து விடலாமே..." என்ற ஐடியாவை தந்ததுடன்... உதவி செய்யவும் முன் வந்தான்.



"முதல்ல அதற்கு நல்ல இடமா பார்க்க வேண்டும்மா... 'கமர்சியல்' ஏரியாவாக இருந்தால் இன்னும் வசதி. நானும் விசாரித்துச் சொல்கிறேன்... பணத்தைப் பத்தி யோசிக்காதே வைஜயந்தி... என் 'சேவிங்க்ஸி'லிருந்து தர்றேன்... ஊகூம்... சும்மா இல்லே... அதைக் கடன் என்று நினைத்துக் கொள்... பின்னால் வட்டியுடன் திருப்பித் தருவேயாம்..." என்றான் அவன்.

"என் மீது ஏன் இந்த அக்கறை சந்தோஷ்... திரும்ப... திரும்ப வந்து உதவுகிறீர்களே..." என்று மனம் தாளாமல் வினவினாள் அவள்.

"காரணம் சொல்ல வேண்டுமா... வைஜயந்தி... அதுதான் உனக்குத் தெரியுமே..." என்று சொன்னான்...

"அதைத்தான் சொல்கிறேன்... செல்லாத ஊருக்கு வழி தேடுவது போல... நடக்காத ஒன்றை நினைத்துப் பார்க்கிறீர்களே சந்தோஷ்... ஏற்கனவே மனதால் காயம் பட்டவள் நான்... 'திருமணம்' என்ற வார்த்தை எனக்கு வெறுப்பைத்தான் தருகிறது. சந்தோஷ்... அந்த அளவு நான் அடிப்பட்டு விட்டேன். நீங்க அந்த நோக்கத்துடன் எனக்கு உதவ வந்தால்... அது வேண்டவே வேண்டாம் சந்தோஷ்" என்று அழுத்தமாகவேச் சொன்னாள் வைஜயந்தி.

அவளைக் கூர்ந்து நோக்கியவன்...

"ஏன் வைஜயந்தி... என்னை அந்த அளவு கீழ்த்தரமானவன் என்று நினைத்து விட்டாயா... நீயும்... வினோத்தும் சேர்ந்து... சந்தோஷமாய் வாழ்க்கை நடத்தணும்னு ஆசைப்படுகிற முதல் ஆள் நானாகத்தான் இருப்பேன். உன் சந்தோஷம்தான் எனக்கு முக்கியம் வைஜயந்தி. அன்றைக்கு உன்னிடம் சொன்னது போல... என் வாழ்க்கையில் வந்த தேவதை நீ... தேவதையை ஆராதிக்கத்தான் விரும்புவார்கள்... நானும் அப்படித்தான்.

அந்த தேவதைக்கு உதவ வேண்டும் என்று துடிக்கிறேன். நீ நினைக்கிற மாதிரி எந்தவித கல்மிஷமும் என் மனதில் இல்லைம்மா... என்னை நம்பு..." என்றான் வருத்தத்துடன்...

அவனது வார்த்தைகளில் நெகிழ்ந்து போனாள் வைஜயந்தி.. பாவம்... சந்தோஷ்... விகல்பம் இல்லாமல் பழகுகிறார்... பேசுகிறார்... நல்ல எண்ணத்துடன் வந்து உதவுகிறார்... நான்தான் தவறாய் நினைத்து விட்டேன்...

"சாரி... சந்தோஷ்... அவசரப்பட்டு ஏதேதோ பேசி விட்டேன்... மன்னித்து விடுங்கள்... ப்ளீஸ்..." என்று கெஞ்சுவது போல அவள் சொன்னதும்...

"மன்னித்து விடுகிறேன்... நீ என் உதவியை ஏற்றுக் கொண்டால் மட்டும்..." என்று சீரியஸாக முகம் வைத்துக் கொண்டு சொல்ல...

அவள் சிரித்து விட்டாள்.

அன்று வினோத்திடம் எதிர்காலத்தைப் பற்றிப் பேச வேண்டியிருந்தது...

அதற்காக அவன் அறையை நோக்கிச் சென்றாள் வைஜயந்தி...

அவளைப் பார்த்ததும் முகம் மலர்ந்தான் வினோத். தன் அறைக்குள் வந்து பேசுகிறாள் என்றால் முக்கியமான விஷயமாகத்தான் இருக்கும் என்பது அவனது யூகம். அதைக் கேட்க தயாராகவும் இருந்தான்.

"என் கோர்ஸும் முடிந்து விட்டது வினோத். இனி வேலை விஷயம் பார்க்க வேண்டும்... சொந்தமாய் தொடங்கலாம் என்று நினைக்கிறேன்... தனி ஆபீஸாக இருந்தால் நல்லது என்கிறார் சந்தோஷ்... ஆரம்பத்தில் 'ஆர்க்கிடெக்ட்ஸ்'களை சந்தித்துப் பேசி ஆர்டர் வாங்கலாம் அப்புறம்... கொஞ்சம் பேர் வந்தாச்சு என்றால் வேலை தானே தேடி வரும் என்று சொல்கிறார். நீங்க என்ன சொல்கிறீர்கள் வினோத்..." என்று கேட்டாள்...



'மறுபடியும் சந்தோஷா...' என்று நினைத்தவனின் தாடையில் இறுக்கம் வந்தது... அவனிடம் கேட்டது தப்போ... என்று தோன்றவும்...

"சாரி... வினோத்... உங்களைக் கேட்டு... தொந்திரவு கொடுக்கிறேன் என்று நினைக்காதீர்கள்... நம் பந்தம் முடிய இன்னும் எட்டு மாதங்கள் இருக்கிறது... அதுவரையில்... உங்களைக் கேட்டுத்தான் செய்ய வேண்டும் என்று தோன்றியதால்... வந்தேன்... நானாக எந்த முடிவும் எடுக்கக் கூடாது இல்லையா..." என்று கூறினாள் அவள்.

எட்டு மாதங்களா... அவ்வளவே தானா... அதற்கு பிறகு... நினைக்கவே வேதனையாக இருந்தது... வினோத்திற்கு...

வைஜயந்தி இல்லாத வாழ்க்கையை கற்பனைப் பண்ணவும் இயலவில்லை...

"என்ன யோசிக்கிறீங்க வினோத்... என்னடா... ஆபீஸ்... தொழில் என்கிறாளே... அதற்குப் பணம் தரவேண்டியிருக்குமோ என்றா... பணத் தேவைக்காக இதை சொல்லவில்லை... சந்தோஷ் உதவி செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்... இதில் உங்களுக்கு சம்மதமா என்று கேட்கத்தான் விஷயத்தைச் சொன்னேன்..." வினோத்தின் மனம் படும் பாட்டை அறியாதவளாய்... அவனது உணர்வுகளை புரியாதவளாய் பேசினாள் வைஜயந்தி.

"சாரி... வைஜயந்தி... இதில் எனக்கு சம்மதம் இல்லை... பொறு... நான் சொல்ல வந்தது... நான் இருக்கும்போது நீ சந்தோஷிடம் பண உதவி பெறுவது சுத்தமா பிடிக்கவில்லை... நீ எதற்காக வேறு இடத்தைப் பார்க்க வேண்டும்...

நம் வீட்டு மாடியை ஆபீஸாகப் பயன்படுத்திக் கொள்ளலாமே."

"என்ன பேச்சு இது... வினோத்... மாடி என்றால் அது எத்தனை நாளைக்கு... அதற்குப் பிறகு மறுபடியும் இடம்

தேட வேண்டுமே... ஊகூம்... இதெல்லாம் நிரந்தரம் இல்லை வினோத். எனக்கென்னவோ... வேறிடம் பார்ப்பது நல்லது என்று படுகிறது... இந்த மாதிரி நீங்க பேசியதை உங்க ரூபா கேட்டால்... அவ்வளவுதான்... இப்பவே என்னை விரட்டியடித்து விடுவாள்."

"அவன் யார்... உன்னை வெளியே விரட்ட... நீ என் மனைவி.. நான் சொன்னால்... நீ இருக்க வேண்டும்.. அவன் ஏதுவது.." கோபத்தில் முகம் சிவக்க அவன் சொல்லுகையில்...

"வினோத்" என்று வியப்புடன் கூவினாள். அவனுக்கு ஏன் இந்த ஆத்திரம் என்று புரியாமல்... என்ன பேசுகிறோம் என்று தெரிந்துதான் பேசுகிறாரா...

அப்போதுதான் அவனுக்கு உறைத்தது... தன்னையும் அறியாமல் ஏதேதோ பேசிவிட்டேனே... முகம் கன்றியவனாய் அங்கிருந்து வெளியேறினான். கணவனை குழப்பத்துடன் பார்த்தாள் வைஜயந்தி... என்னவாயிற்று அவருக்கு என்று...

வைஜயந்தியின் நல்ல நேரம் என்றுதான் சொல்ல வேண்டும். நல்ல இடமாய் ஆபீஸ் அமைந்தது மட்டுமல்ல... நல்ல... பெரிய பெரிய வாய்ப்புகள் தேடியும் வந்தன...

மோதிரக் கையால் குட்டுப் படுவது என்பார்களே... அது போல... முதல் வாடிக்கையாளருக்கு அவளது வேலை பிடித்துப் போய்... அவரே தெரிந்தவர்களுக்கு சிபாரிசும் செய்ததால்... நிறைய வாய்ப்புகள் வந்து சேர்ந்தன...

ஆரம்பத்தில்... தன்னால் முடியுமா என்று இருந்த பயமும் தயக்கமும் போய்... தன்னாலும் முடியும் என்ற தன்னம்பிக்கையும்... தைரியமும் வந்தது.

அத்துடன் விடா முயற்சியும் சேர்ந்து கொள்ள... கேட்க வேண்டுமா... மளமளவென்று வளர்ச்சி தான்.



சில நேரங்களில் வினோத்கூட அவளுக்கு உதவினான் என்று சொல்ல வேண்டும்...

தெரிந்தவர் யாராவது வீடு கட்டினாலோ... வீட்டை மாற்றியமைத்தாலோ... உடனே அந்த 'காண்ட்ராக்டை' மனைவிக்கு வாங்கித் தருவான்... மனைவி பெயரை சிபாரிசும் பண்ணுவான்... ஏன்... அவனே கூட அவளிடம் வாடிக்கையாளரை அழைத்து வந்ததும் உண்டு...

அந்த நேரத்தில் கணவனை நன்றியுடன் பார்ப்பாள் வைஜயந்தி...

சந்தோஷ் உதவுவது சகஜம்... ஆனால்... வினோத் உதவியதுதான் வியப்பு... அது அவனது மாற்றத்தைக் காட்டியது...

தனக்கு உதவியாக இரண்டு பேரை நியமித்துக் கொண்டாள் வைஜயந்தி...

இருந்தும் வேலை பளு அவளை அழுத்தியது. அவளிடம் வினோத் பேசி எத்தனையோ நாட்கள் ஆகி விட்டன... அதை அவள் உணர்ந்தாளோ இல்லையோ... வினோத் நன்றாகவே உணர்ந்தான்.

பழைய நாட்களைப் போல... மாலை நேரத்தை இனிமையாகக் கழிக்க மாட்டோமா என்ற ஏக்கம் வந்தது. தினமும்... வைஜயந்தி வந்தவுடன்... இருவரும் அமர்ந்து இனிமையாய் பொழுதை கழிக்க வேண்டும் என்று நினைத்துக் கொள்வான்... அதற்காக ஓடி வந்து காத்திருப்பான்... ஆனால் வைஜயந்தி வரத் தாமதமாகும். வாசலைப் பார்த்து தவமிருக்கும் அவனுக்கு ஏமாற்றமாக இருக்கும்.

அவள் வருவதற்கு எட்டு மணியாகி விடும்... அதற்கு பின் குளித்து விட்டு... சமையற்காரர் தயாராக எடுத்து வைத்திருக்கும் சாப்பாட்டை அள்ளிப் போட்டுக் கொண்டு...

படுத்தால் போதும் என்று படுக்கையில் விழுந்து விடுவான்... அவளிடம் ஆர அமர பேச மாட்டோமா என்ற துடிப்புடன் வருபவளின் கண்களில் அடித்துப் போட்டது போல அவன் படுத்திருக்கும் கோலம்... அய்யோ பாவம்... என்று அவளுக்குத் தோன்றும்... இனி அவளை நாமே காரில் அழைத்து வர வேண்டும் என்ற தீர்மானத்துடன் அவளது அலுவலகத்திற்குச் சென்றான்...

அங்கே... வைஜயந்தியின் கீழ் வேலை செய்யும் உஷா மட்டுமே இருந்தது கண்டு... அவளிடம் விசாரித்தான்.

"மேடம் சாப்பிட போயிருக்காங்க சார்..." என்றாள் அவள்...

சாப்பிடவா! அவள் இன்னும் எதுவும் சாப்பிடவில்லையா என்ன... அந்த அளவுக்கா வேலையில் மும்முரம். முதலில் அவளிடம் பேச வேண்டும்.... இப்படி வயிறைக் காயப்போட்டு வேலை செய்ய அவசியமில்லை என்று... என்று தவிப்புடன் நினைத்தான்...

அவனால் அதை நம்பவும் முடியவில்லை... தன்னிடம் வந்த மாற்றத்தைக் கண்டு வியந்தான்.

அவளது அண்ணனின் வீட்டிற்கு விருந்து போய் விட்டு திரும்புகையில்... உனக்கு பசிக்கிறதா. சாப்பிட வருகிறாயா என்று கேட்கவும் மனமில்லாமல் இருந்த தன்னிடம் இப்படி ஒரு மாற்றம் என்று நினைக்கும் போது ஆச்சர்யமாக இருந்தது.

சிறிது நேரம் காத்திருந்து விட்டுப் புறப்பட்டான் கொஞ்சம் தூரம் சென்றிருப்பான்...

எதிரே... நடைபாதையில் நடந்து வந்து கொண்டிருந்த தன் மனைவியைப் பார்த்ததும் உள்ளம் பரபரத்தது...

உடனே வண்டியை அவள் அருகே நிறுத்திப் பேச வேண்டும் என்று துடித்தவன்... கையில் வாழைப்



பழத்துடன் வந்து கொண்டிருந்த சந்தோஷைப் பார்த்ததும் திகைத்துப் போனான். ஆக... ஒட்டலுக்கு அவள் தனியாகச் செல்லவில்லை.

சந்தோஷ் உடன் சென்றிருக்கிறாள்... சே... அவளுக்காக ஓடிவந்தேனே... என்னைச் சொல்ல வேண்டும்...

கோபத்துடன் அவர்களை வெறித்தான்.

இருவரும் சிரித்துப் பேசியவாறு நடந்து செல்வதைப் பார்த்த அவனது வயிற்றில் அமிலம் சுரந்தது.

அது பொறாமையால் என்று அப்போது தான் அவனுக்கு உறைத்தது...

தன் மனைவியை எப்போதிலிருந்து காதலிக்கிறோம் என்று புரியாமல் விழித்தான் அந்த அசட்டுக் கணவன்.

அந்த உண்மையை அவன் உணர்ந்தபோது இரண்டு வருடங்கள் ஓடியே போயிருந்தன.

## 22

காலையில் கண் விழிக்கும் போதே ஏதோ ஒரு அவஸ்தை அவளுள் குடைந்தது. அதன் காரணமும் அவளுக்கு தெரிந்ததுதான்.

அந்த வீட்டில்... அவள் இருக்கப் போகும் கடைசி நாள்... அவளுடைய மண வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்போகும் நாள்... கணவன்... மனைவி என்ற பந்தம் முறியப் போகும் நாள்... முக்கியமாய் அவர்களது இரண்டாவது வருட திருமண நாள்.

போன வருட திருமண நாளை நினைவு கூர்ந்தாள் அவள். ஏதோ ஒரு ஆசையில் கோவிலுக்குச் சென்று

அர்ச்சனை செய்து விட்டு வந்தாள் வைஜயந்தி... சும்மா இருந்திருக்கக் கூடாதா... நேரே வினோத்திடம் சென்று பிரசாதத்தை நீட்டினாள்...

''என்ன விசேஷம்'' என்ற அவனது கேள்விக்கு தையாவது சொல்லியிருக்கலாம்... ஆனால் அவளுக்கு முன் அவளது வாய் முந்திக் கொண்டு விட்டது.

''நம் திருமண நாள் என்று...''

வாய்வரை கொண்டு சென்ற பிரசாதத்தை 'சட்' டென்று தட்டில் போட்டு விட்டு அவளை முறைத்துப் பார்த்தான் அவன்.

''நான் சிறைக் கூண்டில் அடைப்பட்ட நாள் என்று சொல்... ஏன்... விருந்து தயாரிக்க வேண்டியது தானே... மெனுவை வேண்டுமானாலும் குறித்துக் கொள்... பாகற்காய் கறி... சுண்டைக்காய் குழம்பு... எட்டிக்காய் ரசம்... வேப்பம்பூ பச்சடி... ஓ... பாயசம் வேறு இருக்கிறது இல்லையா... அதில் விஷம் போட்டு ஜமாய்த்து விடு...''

வார்த்தைகளா அவை... தீக்கங்குகள்...

வாய் மூடிக் கொண்டிருக்காமல்... நுணலும் தன் வாயால் கெடும் என்கிற மாதிரி... எதையோ சொல்லி வாங்கிக் கட்டிக் கொண்டோமே... தன் மீதே அவளுக்குக் கோபம் வந்தது.

இப்போது அதை நினைக்கையில் வேடிக்கையாக தெரிந்தது. இப்போது அவன் இதைப்போய் பேசினால்... நிச்சயம் அவன் சொன்ன மெனுவையே சமைக்கச் சொல்லி... அவனுக்குப் பரிமாறியிருப்பாளோ என்னவோ...

அப்படிச் செய்திருந்தால்... அவன் முகம் எப்படி மாறும் என்பதை கற்பனையில் பார்த்தாள் அவள்.

அதெல்லாம் முடிந்த கதை... இனி நடக்கப் போவதை பார்க்க வேண்டும்... அந்த நினைப்பில் படுக்கையி லிருந்து துள்ளி எழுந்தாள் வைஜயந்தி.



குளித்துவிட்டு வந்தவள்... மாமாவின் படம் முன் வந்து நின்றாள்.

''மாமா... நீங்கள் ஏமாந்து போனீர்கள்... என்னையும் ஏமாற்றி விட்டீர்களே... எதை நினைத்தீர்களோ... அது நடக்கவே இல்லை... கடைசி வரையில் உங்கள் ஆசை நிறைவேறவில்லை... நானும் தோற்று விட்டேன் மாமா... என்னை மன்னியுங்கள்'' என்று மானசீகமாய் பேசினாள்...

திருமணமே பொய்யான பின்பு... இந்த மாங்கல்யத் துக்கு அர்த்தமில்லை என்ற முடிவிற்கு வந்து அதைக் கழட்டினாள்... கையில் கொஞ்சம் நடுக்கம் இருந்தது.

மாமாவின் படத்தின் கீழ் இருந்த ஸ்டாண்டில் அதை வைத்துவிட்டு... சில கணங்கள் மாமாவையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

மாமாவுடன் இங்கு வந்ததும்... வினோத் அடிப்பட்டு கிடந்தபோது கவனித்துக் கொண்டதும்... திருமணம் நிச்சயமாகி... பின் அது தடைப்பட்டு போனதும்... மாமா வின் சாவும்... உயில்படி வினோத் அவளை மணந்து கொண்டதும்... ஒவ்வொன்றாய் அவளது மனதில் நிழலாடியது...

என்னவெல்லாம் நடந்து விட்டது...

இந்த வீட்டிற்கு வரும்போது இப்படியெல்லாம் நடக்கும் என்று நினைக்கவேயில்லை... பேதையாய்... வெளியுலகம் அறியாத அப்பாவியாய் வந்த நான்... இப்போது கையில் வேலையுடனும்... மனதில் தன்னம் பிக்கையுடன் வெளியே செல்கிறேன் என்றால்... அது மாமாவின் ஆசியால்தான்... அந்த நன்றியில் கண்கள் கசிந்தன... போவது என்று முடிவாகி விட்டது.

ஆனால் எங்கு என்றுதான் தெரியவில்லை.

அண்ணனின் வீட்டிற்கு... வேண்டாம்... என் மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கும் அண்ணி... அங்கு போய் நின்றால் பழையபடி ஏளனமாய் பார்ப்பாள்... பின்... எங்கே... பார்க்கலாம்... வழி கிடைக்காமலா போகும். வினோத் வந்து... இன்னும் நீ புறப்படவில்லையா என்று கேட்டு விடக்கூடாது...

அவரும் இந்த நாளுக்காகவே காத்திருக்கிறார்... அவருக்கும் ரூபாவை மணந்து... இங்கே அழைத்து வரவேண்டும் என்ற ஆசை இருக்கும்... அதற்கு நாம் ஏன் தடையாய் இருக்க வேண்டும்...

அப்போதுதான் அவளுக்கு சந்தோஷின் நினைவு வந்தது.

'செல்'லை இயக்கி அவனுடன் தொடர்பு கொண்டாள். அவனிடம் தனது பிரச்சனையை சொன்னதும்...

"நான் இருக்கிறேன் வைஜயந்தி... கவலையே படாமல் வா... என் சித்தப்பா வீட்டில் தங்குகிறாயா... அவர்களுக்கும் உன் மீது ரொம்பப் பிரியம்'' என்று உதவ முன் வந்தான்.

''வேண்டாம் சந்தோஷ்... என்னைப் பற்றி உயர்வாக நினைக்கிறார் உங்கள் சித்தப்பா. இப்போ புருஷனை விட்டு விட்டு வந்து விட்டேன் என்றால் தப்பாகப் படும்'' என்று மறுத்தாள் அவள்.

''நீ புறப்பட்டு வா வைஜயந்தி... அதற்குள் ஏற்பாடு பண்ணி வைக்கிறேன்'' என்று அவன் சொன்னதும் அவளும் புறப்படத் தயாரானாள்.

எஃப்.எம். பாடலை ரசித்த வண்ணம் காரை ஓட்டிக் கொண்டிருந்தான் வினோத்.



அடுத்ததாய் ஆட்டோகிராப் படத்தில் வரும் 'ஒவ்வொரு பூக்களுமே' என்ற பாடலை கே.கே. நகரிலிருந்து ஜெய்குமார் என்பவர் விரும்பிக் கேட்டிருக்கிறார்.

''மிஸ்டர் ஜெய்குமார்... இந்த பாட்டை விரும்பிய காரணத்தைச் சொல்வீர்களா...''

''என் மனைவிக்குப் பிடித்த பாடல் அது... அவளுக்காக இந்தப் பாடலை ஒலிபரப்ப வேண்டும் சார்.''

''ஷ்யூர்... ஜெய்குமார்... உங்களுக்கு கல்யாணம் ஆகி எத்தனை வருடங்கள் ஆகிறது.''

''இன்றுடன் இரண்டு ஆண்டுகள் சார்... இன்னிக்கு எங்களது வெட்டிங் அன்னிவர்சரி...''

''வாவ்... வாழ்த்துக்கள் ஜெய்குமார்... சரி என்ன கிஃப்ட் அவங்களுக்கு கொடுத்தீங்க...''

''அவங்களுக்கா... வெள்ளி கொலுசு சார்...''

''ஓ... இதோ.. உங்களது மனைவிக்காக... நீங்கள் கேட்ட பாடல்... உங்கள் இருவருக்கும் ஹாப்பி வெட்டிங் அன்னிவர்சரி...''

'சடக்' என்று பிரேக் போட்டு வண்டியை நிறுத்தினான் வினோத்... வெட்டிங் அன்னிவர்சரி! திருமண நாள்! இன்றைக்கு தங்களுக்கும் வெட்டிங் அன்னிவர்சரி அல்லவா.

அடடா... அதை எப்படி மறந்தேன்...

நெற்றியைத் தேய்த்துக் கொண்டான்...

சென்ற வருடத்தின் திருமண நாளின் நினைவு வந்தது.

பாவம்... ஏதேதோ சொல்லி வைஜயந்தியை வேதனைப் படுத்தி விட்டேன்... இந்த வருடம்... இன்றைக்கு அதை சரிக்கட்ட வேண்டும்...''

முதலில் என் காதலை அவளிடம் சொல்லி அவளை திகைக்கச் செய்ய வேண்டும்... அப்புறம் அருமையான ஒரு அன்பளிப்பை வாங்கிக் கொண்டு போய் தந்து இன்ப அதிர்ச்சி தர வேண்டும்...

உடனே காரைக் கிளப்பி... ரங்கனாதன் தெருவை நோக்கிச் செலுத்தினான் அவன்.

ஜி....ஆர்...டி.யில் அழகான நெக்லஸ் செட்டை தேர்ந்தெடுத்தான் வினோத்...

கற்பனையில் அதை தன் மனைவிக்கு அணிவித்து அழகு பார்த்தான்...

போன வருடம் அவளை அழ வைத்ததற்கு பரிகாரமாய் இந்த நாளில் அவளுக்கு பரிசு... தன் மனைவியாக இரு வருடங்கள் இருந்தாளே... அந்தப் பொறுமைக்கு நான் தரப்போகும் பரிசு... இரண்டு வருடங்கள் முடிந்ததும் அவளை அனுப்பிவிட வேண்டும் என்று நினைத்தேனே... ஆனால் இப்போது... அவளில்லாமல் நானில்லை என்பது போலல்லவா தோன்றுகிறது.

எப்படி வந்தது இந்த மாற்றம்... தெரியவில்லையே.

'மனைவி' என்ற உறவுக்கு மகத்தான சக்தி இருக்கிறது என்பது உண்மைதான்.

அதனால் தான் ரூபாவின் நினைவு மங்கி விட்டது போலும் ஊகூம்... முற்றிலும் விலகி விட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

இனி வைஜயந்தியில்லாமல் வாழ முடியாது என்பது சர்வ நிச்சயமாகத் தெரிந்து விட்டது.

என் பரம்பரை வீட்டில் வைஜயந்தி வளைய வந்தால் அது பெருமை... அப்பாவும் அதைத்தான் நினைத்தாரோ...

அதனால்தான் அப்படி ஒரு நிபந்தனையை எழுதி வைத்திருக்கிறார் போலும்.



இரண்டு வருடங்களில் மகன் முழித்துக் கொள்வான் என்ற நம்பிக்கை அவருக்கு... கவர்ச்சிக்கும்... காதலுக்கும் வித்தியாசம் அறிவான் என்று தெரிந்து வைத்திருக்கிறார்...

அவர் நினைத்தது போல... இரண்டு வருடங்களில் என்னை நான் உணர்ந்து கொண்டது தான் வியப்பு...

''சார்...'' நகைக்காரரின் அழைப்பு அவனைத் தட்டி எழுப்பியது.

''இந்த 'செட்'டை எடுத்து வையுங்கள்'' என்று சொன்னான்.

காரில்... வீடு திரும்பும்போது உல்லாசமாய் விசி லடித்தவாறு ஓட்டினான்.

வைஜயந்தியிடம் தன் உள்ளத்தை வெளியிடப் போகி றோம்... இன்று அவளை அழைத்துக் கொண்டு எங்கே யாவது...

'கிறீச்' அவனையும் அறியாமல் கால் பிரேக்கை அழுத்தியது...

குறுக்கே வந்த அந்த மனித பிராணி யார்? என்று தன் கவனத்தை திருப்பியவன்... ரூபா கார் முன் நிற்பதைக் கண்டு முகம் சுளித்தான்.

கரும்புச் சாறு குடிக்கும்போது கசடு தட்டியதுபோல இருந்தது அவனுக்கு.

இவள் எங்கே வந்தாள்... என்று கடுப்புடன் யோசித் தான்...

''எங்கே இந்தப் பக்கம் வினோத்... நான் அந்தக் கடையில் 'காஸ்மெடிக்ஸ்' வாங்கிக் கொண்டிருந்தேன்... உங்கள் கார் மாதிரி தெரிந்ததும் நிறுத்தினேன்... கதவைத் திறக்கற மாதிரி இல்லையா... வினு...'' என்று கொஞ்சினாள்

அவள். வேண்டா வெறுப்புடன் கதவைத் திறந்தான் வினோத்.

இருக்கையின் மீது இருந்த நகைப் பெட்டியை பார்த்ததும்... அதை எடுத்து திறந்து பார்த்தாள்.

"வாவ்... ப்யூட்டிஃபுல் வினோ... எனக்காக வாங்கினீர்களா... தாங்க்யூ... டார்லிங்..."

உற்சாகத்தில் கூவினாள் ரூபா...

இடது கையால் அதை வாங்கி தன்னருகே வைத்துக் கொண்டான் வினோத்.

"புரிகிறது... வினோ... வீட்டில்... நீங்களே என் கழுத்தில் அணிவிக்க ஆசை... அதுவும் சரிதான் டியர்... இரண்டு வருடங்கள் ஓடியே போய் விட்டது. இனி... நம் ராஜ்ஜியம் தான்.. என்று இந்த பரிசாக்கும்..." என்று அவன் மீது சாய்ந்தாள்...

"இது உனக்கில்லை ரூபா" என்றான் அவன்.

"பின்னே..."

"வைஜயந்திக்கு..."

"எதுக்கு... இத்தனை நாள் நடித்ததற்கா... இல்லை... தகராறு எதும் செய்யாமல் போவதற்காகவா..."

"அதற்கு இல்லை."

"புரிந்தது. டிவோர்ஸுக்கு அப்ளை பண்ணப் போகிறீங்க. அதற்கு இது லஞ்சம் மாதிரி. ஆனாலும் இது அதிகம் தான் வினோ. என்னைக் கேட்டால்... அஞ்சாயிரம்... பத்தாயிரத்தோட முடிச்சுக்கலாம்னு சொல்வேன்... அந்த மூஞ்சிக்கு அது போதும்...

"ஷட் அப்.. ரூபா... வைஜயந்தி என்னோட மனைவி" என்றான் கோபத்துடன்...

"அது முடிந்த கதையாச்சே... வினோ... இப்ப அவள் உங்க எக்ஸ் வைஃப்..."



"டிவோர்ஸ் செய்தால்..." அழுத்தமாய் சொன்னான் அவன்.

"வினோத்!"

"யெஸ்... வைஜயந்தி எப்பவும் என் மனைவி தான்... இன்றைக்கு எங்களது திருமண நாள். வெட்டிங் அன்னிவர்சரி. அதற்காக இந்த 'பிரசென்ட்...' என் மனைவிக்கு..."

கடைசி வார்த்தையை அழுத்திச் சொன்னான் வினோத்.

ஒரு கணம்... திகைத்துப் போய் அவனை வெறித்தவள் பின் சுதாரித்துக் கொண்டு பேசினாள்.

"டோன்ட் பி ஸ்டுபிட்... வினோத்... நீங்க காதலிக்கிறது என்னை... அதை மறந்து விட்டுப் பேசாதீங்க..."

"பாஸ்ட்டென்ஸ்... காதலிச்சேன்... சாரி... காதல் என்று கற்பனைப் பண்ணிக் கொண்டேன். காதலுக்கும்... கவர்ச்சிக்கும் ரொம்பவும் வித்தியாசம் இருக்கு... ரூபா... காதலில் வெறுப்பு வராது... கவர்ச்சி..." முடிக்காமல் தோள்களைக் குலுக்கினான் வினோத்.

"நான் இதை சும்மா விடமாட்டேன்... ஆசை காட்டி என்னை மோசம் செய்திட்டீங்க வினோத்... உங்களையே நம்பிக் கொண்டிருந்த என்னை..."

"ஸ்டாப் இட் ரூபா... என்னையே நம்பிக் கொண்டிருக்கிறவளாய் இருந்திருந்தா... சொத்தும் வேண்டாம். வைஜயந்தியும் வேண்டாம் என்று வந்தேன் பார்... அப்போது சரி என்று நீ சொல்லியிருக்க வேண்டும்... இல்லையே... நீ நம்பி இருந்தது என் மூலம் வருகிற சொத்துக்களை... எதற்கு அதுக்கு காதல் முலாம் பூசுகிறாய்... இது புரியாமல்... இத்தனை நாளும் கண் மூடிக் கிடந்தேனே என்று தான் வருத்தம்... சரி....உன்னை எங்கு இறக்கி விட வேண்டும்... அதைச் சொல்..." என்றான் அமைதியாக... அதே சமயம் உறுதியாக...

"வண்டியை நிறுத்துங்க... இங்கேயே இறங்கிக் கொள்கிறேன்..." என்றவள்... எதுவும் பேசாமல் இறங்கிக் கொண்டாள்...

"குட்பை" என்று அவளுக்குச் சொல்லி விட்டு வண்டியைக் கிளப்பி... புறப்பட்டான் அவன்.

காற்றில் மிதக்கும் இலவம் பஞ்சாய் மனம் லேசாகி... சந்தோஷக் கடலில் முக்குளித்தது.

எதிர்காலத்தைப் பற்றிய ஆனந்த நினைவுகளில் மூழ்கிப் போன உள்ளத்தில் இன்ப ஊற்றாய் வைஜயந்தியின் முகம் சிரித்தது.

வீட்டின் முன் காரை நிறுத்தினான் வினோத்...

உற்சாக வேகத்தில்... கன்றின் தாவலில் படியேறி உள்ளே வந்தவனின் கண்கள் ஆசையாய் மனைவியைத் தேடின...

அவனது பார்வையில் தந்தையின் படம் விழ... அவனையும் அறியாமல் கால்கள் அதை நோக்கி நடந்தன.

"அப்பா... நீங்கள் நினைத்தபடியே... வைஜயந்தியை நேசிக்க ஆரம்பித்து விட்டேன்... அப்படியொரு உயிலை எழுதி விட்டுப் போனதற்கு நன்றிப்பா... இல்லாவிட்டால் இப்படியொரு நல்ல மனைவி எனக்குக் கிடைத்திருக்க மாட்டாள். உங்கள் அருமை மருமகளை... என் கண்மணியாய் வைத்து காப்பாற்றுவேன்ப்பா... இப்போது உங்களுக்கு திருப்தி தானே..." தந்தையிடம் உள்ளத்தால் வினவினான்.

ஆமாம் என்பதுபோல ஸ்டாண்டில் இருந்த காகிதம் படபடத்தது. யோசனையுடன் அருகே சென்று பார்த்தான்.

காகிதம் அல்ல... கடிதம்!

பறந்து விடாமல் இருக்க கனமாய் அதன் மேல் ஏதோ வைக்கப்பட்டிருந்தது.



அதை எடுத்துப் பார்த்தான். அது ஏதோ அல்ல. வைஜயந்தியின் கழுத்தில் அவன் கட்டிய திருமாங்கல்யம்! திடுக்கிட்டுப் போனான் வினோத். அவசர அவசரமாய் அந்தக் கடிதத்தைப் பிரித்துப் படித்தான்...

வினோத்திற்கு...

நீங்கள் எதிர்பார்த்த நாள் வந்தாயிற்று... இனியும் பானகத் துரும்பாய் இருக்க விரும்பவில்லை... நீங்கள் வந்து சொல்லும் வரை இருக்கவும் மனமில்லை... நம் ஒப்பந்தம் காலாவதி ஆன பின்பு... எனக்கு இந்த வீட்டில் தங்கும் உரிமையும் இல்லை. ஆகையால் புறப்பட்டு விட்டேன்...

அப்புறம்... இன்னொரு விஷயம்... இங்கிருந்து எதையும் எடுத்துப் போகவில்லை. எனக்கு தேவைப்படும் ஒன்றிரண்டு துணிகளைத் தவிர... மாமா எனக்கு அளித்த நகைகளையெல்லாம் பத்திரமாய் பீரோவில் வைத்து விட்டேன். அதன் சாவி பீரோவின் மேல் இருக்கிறது. நீங்கள் கட்டிய தாலியைக் கூட திருப்பித் தந்து விட்டேன்... நம் கல்யாண வாழ்க்கை முடிந்து... அது அர்த்தமில்லாமல் போன பின்பு... இந்தத் தாலி வெறும் அலங்காரமாய் படுகிறது எனக்கு... இரு வருடங்கள் மட்டுமே அதை சுமக்கும் உரிமை எனக்கு...

ஆ... சொல்ல மறந்து விட்டேனே... நீங்களும்... ரூபாவும் சேர்ந்து சந்தோஷத்துடன் வாழ என் மனப்பூர்வமான வாழ்த்துக்கள்... இதை ரூபாவிற்கும் தெரிவித்து விடுங்கள்... ஓகே...

சரி... வினோத்... நான் விடைபெற்றுக் கொள்கிறேன்... பை..."

இதயத்தை யாரோ பிழிந்தெடுத்தது போல இருந்தது அவனுக்கு...

அவனது உற்சாகமும் குதூகலமும் வடிந்துப்போய்... பதிலாய் வேதனைப் பிடுங்கித் தின்றது. என் காதலை சொல்லி உன்னைத் திக்கு முக்காடச் செய்ய வேண்டும் என்று ஆசையாய் ஓடி வந்தேனே. அதற்குள் இப்படிச் செய்து விட்டாயேம்மா... உள்ளம் துயரக் குரல் எழுப்பியது. அதைக் கேட்கும் சக்தி வைஜயந்திக்கு மட்டும் இருந்திருந்தால்... ப்ச்ச... அது சாத்தியமில்லையே... அவன் கையில் இருந்த நகைப் பெட்டி அவனைப் பார்த்து சிரிப்பது போல உணர்ந்து மறுகினான் வினோத்...

## 23

“இந்த இடம் உனக்கு வசதிதானே... வைஜயந்தி... இங்கே உனக்கு எல்லா சௌகர்யங்களும் இருக்கிறதும்மா... இது என் நண்பனோட வீடு... நீ தாராளமா எத்தனை நாட்கள் வேணுமானாலும் தங்கலாம்...” சந்தோஷின் வார்த்தைகளில் அவள் குளிர்ந்து போனாலும்... சின்னதாய் ஒரு நெருடல்...

“அவங்க... உங்க நண்பர்... தப்பாக நினைக்க மாட்டார்களா... சந்தோஷ்... யாரோ முன் பின் அறியாத ஒருத்தி வந்து தங்குகிறாளே என்று...”

“நெவர்... கமலேஷ் அப்படிப்பட்டவன் இல்லை வைஜயந்தி... அவனுக்கு என் மீது அபார நம்பிக்கை... நான் தப்பான காரியம் எதையும் செய்ய மாட்டேன் என்று தெரியும்... ‘ஆக்சுவலா...’ அவன் திடீர் என்று ஊருக்குப் போக வேண்டி வந்து விட்டதால்... எனக்கு போன் பண்ணி...



வீட்டில் தங்க முடியுமா என்று கேட்க இருந்தானாம்... இப்போ... நானே போன் பண்ணிக் கேட்டதில் அவனுக்கு குஷியோ... குஷி... இப்போ நிம்மதியா ஊருக்குப் போவேண்டா. வந்து சாவியை வாங்கிக் கொள் என்று சொல்லிவிட்டான். அதனால் எதைப் பற்றியும் கவலை இல்லாமல்... ஹாயாக நீ இருக்கலாம் வைஜயந்தி... தனியாக இருப்பதில் உனக்கு பயமில்லை தானே... நாளைக்கு உன்னை வந்து பார்க்கிறேன்... சரியா... ஆமாம்... நீ ஏதாவது சாப்பிட்டாயா... இல்லைன்னு தெரிகிறது... இரு... எனக்கு ஏதாவது வைத்திருப்பான் கமலேஷ்...” என்று பிரிஜ்ஜைத் திறந்து பார்த்து விட்டு...

“ஆங்... இருக்கு... பிரெட்டும் ஜாமும்... உனக்கு போதுமா வைஜயந்தி... இல்லைன்னா...” என்று சொன்னவனை இடைமறித்து...

“போதும் சந்தோஷ்... எனக்கும் அவ்வளவாக பசியில்லை...” என்றாள் அவள்.

பிரெட்டில் ஜாமைத் தடவியவாறே அவன் கேட்டான்...

“என்னம்மா... எதிர்காலத்தைப் பற்றி முடிவு எடுத்தாச்சா...”

“முடிவு எடுத்ததால் தான் இப்படி வெளியில் தங்கி இருக்கிறேன் சந்தோஷ்...” ஜாம் தடவிய பிரெட்டை வாங்கிக் கொண்டாள் அவள்...

“அதைச் சொல்லவில்லை வைஜயந்தி... நான் ‘டைவர்ஸை’ப் பற்றிக் கேட்டேன்.’

“ஹிக்... ப்ரெட் அவளது தொண்டையில் அடைத்துக் கொண்டது போல விக்கியது.

டைவர்ஸ்...! கண்களில் நீர் கோர்க்க அவனைப் பார்த்தாள்... தன் கர்ச்சீஃப்பை எடுத்து நீட்டினான் சந்தோஷ்.

''கண்ணீரைத் துடைத்துக் கொள் வைஜயந்தி...''

அதை வாங்கி... கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''என்னம்மா... வினோத் நினைவா...'' என்று வினவினான் சந்தோஷ்.

ஆம் என்று தலையசைத்தாள் அவள்.

சில விநாடிகள் அவளை உற்றுப் பார்த்துவிட்டு ''நான் வருகிறேன் வைஜயந்தி... பத்திரமாக இரு...'' என்று புறப்பட்டான்.

அவள் பூட்டிக் கொள்ளும் வரை காத்திருந்து விட்டு அங்கிருந்து சென்றான்.

வைஜயந்திக்கு துயரம் தாள முடியவில்லை. வீட்டை விட்டுக் கிளம்பும் வரை இல்லாத டென்ஷனும் பயமும்... வீட்டை விட்டு வந்தவுடன் வந்து ஒட்டிக் கொண்டன.

மனம் எதையோ நினைத்து அல்லாடியது. இனி என்ன செய்யப் போகிறோம் என்ற தவிப்பும் வந்து அவளை அலைகழித்தது.

சந்தோஷ் மட்டும் இல்லாவிட்டால்... அதை நினைக்கவே பயமாக இருந்தது.

எனக்காக என்னவெல்லாம் செய்கிறார்... இந்த நன்றியை எப்படிக் கழிக்கப் போகிறேன்...

என் மீது உயிரையே வைத்து... எனக்காக தவமிருக்கும் இவரை ஏற்க மறுக்கிறதே நெஞ்சம்...

அதே சமயம்... ஒட்டியும்... ஒட்டாமலும்... தாமரை இலைத் தண்ணீர் மாதிரி பழகும் வினோத்தை நினைத்து ஏங்கித் தவிக்கிறது பாழும் மனம்... இதென்ன விசித்திரமோ...

வினோத் வீட்டிற்கு வந்திருப்பாரா... நான் எழுதி வைத்த கடிதம் அவரது கண்களில் பட்டிருக்குமா... நான்



வீட்டில் இல்லாதது அவருக்கு இழப்பாய் தெரிந்திருக்குமா... ஜகமும்... என்னை 'மிஸ்' பண்ண மாட்டார்... இந்த மட்டும் தொல்லை விட்டது என்று சந்தோஷப் படுவார். நான் சொல்லாமலே சென்று விட்டாளே என்று நிம்மதியுடன் பெருமூச்சு விடுவார்...

இனி... ரூபாவுடன் ஆனந்தமாய் வாழ்க்கையைத் தொடங்கலாம் என்று குஷியாய் இருப்பார்... இங்கே... நான் தான் அவரை நினைத்து வாடுகிறேன்... நெஞ்சில் இரும்பாய் கனத்தது அவளுக்கு.

மறுநாள் காலை... ஓட்டலில் இருந்து டிபனை பார்சல் பண்ணிக் கொண்டு வந்தான் சந்தோஷ். கூடவே ஒரு பிளாஸ்கில் சூடாய் காபியும்... அதற்குள் குளித்து விட்டு தயாராக இருந்தாள் வைஜயந்தி.

அவன் வாங்கி வந்திருந்த தோசையை சாப்பிட்டவாறு சொன்னாள் அவள்.

''ஏதாவது 'விமன் ஹாஸ்டல்'லைப் பார்க்க வேண்டும் சந்தோஷ்... இங்கே எத்தனை நாள் தங்க முடியும்... அதான்... நல்ல ஹாஸ்டலாய் பார்த்துக் கொண்டு... போய் விடலாம்னு நினைக்கிறேன்...''

''நானும் விசாரித்து வைக்கிறேன் வைஜயந்தி... வசதியா மட்டும் இருந்தால் போதாது... பாதுகாப்பாக கண்ணியமானதாய் இருக்க வேண்டும். அவசரப்படாமல்... நிதானமாய் செய்வோம்... சரி... சீக்கிரம் சாப்பிட்டால்... நீ என்னுடன் வரலாம். நிதானித்தால்... டிராபிக்கில் சிக்கிக் கொள்ள வேண்டி வரும்...'' என்று அவளைத் துரிதப் படுத்தினான்.

இருவரும் சாப்பிட்டு விட்டுப் புறப்பட்டனர்.

''உன்னை ஆபீஸ் கிட்டே டிராப் பண்ணனுமா வைஜயந்தி'' என்று கேட்டான் சந்தோஷ்.

"வேண்டாம் சந்தோஷ்... எனக்கு இன்றைக்கு வேலை செய்யும் 'மூட்' இல்லை... என்னை ஆட்டோ ஸ்டாண்டில் விட்டு விடுங்கள்... இன்றைக்கு சோனியாவைப் பார்த்து பேசிவிட்டு வருகிறேன்... அவளுடன் பேசினால் எல்லா கவலையும் மறந்து போகும் சந்தோஷ்... அவளையும் பார்த்து ரொம்ப நாள் ஆகிவிட்டது..." என்று சொன்னாள் வைஜயந்தி.

அவள் சொன்னபடியே அவளை அருகில் இருக்கும் ஆட்டோ ஸ்டாண்டில் இறக்கி விட்டுச் சென்றான் சந்தோஷ்.

சிநேகிதியைக் காண ஆவலுடன் புறப்பட்டுச் சென்றாள் வைஜயந்தி.

தோழியைப் பார்த்ததும் ஓடி வந்து கட்டிக் கொண்டாள் சோனியா...

"எத்தனை நாட்கள் ஆகிவிட்டன வைஜி... இப்போது தான் உனக்கு என் நினைவு வந்ததா... சரி... உன் வேலை எப்படி நடக்கிறது... நானும் வந்து உன் ஆபீஸைப் பார்க்கணும்னு நினைப்பேன். நேரமே இருக்காது... ஓகே... இப்ப நீ என்ன சாப்பிட்றே... 'ஹாட்டா' டீயா.. இல்லே கூலா ஜூஸா.. எது வேணும் சொல்லு..." என்று உபசரித்தாள் சிநேகிதி.

வைஜயந்திக்கு குளிர்ச்சியாய் ஏதாவது குடிக்க வேண்டும் போல் இருந்ததால்... குளிர்பானத்தை வாங்கிக் குடித்தாள்.

தோழிகள் இருவரும் மனம் விட்டு நிறைய பேசினார்கள்.

சோனியா தனக்கு திருமணப் பேச்சு நடந்து கொண்டிருப்பதாகவும்... யாரோ லண்டன் பையன் அடுத்த



வாரம் பெண் பார்க்க வர இருப்பதையும் கொஞ்சம் வெட்கத்துடன் சொன்னாள்... அவளுக்கு வாழ்த்துக் கூறி சந்தோஷத்தை வெளிப்படுத்தினாள் வைஜயந்தி...

"சரி... நீ எப்படி இருக்கே வைஜி... படிப்பு முடிந்து... வேலையும் ஆரம்பிச்சாச்சு... இனி குழந்தையைப் பத்தி யோசிக்கலாம் இல்லையா... எப்போ குவா.. குவா சத்தம்... ப்ளான் பண்ணியாச்சா..." குறும்பாய் அவள் கேட்டதும்... வைஜயந்தியின் முகம் வாடிய தாமரையாய் வாட்டம் கண்டது.

அதைப் பார்த்துவிட்டுப் பதட்டத்துடன் கேட்டாள் சோனியா... "என்ன வைஜயந்தி... நான் ஏதாவது தப்பா சொல்லிட்டேனா... இல்லே... டாக்டர் ஏதாவது...

"ப்ச்சு... அந்தப் பேச்சு வேண்டாமே சோனியா... நான் இங்கே வந்ததே... உன்னுடன் சந்தோஷமாய் பொழுதைக் கழிக்கத்தான். வேறு விஷயம் பேசுவோமா... உங்க அம்மாவைக் காணோமே... எங்கே போயிருக்காங்க சோனி..." என்று பேச்சை மாற்றினாள் வைஜயந்தி.

"தெரிந்தவர் வீட்டில் விசேஷம்... போயிருக்காங்க. ஆமாம்... உனக்கு என்ன ஆச்சு... 'டல்லா' இருக்கேயே வைஜி... என்கிட்டே சொல்லலாம் தானே..." என்று உரிமையுடன் கேட்டாள் சோனியா.

"சொல்லக்கூடிய விஷயம் இல்லை சோனி... அதான். எனக்கு... தங்குவதற்கு ஒரு விடுதி அவசரமா தேவைப்படுகிறது. உனக்கு ஏதாவது 'விமன் ஹாஸ்டல்' தெரியுமா சோனி..." என்றவளை கூர்ந்து நோக்கினாள் தோழி.

"ஏதோ நடந்திருக்கிறது... அதான் 'விமன் ஹாஸ்டலில் தங்கப் பார்க்கிறே... என்னை நெருங்கிய தோழியா நீ நினைக்கலேன்னு தெரியுது வைஜி... நினைச்சிருந்தா... விஷயம் என்னன்னு சொல்லியிருப்பே... சரி... விடு..."

"அப்படியில்லை சோனி... சந்தோஷத்தைப் பகிர்ந்து கொண்டால் பரவாயில்லை... துக்கத்தை 'ஷேர்' பண்ண கஷ்டமாக இருக்கு... என் வருத்தம் என்னோடு இருக்கட்டுமே என்றுதான் சொல்லவில்லை..."

"ஓகே... நானும் வற்புறுத்தவில்லை. நீயாக என்றைக்கு சொல்கிறாயோ... அப்போது கேட்டுக் கொள்கிறேன்.

"ம்ம்... உனக்கு 'விமன் ஹாஸ்டல்' பத்தி விபரம் வேண்டும் அப்படித்தானே... இரு 'ஃப்ரீ அட்'டில் வந்திருக்கும் பார்க்கிறேன்..." என்று சொல்லிவிட்டு... அதைத் தேடி எடுத்தாள்.

அதற்குப் பிறகு... நேரம் இறக்கைக் கட்டிக் கொண்டு பறந்தது...

சோனியாவும் அவளும் பல விடுதிகளுக்குச் சென்று விசாரித்தனர்... எதுவும் மனசுக்கு திருப்தியாகப் படவில்லை...

கடைசியாய்... ஷெனாய் நகரில் இருந்த விமன் ஹாஸ்டல் பிடித்துப் போக... அதையே பேசி முடிவு பண்ணினாள் வைஜயந்தி...

ஒரு வழியாய்... தங்க இடம் பார்த்தாகி விட்டது... அதுவும் நல்ல இடமாய் கிடைத்து விட்டது...

அந்தத் திருப்தியுடன் சோனியாவிற்கு நன்றி சொன்னாள் வைஜயந்தி.

இருவரும் சேர்ந்து ஒட்டலுக்குப் போனார்கள். நார்த் இந்திய தாலி உணவை சாப்பிட்டு விட்டு தோழியிடம் திரும்ப சந்திப்பதாய் சொல்லிவிட்டு தன் இருப்பிடத்திற்கு வந்து சேர்ந்தாள்.

வந்ததும்... முதல் வேலையாய் சந்தோஷுக்கு போன் செய்து... விடுதி கிடைத்து விட்ட செய்தியைச் சொன்னாள்.



அதைக் கேட்டு சந்தோஷப்பட்ட அவன்... இரவு எட்டு மணிக்கு வந்து பார்ப்பதாய் சொன்னான். சொன்னபடியே வந்து சேர்ந்தான்...

'புலவ்...' 'நூடுல்ஸ்' என்று ஒட்டலிலிருந்து பார்சல் பண்ணிக் கொண்டு...

'மத்தியானம் சாப்பிட்டதே இன்னும் கரையவில்லை. சந்தோஷ்... எனக்குக் கொஞ்சம் போதும்...'' என்று சிறிதளவு உண்டாள் அவள்...

இருவரும் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தனர். தனது அன்றைய அனுபவங்களை அவனுக்கு விவரித்தாள் வைஜயந்தி...

அவன் சென்றதும்... டி.வி.யைப் போட்டு... காமெடி காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு... அதில் மனம் லயிக்கவில்லை...

தனிமை அவளை வாட்டியது... அது மட்டும் அல்ல... தனிமையில் இருந்தால்... வேண்டாம் என்றாலும் வினோத்தின் நினைவு வந்து அவளை வதைக்கிறதே... இனி எதிர்காலம் எப்படிக் கழியப் போகிறதோ என்ற 'டென்ஷன்' அவளை ஆட்டு வைத்தது...

அந்த உளைச்சலில் எப்போது தூங்கினோம் என்று தெரியவில்லை. அவளுக்கு.

அழைப்பு மணி சத்தத்தில் அவளுக்கு விழிப்பு வந்தது.

இரு உள்ளங்கைகளையும் தேய்த்து... அவற்றைப் பார்த்து விட்டு... எழுந்து சென்று கதவைத் திறந்தாள்...

அவளைப் பார்த்துவிட்டு விழித்தான் வந்திருந்தவன்.

"இந்த வீட்டு அய்யா இல்லையா... இஸ்திரி பண்ண துணி இருக்கான்னு கேட்கணும்..." என்று அவன் கேட்டதும்...

அவர்கள் ஊருக்குப் போயிருக்கும் விஷயத்தைச் சொன்னான்...

அவன் சென்றதும் கதவைத் தாழிட்டு விட்டு... குளிக்கச் சென்றாள்...

சந்தோஷ் வருவதற்குள் ரெடியாக வேண்டும் என்ற பரபரப்புடன் இயங்கினாள் அவள்.

அவள் உடைமாற்றி... கூந்தலை சீவி... எடுத்து கிளிப் போடும் வேளையில் மறுபடியும் அழைப்பு மணியின் சிணுங்கல்...

சந்தோஷ் வந்தாயிற்று... கதவைத் திறக்க விரைந்தோடினாள்.

கதவைத் திறந்து புன்னகையுடன் "என்ன... இன்னிக்கு" என்று ஆரம்பித்தவள் வந்திருப்பவனைப் பார்த்ததும் அப்படியே சிலையாக நின்று விட்டாள்... வினோத்! அதிர்ச்சி... எதிர்பாராத இன்ப அதிர்ச்சிதான். வினோத் அவளையே பார்த்தவாறு நின்றிருந்தான். அவனைப் பார்த்த மலைப்பில் கால்கள் தொய்ந்து... விழுந்து விடுவோமோ என்று தோன்ற... கதவைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

அவளது வாய் சத்தமின்றி 'வினோத்' என்று முணுமுணுத்தது.

"நானேதான்... உள்ளே வரலாமா" என்று அமைதியாகக் கேட்டான் அவன்...

'எதற்காக வந்திருக்கிறார்' என்ற குழப்பத்துடன் அவனுக்கு வழிவிட்டு ஒதுங்கினாள் வைஜயந்தி.

## 24

உள்ளே வந்த வினோத் கண்களால் வீட்டைச் சுற்றிப் பார்த்தான்.



"இது யாருடைய வீடு..." என்று கேட்டான்...

"சந்தோஷோட நண்பரின் வீடு... அவர்கள் ஊருக்குப் போயிருக்கிறார்கள்... இந்த விலாசம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது..." குரலில் வியப்பு தெரிய கேட்டாள் அவள்.

"சந்தோஷ் சொன்னார்... அவர் சொல்லித்தான் எனக்கு தெரிய வந்தது... ஏன் அப்படிச் செய்தாய்.. வைஜயந்தி."

"எப்படி..."

"நான் வருவதற்கு முன்பு.. புறப்பட்டு விட்டாயே... அதுவும் தாலியைக் கழட்டி வைத்துவிட்டு... ஏன்... ஏன் சொல்லு..." அவள் தலை குனிந்து கொண்டாள். தன் விரல்களைப் பார்த்தவாறு சொன்னாள்.

"நீங்க வந்து 'புறப்படு' என்று சொல்கிற வரைக்கும் இருக்க என் சுய கௌரவம் இடம் தரவில்லை வினோத்."

"நான் வரும் வரைக்கும் நீ காத்திருக்க வேண்டும் வைஜயந்தி. எத்தனை சந்தோஷமா வந்தேன் தெரியுமா."

"அதைப் புரிந்து கொண்டுதான் வந்து விட்டேன்" இரண்டு வருடம் எப்போது முடியும் என்று நீங்க காத்திருந்தது எனக்குப் புரியாதா வினோத். மாமா சொன்ன நிபந்தனைப் படி... இன்னொரு கல்யாணம் பண்ணிக் கொள்ள இனி தடையேதும் இல்லை என்ற சந்தோஷத்தில் வந்திருப்பீர்கள்..."

"அடக்கடவுளே... நான் சொல்வதை வேறு அர்த்தத்தில் எடுத்துக் கொள்கிறாயே வைஜயந்தி... காலத்திற்கு எதையும் மாற்றக்கூடிய சக்தியுண்டு என்பதைப் புரிந்து கொண்டு இப்போது பேசுகிறேன்... அப்பா எதற்காக இரண்டு வருடம் நாம் சேர்ந்து இருக்க வேண்டும் என்று

சொன்னார் என்பது இப்போது தெரிகிறது வைஜயந்தி... அதற்குள் மெல்ல... மெல்ல என் மனம் உன் பக்கம் நகர்ந்து வந்து விடும் என்ற நம்பிக்கைதான். சொன்னால் ஆச்சர்யப்படுவாய்... இப்போது அதுதான் நடந்திருக் கிறது... என் மனம் முழுக்க நீ தான் ஆக்கிரமித்து கொண் டிருக்கிறாய் வைஜி... அந்த வீட்டிலும் சரி.. என் வாழ்க்கையிலும் சரி... நீ இல்லாவிட்டால் வெறும் சூன்யம் என்பதை உணர்ந்து கொண்டேன்... தெரியுமா... இப்போது உன்னைத் தேடி வந்ததே... இதைச் சொல்லி உன்னை அழைத்துக் கொண்டு போகத்தான்... புறப் படும்மா... நம் வீட்டிற்குப் போவாம்...'

நம் வீடு! பிரமிப்புடன் அவனைப் பார்த்தாள் அவள்.

''ஆம் வைஜி... அது நம் வீடு... நாம் சந்தோஷமாய் வாழப் போகும் வீடு... நம் குழந்தைகள் ஆனந்தமாய் வளரப் போகும் வீடு அது...'' என்றவன்... தனது 'பாக்கெட்'டிலிருந்து எதையோ எடுத்தான்.

மாங்கல்யக்கயிறு! அவள் கழட்டி வைத்து விட்டு வந்த தாலிக்கயிறு...

''இன்று நம் திருமண நாள்... அன்றைக்கு இதை வெறுப்புடன் உன் கழுத்தில் கட்டினேன். இன்று காதலுடன் அணிவிக்கப் போகிறேன்... நீ என்னுடையவள் என்பதை இது சொல்லிக் கொண்டே இருக்கும்...'' என்றவன்... மலர்ந்த முகத்துடன்... உதட்டில் ஆனந்தப் புன்னகையுடன் அந்தத் தாலியை அணிவித்தான். அவளது கண்களில் ஆனந்தக் கண்ணீர்...

அவள் ஓடிச் சென்று... பூஜை அலமாரியிலிருந்து குங்குமச் சிமிழைக் கொண்டு வந்தாள்.

குங்குமத்தை விரலால் தொட்டு எடுத்து வகிட்டில் வைத்தான்...



பின்பு... அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்... அதற்காகவே காத்திருந்தவன் போல.

முதன் முதலாய் அவளைத் தொடுகிறான்.

உடம்பில் மின் காந்த அலைகளின் அதிர்வு... அவன் நெஞ்சில் சாய்ந்து கொண்டாள் வைஜயந்தி...

''ஊகூம்... இந்த வீடு சரிப்படாது வைஜிம்மா... நம் வீட்டில் உன்னை அணைத்து என் அன்பைக் காட்ட வேண்டும்... இப்போ நாம் ஒரு நல்ல ஓட்டலுக்குப் போய் சாப்பிட்டு விட்டு... அப்புறம் வீட்டுக்குப் போகிறோம்... உன்னிடம் பேசுவதற்கு நிறைய இருக் கிறது... போகலாம்... வா...'' என்றான்... மனதை கட்டுப் படுத்திக் கொண்டு.

இருவரும் பெரியவரின் படம் முன் நின்று வணங்கி னார்கள்... நான் ஆசைப்பட்ட மாதிரி இரண்டு பேரும் இணைந்து விட்டீர்கள்... அது போதும் என்பது போல பெரியவர் புன்னகைத்தார் போலும்.

கண்களை மூடிக் கொண்டு மனசுக்குள் பேசினாள் வைஜயந்தி.

''நான் தோற்கவில்லை மாமா... தோற்று ஜெயிச் சுட்டேன்... அவர் மனதை ஜெயிச்சுட்டேன்...'' அவனது கரங்கள் அவளை இறுக அணைத்துக் கொண்டன... தன் கன்னத்தை அவளது கன்னத்தோடு இழைத்தவனை வெட்கத்துடன் விலக்கினாள் அவள்.

''என்ன வினோத்... மாமா முன்னால்...''

''உங்க மாமாவுக்கு தெரிய வேண்டாமா வைஜி... நான் எப்படி உன்னை நேசிக்கிறேன் என்று... அப்பா... நன் றாகப் பார்த்துக் கொள்ளுங்கள்... உங்க செல்ல மருமகளை எப்படி காதலிக்கிறேன் என்று..!'' என்று சொன்னவன்...

அவள் திகைத்து நிற்கையில்... அவளைத் திருப்பி... அவளது முகம் நோக்கி குனிந்தான்.

அவனை நெட்டித் தள்ளி விட்டு... "இது ரொம்ப ஓவர்" என்று ஓடினாள் வைஜயந்தி.

அதைப் பார்த்து விட்டு உரக்கச் சிரித்தான் வினோத்.

இரவு நேரம்...

முறையாய் அமைந்த திருமண இரவு... முதலிரவு! மனம் படபடக்க... கையில் பால் சொம்புடன் உள்ளே வந்தவளின் நெஞ்சில் பட்டாம் பூச்சிகள் பறந்தன.

சொம்பை வாங்கி அருகில் வைத்தவன் அவளை அருகில் அமர்த்திக் கொண்டான்.

"கண்களை மூடிக் கொள் வைஜி" என்றான் மிருதுவாக. அவளும் தன் கண்களை மூடிக் கொண்டாள். வாங்கி வைத்திருக்கும் நெக்லெஸை எடுத்து அவளது சங்குக் கழுத்தில் அணிவித்தான் வினோத்... மற்ற நகைகளை அவளது கரத்தில் வைத்தான். மோதிரத்தை மட்டும் அவளது விரலில் அவனே அணிவித்தான்.

கண்களைத் திறந்து பார்த்தவள்... தன் கையில் இருந்த நகைப் பெட்டியில் நட்சத்திரமாய் ஜொலிக்கும் வைர தோட்டைப் பார்த்துவிட்டு கண்களை விரித்தாள். கழுத்தைத் தொட்டுப் பார்த்து விட்டு... அவனைப் பார்க்க....

"உன் அன்புக் கணவனின் திருமண நாள் பரிசு" என்றான் காதல் பார்வையுடன்...

அவனது தோளில் சாய்ந்து கொண்டு சொன்னாள் அவள்... "என்னால் இதை நம்ப முடியவில்லை. கனவா... நனவா என்று மயக்கமா... ஆ..." என்று காதை தடவினாள்...



"கனவு இல்லை... நிஜம் என்று காட்டத்தான் கொஞ்சம் கடித்தேன்... சாரி... வலிக்கிறதா..."

அவள் முறைத்துவிட்டு சிரித்தாள்... அவனும் சேர்ந்து சிரித்தான்.

"முதலில் விஷயத்தைச் சொல்லுங்கள் வினோத்" என்றாள் அவள்.

"சொல்லலாம் தான்... ஆனால் சொல்லுவதிலேயே நேரம் கழிந்து விடுமே என்றுதான்..." பரிதாபமாய் முகம் வைத்துக் கொண்டு அவன் சொன்னதும்.. "இரண்டு வருடங்கள் காத்திருந்தவருக்கு... இப்போது காத்திருக்க பொறுமையில்லையாக்கும்" என்று கேலி செய்தாள் வைஜயந்தி.

"அதுவும் சரிதான். காத்திருப்பதிலும் சுகம்தான் வைஜி. சரி.. விஷயத்துக்கு வருகிறேன்... நீ வீட்டில் இல்லை என்றதும்... நான் துடித்துப் போனேன்ம்மா... நீ அத்தையிடம் தான் போயிருப்பாய் என்று எண்ணி... திருச்சிக்கு ஓடினேன்."

"நடந்ததை அத்தையிடம் சொல்லி விட்டீர்களா."

"ஊகூம்... நான் சொல்லா விட்டாலும்... என் அத்தை ஷெர்லாக் ஹோம் மாதிரி... விஷயத்தை எப்படியோ கிரகித்து விடுவாள்... நடந்தது என்ன என்று நிச்சயம் ஊகித்திருப்பாள்... என்னைப் பார்த்து அத்தைக் கேட்டது என்ன தெரியுமா...

"'என்ன... வைஜயந்தி உன்னை விட்டுப் போய் விட்டாளா' என்றுதான். நான் அதிர்ந்து போனேன் வைஜி."

அதைக் கேட்டதும் வைஜயந்திக்கு சிரிப்பு வந்தது. அத்தையைப் பற்றி அவளுக்கும் தெரியுமே...

"அத்தோடு விட்டாரா... இல்லையே... 'முட்டாளே... கையில் கிடைத்த தங்கத்தை, தொலைச்சுட்டு வந்து நிற்கிறாயே... போ... போய்த் தேடு...'" என்று அத்தையைப் போல 'மிமிக்ரி' செய்தான் வினோத்...

வைஜயந்தி விழுந்து விழுந்து சிரித்தாள்.

"அப்புறம்..."

"அங்கே நீ இல்லைன்னு தெரிந்ததும்... உன் அண்ணா வீட்டிற்குப் போனேன்... மாப்பிள்ளை என்று ஏக உபசாரம்... என் தவிப்பை உணராமல்... "மாப்பிள்ளை... உங்கம்மா எழுதிய பழைய டைரி ஒன்று இருக்கு... உங்களுக்காக தேடி வைத்திருக்கிறேன்... இதோ கொண்டு வருகிறேன். இருங்கள்" என்று சொல்லி அதை தேட ஆரம்பித்தான் ரங்கன். உன்னைப் பற்றிய தகவல் இல்லையே என்று துடித்தபோது... உன் அண்ணி... "மாப்பிள்ளை... வைஜியை அழைத்து வந்திருக்கலாம் இல்லையா" என்றதும் புரிந்து விட்டது. உங்க அண்ணா கொடுத்த டைரியை வாங்கிக் கொண்டு... அங்கிருந்து புறப்பட்டேன். இப்போது இந்த டைரி ரொம்ப அவசியம் என்று எரிச்சலுடன்... ஆனால் அந்த டைரியிலும் ஒரு முக்கியமான விஷயம் இருந்தது. அது தெரிந்து கொண்டதும்... உன்னைப் பார்க்க வேண்டும் என்ற வேகம் இன்னும் அதிகமானது வைஜி..."

"என்ன முக்கியமான விஷயம்... வினோத்..."

"அம்மா தான் கைப்பட எழுதியிருக்கும் டைரி... அதில் ஓரிடத்தில் அம்மா தன் ஆசையை எழுதி வைத்திருக்கிறார்... அது என்ன தெரியுமா வைஜி... சொன்னால் ஆச்சர்யமடைவாய்... முறிந்துப் போன தன் பிறந்த வீட்டு உறவு... தன் மகனால் சேரவேண்டும்... தன் தம்பியின் மகளை... தன் மகனுக்கு மணம் முடித்து வைத்து இரு



குடும்பங்களையும் சேர்த்து வைக்க வேண்டும். அதாவது... நீயும் நானும் திருமணம் செய்துக் கொள்ள வேண்டும் என்பது... அதைப் படித்ததும் எனக்கு மெய் சிலிர்த்துப் போனது... அம்மாதான் தெய்வமாக இருந்து இந்த திருமணத்தை நடத்தியிருக்க வேண்டும் என்று தோன்றியது. அது தெரியாமல்... சே... நினைக்கவே எனக்கு வெட்கமாக இருக்கிறது வைஜி..."

"மனதுக்கு கஷ்டத்தை தரும் எதையும் நினைக்க வேண்டாமே வினோத்... மறந்து விடுங்கள்... சரி... இந்த வீட்டின் அட்ரஸ் உங்களுக்கு எப்படி கிடைத்தது... அதை சொல்லுங்கள்."

"இன்னும் ஒரே இடம் பாக்கி... அது சந்தோஷ். அவனுடைய இருப்பிடம் எனக்குத் தெரியாதே... புத்திசாலித்தனமாய்... உங்க அண்ணிக்கு போன் செய்து கேட்டேன். அவர்களோட சித்தப்பாவின் விலாசம் கிடைத்ததும்... உடனே அங்கே போய் விசாரித்தேன். சந்தோஷ் இல்லை... அவனுடைய 'செல்' நம்பரை வாங்கி... சந்தோஷிடம் பேச முயன்றால்... 'செல்' சுவிட்ச் ஆஃப்... சந்தோஷ் வரும் வரை அந்த தெருவிலேயே நாயாய் சுத்தினேன்... பதினொன்றரை மணிக்கு வந்தான் அவன்.

என்னைப் பார்த்ததும் சீறினான்...

ஏன் வைஜயந்தியோட மனசை வேதனைப்படுத்துகிறீர்கள்... அவளை இப்போ எதுக்காக சந்திக்க வேண்டும்... டிவோர்ஸுக்கு அத்தனை அவசரமா என்று கொதித்தான்.

என் மனதில் இருப்பது வைஜயந்தி மட்டுமே... வேண்டுமானால் சூடம் ஏற்றி சத்தியம் செய்யத் தயார் என்று சொல்லும் வரை மனுஷன் வாய்விடவில்லையே...

கடைசியில்.. உங்க வைஜயந்தி உங்களையே நினைத்து துடிக்கிறாள்... என்று சொன்னதும் உடனே

கிளம்பி விட்டேன்... இந்த அர்த்த ராத்திரியிலா... வேண்டாம் காலையில் போங்கள் என்று நிறுத்தி விட்டார் சந்தோஷ். இரவெல்லாம் சிவராத்திரிதான்... எப்போதடா விடியும் என்று காத்திருந்து விட்டு... விடிந்ததும் ஓடி வந்து உன்னைப் பார்த்தேன்... ஆனால் அதைப் புரிந்து கொள்ளாமல்... எதற்கு வந்தீர்கள் என்பது போல முறைத்தாய் நீ..."

"ஊகூம்... உங்களைப் பார்த்த அதிர்ச்சியில் முழித்துக் கொண்டிருந்தேன் வினோத்."

"அப்போ... உனக்கு என் மீது கோபம் இல்லை."

"இல்லவே இல்லை..."

"அதை வார்த்தைகளில் சொன்னால் போதுமா..."

"என்ன செய்ய வேண்டும்."

"அதை செயலில் காட்டு.. பார்க்கலாம்..." என்று தன் கன்னத்தை அவள் பக்கம் திருப்பிக் காட்டினான். மெல்ல நெருங்கி வந்தாள் அவள்.

"ம்... சீக்கிரம்..."

அவனது காதை பற்களால் கடித்தாள் 'ஆங்...' காதைத் தடவியவாறு பொய்க் கோபத்துடன் அவளைத் திரும்பிப் பார்க்க...

"அன்பு அதிகமானால் காதை கடிப்பார்களாம்" என்று குறும்பாய்ச் சிரித்தாள்.

"உன்னை..." என்று தாவி அவளை இழுக்க.. அவள் அவன் மீது சாய்ந்தாள்... அவனது கரங்கள் காதலுடன் அவளை அணைக்க... புது வாழ்க்கையின் முதல் அத்தியாயம் ஆரம்பம் ஆனது... இனி ஒவ்வொரு நாளும் சுபம்தான்.